முத்துலட்சுமி ராகவன்

என்னியிருந்தது ஈடேறு...

நான்காம் பாகம்

முத்துலட்சுமி ராகவன்

எழுதிய

எண்ணியிருந்தது ஈடேற...

நான்காம் பாகம்

லட்சுமி பாலாஜி பதிப்பகம்

68/37, ஸ்ரீராம் பேட்டை தெரு,

சி.ஐ.டி நகர், தி.நகர்,

சென்னை - 600 035

அழைக்க : 95669 42486

மின்னஞ்சல் :bchandar24@yahoo.com

Website : www.muthulakshmiraghavan.com

நூல் விவரப் பட்டியல்

நூலின் பெயர்	:	எண்ணியிருந்தது ஈடேற... 4
நூலாசிரியர்	:	முத்துலட்சுமி ராகவன்
நூல் உரிமை	:	எழுத்தாளருக்கு
மொழி	:	தமிழ்
பதிப்பு ஆண்டு	:	முதற் பதிப்பு, மார்ச் 2017
தாள்	:	11.6 Kg புக் பிரிண்ட்
நூல் அளவு	:	1 X 8 கிரவுன்
பக்கங்கள்	:	400
விலை	:	ரூபாய் 200.00
பதிப்பகம்	:	லட்சுமி பாலாஜி பதிப்பகம் 68/37, ஸ்ரீராம் பேட்டை தெரு, சி.ஐ.டி நகர், தி.நகர், சென்னை - 600 035 செல் : 95669 42486

முக்கிய அறிவிப்பு

இந்தக் கதை எனது சொந்தக் கற்பனையில் உருவானது. இதன் பதிப்பிற்கான உரிமையை லட்சுமி பாலாஜி பதிப்பகத்திற்கு மட்டுமே தந்திருக்கிறேன்.

இதைத் தழுவி தொலைக்காட்சி தொடர்களையோ. திரைப் படத்தையோ எடுத்தாலும் இணையதளத்தில் என் அனுமதியின்றி வெளியிட்டாலும் நான் சட்ட பூர்வமான நடவடிக்கையை மேற்கொள்வேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு

முத்துலட்சுமி ராகவன்

ஆசிரியர் கடிதம்

என் பிரியத்துக்குரிய வாசக... வாசகிகளே...!

சக மனிதர்களிடம் மரியாதை காட்டலாம்.. வயதில் பெரியவர்களாக இருந்தால் பணிவையும் காட்டலாம்.. அவர்கள் பணத்திலும், அதிகாரத்திலும் பெரியவர்களாக இருந்தால் பயத்துடன் கூடிய பணிவையும், அதிகப்படியான மரியாதையையும் காட்ட வேண்டுமா..? இயல்பாக பேசக் கூடாதா..? எனக்கு இயல்பாக பேசித்தான் பழக்கம்..

சமீபத்தில் எனது உறவினர் வீட்டுப் பெண்ணுக்காக திருமணத் தகவல் மையத்தில் பதிய வேண்டி வந்தது.. எனது மகனுக்குச் சல்லடை போட்டுச் சலித்துப் பெண் தேடிய அனுபவம் (?) என்னிடம் கொட்டிக் கிடந்ததால் அந்தப் பொறுப்பை என்னிடம் கொடுத்தார்கள்.. நானும் அதற்கென்ன.. செய்தால் போச்சு என்று வெகு இலகுவாக பொறுப்பை ஏற்றுக் கொண்டேன்.. பெண் வீட்டார் என்ற முறையில் மாப்பிள்ளை வீட்டாருடன் பேசவும் செய்தேன்.. அதில் ஒரு மாப்பிள்ளை வீட்டில் அரசியல் செல்வாக்குப் பெற்ற குடும்பமாம்.. மிகப் பெரும் அரசியல் கட்சியின்

‘கொறடாவாம்..’ எனக்கு அது தெரியாது.. அவர் கள் விவரம் சொன்ன போது அப்படிங்களா என்பதுடன் பேச்சை முடித்து விட்டுப் பெண் வீட்டாரிடம் விவரம் சொன்னேன்.. அவர்களிடமா பேசினீங்க..? என்று பெண் வீட்டார் பதறிய பதட்டத்தில் எனக்கு வியர்த்துப் போய் விட்டது.. ஏங்க...? அவங்க என்ன சிங்கம், புல, கரடியா..? அவங்க வீட்டில் மாப்பிள்ளை இருக்கிறார்.. நம் வீட்டில் தகுந்த மணப்பெண் இருக்கிறாள்.. திருமணத் தகவல் மைய த்தில் பதிந்திருக்கிறார்கள்.. நாம் விவரம் கேட்கிறோம்.. இதற்கு எதற்கு இத்தனை பதட்டம்..? என்று நான் கேட்டால் என்னை விசித்திரமாக பார்த்து வைக்கிறார்கள்.. இத்தனைக்கும் பெண் வீட்டார் ஒன்றும் வசதியில் குறைந்தவர்கள் அல்ல.. மாப்பிள்ளை வீட்டாருக்கு இணையான வசதி படைத்தவர்கள்.. கோடிஸ்வரக் குடும்பம்..!

என்னத்தைச் சொல்ல..?

இதுபோன்ற பிரமிப்புகள் இன்றி அவ ரவரின் உயரங்களை வெகு இலகுவாக எடுத்துக் கொண்டுப் பேசிப் பழகும் தன்மை சிறு வயதிலிருந்தே எனக்கிருக்கிறது..

எனது எட்டாம் வயதில் என்று நினைக்கிறேன்.. அப்போது என் அப்பா திண்டுக்கல் மாவட்டம், செங்குறிச்சி கிராமத்தில் தலைமை ஆசிரியராக பணி புரிந்தார்.. அதே ஊரில்தான் குடியிருந்தோம்.. அப்பா 'குமுதம்' வார இதழுக்கு சந்தாக் கட்டியிருந்தார்.. அப்போதெல்லாம் பஸ்ஸில் பத்திரிக்கைகளை அனுப்பி வைப்பார்கள்.. டவுன் பஸ் வந்து திரும்பி நின்றதும் காத்து நிற்கும் நான் ஓடோடிப் போய் டிரைவர் நீட்டும் குமுதத்தைக் கைப்பற்றிக் கொள்வேன்.. மற்ற வார இதழ்கள், மாத இதழ்கள் என்று ஒரு பை நிறைய பத்திரிக்கைகளை செங்குறிச்சி ஜமீன் வீட்டின் வேலையாள் வந்து வாங்கிக் கொள்வார்.. என்னவோ பை நிறைய அவர் லட்டு, ஜிலேபி, பிஸ்கெட், சாக்லெட் வ கையறாக்களைச் சுமந்து செல்வதைப் போல எனக்கு ஏக்கமாக இருக்கும்.. அந்தப் பையைக் கைப்பற்றி அதிலிருக்கும் பத்திரிக்கைகளைப் படிக்காவிட்டால் தலை வெடித்து விடும் போல ஆகிவிடும்..

சாலைக்கு இந்தப் பக்கம் ஊர்.. அந்தப் பக்கம் ஒட்டு மொத்த ஊரளவு பரந்திருக்கும் ஜமீன் அரண்மனை..! என் அனைத்துக் கதைகளிலும் நான் வர்ணிக்கும் ராஜ பரம்பரையின் வெள்ளை மாளிகை போன்ற அரண்மனை செங்குறிச்சி ஜமீன் அரண்மனையை என் மனதில் இருத்தி

எழுதப் பட்டதுதான்.. சிறு வயதில் நான் கண்ட அரண்மனையின் தோற்றம் இன்னும் என் மனதில் பசுமையாக பதிந்திருக்கிறது.

கரும்பச்சை வண்ண பளிங்குங்கல் சுவர்களும் அகன்ற வழுவழுப்பான பெரிய தூண்களும், பத்திற்கும் மேற்பட்டக் கார்களை நிறுத்தக் கூடிய பிரம்மாண்டமான போர்டிகோவும் கொண்ட அந்த அழகிய அரண்மனையின் ஹால் போன்ற முன் வராண்டாவில் மூங்கில் சாய்வு நாற்காலியில் கம்பீரமாக சாய்ந்து அமர்ந்திருக்கும் செங்குறிச்சி பெரிய ஜமீன்தார் அச்சு அசலாக பழம்பெரும் நடிகர் ரங்காராவ் போலவே இருப்பார்.. பக்கத்தில் பர்மாத் தேக்கினால் செய்யப்பட்ட டீப்பாயில் பத்திரிக்கைகள் அடுக்கி வைக்கப் பட்டிருக்கும்.. இரும்பை இழுக்கும் காந்தமென என்னை அவை ஈர்க்கும்.. புத்தகங்களைத் தேடிப் போகும் என்னைப் பார்த்தும் 'ரங்காராவ்..' ஜமீன்தார் வாய் நிறையப் புன்னகையோடு..

"பெரிய வாத்தியார் மகளா..? வா.. வா.. புத்தகங்கள் வந்து இவ்வளவு நேரமாச்சு.. குட்டிப் பாப்பாவ இன்னும் காணலியேன்னு பார்த்தேன்.. வந்துட்ட.. இந்தா.. இதுகளை எடுத்துட்டுப் போய் படிச்சுட்டுக் கொண்டு வந்து கொடுத்திட்டுப்

போ..” என்று வாத்சல்யப் புன்னகையுடன் புத்தகங்களை அள்ளிக் கொடுப்பார்..

பொக்கிஷம் போலப் புத்தகங்களைக் கைப்பற்றிக் கொள்ளும் நான் அவற்றை ஒரே மூச்சில் படித்து முடித்து விட்டு அன்று மாலைக்குள் அவரிடம் திருப்பிச் சேர்த்து விடுவேன்.. அந்த வேத்தில் அவர் ஆச்சரியப்பட்டுப் போவார்.. அவர் வீட்டுத் தோட்டத்தில் இருக்கும் அறநெல்லிக் காய்களை அவள் அனுமதியுடன்தான் பறித்து மடியில் கட்டிக் கொண்டு வீடு திரும்புவேன்.. மலர்செடிகளும், கொடி வளைவுகளுமாக ஊட்டி, கொடைக்கானலின் பூங்காக்களையும் மிஞ்சும் அளவிற்கு அரண்மனையின் தோட்டம் இருக்கும்..

அரண்மனையின் அழகு நினைவில் இருப்பதைப் போல அரண்மனையில் வசித்துப் பெண்களின் வசீகரம் நிரம்பிய பேரழகும் என் நினைவில் இருக்கிறது.. அந்தப் பேரழகைத்தான் இந்த ‘எண்ணியிருந்தது ஈடேற..’ கதையின் கதாநாயகனின் குடும்பத்துப் பெண்களின் பேரழகாக நான் சித்தரித்திருக்கிறேன்..

எளிதாக நான் அணுகிப் புத்தகங்களை இரவல் பெற்ற செங்குறிச்சியின் பெரிய பண்ணையார் எவராலும் எளிதில்

அணுக முடியாத உயரத்திலிருந்தவர்.. அவரிடம் நான் புத்தகங்களை இரவல் வாங்கிப் படித்துத் திருப்பித் தருவேன் என்பதை மற்றவர்கள் பெரும் பிரமிப்பாக பேசினார்கள்.. என் வயதுச் சிறுமிகளோ..

"ஜமீன்தார்கிட்டப் பேச உனக்குப் பயமாயில்லையா..?" என்று மிரண்டார்கள்..

இல்லை.. பயமாக இல்லை.. அவர் காட்டிய பாசமும், வாத்சல்யமும் இன்னும் என் நினைவில் இருக்கின்றன.. என் நினைவுகளில் அடர்ந்திருக்கும் செங்குறிச்சி ஓர்முறை பார்க்க வேண்டும் போல இருக்கிறது.. பெரிய ஜமீன்தாரின் புகைப்படத்தைப் பார்க்க வேண்டும்.. மலர்ச் செடிகளும், கொடி வளை வுகளும் கொண்டத் தோட்டத்தில் சுற்றி வர வேண்டும்.. நான் பறித்துச் சுவைத்த அற நெல்லிக்காய் மரம் அப்படியே இருக்கிறதா என்று தேட வேண்டும்..

சில நினைவுகள் நினைவுகளாக இருப்பதே நல்லது.. என் மனதில் பதிந்திருக்கும் அரண்மனையும், தோட்டமும் அவற்றின் பழைய பொலிவை இழந்து உருமாறியிருந்தால்..? என்னால் அதைத் தாங்கிக் கொள்ள இயலாது.. இந்த

பயம்தான் என்னை செங் குறிச்சி அரண்மனையைத் தேடிச் செல்ல விடாமல் தடுத்து நிறுத்துகிறது..

சிறுமிகள் கூடச் சூறையாடப்படும் இன்றைய காலகட்டத்தில் எந்தவித அச்சமுன்றி அனைவரிடமும் பேசிப் பழக முடிந்த எனது கடந்த காலத்தை நான் திரும்பிப் பார்க்கிறேன்.. பக்கத்து வீட்டுத் தாத்தா, எதிர் வீட்டு மாமா.. கோடி வீட்டு அண்ணா என்று அன்றைய உலகம் வக்கிரமற்ற நிர்மலமான அன்பால் சூழப் பட்டிருந்தது இன்று ஏன் அது தொலைந்து போனது..?

நாளுக்கு நாள் மேம்படும் அறிவியலின் அசுர சக்தியும் இதற்கு ஒரு காரணமென்று சொல்வேன்.. மனதில் வக்கிரங்கள் நிறைந்து விட்டால் அங்கே மனிதம் தொலைந்து போய் விடுகிறது.. மிருக குணம் வந்து விடுகின்றது.. மிருகங்கள் கூட பாவ, புண்ணியம் பார்க்கும்.. கேடு கெட்டவர்கள் அதற்கும் கீழ் புதையுண்டு விடுகிறார்கள்..

நமக்குக் கிடைத்த நல்லுலகம் நம் பிள்ளைகளுக்குக் கிடைக்கவில்லை.. இந்த மாற்றத்தை மாற்ற முடியுமா என்று ஆக்க பூர்வமாக நாம் சிந்திக்க வேண்டும்.

- நட்புடன்

எண்ணியிருந்தது ஈடேற... 4

முத்துலட்சுமி ராகவன்

அத்தியாயம் 99

வயநாட்டின் குளிர்காற்று ஈரப்பசையுடன் நந்தினியின் முகம் வருடி வரவேற்றது.. பக்கவாட்டில் தெரிந்த ரவிச்சந்திரனின் தோற்றம் மனதை மயக்கியதில் அவன் பாராதபோது அவனைப் பார்த்து வைத்தாள்.. புருவங்களின் மத்தியில் முகச் சுளிப்புடன் ஆழ்ந்து சிந்தித்தபடி இருந்தான்.. மலைப்பாதையில் கவனமின்றி அவன் இழுத்ததில் பயணத்தின் மீதான அச்சம் அவளுக்குள் எழுந்தது.. சிந்தனை சிந்தனையாக இருந்தாலும் பாதையின் வளைவு நெளிவுகளில் அவனது கரங்கள் அநாசியமாக ஸ்டிரியங்கை ஒடித்துத் திருப்பியதில்..

'ஈ சுந்தரன் ஒரு தேர்ந்த ஓட்டுனரல்லோ..' என்று மனதுக்குள் மெச்சிக் கொண்டாள்.. அதை வாய் விட்டுச் சொன்னால் என்ன ஆகும் என்ற நினைவு வந்தது..

'மலையுச்சியிலிருந்து உருட்டி விட்டு விடுவான்..'

மெச்சுதல் வார்த்தைகளை மனதுக்குள்ளேயே ஸ்பீடு பிரேக் போட்டு நிறுத்தி வைத்துக் கொண்டாள்.. உனக்கு நான் முதலாளியா இல்லை டிரைவரா என்று ஆரம்பித்துக் காய்ச்ச

ஆரம்பித்தால் ஒருவருடம் ஆனாலும் நிறுத்தாமல் காய்ச்சு காய்ச்செனக் காய்ச்சிக் கொண்டிருப்பானே.. யார் அவனிடம் வாங்குப் பெறுவது..?

இந்த நினைவு மனதில் ஓடும் போதே..

‘ஒரு வருஷம் வரைக்கும் நான் இங்கேயா இருப்பேன்..? நாளைக்கே தஞ்சாவூரிலிருந்து தகவல் வந்தாலும் வரலாம்.. அப்பா மட்டும் மனது வைத்துப் பெல்ட் மன்னன்கிட்டயிருந்து எனக்கு விடுதலைன்னு அனௌளன்ஸ் பண்ணினா போதுமே.. குதிச்சுக்கிட்டுத் தஞ்சாவூருக்கு ஓடிப் போயிடுவேனே..’ என்ற எண்ணம் எழுந்தது.. கூடவே ரவிச்சந்திரனை விட்டுப் பிரிய நேருமே என்ற ஏக்கமும் எழுந்தது..

மேகநாதன் தன் மகளை அழைக்க வந்து சேர்ந்தால் நந்தினியால் அவர் பின்னால் குதித்துக் கொண்டு ஓடி விட முடியுமா..?

‘கடவுளே..! என்மனம் ஏன் இப்படி அலை பாய்கிறது..?’ கண்களை இறுக மூடி மனதைச் சமன்படுத்த முயன்றாள்..

“தூங்கறியா..? தூங்கு மூஞ்சி..! தூங்கி வழிஞ்சு ரோட்டில விழுந்து வைச்சிராதே.. மலைப்பாதையில

உருண்டா கதி பள்ளம்தான்.. ஜாக்கிரதை..” ரவிச்சந்திரனின் குரல் அவளை உசுப்பிவிட்டு ரோஷத்தை வரவழைத்தது. .

“யார் தூங்கினதாம்..?”

சட்டென இமை திறந்து சண்டைக்குக் கிளம்பினாள்.

“நீதான் தூங்கின.. வேற யார் தூங்கினதாம்..?”

“இமை மூடியிருந்தாத் தூங்கறேன்னு அர்த்தமா..?”

“பின்னே..? இல்லையா..? வேற என்ன செய்துக்கிட்டு இருந்த..?”

“திங்க் பண்ணிக்கிட்டு இருந்தேன் பாஸ்.. திங்க் பண்ணிக்கிட்டு இருந்தேன்.. மனசிலாயி..”

நந்தினி சொல்லி வாய் மூடவில்லை.. அவன் குபீரென்று சிரித்து வைத்து அவள் கடுப்பைக் கிளப்பி விட்டான்..

“எதுக்கு இந்த சிரிப்பு..? நான் ஜோக்கடிச்சதா ஞாபகமில்ல..”

“நந்தினி.. ஹா, ஹா.. நீ வந்து.. ஹா, ஹா..”

“ஹல்லோவ்..! ஒண்ணு சிரிக்கனும்.. இல்லேன்னா விளக்கம் சொல்லனும்.. இப்படிச் சிரிச்சுக்கிட்டே விளக்கம் சொல்லக் கூடாது..”

“இந்தா பாரு.. திங்க் பண்ணறேன்னு சொல்லி எனக்குச் சிரிப்பை வர வைச்சது நீ.. உனக்கும் திங்கிங்குக்கும் ஏரோப்பிளேன் விட்டாலும் எட்டாதுன்னு படித்துப் படித்துச் சொல்லிட்டேன்.. நீ காதில போட்டுக்க மாட்டேங்கிற..”

“ஹல்லோவ்..”

“காதில விழுகுது.. கத்தாதே..”

“அதெப்படி நீங்க அப்படிச் சொல்லலாம்..?”

“எப்படி..?”

“திங்கிங்குக்கும் எனக்கும் ரொம்பத் தூரம்ன்னு..”

“உன்னைப் பத்தித் தெரிஞ்சு வைச்சிருக்கிறதாலே சொல்றேன்.. நீயெல்லாம் திங்க் பண்ண ஆரம்பிச்சா உலகம் தாங்காது..”

“நீங்க தாங்க மாட்டிங்கன்னு சொல்லுங்க.. வயநாட்டில் இருந்துக்கிட்டு இவரு உலகம் பூரா போய் இண்டர்வியு எடுத்துட்டு வந்தாராம்.. யாரு கிட்ட..?”

“வயநாட்டில மட்டும் ஸ்டே பண்றவன் இல்லம்மா இந்த ரவிச்சந்திரன்.. இவன் உலகம் சுற்றும் வாலிபன்.”

“தெரியுது.. தெரியுது..”

“என்ன்ன்.. தெரியுது..? ”

“நீங்க வாலிபன்னு தெரியுது..”

“ஊஹூம்..?”

ரவிச்சந்திரன் திரும்பி, அவள் முகம் பார்த்துக் கேள்வியுடன் புருவங்களை உயர்த்தி இறக்கினான்.. நந்தினி கிளீன் போல்டானாள்.. அத்துடன் அடங்காமல் இமைகளைச் சிமிட்டி அவளைப் படுத்தி வைத்தான்.. ‘போடா’ என்று அவள் கண்களை இறுக மூடித் தப்பிக்க முயல..

“மறுபடியும் தவல் செய்யக் கிளம்பிராதே..” என்றான் ரவிச்சந்திரன்..

‘உன்னைப் பக்கத்தில் வைச்சுக்கிட்டுத் தவம் செய்தாலும் கழுதையில..’

நந்தினிக்குச் சோதனையாக இருந்தது.. அவனது பேச்சும், பார்வையும் அவளுக்குள் ஏற்படுத்தும் கிளர்ச்சியை அடக்கியாள முடியாமல் தவியாய் தவித்தாள்.. ஆள் மயக்கும்

ஆணழகனாய் இருந்து கொண்டு ஒன்றும் அறியாத கன்னிப் பெண்ணின் மனதை இப்படிச் சலனப்படுத்தக் கூடாது என்று யார் அவனுக்குச் சொல்வது..?

நந்தினி சொல்லலாமென்றால் அவன் அப்படியா என்று தேன் குடித்த சிங்கமாகி விடுவான்.. தேவையா என்று நந்தினி நெற்றியின் மையத்தில் ஒற்றை விரலால் தட்டிக் கொண்டாள்..

'விசுவாமித்திரனை மேனகை மயக்கினாள் என்றுதான் புராணம் சொல்கிறது.. சகுந்தலையின் அழகில் துஷ்யந்தன் மயங்கினான் என்றுதான் இதிகாசம் சொல்கிறது.. இவனிடம் எல்லாமே உல்ட்டாவா இருக்கிறது.. இவன் விசுவாமித்திரனாக இருந்திருந்தால் மேனகையை இவன்தான் மயக்கியிருப்பான்... மேனகையும் இவனிடம் மயங்கியிருப்பாள்.. துஷ்யந்தனாக இருந்திருந்தால் சகுந்தலைதான் இவன் அழகில் சறுக்கி விழுந்திருப்பாள்.. கஷ்ட காலம்.. ஆம்பளைக்கு இத்தனை அழகு எதற்காம்..?'

"என்ன்ன்..ன..? மனசுக்குள்ள என்னைத் திட்டித் தீர்க்கிற போல இருக்கு.." ரவிச்சந்திரன் சீண்டினான்..

‘போடா.. டேய்..’ நந்தினி வாயே திறக்கவில்லை.. அவனா விடுவான்...? ஒரு கையால் அவள் விரலைப் பற்றி அலற வைத்தான்..

“பாஸ்.. பாஸ்.. இது மலைப்பாதை பாஸ்.. பார்த்து ஓட்டுங்க பாஸ்.. உங்களை நம்பி வயநாட்டுக்கு வந்திருக்கிற இந்த அபலை நந்தினி மீது கருணை காட்டுங்க பாஸ்.. ரெண்டு கையாலே ஓட்டினாலே இந்த மலைப்பாதை கிறுகிறுக்க வைக்கும்.. இதில ஒற்றைக் கையாலே ஓட்டி என்னைக் கலங்கடிக்காதீங்க பாஸ்.. என் உயிர் உங்க கையிலே.. இதை மனசில வைச்சுக்கிட்டுப் பாதையைப் பார்த்து ஓட்டுங்க பாஸ்..”

“ஏன் நந்தினி.. உன்னைப் பார்த்துக்கிட்டே ஓட்டினா ஆகாதா..?”

அவன் காதல் மன்னனாய் கண் சிமிட்ட அவளது மனம் பொங்கியது.. அனைத்தையும் மறந்து அவன் தோறில் சாய்ந்துவிட ஆவல் மேலிட்டது.. மனதை அடக்கும் மாயக்கயிறு கிட்டாதவளாய் அவள் தடுமாறினாள்.. பேரழகனைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு மனதை

அடக்கியாள்வது எப்படி..? அடங்கு மனமே என்றால் கன்னி மனம் சலனத்தை விடுத்து அடங்கி விடுமா..?

“வாட் ஹேப்பன்ட் நந்தினி..?”

‘போடா.. என்னென்னவோ ஆகித் தொலைக்குது.. அதை என்னன்னு சொல்ல..?’

“பேசு நந்தினி..”

‘உன்னிடம் பேசிட்டாலும் கழுதையில.. ம்ஹூம்.. உன்னை காதலிக்கவும் முடியல.. காதலிக்காம இருக்கவும் முடியல.. மனசு மயங்கித் தொலைக்குதுடா.. மாயாவி.. உன் காதல் பொய்யா மெய்யான்னு புரிஞ்சும் தொலையல.. உன் மேல எனக்கு வருவது காதலா.. இல்ல.. அழகான ஆம்பளையைப் பார்த்தா மனசுக்குள்ள வரும் தடுமாற்றமான்னு ஒரு மண்ணும் தெரியல.. சோதிக்கிறயேடா.. சோதனையின் நாயகா..!’

“இப்படி மௌன யோகினி வேசம் போட்டா நீ அமைதியின் சிகரம்ன்னு நான் நம்பிருவேனா..? யாரு நீ..?”

‘அதாண்டா தெரியலை.. உன்னைப் பார்க்கிற வரை நான் நானாத்தான் இருந்தேன்.. பார்த்த பின்னாலே நானே நானான்னு ஆகிப் போயிட்டேனே..’

“மனசுக்குள்ள என்ன நினைத்துக்கிட்டு இருக்க..? என்னையா..?”

இதற்கும் பேசாமல் இருந்தால் அவன் ஆமாம் என்ற பதிலை அவள் பிரதிபலிப்பதாக பெயர் கட்டி விடுவான் என்பதால்..

“இல்லை..” என்றாள் அவள்..

அவன் முகம் இறுகிக் கடினமாகி விட்டது.. சற்று நேரத்திற்கு முன்னால் முகமெல்லாம் சிரிப்பாக அவளுடன் பேசிக் கொண்டு வந்த ரவிச்சந்திரனா அவன் என்ற திகைப்பு அவளுக்குள் உண்டானது..

“வேற யாரை நினைத்துக்கிட்டு இருக்க...? அந்த பெல்ட் மன்னனையா..?” சுள்ளென்று எரிந்து விழுந்தான் ரவிச்சந்திரன்..

“ஒருவகையில் அப்படித்தான்..” என்று சொல்லி விட்டு அவன் முகத்தைப் பார்த்த நந்தினி நெருப்புத் துண்டங்கள்

போல ஜொலித்த கண்களுடன் அவன் பார்த்த பார்வையில் நடுங்கி விட்டாள்..

“அப்படித்தான்னா..? வாட் இஸ் தி மீனிங்..? அவனிடமே போக வேண்டியதுதானே..? எதுக்காக வயநாட்டுக்கு வந்து தொலைச்ச..? என் மனசைக் கலைக்கிறதுக்காகவா..?” உறுமினான் ரவிச்சந்திரன்..

‘இவன் மனசை நான் கலைக்கிறேனா..? சரிதான்..’

நொந்து நூல்நூலாகிப் போனாள் நந்தினி.. ஒன்று மறியாதவளாய் சிட்டுக் குருவி போல சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தாள்.. அவளை வயநாட்டுக்கு அழைத்து வந்து நாளொரு பார்வையும் பொழுதொரு கண்சிமிட்டலுமாக அலற வைத்து மனதை அசைத்துக் கொண்டிருப்பவன் பழி சொல்கிறான்.. அவள் அவன் மனதைக் கலைப்பதற்காக வருகை தந்திருக்கிறாளாம்..

‘இது எப்படி இருக்கு..?’

சீறிக் கொண்டிருந்த சிங்கத்தை நேர்பார்வை பார்க்கும் திராணியற்றவளாக ஓரவிழிப் பார்வை பார்த்தாள்.. காற்றில் முன்னுச்சி முடி கலைந்து அலைந்து அவள் மனதைக் கலைத்து அலைக்கழித்தது.. அவன் சிகையில் விரல் கோத

மனதில் ஆசை அலை மோதியது.. என்ன மாதிரியான ஆசையிது என நந்தினி பயந்து போனாள்..

அவன் பார்த்தால் பார்வையை விலக்க முடியவில்லை.. தொட்டால் தடுக்கமுடியவில்லை.. அவன் அருகாமையில் அவள் அவளாக இல்லையென்றால் என்ன ஆவது..? எப்படி அவன் காதலை மறுப்பது..? சேர நினைக்கும் மனதை மறைத்து எப்படி விலகி நிற்பது..?

அது உணர்வுகளின் போராட்டமாக இருந்தது.. தொடர் போராட்டமாக தொடர்ந்து அவளை வதைத்துக் கொண்டிருந்தது.. வேண்டாம் என்று விலகவும் முடியாமல் வேண்டும் என்று சேரவும் முடியாமல் அவள் தவியாய் தவித்தாள்.. முற்றுப்புள்ளி வைக்க நினைத்தால் அது கமாவாக மாறி அவளைக் கலங்கடித்துக் கொண்டிருந்தது.. போடா என்று உதட்டைச் சுழிக்க யத்தனித்தால் ஆணழகா, உன் அடிமை இவள் என்று மனது பாடித் தொலைக்கின்றதே.. இவள் மனதுக்குள் தலையைப் பிடித்துக் கொண்டிருப்பதை அறியாதவனாக ரவிச்சந்திரன் சீறிச் சினந்து கொண்டிருந்தான்..

“அவன் வேண்டாம்ன்னுதானே வயநாட்டுக்கு ஓடி வந்த..?”

“இது அபாண்டம் பாஸ்.. நான் ஓடி வரலை.. டிரெயினில்தான் வந்தேன்னு கோடி கோடி முறை சொல்லியாச்சு..”

“அதுக்குப் பேரு எந்தா..?”

“நீங்க எந்தாங்கிறது இந்தான்னு என்னைத் திட்டறது மாதிரியே இருக்கு பாஸ்.. தமிழிலேயே சம்சாரிங்களேன்.. ப்ளீஸ்..”

“பேச்சை மாத்தாதே.. இப்ப எதுக்காக அவனை நினைச்ச..?”

“எவனை..?”

“பெல்ட் மன்னனை..”

“நீங்க நினைக்கிறதைப் போல நினைக்கலை பாஸ்.. வேற மாதிரி நினைச்சேன்..”

“வேற மாதிரின்னா..?”

ஒரு மாதிரியான குரலில் கேட்டு அவளைச் சோதித்தான் ரவிச்சந்திரன்.. நந்தினிக்கு தலை வேதனையாக இருந்தது.

‘ஏண்டா பாவி இம்சை பண்ற..?’ தலையைப் பிடித்துக் கொண்டாள்.. அவன் அதற்கும் குதர்க்கமாக பேசி சண்டையை வளர்த்தான்..

“நான் பேசினா தலையை வலிக்குது.. அவனை நினைச்சா மட்டும் உன் மனசெல்லாம் இனிக்குது..?”

அடப்பாவி என்றிருந்தது அவளுக்கு.. நினைத்தாலே இனிக்கும் என்பதெல்லாம் சரிதான்.. அதற்காக பெல்ட் மன்னனை நினைத்தால் நந்தினியின் மனமெல்லாம் இனிக்கும் என்பது ஓவரிலும் செம ஓவர் அல்லவா..?

“உங்களுக்கே இது ஓவர்ன்னு தோணலையா பாஸ்..?” அழமாட்டாத குறையாக வினவினாள்..

அப்போதும் அவன் அடங்கவில்லை.. அவளை மலைப் பாதையில் உருட்டி விடும் உத்தேசம் கொண்ட ரௌத்ரத்துடன் முறைத்தான்..

‘உருட்டி விட்டிருவானோ..’ நந்தினி நடு நடுங்கினாள்..

“எனக்குத் தோணி என்ன பண்ண..? உனக்குத் தோணனுமே..” என்று முறைத்தான்..

“என்னத்தைத் தோணனும்..?”

“வேண்டாம்ன்னு உதறிட்டு வந்தவனை நினைச்சு ஏங்கக் கூடாதுன்னு..”

“என்னது..???”

நந்தினிக்கு அதற்கு மேல் பேச்சே வரவில்லை.. வாயடைத்துப் போனாள்.. பெல்ட் மன்னனை நினைத்து அவள் ஏங்குகிறாளா..?

‘தெய்வமே..!’

ரவிச்சந்திரனின் அபாண்டமான குற்றச்சாட்டுக் களைத் தாங்க முடியாமல் அவள் தெய்வத்திடம் சரணடைந்து முறையிட்டாள்.. அவளது முறையீட்டை தெய்வம் செவி மடுத்ததோ என்னவோ, ரவிச்சந்திரன் வேகத்தைக் குறைத்து வழியில் இருந்த அழகான கட்டிடத்தின் காம்பவுண்டிற்குள் வண்டியைச் செலுத்தினான்..

“இங்கே எதுக்கு வந்திருக்கோம்..?” புரியாமல் கேட்டாள்..

“திங்கிறதுக்காக இல்லை..” பட்டென்று பதில் சொன்னான் ரவிச்சந்திரன்.

எப்படி இப்படிச் சொல்லலாம் என்று நந்தினி சண்டைக்குக் கிளம்பியிருக்க வேண்டும்தான்.. ஆனால் அவள் மனது அந்த இடம் ஹோட்டலாக இருக்குமோ என்றுதான் கணித்திருந்தது.. அதை உறுதி படுத்திக் கொள்ள அவள் வாய் திறந்ததிருந்ததினால் பதில் பேசாமல் வாயை மூடிக் கொண்டாள்..

அத்தியாயம் 100

ரவிச்சந்திரன் குதித்து இறங்கிக் கட்டிடத்திற்குள் சென்று விட்டான்.. வாய் வார்த்தைக்குக்கூட அவளைக் கூட வரும்படிக் கூப்பிடவில்லை.. போனால் போகட்டும் போடா என்று நந்தினி சுற்று முற்றும் பார்த்தாள்.. கட்டிடத்தின் முன்னாலிருந்த தோட்டம் அவளது கண்களைக் கவர்ந்து இழுத்தது.. இவளும் குதித்து இறங்கித் தோட்டத்திற்குள் புகுந்தாள்.. மலர்ச் செடிகளும் பூங்கொத்து வளைவுகளுமாக தோட்டம் அட்டகாசமாக பூங்காவைப் போல இருந்து வைத்ததில் அவளது மனம் உற்சாகமானது.. புத்துணர்வுடன் செடிகளில் முகம் பதித்துப் பூக்களுக்கு முத்தம் கொடுத்தாள்..

“கொடுத்து வைத்த பூக்கள்..”

காதில் விழுந்த குரல் பழக்கமான குரலாகத் தோன்றியதில் ‘எவன் அவன்..?’ என்று நிமிர்ந்து பார்த்தாள்.. அங்கே நின்று கொண்டிருந்தவனைக் கண்டதும்..

‘அட..! இவனா..?’ என்று ஆச்சரியப் பட்டுப் போனாள்..

“என்னை இங்கே எதிர்பார்க்கலைல்ல..?” துளைக்கும் பார்வையுடன் அருகில் வந்தான் அவன்..

“எப்படி சார் எதிர்பார்க்க முடியும்..? யதேச்சையாச் செஞ்சிக் கோட்டையில மீட் பண்ணினோம்.. மறுபடியும் சென்ட்ரல் ஸ்டேஷனில் மீட் பண்ணினோம்.. செகண்ட் மீட்டிங் யதேச்சையானதா இல்லை நீங்க பிளான் பண்ணினதான்னு இன்னைக்கு வரை தெரியலை..”

“சந்தேகமே வேண்டாம்.. நான் பிளான் பண்ணினதுதான்..”

“நினைச்சேன்.. மாஸ்டர் பிளான்தான் போங்க.. என்னோட ஒவ்வொரு ஸ்டெப்பையும் கண்காணிச் சிருந்தாத்தான் சென்ட்ரல் ஸ்டேஷன் வரைக்கும் ஃபாலோ பண்ணியிருக்க முடியும்..”

“செர்ட்டன்லி.. நான் உங்களைக் கண்காணிச்சேன்.. ஃபாலோ பண்ணினேன்..”

“தயக்கமே இல்லாம ஒப்புக்கறிங்க பாருங்க.. அங்கே நிற்கறிங்க நீங்க..”

“இல்லேங்க.. இங்கே, வயநாட்டிலே உங்க கண்ணுக்கு முன்னாடிதான் நின்றுக்கிட்டு இருக்கேன்..”

“ஜோக்..?”

“ஆமாம்ன்னு சொன்னா நீங்க ஏத்துக்கவா போறிங்க..?”

“தெரியுதில்ல.. அப்புறமும் எதுக்காக வெட்டியா டிரை பண்றீங்க.. வராதுன்னு தெரிஞ்சா விட்டிரனும்.. டயத்தை வேஸ்ட் பண்ணிக்கிட்டு மெனக்கெடக் கூடாது..”

“டபுள் மீனிங்கில சொல்ற மாதிரி இருக்கே..”

“சந்தேகமே வேண்டாம்.. டபுள் மீனிங்கேதான்..”

அவன் பாணியிலேயே பதிலளித்தாள் நந்தினி.. எதிரில் நின்றிருந்த டூப்ளிகேட் ரவிச்சந்திரனின் துளைக்கும் பார்வை அவளை மயக்க முயன்றது.. அவனது மேய்ச்சல் பார்வையில் நந்தினி முகம் கடுத்ததும் அவசரமாக கண்ணியமான பார்வைக்குத் தாவினான் அவன்..

‘இஃது..’ நந்தினி பல்லைக் கடித்தாள்..

‘இப்படியே மெயின்டெயின் பண்ணு.. இல்லைன்னா பல்லைக் கழட்டிருவேன்.. பார்வையைப் பார் பார்வையை.. இவன் பெரிய மன்மதன்.. என்னைக் கண்காணிச்சு ஃபாலோ பண்ணினாம்.. பயமேயில்லாமல் சொல்றான்.. எத்தனை தைரியம்.. அழகாயிருக்கிறோம்ங்கிற தெனாவெட்டு..’

அவன் அழகாகத்தான் இருந்தான்.. கவர்ச்சியாகத்தான் இருந்தான்.. மயக்கும் அழகு..! மயங்க வைக்கும் கவர்ச்சி..! ரவிச்சந்திரன் ஒரு வகையில் அழகு என்றால் இவன் வேறொரு வகையில் அழகனாக இருந்தான்.. அழகிலும் கவர்ச்சியிலும் ரவிச்சந்திரனை எட்டிப் பிடித்தான்.. இருந்தும் நந்தினியின் மனம் சலனப்படவில்லை.. செஞ்சியில் சலனப்படுத்திய அவளது அழகும், கவர்ச்சியும் வயநாட்டில் சலனப் படுத்தாமல் எட்டி நிற்க வைத்தது.. ரவிச்சந்திரனின் கம்பீரத்துக்கு முன்னால் டூப்ளிகேட் ரவிச்சந்திரனின் சாகசம் நிரம்பிய கள்ளத்தனம் நிற்கக்கூட முடியாது என்ற ஏளனம் நந்தினியின் மனதில் வந்தது..

'அவன் எங்கே..! இவன் எங்கே..?'

"என்னைப் போலவே நீங்களும் உள்ளதை உள்ளபடி ஒப்புக்கறிங்க பாருங்க.. ஐ அப்ரிஷியேட் யு.."

"ரொம்பவும் புகழாதீங்க.."

"தன்னடக்கமா..?"

"ஊஹூம்.. பிடிக்கலை.."

ரவிச்சந்திரனின் முகம் கருத்து விட்டது.. ஓர் நொடி அவனது விழிகளில் கடும்சினம் வந்து போனது போல் இருந்தது.. பிரமையோ என்று நந்தினி குழம்பும் விதமாக சடுதியில் பார்வையை மாற்றிக் கொண்டவன் நட்புடன் கையை நீட்டினான்..

'இது எதுக்கு..?' கை கொடுக்காமல் கேள்வியுடன் பார்த்து வைத்தாள் நந்தினி..

டூப்ளிக்கேட் ரவிச்சந்திரனின் முகம் சுருங்கி விட்டது.. அவன் கை நீட்டினால் அவள் தெரிந்தவன்தானே என்று தயக்கமில்லாமல் கை கொடுப்பாள்... கை குலுக்கும் சாக்கில் அவளது விரல்களைப் பற்றி அழுத்தி சின்னதாக ஒரு விளையாட்டைக் காட்டலாம் என்று நினைத்திருந்தவனுக்கு நந்தினியின் கேள்வியான பார்வை தோல்வியைக் கொடுத்தது.. இருந்தும் பின்வாங்காமல்..

"கை நீட்டினா கை கொடுக்கனும்.." என்று சிநேகமாக சிரித்து வைத்தான்..

"இது என் கை சார்.." அசைந்து கொடுக்காமல் அறிவுறுத்தினாள் நந்தினி..

“ஹா.. ஹா.. என்னமா ஜோக்கடிக்கறிங்க..?” அவன் உரத்த குரலில் சிரித்தான்..

“இதையே ஜோக்குன்னு சொன்னா.. ஜோக்கை என்னன்னு சொல்வீங்க..?” அவன் சிரிப்பில் கலந்து கொள்ளாமல் கேட்டாள் நந்தினி..

‘எதுக்கும் மசிய மாட்டேங்கிறாளே..’

சிந்தனை சிந்தனையாக இருந்தாலும் அவன் சிரிப்பை நிறுத்தவில்லை.

“பரவாயில்லையே.. சூசைட் பண்ணிக்கிற மெண்டாலிட்டி மாறிப் போட்டுத் தாக்கற ஃபிரஷ்னெஸ்ஸுக்கு வந்துட்டிங்களே.. குட்..! நல்ல சேன்ஜ்.. இப்படித்தான் இருக்கனும்..” என்று மறைமுகத் தாக்குதலைத் தொடுத்தான்..

அவள் தற்கொலைக்கு முயன்றதை நினைவு படுத்திச் சொல்லிக் காட்டுகிறான் என்பதைப் புரிந்து கொண்டவளுக்கு எரிச்சல் வந்தது.. அதை அவன் உணராத வண்ணம் மறைத்துக் கொண்டபடி முகம் மாறாமல் அவனைப் பார்த்து..

“என்னை விடுங்க.. அன்றைக்கு டிரெயினில் நீங்கதான் ரவிச்சந்திரன்னு ஏன் பொய் சொன்னீங்க..?” என்று இமை கொட்டி அறியாப் பெண் போலக் கேள்வி கேட்டு அவனுக்கு அவள் சளைத்தவள் இல்லை என்பதை நிரூபித்தாள்..

அவனது முகம் மறுபடியும் கருத்தது.. நந்தினிக்குத் திருப்தியாக இருந்தது.. வாயை விட்டால் வாங்கிக் கட்டிக் கொண்டுதான் ஆக வேண்டும் என்று மனதுக்குள் கருவினாள்..

‘யாருகிட்ட..? இவனுக்குத்தான் வாயிருக்கா..? எனக்கு வாயில்லையா..? இவன் ஒரு பேச்சுப் பேசினாப் பதிலுக்குப் பத்துப் பேச்சைப் பேச எனக்கும் தெரியும்..’

“சும்மாதான்.. உங்ககிட்டப் பேச ஏதாவது ஒரு பொய்யைச் சொல்லியாகனுமில்ல..? தட்ஸ் ஆல்..” அவன் கவர்ச்சியாகப் புன்னகைத்து ஆழமாக அவள் விழிகளுக்குள் பார்த்து வைத்தான்..

‘என்னை மயக்கறானாமாம்..’

நந்தினிக்குத் தலையில் அடித்துக் கொள்ளலாம் போல இருந்தது.. இதுபோன்ற முயற்சிகளை அவள் ரசிப்பதில்லை.. இதை அவனிடம் எவராவது சொன்னால் தேவலாம்

என்றிருந்தது.. அவளே சொல்லி விடலாம்தான்.. அப்படிச் சொல்லி விட்டால் அவன் அவளை மயக்க முனைவதை அவள் புரிந்து கொண்டு விட்டதை அவன் தெரிந்து கொண்டு விடுவான்.. அதன் பின்னால் மறைமுகமான முயற்ச்சி நேரடியான மன்மதன் மலர்க்கணையாக உருமாறி விடும்..

‘தேவையா..?’

தேவையில்லை என்பதால் பல்லைக் கடித்துக் கொண்டு பொறுமை காத்தவள்.. அதே இமை கொட்டலுடன் அடுத்த கேள்வியைக் கேட்டாள்..

“ஓகே.. லீவ் இட்.. பொய் சொன்னீங்கன்னு நீங்களே ஒப்புக்கிட்டதாலே அதை விட்டு விடலாம்.. பிழைத்துப் போங்க.. பட்.. ஓரிஜினல் ரவிச்சந்திரன் வருகிறதைப் பார்த்தவுடன் பின்னங்கால் பிடறியில பட ஏன் சார் ஓடினீங்க..? நீங்க ஓடின வேகத்தில டிரெயின் தண்டவாளத்தில தலையைக் கொடுத்திருவீங்களோன்னு நான் பயந்தே போயிட்டேன்..”

இப்போது டூப்ளிகேட்டின் முகம் படு பயங்கரமாக மாறிப்போனது.. ஒளிவு மறைவில்லாமல் உறுத்துப் பார்த்தவனைத் தைரியமாக எதிர்கொண்ட நந்தினி..

‘யார் இவன்..?’ என்று திகைத்தாள்..

ரவிச்சந்திரனுக்கு இவன் எதிரியா.. இல்லை.. இவனுக்கு ரவிச்சந்திரன் எதிரியா என்ற வினாவுக்கு விடை கிடைக்கவில்லை.. எதிரிலிருப்பவனிடமும் அந்தக் கேள்வியைக் கேட்டு விட முடியாது போல இருந்தது.. ஏன் ஓடினாய் என்ற கேள்விக்கே வெட்டி விடுவதைப் போல இந்த முறை முறைக்கிறான்.. அடுத்த கேள்வியையும் கேட்டு வைத்தால் அவ்வளவுதான்..

‘நிஜமாவே வெட்டிப் போட்டிருவான்..’

எதற்கு வம்பு..? அவளே வயநாட்டில் ஒளிந்து வாழ வந்திருக்கிறாள்.. வந்த இடத்தில் வெட்டுப்பட அவள் தயாராக இல்லை.. யாரோ யாரைக் கண்டோ ஓடினால் அவளுக்கு என்ன வந்தது..? அதைத் தெரிந்து கொண்டு என்னத்தைக் கிழிக்கப் போகிறாள்..?

“கூல் சார்.. கூல்..”

நந்தினி அவனுக்கு வேப்பிலை அடித்துக் குளிர்வித்து மலையிறக்க முயன்றாள்.. பெண்கள் குளிர்ச்சியாக்க முனைந்தால் அவன் வெட்க மானமில்லாமல் உடனடியாக குளிர்ந்து விடுவான் போல.. நந்தினி கூல் என்றதும்..

“ஹி.. ஹி..” என்று குளிர்ந்து போனான்..

‘இம்புட்டுச் சீக்கிரமா மலையிறங்கிட்டானே..’ அயர்ந்து போனாள் நந்தினி..

“நீங்க சொன்னா இந்த மலையுச்சியில இருந்து கூடக் குதிப்பேங்க.. கூல் ஆக மாட்டேனா..?”

நந்தினி கடுப்பாகி விட்டாள்.. நடுவில் கொஞ்சம் பக்கங்கள் காணாமல் போனாலும் போனது.. ஆளாளுக்கு இந்த டயலாக்கையே ஒப்பிக்கிறார்கள்..

“அடடா.. அப்படியா..? அப்ப அந்த ரோட்டோரமாப் போய் குதிச்சுருங்களேன்..”

நந்தினி சிரிக்காமல் படு தீவிரமாக முகத்தை வைத்துக் கொண்டு சாலையின் மறுபுறத்தைச் சுட்டிக் காட்டினாள்.. அங்கே கிடுகிடுப் பள்ளத்தாக்கு இருந்தது..

“ஜோக்கடிக்காதீங்க..” அவன் திகைப்பை மறைத்துக் கொண்டு சிரித்துச் சமாளித்தான்..

“ஜோக்கில்லைங்க.. நிஜமாத்தான் சொல்றேன்..”

“விளையாடாறீங்களா..?”

“உங்ககூட நான் ஏங்க விளையாடப் போறேன்..? நீங்கதானே நான் சொன்னா மலையுச்சியில இருந்துகூடக் குதிப்பீங்கன்னு சொன்னீங்க..? நீங்க குதிக்கறதுக்குத் தோதா மலையுச்சியிலதான் நிற்கிறோம்.. மலையேறனும்ங்கிற அவசியம் கூட இல்லை.. குதிச்சுருங்களேன்..”

“ஹா ஹா.. நந்தினி..”

“என் பெயர் நந்தினி.. ஹா ஹா.. நந்தினியில்லை..”

“யு ஆர் ஸோ ஸ்மார்ட்..”

‘ஸோ ஸ்வீட்டுன்னு சொல்லியிருக்கனும்.. பிய்ச்சிருப்பேன் பிய்ச்சு.. படவா.. வயநாட்டுக்கும் தொடுத்து வந்து கடலை சாகுபடி பண்ணப் பார்க்கிறியா..?’ நந்தினி கழுத்தைச் சாய்த்து அவன் பார்வையை நேரடியாகச் சந்தித்தாள்..

கள்ளப் பார்வைகளுக்கேப் பழக்கப் பட்டிருப்பான் போல.. அவளது நேர் பார்வையை அவனால் எதிர் கொள்ள முடியவில்லை.. சன்னமான அதிர்வு அவன் விழிகளில் தெரிந்தது..

“யார் நீங்க..?” நிதானமாக கேட்டாள் நந்தினி..

“உங்களைத் தொடர்பவன்..” அவன் உல்லாசமாக சிரிக்க முயன்று தோற்றான்..

‘வரலைன்னா.. விட்டுத் தொலைடா..’ நந்தினி இமைகள் இடுங்க ஒரு திணுசாகப் பார்த்து விட்டு..

“ஸோ... வய நாட்டுக்கு வந்தாலும் விடாம ஃபாலோ பண்ணுவீங்க..?” என்று கேட்டாள்..

“ஷ்யூர்.. ஷ்யூர்..”

“பார்த்து சார்.. இது வேற ஏரியா.. நானிருக்கிற இடமும் உயரமானது.. உங்களால் கிட்டக் கூட நெருங்க முடியாது.. அறியாத ஊருக்கு வந்து அடி வாங்காம உங்க ஊருக்குப் போய் சேருங்க..”

“இல்லைன்னா..?”

அவனது கேள்வியில் சவால் இருந்தது.. திடீரென அவனது பார்வையில் பதட்டம் வந்தது.. நந்தினியின் முகுதுக்குப் பின்னால் யாரையோ பார்த்தவன் பேயைப் பார்த்ததைப் போலப் பதறிப் போனவனாக விரைந்து நடந்தான்.. போகிற போக்கில்..

“அறியாத ஊரா..? எனக்கா..? உங்களுக்குத்தான் இது அறியாத ஊர்.. எனக்குப் பிறந்து வளர்ந்த ஊர்.. என் ஊருக்கே வந்து என்னை மிரட்டறிங்களா..?” என்று கேட்டு விட்டுத்தான் போனான்..

‘இவன் வயநாட்டுக்காரனா..?’

மலையாள வாடையில்லாமல் தெளிவாக தமிழ் பேசுகிறானே என்று யோசித்தாள் நந்தினி.. வயநாட்டில் தமிழர்கள்தான் அதிகம் இருந்தார்கள்.. ரவிச்சந்திரனும் மலையாளக் கலப்பில்லாத தமிழ் பேசுகிறவன்தான் என்றாலும் எப்போதும் போல அப்போதும் அந்த டூப்ளிகேட் ரவிச்சந்திரன் பொய் சொல்கிறான் என்றே அவளுக்குத் தோன்றியது..

அத்தியாயம் 101

எது எப்படியிருந்தாலும் யாரையோ பார்த்துப் பயந்து அந்த டூப்ளிகேட் ஓடியதில் இவன் வீராதி வீரனல்லோ என்று நந்தினிக்குச் சிரிப்பு வந்தது.. அந்தச் சிரிப்புடன் திரும்பியவள் அங்கே முறைப்புடன் நின்றிருந்த ரவிச்சந்திரனைக் கண்டதும் முகம் மலர்ந்தாள்..

'ஈ சுந்தரன் எப்போது வந்தான்..?' அவள் மனம் ஜொள்ளிக் கொண்டிருக்க அந்தச் சுந்தரன் கடுகடுத்த முகத்துடன்..

"அவன்கூட உனக்கென்ன பேச்சு..?" என்று குற்றவாளியை விசாரிப்பதைப் போல விசாரித்தான்..

"எவன் கூடப் பேசினதைச் சொல்கிறீங்க..?"

நந்தினி உண்மையிலேயே டூப்ளிகேட்டை மறந்து விட்டுக் கேள்வி கேட்டாள்.. அவளுக்குத்தான் ரவிச்சந்திரனைப் பார்த்து விட்டால் மற்றவையெல்லாம் மறந்து தொலைத்து விடுகிறதே.. இஞ்சி தின்ற மானைப் போல 'ஈ' யென்று ஆகி விடுகிறாளே..

‘மலையாள தேசத்துக்கு வந்தாலும் வந்தேன்.. எதுக்கெடுத்தாலும் ‘ஈ’ தான்.. என்ன பிழைப்புடா இது..’ சலித்துக் கொண்டாள் நந்தினி..

“பொய் சொல்லாதே..” ரவிச்சந்திரன் சீறினான்..

“பொய்யா..? நான் எதுக்குப் பொய் சொல்லனும்..?”

“அதை நீதான் சொல்லனும்..”

“எதை..?”

“எதுக்காக பொய் சொல்கிற என்பதை..”

“திரும்பத் திரும்பப் பொய் சொல்கிறேன்னு சொன்னா எனக்கு கெட்ட கோபம் வரும் பாஸ்.. யார் கூடவும் நான் பேசலை..”

“இப்ப நான் வர்றப்ப ஒருத்தன் ஓடினானே.. அவன்கூட நீ பேசலையா..?” “ஓடினானா..?”

நந்தினிக்கு விளங்கி விட்டது.. ஒரிஜினல் ரவிச்சந்திரன் டூப்ளிகேட் ரவிச்சந்திரனைச் சொல்கிறான் என்ற நினைவு வர சிரிப்பும் சேர்ந்து வந்து விட்டது.. கேரள பாணியில் உதடுகளைக் குவித்து.. “ஓ..” என்றவள்..

“பாஸ் ஆ ஆளைப் பத்தி பறஞ் ..?” என்று சிரிக்க ஆரம்பித்தாள்..

நந்தினியின் சிரிப்பு ‘ஒட்டுவாரொட்டி’ யாக இல்லை போல.. ரவிச்சந்திரன் சிரிப்பு என்றால் எப்படியிருக்கும் என்று கேட்பவனைப் போல முசுட்டுத்தனமாய் முகத்தை வைத்துக் கொண்டு அவளை முறைப்பதையே கடமையாய் கொண்டு முறைத்தபடியிருந்தான்..

“கொஞ்சம் சிரிங்க பாஸ்..” நந்தினி மேலும் சிரிக்கலானாள்..

“அவன்கிட்டப் பேசினதில இவ்வளவு சிரிப்பு வருது..? ஊம்..? இப்படி நீ சிரித்து மகிழ்ந்து போகிற அளவுக்கு அவன் உனக்கு அத்தனை இனிப்பான் ஆள் போல..”

“இனிப்பான ஆளா..? ஹா, ஹா.. விட்டா ஸ்வீட் எடு, கொண்டாடலாம்ன்னு சொல்வீங்க போல..”

“வேணும்ன்னா கோழிக்கோடன் அல்வாவைக் கொண்டு வரச் சொல்லட்டுமா..? இனிப்பைச் சாப்பிட்டுக் கொண்டாடுவியில்ல..?”

“கூடவே நேந்திரங்காய் சிப்சையும் கொண்டு வரச் சொல்லுங்க பாஸ்.. ஸ்வீட்டோடு காரத்தையும் சாப்பிட்டுக் கொண்டாடத் தோதாயிருக்கும்..” நந்தினி நாக்கைச் சப்புக் கொட்டினாள்..

“டீயை விட்டுட்ட..” ரவிச்சந்திரன் சிரிக்காமல் நினைவுபடுத்தினான்..

“என்னத்த பாஸ் சொல்றது..? பொதுவா எல்லோரும் ஸ்வீட், காரம், காபின்னுதான் சொல்லுவாங்க.. ஈ மலையாள நாட்டிலதான் எதுக்கெடுத்தாலும் சாய் கொண்டு வரட்டேன்னு சம்சாரிக்கிறாங்களே.. சாயையே கொண்டு வரச் சொல்லுங்க...”

நந்தினி ஒடிப்போன டுப்ளிகேட்டை மறந்து போனவளாக நொட்டை விட்டுக் கொண்டு ஸ்வீட், காரம், டீயை மொக்கத் தயாரானாள்.. அவளை ஆழ்ந்து பார்த்த ரவிச்சந்திரனின் ஊடுறுவும் பார்வையில் நிதானித்தவள்..

‘இவன் பார்வையே சரியில்லையே..’ என்று உஷாரானாள்..

‘சும்மாக்காச்சும் சொல்லியிருக்கான்..’

ஸ்வீட், காரம் ஆசையில் மண் விழுந்து விட அழ மாட்டாத குறையாய்.. "பாஸ்..?" என்றாள்..

"ஆள்தான் வளர்ந்திருக்க.. அறிவு வளரலை.." ரவிச்சந்திரன் அவளை மட்டம் தட்டினான்..

நந்தினியின் மனதுக்குள் ஆளும் வளரனும், அறிவும் வளரனும், அதுதாண்டா வளர்ச்சியென்ற பாடல் ஒலித்தது.. அவளை எப்படியெல்லாம் திட்டுகிறான்.. அரதப் பழசுத் தமிழ்ச் சினிமாப் பாடலை மேற்கோள் காட்டித் திட்டுகிறானே.. ஒரு ஸ்வீட், காரம், டீக்கு ஆசைப்பட்டு விட்டக் குற்றத்திற்காக அவன் என்ன வேண்டுமானாலும் பேசுவான்.. அதை நந்தினி கேட்டுக் கொண்டிருக்க வேண்டுமா..? சும்மா இருந்தவளிடம் ஸ்வீட் எடு, கொண்டாடு என்று சொன்னது யார்..? அவன்தானே..

"உங்க உயரத்துக்கு வளரலைன்னாலும் ஓரளவுக்கு நானும் வளர்த்திதான் பாஸ்.." ரோஷத்துடன் சொன்னாள்..

ஆறடிக்கும் கூடுதலான உயரத்தில் நின்றிருந்தவனின் தோளைத் தாண்டும் உயரத்துடன், கொடி போன்ற உடல் வாகுடன் இருந்தவளை உன்னிப்பாக பார்த்து வைத்தவனின் பார்வை அவளை அளவிட்டதில் முகம் சிவந்தாள்..

சண்டையிடுவதைப் போலப் பேசியபடி மேய்ச்சல் பார்வை பார்க்க அவனால்தான் முடியும் என்று மனதுக்குள் சிவந்தாள்.. அவள் மனதைப் படித்தவனைப் போல அவளது கண்ணோடு கண் கலந்தவனின் விழிகளில் இருந்தது கோபமா இல்லை தாபமாக என்று அறுதியிட்டுச் சொல்ல முடியாமல் திணறிப் போனாள் நந்தினி..

“வாய்க்கு ஒண்ணும் குறைச்சலில்ல..” கோபம் குறையாமல் சொன்னான் ரவிச்சந்திரன்..

‘எதுக்காக இந்த அளவுக்குக் கோபப்படறான்..?’

நந்தினிக்கும் கோபம் கோபமாக வந்தது.. அது என்ன அவளை சிறை கைதி போல நடத்துகிறான்..? எஸ்டேட் மேனேஜரிடம் பேசினாலும் வள்ளென்று மேலே விழுந்து பிடுங்காத குறையாக கடிக்கிறான்.. எஸ்டேட் மேனேஜரின் மகனிடம் பேசினால் கொலையே பண்ணி விடுவதைப் போலத் துடிக்கிறான்.. இப்போது என்னடா வென்றால் ஊர்பேர் தெரியாத டூப்ளிகேட் ஒருவனிடம் வாய் வளர்த்துவிட்டக் குற்றத்திற்காக அவளை வாங்கு வாங்கு என வாங்குகிறான்..

இதே ரீதியில் போனால் அவளுக்கு பேச்சே மறந்து விடுமோ என்ற கவலை மேலிட்டது நந்தினிக்கு.. அவனிடம்

சொன்னால் என்னிடம் பேசு என் பான்.. அது அற்புதமான ஒன்றுதான்.. அவனுடன் பேசிக் கொண்டிருப்பதில் நந்தினிக்கு ஆட்சேபம் ஏதும் இல்லைதான்.. பேச்சு பேச்சோடு நின்றால் தேவலையே.. ஊறும் அவனது பார்வையில் ஒட்டு மொத்த உடலும் கூச நந்தினி ஏதேதோவாக மாறிப் போகிறாளே.. அவளுள் என்னென்னவோ மாற்றங்கள் உண்டாகித் தொலைக்கின்றனவே.. அதன் பின் அவன் முகம் பார்த்துப் பேச முடியாமல் போகின்றதே..

"என்ன்ன்..ன..? பேச்சைக் காணோம்..? அவன்கிட்டச் சிரித்துச் சிரித்துப் பேசின.. என்னிடம் பேச மட்டும் சேலரி கேட்கிற..? ஏன்..? என்கூடப் பேசப் பிடிக்கலையா..?"

ரவிச்சந்திரனின் கேள்வியில் என்னைப் பிடிக்க வில்லையா என்ற கேள்வி தொக்கி நின்றது.. உறுத்துப் பார்த்தவனின் குற்றம் சாட்டும் பார்வைக்கு என்ன பதிலைச் சொல்வது என்று தெரியாமல் தடுமாறினாள் நந்தினி..

அவனைப் பிடித்திருக்கிறது.. அதிக அளவில் பிடித்திருக்கிறது.. அது காதலா என்றுதான் பிடிபடவில்லை என்பதை எப்படிச் சொல்வாள் நந்தினி..? சொன்னால் அவளை சும்மா விட்டு விடுவானா..?

“அபாண்டமாப் பேச வேண்டாம் பாஸ்..” என்று மட்டும்தான் அவளால் சொல்ல முடிந்தது..

“எது அபாண்டம்..? அவனைக் கண்டதும் உன் முகம் பூவா மலர்ந்ததே.. அது அபாண்டமா..? அவனிடம் சிரி த்துச் சிரித்துப் பேசினாயே.. அது அபாண்டமா..?” அடுக்கினான் ரவிச்சந்திரன்..

‘எல்லாத்தையும் நோட் பண்ணியிருக்கான்..’

நந்தினி அதை விரும்பவில்லை.. அவளுடைய சுதந்திரம் பறிபோவதைப் போல அவள் உணர்ந்தாள்.. அவளுக்கு அவன் அடைக்கலம் கொடுத்திருக்கிறான் தான்.. அதற்காக அவள் அவனுக்கு அடிமையாகி விட முடியாது.. யாருடன் பேச வேண்டும்.. எந்த அளவில் பேச வேண்டும் என்பதை அவள்தான் நிர்ணயிக்க வேண்டும்.. அவனல்ல..

“அறியாத ஊரில தெரிஞ்சவங்களைக் கண்டா முகம் தானா மலரும்.. அதைக் குற்றம் சொல்லக் கூடாது.. சிரிக்கத் தெரிஞ்சவங்கதான் மனுஷங்க.. தெரிஞ்சவங்களிடம் சிரித்த முகமா பேசாம வெட்டுவேன், குத்துவனேங்கிற மாதிரி முறைச்சுக்கிட்டேப் பேச முடியுமா..?” என்று ரவிச்சந்திரனை முறைத்து வைத்தாள்..

“அவனிடம் சிரிப்பு.. என்னிடம் முறைப்பா..? வெரிகுட்.. இப்படியே மெயின்டெயின் பண்ணு.. உனக்க வேலை கொடுத்து வீட்டில் தங்க வைத்திருக்கிறேன் பாரு.. அதுக்கு இதுதான் சரியான கைம்மாறு..” கடினத்துடன் சொன்னான் அவன்..

“சொல்லிக் காட்டறிங்களா..?” மூக்கை உறிஞ்சினாள் நந்தினி..

“வேற வழி..? சொல்லிக் காட்டினால்தானே உனக்கு நான் யார்.. உனக்கு என்ன செய்திருக்கிறேன் என்பதே நினைவுக்கு வருது.. இல்லேன்னா.. ஒரே செகண்டில எல்லாத்தையும் மறந்துட்டு யார் நீன்னு பார்த்து வைக்கிறயே..”

மறுபடியும் இருபொருள்படப் பேசி வைத்தான் ரவிச்சந்திரன்.. அனைத்தையும் அவள் மறந்து விட்டாள் என்ற அழுத்தமானக் குற்றச்சாட்டில் நீலிமலைக் காட்டின் மரக்குடில் மறைந்திருந்தது.. அவன் தொட்ட இடங்களும் முத்தமிட்ட உதடுகளும் தீயாகத் தகித்ததில் எதை நான் மறந்தேன் என்று தவித்துப் போனாள் நந்தினி.. அவளது மனம் ஒன்றும்

இரும்பால் ஆனதில்லையே.. மனதின் சலனங்களை வெளிப்படுத்த முடியாமல் வேறு வகையில் பாய்ந்தாள்..

“நீங்க வேலை கொடுத்திருந்தா அதுக்காக வேலையை நான் செய்து விட்டுப் போகிறேன்.. வீட்டில் தங்கச் சொல்லி நீங்கதான் சொன்னீங்க.. நான் ஹாஸ்டலில் தங்கிக்கறேன்னுதான் சொன்னேன்.. வேண்டாம்ன்னு சொன்னது நீங்கதான்..”

“அதுக்குத்தான் உன்னைத் தோளில் கட்டித் தொங்க விட்டுக்கிட்டு அல்லாடறேன்.. நீ வேலை செய்து கிழிக்கிற லட்சணத்தைச் சொல்லிராதே.. எதையாச்சும் சொல்லிடப் போறேன்..”

“சொல்லுங்களேன்.. சொல்ல அஞ்சுகிற ஆளா நீங்க..?”

“எதுக்கு அஞ்சனும்..? உனக்கு நான் பாஸா..? இல்லை எனக்கு நீ பாஸா..?”

“எனக்கு நீங்கதான் பாஸ்.. இல்லேன்னு சொல்ல முடியுமா..?”

“சொல்லித்தான் பாரேன் ..”

“சொல்லிட்டுத் தப்பிக்க முடியுமா..?”

“ஓ.. நீ ரொம்ப பயந்தவளோ..?”

“இல்லையோ..?”

“பயந்தவதான் முன்னே பின்னே தெரியாதவன் கிட்டப் பல்லைப் பல்லைக் காட்டிப் பேசுவாளா..?”

“அவள் இவள்ன்னு சொல்ல வேண்டாம் பாஸ்.. அது என்ன பல்லைக் காட்டின்னு பகடி பேசறிங்க.. திஸ் இஸ் நாட் ஃபேர்..”

“அவனிடம் நீ பல்லைக் காட்டினது மட்டும் ஃபேரா..?”

“தெரிஞ்சவன்கிட்டச் சிரித்த முகமாப் பேசினாக் குத்தமா..? கடவுளே..! இதில இவர் வீட்டில் தங்க வைத்திருக்கிறதைச் சொல்லி வேற காட்டறார்.. உங்க வீட்டிலே இருக்கிற அத்தை குடும்பத்தைப் பார்த்து நடுங்கி நடுங்கி எனக்குச் சிரிப்பே மறந்து போயிருச்சு பாஸ்.. அதுக்கே எனக்கு நீங்க அதிப்படியான சேலரியைத் தரனும்.. இப்படி வெளியில பார்க்கிறவங்க கிட்டச் சிரித்துப் பேசியாவது சிரிப்பை ம றக்காம தக்க வைத்துக்க டிரை பண்ணிக்கிட்டு இருக்கேன்.. உங்களுக்கு அது பொறுக்கலையா..?”

“ஓ..! சிரிக்காமப் பேச உன்னால முடியாதோ..?”

“முடியாது பாஸ்.. நந்தினின்னா சிரிப்பு.. அதுதான் என்னோட டிரேட் மார்க்.. உம்மணாம் மூஞ்சு நந்தினியா நான் தஞ்சாவூருக்குத் திரும்பினேன்னு வையுங்க.. இவ நந்தினியே இல்லைன்னு வீட்டை விட்டு வெளியில் துரத்திருவாங்க.. கற்பூரத்தை அணைத்துச் சத்தியம் பண்ணினாலும் நந்து நம்ப மாட்டான்..”

“வயநாட்டில் இருந்துக்கிட்டு தஞ்சாவூரைப் பத்தி ஏன் பேசற..?”

“அதுதானே என் ஊர்..? இன்றைக்கே அப்பா மனசு மாறி பிறந்த வீட்டைத் தேடி ஓடி வா நந்தினின்னு பாட்டுப் பாடிக் கூப்பிட்டா வயநாட்டு மலையை ஒரே தாண்டாத் தாண்டி நான் ஓடி விட மாட்டேனா..?”

“ஸோ.. என்னை விட்டு ஓடிப் போகிறதிலேயே குறியாய் இருக்கிறன்னு சொல்லு..”

ஒரு மாதிரியான குரலில் அவன் சொன்னதும் என்ன சொல்வது என்று தெரியாமல் பேசாமல் இருந்தாள் நந்தினி.. அவள் அவனிடம் வேலை செய்கிறவள் என்ற பெயரில் மறைந்திருக்க ஓர் அடைக்கலம் தேடித்தான் வந்திருக்கிறாள் என்பதை ஏன் அவன் மறக்கிறான் என்று அவள் மனம்

வேதனை கொண்டது.. நிரந்தரமாக வயநாட்டில் அவள் தங்கிவிட முடியுமா..? அது நடக்கின்ற ஒன்றா..?

நந்தினியின் முகத்தில் கவிந்த வேதனை ரவிச்சந்திரனைப் பாதித்தது.. அடுத்தது காட்டும் பளிங்கு போன்றது இவள் முகம் என்று நினைத்துக் கொண்டான்.. மனதில் ஒன்று, வாக்கில் ஒன்று என்று இருப்பவர்களின் மத்தியில் இருப்பவன் அவன்.. மனதில் உள்ளதை மறைக்காமல் பேசி விடும் அவளது சுபாவம் அவனை ஈர்த்தது.. அவள் மீதான அபிமானத்தை அதிகரிக்கச் செய்தது.. அவளைக் கட்டியணைத்து இதழோடு இதழ் பொருத்திக் காதல் சொல்லும் ஆசை மேலிட்டது..

அத்தியாயம் 102

அடக்க முடியாத ஆசை கண்களில் பிரதிபலிக்க அளவருகில் நெருங்கி நின்றான்.. அவளைத் தொடப் போனவன் அவளது விழிகளில் தெரிந்த மருட்சியில் தொடாமல் விலகி நின்று பெருமூச்சு விட்டான்.. நந்தினிக்கு படபடப்பாக இருந்தது.. எந்த நேரம் அவன் நெருங்குவானோ என்று பயந்து பயந்து அவனிடம் வேலை பார்க்க நேரிடுவது துன்பமாக இருந்தது.. அவளது கன்னி மனதைச் சலனப் படுத்துகிறான் என்று அவள் சினங் கொண்டாள்..

அவனுக்கு வேண்டுமானால் அது இலகுவாக இருக்கலாம்.. இயல்பான ஒன்றாக எளிதில் கடக்கக் கூடிய உணர்வுகளாக இருக்கலாம்.. அவளுக்கு அப்படியில்லையே.. அவனது உடல் கூசச் செய்யும் ஓர் பார்வையில் தன் வயமிழந்து விடுகிறாளே.. உலகம் சுற்றும் கோடிஸ்வரனான அவனுக்கு சிறு பெண்ணின் உணர்வுகளுடன் விளையாடக் கூடாது என்பது கூடவா தெரியாது..?

இமைகளை இறுக மூடித் தன் உணர்வுகளைக் கட்டுக்குள் கொண்டு வர முயன்றாள் அவள்.. அவளையே

பார்த்தபடி நின்றிருந்த ரவிச்சந்திரனுக்கு ஏன் அவள் இப்படித் தவிக்க வேண்டும் என்ற சினம் உண்டானது.. அவன் என்ன காமுகனா..? அவனுடைய காதலை அவள் ஏற்றுக் கொண்டால்தான் என்ன..? தொட அனுமதித்தால் தான் என்ன..? அவன் தொட்டால் அவள் கரைந்து போவாளா என்ன..?

இருவருமே இறுவேறுபட்ட மன உணர்வுகளுடன் ஒருவர் மீது ஒருவர் ஆத்திரம் கொண்டார்கள்.. அதை நேரடியாக வெளிப்படுத்த முடியாமல் டூப்ளிகேட் ரவிச்சந்திரனைக் காரணம் காட்டி மோதிக் கொண்டார்கள்.. "அவனிடம் உனக்கென்ன பேச்சு..?"

"அதுதான் தெரிந்தவன்னு சொல்லிட்டேனே.. அப்புறம் என்ன..?"

"எந்ந்ந்ந்...த அளவுக்குத் தெரிந்தவன்..?"

"மைண்ட் யுவர் டங் பாஸ்.. ஹி இஸ் ஜஸ்ட் எ நோன் பெர்சன்.. தட்ஸ் ஆல்.."

"வெல் நோன் பெர்சன் போலப் பல்லைக் காட்டின.."

“ஐ அப்ஜெக்ட் தி ‘பல்லைக் காட்டின..’ சிரித்துப் பேசினன்னு சொன்னா நல்லாயிருக்கும்.. நாகரிகமா இருக்கும்..”

“நாகரிகத்தைப் பத்தி நீ எனக்குச் சொல்லித் தர்ற.. தேவைதான் எனக்கு..”

“என்ன செய்கிறது பாஸ்..? உலகம் சுற்றுகிற உங்களாலே நாகரிகத்தை விடாம மெயின்டெயின் பண்ண முடியலயேன்னு நினைக்கறப்ப கஷ்டமாத்தான் இருக்கு..”

“ரொம்பவும் கஷ்டப்பட்டுக்காதே..”

“நீங்க சொன்னா சரிதான்..”

“இது கேரளா.. வயநாடு..”

“தமிழ்நாட்டுத் தஞ்சாவூர் இல்லேன்னு எனக்கும் தெரியும் பாஸ்..”

“இதை மட்டும் தெரிந்து வைத்து என்ன பிரயோஜனம்..? எவனிடம் வேண்டுமானாலும் சிரித்துப் பேசக் கூடாதுன்னு தெரிய மாட்டேங்குதே.. அதில்ல பிராப்ளம்..”

“உங்களுக்கு நான் வாயைத் திறந்தாலே பிராப்ளம்தான் பாஸ்.. ஊமை மாதிரி ஒற்றை விரலை வாய்மேல

வைத்துக்கிட்டு உங்க முன்னாலே அடங்கி ஒடுங்கி நின்னா பேசாம இருப்பீங்க.. இல்லேன்னா இல்லாத பிராப்ளத்தையெல்லாம் கிரியேட் பண்ணி என்னை ஒரு வழியாக்கிருவீங்க..”

“உன்னை என்கூடவே கூப்பிட்டுக்கிட்டுப் போயிருக்கனும்.. வெளியே விட்டுட்டுப் போனதுதான் தப்பாப் போச்சு..”

“இது ஓவர்ன்னு உங்களுக்கேத் தோணலையா பாஸ்..? தெரிந்தவன் ஒருத்தன்கிட்ட ஒரு வார்த்தை சிரித்துப் பேசிட்டேன்.. அதுக்காக இந்தக் காய்ச்சு காய்ச்சுவீங்களா..?”

“அவனை உனக்கு எப்படித் தெரியும்..?”

“செஞ்சிக் கோட்டையைச் சுற்றிப் பார்க்க நானும், உத்ராவும் போனோம்.. அங்கேதான் இவனைப் பார்த்தோம்.”

“கண்வுடன் காதலா..?”

“வாட்..?”

நந்தினிக்குத் தூக்கிவாரிப் போட்டது.. கண்டவுடன் காதலா என்றா கேட்டான் என்று நம்ப முடியாமல் அவனைப் பார்த்தாள்.. கடுகடுத்த முகத்துடன்..

“என்ன ‘வாட்’டுன்னு அலறுகிற..? கண்டவுடன் காதல் வராமலா இந்த அளவுக்கு அவனிடம் கொஞ்சிக் கொஞ்சிப் பேசுவ..?” என்று கேட்டு அவன் அப்படித்தான் கேட்டான் என்பதை உறுதிபடுத்தினான் ரவிச்சந்திரன்..

“கண்டவுடன் எப்படிக் காதல் வரும் பாஸ்..?” நந்தினியால் தாங்கவே முடியவில்லை..

“உனக்கு வரலையா..?”

என்னவோ பஸ் வரவில்லையா என்பதைப்போல அத்தனை இலகுவாக விசாரித்து வைத்தான் ரவிச்சந்திரன்..

‘எப்படிக் கேஷுவலாக் கேட்கிறான் பார்..’

பல்லைக் கடித்த நந்தினிக்கு ஆமாம், அப்படித்தான் என்று சொல்லி அவனைக் கடுப்பேற்ற வேண்டும் போல வெறி வந்தது.. அவனே ஏகக் கடுப்பில் வெறி பிடித்தவனைப் போலதான் இருந்தான்.. இன்னும் கடுப்பேற்றினால் அவளைக்

குதறியெடுத்து விடுவான் என்ற பயத்தினால் அதைச் சொல்லாமல் தவிர்த்தாள்..

“வரலை..” பல்லைக் கடித்தபடி சொன்னாள்..

“காதல் வராதப்பவே இத்தனை பேச்சும் சிரிப்பும்ன்னா காதல் வந்திருந்தா எப்படியெல்லாம் பேசிச் சிரித்திருக்க மாட்ட..?”

‘இவனோட இமாஜினேஷன் இருக்கே..’

அவனது கற்பனையின் லொள்ளைத் தாங்க முடியாமல் தலை வேதனை கொண்ட நந்தினி..

“அவன் மேல காதல் வர்றப்ப பேச்சும் சிரிப்பும் கூடுமில்ல.. அப்போப் பார்த்துத் தெரிஞ்சுக்கங்க பாஸ்..” என்று சொல்லி விட்டாள்..

இப்போது “வாட்..?” என்று அலறுவது அவனது முறையாகி விட்டது..

அவன் போட்ட சப்தத்தில் உடல் அதிர நடுங்கிப் போனாள் நந்தினி.. கண்கள் இரண்டும் கோவைப் பழங்களாய் சிவக்க அவளது கழுத்தில் ஒற்றைக்கையைப் பதித்து உச்சத் தூக்காய் தூக்கி விட்டான் ரவிச்சந்திரன்..

“பாஸ்..”

விழிகள் பிதுங்க மூச்சு விட முடியாமல் துடித்துப் போய் விட்டாள் நந்தினி.. பிழைத்துப் போகட்டும் என்று பெரிய மனது பண்ணி.. அவளைக் கீழே இறக்கியவன்..

“கொன்று விடுவேன்.. கொன்று..” என்று உறுமினான்..

அவன் செய்தாலும் செய்து விடுவான் என்பதில் நடுங்கிப் போனாள் நந்தினி.. அவள் கதி இப்படியா ஆக வேண்டும்..?

பெல்ட் மன்னனுக்குப் பயந்து வய நாட்டுக்கு ஓடி வந்தால் இவன் பெல்ட் மன்னனையேத் தூக்கிச் சாப்பிடுகிற அளவுக்குக் கோபக்காரனாக இருந்து தொலைக்கிறானே..

‘இவன் சகவாசமே வேணாம்.. இன்னைக்கே வயநாட்டு மலையில இருந்து தலைகீழாப் பாய்ஞ்சாவது கோழிக்கோடுக்கு ஓடி மங்களூர் எக்ஸ்பிரஸ்ஸை பிடிச்சுரனும்..’

கழுத்தைத் தடவியபடி மனதுக்குள் தீர்மானித்தாள்..

“என்ன..? மங்களூர் எக்ஸிபிரஸ்ஸப் பிடிச்சுத் தப்பி ஓடிடலாம்ன்னு பிளான் போடறியா..” கண்கள் இடுங்கக் கேட்டான் ரவிச்சந்திரன்..

‘மனசுக்குள்ள எதை நினைச்சாலும் கண்டு பிடிச்சுடறான்..’

“இதைத் தவிர வேற எதை நினைக்கப் போகிற..? டிரெயினில வர்றப்பவே பெட்டியைத் தூக்கின ஆள்தானே நீ..?”

“பெட்டியைத் தூக்க வைத்தீங்க..”

“என்மேலேயே பழி போடு.. உன்மேல் தப்பே இல்லை..”

“என்ன தப்பைக் கண்டுட்டீங்க..?”

“செஞ்சிக் கோட்டையில் பாத்தவுடனே ஓட்டிக்கனுமா..?”

“நான் ஒண்ணும் ஓட்டிக்கலை.. உத்ராதான் ஓட்டிக்கிட்டாள்..” உதடுகள் துடிக்கச் சொன்ன நந்தினியை உற்றுப் பார்த்தான் ரவிச்சந்திரன்.. என்ன அலுவலுக்காக இப்படிப் பார்த்து வைக்கிறான் என்று எரிச்சலடைந்தாள் நந்தினி.. எதற்கெடுத்தாலும் பார்வைதானா.. ? அந்தப் பார்வையினால் அவள் படும் பாட்டை அறிவானா..? சற்று நேரத்திற்கு முன்னால்தான் அவளது குரல் வளையைப் பிடித்தான்.. கொலைகாரப் பாவியென்று அவனைத் திட்டுவதை

விட்டு விட்டு நீ கொன்றால் கூடக் குற்றமில்லை என்று அவள் மனது பாட முனைவதை அவள் எங்கே போய் சொல்லுவாள்..?

“உன் ஃபிரண்டுக்கு மேரேஜ் ஃபிக்ஸ் ஆகியிருக்கில்ல..?”

“இந்நேரத்துக்கு மேரேஜ் நடந்து முடிந்திருக்கும்..”

“ஐ ஸீ.. அவங்களோட வுட்-பி வினீத்தான் உன்னை என் தலையில் கட்டி விட்டார்..”

‘எப்படிப் பேசறான் பார்..?’ நந்தினி அவனை முறைத்தாள்..

“உள்ளதைச் சொன்னால் முறைப்பாயா..?” என்றான் அவன்..

“நீங்க பெரிய உண்மை விளம்பிதான்..”

“பொய் சொல்லி இல்லேம்மா...”

“அம்மான்னு சொன்னா என்ன அர்த்தம்..?”

“அடியேன்னு சொல்லவா..?”

‘ஆல்ரெடி அப்படித்தானே சொல்லிக்கிட்டு இருந்தான்..?’

டூப்ளிக்கேட் ரவிச்சந்திரனுடன அவள் பேசிச் சிரித்து விட்டக் குற்றத்திற்காக அவனுக்கு அவளை அம்மா வாக்குவானா..? ஆத்திரத்துடன் அவனிடம் நியாயம் கேட்டபோது ..

“என்ன செய்யச் சொல்கிற..? என் பிள்ளைகளுக்கு உன்னை அம்மாவாக்கனும்னுதான் எனக்கு ஆசை.. நீதான் அதைக் கன்சிடர் பண்ண மாட்டேங்கறியே..” என்று பதிலுக்கு நியாயம் கேட்டு மூச்சுத் திணறலை உண்டு பண்ணினான்..

‘எப்படியெல்லாம் பேசுகிறான் பார்..’

கீறல் விழுந்த ரிகார்டாக இதையேதான் நினைக்க முடிந்தது.. அவளால் வேறு எதையும் சிந்திக்கக் கூட முடியவில்லை.. அவன் பேசும் வார்த்தைகளில் உடல் கூசி மனம் வெட்க அவன் முகம் பார்க்க முடியாமல் தத்தளித்தாள்.. அவளது கன்னச் சிகப்பைப் பார்த்ததும் கனிவு வராதவனாக..

“மேரேஜ் ஃபிக்ஸ் ஆகியிருக்கிற சிச்சுவேஷனிலும் உன் ஃபிரண்ட் செஞ்சிக் கோட்டையைச் சுற்றிப் பார்க்க வந்தவன்கிட்டக் கடலை போட்டாங்களா..?” என்று கடுப்பைக் கிளப்பினான் ரவிச்சந்திரன்..

“வேண்டாம் பாஸ்.. என்னை என்ன வேண்டுமானாலும் பேசுங்க.. உத்ராவைப் பேசாதீங்க..”

“ஏன் அப்படி..?”

“என் தலைவிதி.. உங்ககிட்ட மாட்டிக்கிட்டேன்.. அவளை எதுக்காக நீங்க பேசனும்..?”

“அவங்க ஏன் அவன்கிட்டப் பேசனும்..?”

“அவ பேசலை பாஸ்.. அவன்தான் செஞ்சிக் கோட்டையைப் பத்தி நிறையப் பேசினான்.. அதோட ஹிஸ்டரியைப் பிட்டுப் பிட்டு வைத்தான்.. உத்ரா இம்ப்ரெஸ் ஆகிட்டா.. செஞ்சி அவளோட ஊராச்சே..”

“தஞ்சாவூரைப் பத்தியும் பெரிய கோவிலைப் பத்தியும் புகழ்ந்து பேசி அதோட ஹிஸ்டரியைப் பிட்டுப் பிட்டு வைத்தா நீயும் இம்ப்ரெஸ் ஆகிடுவன்னு சொல்லு..”

“இது நேச்சர்தானே பாஸ்..? எல்லோருக்கும் அவங்கவங்க ஊர்மேலே ஒரு பிடித்தம் இருக்குமில்ல..?”

“ஒரு தடவை அவனை மீட் பண்ணியிருக்க.. அதனால அவன் உனக்குத் தெரிந்தவனா ஆகிட்டானா..?”

“இல்லையே.. இன்னொரு தரமும் மீட் பண்ணியிருக்கேனே..”

“எப்ப..?”

“டிரெயினில.. மறந்துட்டிங்களா..? அவன்தான் ரவிச்சந்திரன்னு சொன்னான்.. நீங்க வருகிற வரைக்கும் என்னுடன் பேசிக்கிட்டு இருந்தான் உங்களைக் கண்டதும் ஓடிட்டான்.. ஆமாம் பாஸ்.. அன்றைக்கும் உங்களைக் கண்டதும் பயந்து ஓடினான்.. இன்றைக்கும் ஓடறான்.. அவனை உங்களுக்குத் தெரியுமா..? ஏன் பயந்து ஓடறான்..?” ரவிச்சந்திரன் பதில் சொல்லவில்லை.. யோசனையுடன் இருந்தான்.. கழுத்து வலிப்பதைப் போல இருந்ததில் நந்தினி கழுத்தைத் தடவிக் கொண்டதில் அவனது யோசனை தடைபட்டது..

“வலிக்குதா..?” குற்ற உணர்வுடன் கேட்டான்..

“இல்லையே.. குளுகுளுன்னு இருக்கு..” எரிச்சலுடன் சொன்னாள் நந்தினி..

“சொன்னான் கேட்கனும்.. இல்லேன்னா கோபம் வந்து தொலைத்திருது..”

“நீங்க சொல்லிக்கிட்டே இருப்பீங்க.. நான் கேட்டுக்கிட்டே இருக்கனும்.. அப்படித்தானே..”

“உனக்கு உலகம் தெரியாது நந்தினி..”

“நீங்க உலகம் சுற்றும் வாலிபர்தான்.. அதுக்காக கழுத்தைப் பிடிக்கனுமா..?”

“அவன் நல்லவனில்லை நந்தினி..”

“உங்களுக்கு எப்படித் தெரியும்..?”

“இந்த விதண்டாவாதம்தானே வேண்டாம் என்கிறேன்.. எனக்குத் தெரியும்ன்னு சொன்னாக் கேட்டுக்கனும்..”

அவளை சிறு பிள்ளைபோல அவன் பேசிய விதத்தில் ரோஷப்பட்டாள் நந்தினி.. அப்படியொன்றும் அவள் விவரம் தெரியாத பச்சைக் குழந்தையில்லையே.. அதை அவனுக்கு உணர்த்தி விடும் வேகத்தில்..

“நீங்க மட்டும் நல்லவரா..?” என்று நறுக்கெனக் கேட்டு விட்டாள்..

“என்ன சொன்ன..?” அவன் முகம் பயங்கரமாக மாறி விட்டதில் பயந்து போனாலும் பிடிவாதமாக..

“என் மனதுக்குப் பட்டதைத்தான் சொல்கிறேன்.. தப்பான பழக்க வழக்கங்கள் இருக்கிற நீங்கள் மட்டும் நல்லவர்.. அவன் கெட்டவனா..?” என்று அழுத்தம் திருத்தமாக மறுபடியும் கேட்டாள்..

ரவிச்சந்திரன் பார்த்த பார்வையில் இருந்த ஆத்திரத்தில் அவளது முதுகுத்தண்டு ஜில்லிட்டுக் குளிர் பரவியது..

அத்தியாயம் 103

நீ எப்படி வேண்டுமானாலும் கோபப்பட்டுக் கொள்.. என் மனதில் உள்ளதை நான் கேட்டு விட்டேன் என்று அசையாமல் நின்றாள் நந்தினி.. அந்த நிமிர்வை அவன் கவனிக்கத்தான் செய்தான்.. நெற்றியில் சுருக்கங்கள் விழுந்து அவனுடைய புருவங்கள் முடிச்சிட்டன.. தீட்சண்யம் மிகுந்த விழிகளுடன் தீர்க்கமாக ஓர் பார்வை பார்த்தான்..

"நான் கெட்டவன்னு முடிவே பண்ணிட்ட..?" அழுத்தமான அவனது பதில் கேள்விக்கு..

'பின்னே இல்லையா..?' என்று தோன்றிய போதும் அதைச் சொல்ல மனம் வராமல் உதட்டைக் கடித்தபடி பேசாமல் நின்றாள் நந்தினி..

"அதனாலதான் இந்தக் கெட்டவன் சொன்ன 'ஐ லவ் யு' வை நீ ஏத்துக்கல.. இல்லையா..?"

'இல்லை..' மனதுக்குள் கூவிய நந்தினிக்கு அழுகை அழுகையாக வந்தது..

அவனது காதலை அவளால் ஏற்க முடியவில்லைதான்.. அவன் கெட்டவன் என்று அவள் நினைக்கிறாள்தான்.. அதை

வாய் விட்டுச் சொல்ல முடியாமல் ஊமையாகிப் போனாள்.. அவளது வார்த்தைகளால் அவன் காயப்பட்டிருப்பதைத் தாங்கிக் கொள்ள முடியாமல் மருகினாள்.. அவன் மனது புண்பட்டால் அவளுக்கு என்ன வந்துது என்று நினைக்க முடியாமல் மனம் சோர்ந்தாள்.. அவனைக் கண்ட நொடி முதல் இந்த நொடி வரை அவனது நிழலை விட்டு அகல விடாமல் கூட வைத்துப் பாதுகாப்பவனை எப்படி அவளால் கெட்டவன் என்று சொல்ல முடியும்..? அவன் நினைத்திருந்தால் நீலிமலைக் காட்டின் மரக் குடிலில் அத்து மீறி அவளை ஆண்டு அனுபவித்திருக்கலாமே.. அவனுடைய குழந்தைக்கு அவளை அம்மாவாக்கியிருக்கலாமே.. அவன் அதைச் செய்யவில்லையே.. அவளைத் தொட்டாலும் எல்லை மீறாமல் விட்டு விலகி நின்றானே.. அவளது அனுமதியை எதிர்பார்த்தானே..

அன்று கேட்ட அனுமதியை இன்று கேட்கப் போவதில்லை எனும் விதமாக அவளை முரட்டுத்தனமாக இழுத்து அணைத்துக் கட்டித் தழுவி அவளது முகத்தை இறுக்கிப் பிடித்து உயர்த்தி குனிந்து அவளது இதழோடு இதழ் பதித்து வலுக்கட்டாயமாக முத்தம் பதித்தான் ரவிச்சந்திரன்.

புதை சேற்றில் கால்கள் பதித்தவளாக செயலிழந்து அவனது அணைப்புக்குள் மூழ்க ஆரம்பித்தாள் நந்தினி.. இரும்புக் கரங்களால் அவளது எழும்புகள் நொறுங்கிவிடும் அளவிற்கு இறுக்கமாகத் தழுவிக் கொண்டிருந்தவனின் பிடியிலிருந்து அவனால் விடுபட முடியவில்லை..

அவனுடைய உடல்மீது ஆழப் பதிந்திருந்த அவளது உடல் நடுங்கியது.. வயநாட்டின் குளிருக்கு அவனது உடல்சூடு இதமாக இருந்ததையும் கதகதப்பையும் உணர்ந்தவள் விலக முயன்றாள்.. அவனது பிடி மேலும் இறுகியதில் அவன் அணைப்பில் அடங்கினாள்.. அத்து மீறும் அவனது கைகளை தடுத்து நிறுத்த முடியாமல் அவள் தோற்றுக் கொண்டிருந்த போது கட்டிடத்தின் வாசலில் பேச்சுக்குரல் கேட்டது.. உள்ளேயிருந்து சிலர் வெளியே வந்ததில் ரவிச்சந்திரன் அவளை விடுவித்துத் தள்ளி நிறுத்திவிட்டு..

“கெட்டவன் இப்படித்தான் செய்வாண்டி..” என்று உறுமினான்..

நந்தினியின் முகம் கலங்கிச் சிவந்திருந்தது.. அங்கிருந்து ஓடிவிட வேண்டும் போலத் துடித்தாள்.. அவனது

தொடுகையைவிட.. அதை அவளது உடலும் மனமும் விரும்பி ஏற்பதில் அவள் அதிர்ந்து போயிருந்தாள்.

'ஓடு நந்தினி.. ஓடு..' அவளது உடலும் மனமும் எச்சரித்தன.. பலமிழந்து பலவீனப்பட்டுப் போயிருக்கும் உடலும், மனமும் அவனை எதிர்த்துப் போராடாமல் சரணாகதி அடைய முனைகின்றனவே.. இந்த நிலை நீடித்தால் எதிர்ப்பின்றி அவளை அவன் வசப்படுத்தி விட மாட்டானா..?

'அதற்குப் பின்..?' நந்தினி பயந்து போனாள்..

அவனது ஆசைக்குறிய பெண்களின் வரிசையில் அவளும் சேர்ந்து கொள்வாளா..? அவனுடைய குழந்தைக்கு அவளை அம்மாவாக்குவேன் என்று சொன்னானே.. எத்தனை பெண்களை அவ்விதம் ஆக்கியிருப்பான்..? எத்தனை குழந்தைகள் அவனைத் தகப்பன் என்று வெளிப்படையாகச் சொல்ல முடியாமல் வளர்ந்து கொண்டிருக்கின்றனவோ.. அந்தக் கும்பலில் நந்தினியின் குழந்தையும் சேர்ந்து கொள்ளுமோ..

'இதற்கா வயநாட்டுக்கு வந்தேன்..?' பீதியடைந்தாள் நந்தினி..

‘இதுக்குப் பெல்ட் அடியே தேவலையே.. துப்பாக்கிக் குண்டால் செத்தாலும் கட்டின புருஷன் கையில் செத்தேன்னு நிம்மதியாப் போய்ச் சேரலாமே.. இப்படி ஆள் மயக்கியோட ஆசை நாயகியா வாழ்ந்து சாக வேண்டியிருக்காதே..’

நந்தினியின் பயந்த விழிகளின் கலக்கத்தில் எதைக் கண்டானோ.. ரவிச்சந்திரன் நிதானித்தான்..

“நந்தினி..” என்று எதையோ சொல்லப் போனான்..

“வேண்டாம்..” நந்தினி குமுறினாள்..

“இல்லை நந்தினி..”

“நான் போறேன்..”

“ஆரம்பிச்சுட்டியா..? எங்கே போற..?”

“என் வீட்டுக்கு..”

“அங்கே போனா உனக்கும் அந்த பெல்ட் மன்னனுக்கும் மேரேஜ் ஆகிருமே..”

“ஆகட்டும்..”

“என்ன..?”

ரவிச்சந்திரனின் முகம் மறுபடியும் பயங்கரமாக மாறியது.. கட்டிடத்தின் உள்ளேயிருந்து வந்தவர்கள் தங்களுக்குள் மலையாளத்தில் பேசிச் சிரித்தபடி சாலையோர டீக்கடையை நாடி நடந்தார்கள்.. தோட்டத்தின் பூச்செடிகளின் மறைவில் நின்றிருந்த ரவிச்சந்திரனையும், நந்தினியையும் அவர்கள் பார்க்கவில்லை.. அவர்கள் போகும் வரைக் காத்திருந்த ரவிச்சந்திரன்..

“அப்புறம் எதுக்காடி வயநாட்டுக்கு ஓடி வந்த..?” என்று கர்ஜித்தான்..

“அதுக்காக இப்படியெல்லாம் பண்ணுவீங்களா..?”

“எப்படிப் பண்ணினேன்..?”

பதில் சொல்ல முடியாமல் நந்தினி தடுமாறியதில் ரவிச்சந்திரனின் வேட்கை கூடியது.. அவளை இழுத்துத் தன் கை வளைவிற்குள் வைத்துக் கொண்டான்.. அவள் திமிறினாள்.. வெகு எளிதாக அவளைக் கட்டுக்குள் கொண்டு வந்தவன்..

“உனக்கு அந்த பெல்ட் மன்னனைப் பிடிக்கலைன்னு தானே ஓடி வந்த..? இப்ப மட்டும் அவனைப் பிடிச்சிருச்சா..?” என்று கொந்தளித்தான்..

“உங்களிடம் தோத்துப் போகிறதுக்கு பெல்ட் அடி வாங்கிச் சாகலாம்.. அது கௌரமான சாவாக இருக்கும்..” நந்தினி அழுது விட்டாள்..

“ஓ.. என்கிட்டத் தோத்துப் போகிறது உனக்குக் கௌரவமானதா இருக்காதா..? ஏண்டி..?” அவன் விடவில்லை..

‘என்னால் உனது ஆசைநாயகியாக இருக்க முடியாது..’ நந்தினி துயரத்துடன் இமைகளை மூடிக் கொண்டாள்..

“என் முகத்தைப் பார்க்கப் பிடிக்கலை.. எவனோ ஒரு பொறுக்கி செஞ்சிக் கோட்டையில் பேசிப் பழகினான்னு அவன் முகத்தைப் பார்க்கப் பிடிச்சிருக்கு.. பெல்ட் அடி வாங்கிச் செத்தாலும் பரவாயில்லைன்னு அவனை மேரேஜ் பண்ணிக்கப் பிடிச்சிருக்கு.. ஏண்டி..?” அவன் துருவினான்..

‘ஏன்னா.. நீ ஆள் மயக்கியா இருந்து தொலைக்கிறடா.. பொண்ணுகளை மயக்கித் தொலைக்கிற..’ நந்தினி தவித்தாள்..

“நான் தொட்டாப் பிடிக்கலை.. அந்த பெல்ட் மன்னன் தொட்டாப் பிடிக்குமா..?” கண்கள் சிவக்க அவன் கேட்டதில்..

“அசிங்கமாப் பேசாதீங்க..” என்று வெடித்து விட்டாள் நந்தினி..

“அசிங்கமாப் பேசறேனா..? மேரேஜ்ன்னா என்னன்னு நினைத்த..? அதுதாண்டி நடக்கும்..”

“அது மட்டுமே நடக்காது.. உங்களுக்கு எங்கே அதெல்லாம் தெரியாப் போகுது..? ஃபேமிலியோட வேல்யூஸ் புரிஞ்சிருந்தா கண்டபடி அலைந்திருக்க மாட்டிங்க..”

“ஓ.. நான் கண்டபடி அலைஞ்சவன்ங்கிறதினால மேடத்துக்கு என்னைப் பிடிக்கலை.. வேண்டாம்ன்னு உதறிவிட்டு வந்த பெல்ட் மன்னனைப் பிடிச்சுப் போச்சு..”

“ஆமாம்.. ஆமாம்.. ஆமாம்..”

“என்னடி சொன்ன..?”

ரவிச்சந்திரன் ஓங்கி விட்ட அறையில் சுருண்டு விழுந்து விட்டாள் நந்தினி.. அதுவரை பார்த்திராத ரவிச்சந்திரனின் மற்றுமொரு குணாதிசியத்தில் அவளது மனம் அதிர்ந்து விட்டது.. பெண்களிடம் மோகத்தைத் தூண்டி விட்டுக் குளிர் காய்பவன் என்று மட்டும் நினைத்திருந்தவளுக்கு அவன்

பெண்ணென்றும் பாராமல் கைநீட்டி அடித்து விடுவான் என்பது அதிர்ச்சியாக இருந்தது..

“கொன்று புதைச்சிருவேன்..”

அவள் முகத்திற்கு நேராகக் குனிந்து ஒற்றை விரலை உயர்த்தி எச்சரித்தான் ரவிச்சந்திரன்.. எதற்குப் பயந்து ஓடி வந்தாளோ.. அதிலேயே மாட்டி விட்டக் கொடுமையில் நடுங்கிக் கொண்டிருந்தாள் நந்தினி..

“என்னை யாருன்னு நினைத்த..? அவனாவது பெல்ட்டைத்தான் உருவுவான்.. நான் கொன்றே புதைச்சிருவேன்.. யாரிடம் பிளே பண்ற..? என்னிடமா..? நான் கிரேட் ரவிச்சந்திரன்டி.. ஆனானப்பட்ட யோகானந்தனையே அடக்கி ஒடுக்கி என் கண்ட்ரோலில் வைத்திருக்கேன்.. நீயெல்லாம் யாருடி.. என் ஒரு அடிக்குத் தாங்குவியா..? பாவம்.. சின்னப் பெண்ணுன்னு பொறுமையாப் பேசினா நீ பெல்ட் மன்னனை மேரேஜ் பண்ணிக்குவேன்னு சொல்லுவியா..?”

“நான் எங்க வீட்டுக்குப் போறேன்..”

தேம்பி அழுக ஆரம்பித்தாள் நந்தினி.. கால்களை மடித்து உட்கார்ந்த ரவிச்சந்திரன் புல்வெளியில் கிடந்தவளைத் தூக்கி

மடியில் கிடத்திக் கொண்டு கண்ணீரின் ஈரம் படிந்த அவளது கன்னத்தில் கன்னம் பதித்து..

“ஸாரி..” என்றான்..

“எனக்கு உங்க ஸாரியெல்லாம் வேணாம் பாஸ்..”

“வேற என்ன வேணும்..?”

“வீட்டுக்குப் போகனும்..”

“வீட்டுக்குத்தான் போய்க்கிட்டு இருக்கோம்.. வா போகலாம்.. எல்லோரும் ஊரில இருந்து வந்திருப்பாங்க..”

“உங்க வீட்டுக்கு இல்ல.. எங்க வீட்டுக்குப் போகனும்..”

“ம்த்சு..”

சலிப்புடன் சூள் கொட்டித் தன் அதிருப்தியை வெளிப்படுத்தினான் ரவிச்சந்திரன்.. கலைந்திருந்த அவளது முடியைக் கோதிவிட்டு நெற்றியில் முத்தமிட்டான்..

“என்னை விட்டுப் போறேன்னு சொல்கிறியே.. எப்படிடீ உனக்கு மனசு வருது..?” என்று கேட்டான்..

‘எப்படி மனம் வருது..?’ நந்தினி மருண்டாள்..

அவளுக்கு மனம் துணியவில்லை என்பதுதான் நிஜம்.. அவனை விட்டுப் போக வேண்டும் என்று அவளது வாய்தான் சொல்கிறது.. மனம் சொல்லவில்லை.. எப்படியும் அவன் அவளைத் தடுத்து நிறுத்தி விடுவான்.. போக விட மாட்டான் என்று மனம் எதிர்பார்ப்பது எதனால்..?

“சொல்லு நந்தினி.. என் முகம் பார்த்துச் சொல்லு.. என்னை விட்டுப் போய் விடுவியா..?”

ரவிச்சந்திரன் அவளது முகத்தை நிமிர்த்தி அவளது விழிகளுக்குள் பார்த்தபடி கேட்டான்.. போய் விடுவேன் என்று சொல்ல முடியாமல்..

“நீங்க அடிக்கறிங்க..” என்று விசும்பினாள் நந்தினி.. ரவிச்சந்திரனின் முகத்தில் புன்னகை படர்ந்தது.. பிரியத்துடன் அவளது கண்ணீரைத் துடைத்து..

“இனிமே அடிக்க மாட்டேன்..” என்று சமாதானம் செய்தான்..

“என்னோட பெர்மிஷன் இல்லாம டச் பண்றீங்க.. அப்புறம்..” சொல்ல முடியாமல் வெட்கம் வந்து நந்தினியை சூழ்ந்து கொண்டது..

“அப்புறம்..?” தூண்டினான் ரவிச்சந்திரன்..

“கிஸ் பண்றீங்க..” நந்தினி முகத்தை மூடிக் கொண்டாள்..

“என் நந்தினி..” தாபத்துடன் அவள் விரல் பிரித்து முகத்தைப் பார்த்தான் ரவிச்சந்திரன்..

“உன்னிடம் பெர்மிஷன் கேட்டா என்னைத் தொட்டுக்க.. முத்த குடுத்துக்கோன்னு பெர்மிஷன் கொடுத்துட்டுத்தான் நீ வேற வேலையைப் பார்ப்பியாடி..?” என்று கேட்டபடி குனிந்து அவள் இதழ்களில் முத்தமிட்டான்..

நந்தினியின் இமைகள் தானாக மூடிக் கொண்டன..

அத்தியாயம் 104

‘பிரேமம்..!’

நந்தினி மனதுக்குள் சொல்லிக் கொண்டாள்.. மலையாளத்தில் பிரேமம் என்று சொல்லப்படும் இந்தக் காதல்தான் எத்தனை கொடுமையானது..! வலிமையை ஒடுக்கிப் பலவீனத்தைத் திணிக்கிறதே.. செயலிழக்க வைத்து மூலையில் முடக்குகிறதே..

‘உள்ளிருந்து கொல்லும் பகை..!’

நந்தினிக்கு சோர்வாக இருந்தது.. ரவிச்சந்திரனின் மீது அவளுக்கு இருக்கும் பிடிப்பிற்கான பெயர் என்ன..? இதுதான் பிரேமமா..? ஆமாம் என்று சொல்ல முடியாமல் அச்சம் வந்து தடுக்கிறதே.. அவனை வெறுக்கவும் முடியாமல் அச்சம் வந்து தடுக்கிறதே.. அவனை வெறுக்கவும் முடியாமல் விரும்பவும் முடியாமல் தவியாய் தவித்துப் போனாள் நந்தினி.. இது கொடுமையென்று தோன்றியது.. ஒட்டவும் முடியாத வெட்டவும் முடியாத பரிதவிப்பின் கொடுமை..! அவளது குழந்தை மனதால் அக்கொடுமையைத் தாங்க முடியவில்லை..

மிரள, மிரள, விழித்தவளிடம் காதலை வற்புறுத்த முடியாமல் பெருமூச்சு விட்டான் ரவிச்சந்திரன்.. புரியாதவளுக்குப் புரிய வைக்கலாம்.. மிரண்டு நிற்பவளிடம் எதைச் சொல்லிப் புரிய வைப்பது..?

“வா..” வறண்ட குரலுடன் ஒற்றை எழுத்தில் அழைத்தான்.. அவன் குரலின் வறட்சியைக் கவனித்த நந்தினிக்குள்..

‘என்னால்தானே..’ என்ற மருகல் வந்தன..

ஆணழகன் அவன்..! அதிலும் பேரழகனாக இருந்து தொலைத்தான்.. நட்சத்திரப் பிம்பம் கொண்ட இளம் கோடிஸ்வர தொழிலதிபன்..! ராஜ பாரம்பர்யத்தில் பிறந்தவன்.. உலகம் சுற்றி வருபவன்.. அவனுடைய கண்ணிமையின் சிறு சிமிட்டலுக்காக ஏங்கி நிற்கும் பேரழகிகள் உலகம் முழுவதும் நிறைந்திருக்க அவளிடம் என்னத்தைக் கண்டு விட்டான் என்று காதல் சொன்னான்..? அவள் ஒன்றும் அத்தனை வசீகரமானவள் அல்லவே.. ஒருவேளை.. அவனுடைய காதல் கிடைத்ததும் ‘ஆ’ வென பிரமித்துப் போய் அவன் காலடியில் விழாமல் வேண்டாம் என்று மறுப்பதினால் அவனுடைய ஈகோ பாதிக்கப் பட்டு

அவளை வென்று காட்ட வேண்டும் என்று வெறியாகி அவளை வேட்டையாட நினைக்கிறானோ..

அந்த வெறி மிகுந்த வேட்டையாடுதலில் அவளது மனம் லயிக்கிறது என்பதினால்தான் பீதியடைந்தாள் நந்தினி.. அவன் வேட்டையாட முனைந்தால் எதிர்த்துப் போராட வேண்டாமா..? விருப்பத்துடன் உடன்பட்டு விட்டால் என்ன என்று மனதுக்குள் தோன்றலாமா..?

தான் என்ன ஆவோம் என்ற பயம் நந்தினியின் மனதை ஆக்ரமித்து கலங்கடித்தது.. அவனை விட்டுத் தொலைதூரமாக ஓடிப்போய்விட வேண்டும் என்று அறிவு கூக்குரலிட, ஒரு அடியைக் கூட எடுத்து வைக்க முடியாமல் பாதமிரண்டும் பாறாங்கற்களாய் கனக்க மனம் சோர்ந்து விடுகிறதே.. அதன் மாயம் என்ன..?

ஆழ்மனதின் அபிலாஷைகளை அவதானிப்பது சுலபமில்லை.. கலங்கடிக்கும் மனதின் அலைகளை கண்டுணரும் சூட்சுமம் கொண்ட மனிதர் எவருமில்லை..

அவளையே உற்றுப் பார்த்தபடி நின்றிருந்த ரவிச்சந்திரனின் கம்பீர வடிவழகில் மனம் மயங்கினாள் நந்தினி.. கால்களை அகற்றி, ஜீன்ஸ் பேண்ட்டின் பாக்கெட்டில்

கையை விட்டு.. காற்றில் அலைந்து முன் நெற்றியில் படியும் முடிக்கற்றையுடன்.. புருவங்களின் மத்தியில் சுளிப்புடன் ஆளை மயக்கி ஈர்க்கும் வகீகரனாய் அவள் மனதை அலை பாய வைத்தான் அவன்..

‘வசீகரா..!

என் நெஞ்சின்கக

உன் பொன்மடியில்

தூங்கினால் போதும்...’

அவள் மனதில் பாடிய இந்தப் பாடலை வாய் விட்டுப் பாடியிருந்தாலே போதும்.. அவனது புருவச் சுளிப்பு இருக்கும் இடம் தெரியாமல் மறைந்திருக்கும்.. கடுகடுத்த முகம் மலர்ந்திருக்கும்.. கனல் கக்கும் பார்வை ஆசையுடன் அவள் மனதை கொய்திருக்கும்..

எங்கே..? நந்தினிதான் மனதில் உள்ள தாபம் காதலினால் வருகிறதா இல்லை அவன் மீதிருக்கும் மயக்கத்தினால் வருகிறதா என்று தெரியாமல்.. தடுமாறிக் கொண்டிருக்கிறாளே..

அவளால் அவன் காதலையும் உண்மையா, பொய்யா என்று இனம் பிரித்துப் பார்க்க முடியவில்லை.. அவளது மன உணர்வுகளையும் காதலா, மயக்கமா என்று இனம் பிரித்துப் பார்த்துத் தெரிய முடியவில்லை..

அவன் மார்பில் சாய்ந்து கொள்ள வேண்டும் போல இருந்ததில் அவள் மருகி மருகி விழித்து வைத்தாள்.. அவளையே பார்த்துக் கொண்டிருந்தவன் அவள் எதிர்பாராத தருணத்தில் இழுத்து அணைத்துக் கொண்ட போது எப்படி இவன் என் மனதிலிருப்பதை அறிந்தான் என்ற திகைப்புடன் கலந்த சந்தோஷத்துடன் அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள்..

“குழந்தைடி நீ..” அவளது முடிக்கற்றையில் முகம் புதைத்துக் கொண்டான் ரவிச்சந்திரன்..

“வாடி, போடின்னு சொல்லக் கூடாது..” சிணுங்கினாள் நந்தினி..

“சொன்னா..?”

“சொல்லக் கூடாதுன்னா சொல்லக் கூடாது..”

“ம்ம்ம்.. முடியுமான்னு தெரியலை.. பட்ஷே.. கேட்கிறது வல்லிய பெண் சுந்தரிங்கிறதினாலே டிரை பண்றேன்..”

“பொய் சொல்லாதீங்க பாஸ்..”

“கண்டு பிடிச்சுட்டியே..”

“எதை..?”

“நான் டிரை பண்ண மாட்டேங்கிறதை..”

“ஓ.. ஈ சுந்தரன் பறஞ்சது இதையோ..?”

“ம்ம்ம்.. வேற எதைன்னு நீ நினைச்ச..”

“ஞான்.. நினைச்சது வேறாக்கும்..”

“எந்தா..?”

“ஞான் ஒண்ணும் வல்லிய சுந்தரியல்லா.. இன்னும் சொல்லப் போனா ஞான் சுந்தரியேயல்லா..”

“வேற யாராக்கும்..?”

“நந்தினியெனும் பெண் குட்டியாக்கும்.. பட்ஷே.. நீங்க அப்படியல்லா..”

“எப்படியல்லா..?”

“வெறும் ரவிச்சந்திரன் மட்டுமல்லா..”

“சந்தடி சாக்கில பெயரைச் சொல்கிறயா..? இரு உன்னை வைச்சுக்கறேன்..”

ரவிச்சந்திரனின் கண்களில் வழிந்த விஷமத்தில்..

“என்னது..???” என்று நந்தினி அலறி விட்டாள்..

“அடி வைச்சுக்கறேன்னு சொன்னேன்ம்மா.. நீயென்ன நான் எதைச் சொன்னாலும் எக்குத்தப்பாவே மீனிங் பண்ணிக்கற..? என்னைப் பத்தி நல்ல விதமாவே நினைக்க மாட்டியா..?”

“அடியைச் சொன்னீங்களா..?”

நம்பாத குரலில் கேட்டாள் நந்தினி.. அடியைச் சொல்கிறவன் அப்படி ரசித்துக் சொல்வானா என்று அவள் மனம் சம்சயம் கொண்டது.. அதற்கு ஏற்றார்போல அவன் விழிகளில் கள்ளத்தனம் மின்னியது.. அது அவளது சம்சயத்தை ஊர்ஜிதம் பண்ணியது..

‘ஈ சுந்தரன் வல்லிய சுந்தரன் மட்டுமல்லோ.. வல்லிய கள்ளனாக்கும்..’

அந்தக் கள்வன் அவளது உள்ளத்தைக் களவாட முயன்றான்... நீயேன் களவாட வேண்டும்.. எனதுள்ளம் நிண்ட சொந்தம் என்று அவனது காலடியில் சரியச் சொல்லி மனம் சொன்னது.. நந்தினி வேண்டாமென்று அவளது புத்தி தடுத்தது.. புத்தி பகைப்பதை மனது விரும்புவதன் மர்ம முடிச்சை அவிழ்த்தவர் யாருமில்லை..

“என்னைப் பத்தி எதையோ சொல்ல வந்த..? என்ன..? மறந்து போச்சா..?”

என் அழகில் மயங்கி சொல்ல வந்ததை மறந்து விட்டாய் என்று சொல்லாமல் சொல்லின அவனது விழிகள்..

அது உண்மைதான் என்பதில் உதடுகளைக் கடித்துக் கொண்டாள் நந்தினி.

“உண்மையில் பாஸ்.. நீங்கதான் வல்லிய சுந்தரனாக்கும்.. அதிரூப சுந்தரன்..”

மயங்கிப் போனவளாக மயக்கத்துடன் சொன்னாள் நந்தினி.. பிரமிக்க வைக்கும் அவனது அழகு அவளை மருட்டியது.. விழிகளில் அவனது பேரழகைக் குறித்த மயக்கமும், மருட்சியுமாக அவள் பார்த்த பார்வையில் ரவிச்சந்திரன் அவளை இறுக்கிக் கொண்டான்.. மனதை

மறைக்கத் தெரியாத அவளது இயல்பில் அவன் மனம் நனைந்தது..

“உன் மேல ஆசை வைக்காம இருக்க முடியலையேடி..” அரற்றினான்..

‘எனக்கும்தான்..’

மனதுக்குள் சொன்னதை வாய் விட்டுச் சொல்ல முடியாத துக்கத்துடன் அவன் மார்பில் முகம் புதைத்தாள் நந்தினி..

“இவ்விட ரவி சார் உண்டோ..?”

தோட்டத்துப் பக்கமாக ஒலித்த குரலில் நந்தினியை விடுவித்தவன் வேக எட்டுக்களுடன் விலகிப் போய் விட்டான்..

‘இனித் திரும்ப மாட்டான்..’

நந்தினிக்குள் ஏக்கம் வந்தது.. அவனைத் தேடி வந்திருந்த நபருடன் பேசியபடி திரும்பிப் பார்த்த ரவிச்சந்திரனின் விழிகளில் கண்டிப்பும், கறாரும் மீண்டிருந்தன..

எவரோ போலப் பார்க்கிறானே என்றிருந்தது நந்தினிக்கு.. நொடியில் முதலாளியாகி விலகி நிற்பவனா காலம் முழுவதும் சேர்ந்து வாழ்வான்..?

ரவிச்சந்திரனைப் பார்க்காமல் ஜீப்பை நோக்கிப் போன நந்தினி கதவைத் திறந்து ஏறி உட்கார்ந்து அவனது வருகைக்காக காத்திருந்தாள்.. வெகு சீக்கிரத்தில் வந்து விட்டவன் ஜீப்பில் ஏறி எதுவும் பேசாமல் கிளப்பியது அவளுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்தது.. ஒரு நொடியில் அவள் யாரோவாகி விட்டாளா..?

சற்றுத் தொலைவு சென்றதும் அவன் இயல்பாகிப் போனான்... கண்டிப்பையும், கறாரையும் மறந்து உல்லாசமாக விசிலடித்தான்..

“ஸோ.. ஞான் வல்லிய சுந்தரன்ங்கிற..?” என்று வசீகரமாக சிரித்தான்..

நந்தினி பதில் சொல்லவில்லை.. நொடிக்கொரு முகம் காட்டுபவனின் காதலை ஏற்க முடியாது என்பதில் அவள் மனம் சமாதானமாகியிருந்தது.. அவனது அழகில் அலைபாய்ந்த மனம் சமனப் பட்டிருந்தது.. அதனால் அவன் கேட்டது காதில் விழுகாததைப் போலப் பாவனை காட்ட முடிந்தது..

“பேச மாட்டியா..?” ரவிச்சந்திரன் குழைந்தான்..

இமைக்காமல் ஓர் பார்வை பார்த்துவிட்டு மௌனம் சாதிப்பதைத் தொடர்ந்தாள் நந்தினி..

“கோபமா..?”

“.....”

“நந்தினி..?”

“.....”

“ஏய்ய்...”

அவனும் பலவாறாக அழைத்துப் பார்த்து விட்டான்.. நந்தினி அசைந்து கொடுக்கவில்லை.. அவனுடைய முகம் பார்க்காமல் பிடிவாதமாக அவள் மௌனம் சாதித்ததில் அவன் வியப்படைந்தான்.. அவளால் பேசாமலும் இருக்க முடியும் என்பதில் வெளிப்பட்ட அவளுடைய திட சித்தத்தில்..

‘இவளுக்குத்தான் எத்தனைப் பரிமாணங்கள்..’ என்ற ஆச்சரியம் அவனுக்கு உண்டானது..

‘எப்படி இவளை பேச வைக்கிறது..?’

எதனால் இந்தக் கோபம் என்று தெரிந்தாலாவது வெள்ளைக் கொடியைப் பறக்கவிட்டுச் சமாதானத்தூது விட்டிருப்பேன்.. காரணம் தெரியாத அவளது கோபத்தை மறக்க வைக்க ஒரேயொரு வழிதான் அவனுக்குத் தென்பட்டது..

“அங்கே பாரேன்.. மஞ்சள் தாமரை மலர்ந்திருக்கு..”

‘மஞ்சள் தாமரையா..?’

நந்தினி அவன் சொன்ன திசையில் பார்க்க, கண்ணிமைக்கும் பொழுதிற்குள் அவளது கன்னத்தில் முத்தமிட்டு விலகினான் ரவிச்சந்திரன்..

“பாஸ்...”

விதிர்த்துப் போனவளாக அவனுடன் சண்டைக்குக் கிளம்பி விட்டாள் நந்தினி..

‘இவனுக்கு இதே வேலையாகி விட்டது..’

“என்னடி..?”

“மைண்ட் யுவர் டங்..”

“மைண்ட் பண்ண முடியாது.. இப்ப என்னாங்கிற..?”

“குட்.. தி ஃபேமஸ் ரவிச்சந்திரன் செய்கிற வேலையா இது..?”

“ரவிச்சந்திரன் இதையும் செய்வான்..”

“ஜீப்பைத் திருப்புங்க..”

“நானென்ன உனக்கு டிரைவரா..?”

“ஓகே.. ஜீப்பை நிறுத்துங்க..”

“நிறுத்தலைன்னா..?”

“குதிப்பேன்..”

“குதி..”

ஒற்றைச் சொல்லை படு அலட்சியமாகச் சொன்னான் ரவிச்சந்திரன்... குதித்துவிட வேண்டும் என்ற கொதிப்புடன்தான் பக்கவாட்டில் எட்டிப் பார்த்தாள் நந்தினி.. அங்கு தெரிந்த கிடுகிடுப் பள்ளத்தாக்கில் தலை சுற்ற கண்களை இறுக மூடிக் கொண்டு ஜீப்பை இறுக்கிப் பிடித்துக் கொண்டாள்..

‘குதிக்கிற ஆளைப் பாரு..’

ரவிச்சந்திரனுக்குச் சிரிப்புத்தான் வந்தது..

“வீட்டுக்கு வந்தாச்சு.. கண்ணைத் திற..” என்றான்..

நந்தினி இமைகளைத் திறந்தாள்.. வயநாட்டின் அரண்மனை அவளை ‘வா’ என்று வரவேற்றது.. கேட்டருகே நின்றிருந்த ரம்ய மாலினி..

“நந்தினி.. வாங்க.. வாங்க..” என்று குதித்தாள்..

அவளைக் கண்டதும் ஊருக்குத் திரும்பிப் போகும் எண்ணத்தைக் கை விட்டவளாக ஜீப்பிலிருந்து குதித்த நந்தினி..

“நான் நீலிமலைக் காட்டுக்குப் போனேனே..” என்று குதூகலித்தாள்..

பனிரெண்டு வருடங்களுக்கு ஓர்முறை மலரும் குறிஞ்சி மலரைப் பார்ப்பதைப் போலவே இருந்து ரவிச்சந்திரனுக்கு..

அத்தியாயம் 105

அவள் அபூர்வ மலரைப் போலதான் இருந்தாள்.. அவனை விட்டும் வயநாட்டை விட்டும் போய் விடும் முடிவுடன் சினந்தவள் அனைத்தையும் மறந்து ரம்ய மாலினியிடம் சந்தோஷம் கொண்டாடியதில் நெகிழ்ந்து போனான் ரவிச்சந்திரன்.. அலாதியான அவளது குணாதிசயம் அவள் மீதான அவனது பிரியத்தை அதிகரிக்கச் செய்தது.. ரம்ய மாலினியுடன் கை கோர்த்து கதை பேசியபடி நந்தினி நடக்க முயன்ற போது விரல் சொடுக்கி அழைத்தவன்..

“உன் பையை யார் கொண்டு வருவாங்க..?” என்று அதட்டினான்..

“ஓமனாக் குட்டி கொண்டு வரும்..” என்றாள் நந்தினி.. நந்தினி வந்து விட்டாள் என்ற சேதியறிந்து பாசச் சிறகை விரித்து வாசலுக்குப் பறந்தோடி வந்த ஓமனா நந்தினியின் வார்த்தைகளைக் கேட்டதும் நெஞ்சம் விம்ம..

“அம்மே..!” என்று தழுதழுத்தாள்..

‘இவ ஒருத்தி.. என்னைக் கண்டாலே நெக்குருதிப் போயிடறா..’

ஓமனாவின் எல்லையற்ற பிரேமம் கண்டு தலையைச் சொறிந்தாள் நந்தினி.. அந்த அரண்மனையை ஆள்பவன் தான் பித்துக்குளித்தனமாக நந்தினியிடம் பிரேமம் கொள்கிறான் என்றால் வேலைக்காரப் பெண்குட்டியான ஓமனாக் குட்டியும் அவ்விதமே பிரேமம் கொள்ள வேண்டுமா..?

'எஜமான் எவ்வழியோ அவ்வழிதான் சேவகியும் போல..'

"எங்ஙன இருக்கினோ அம்மே.."

"ஞான் இங்ஙனதான் இருக்கேன் ஓமனாக்குட்டி.. என்னை விளிக்கிறதுக்கு முன்னாலே நீ கண்ணை நல்லா விழிச்சுப் பாரு.. உன் முன்னாடிதான் கல்லுக் குண்டாட்டம் நின்னுக்கிட்டு இருக்கேன்.."

"அதல்ல அம்மே.."

"எதல்ல ஓமனா..?"

"ஞான் அம்மையை சுகமானோன்னு பறஞ் .."

"ரெண்டு நாளில சுகம் குறைஞ்சிராது ஓமனா.."

"எனிக்கு நிங்க விஜாரம்தான்.."

"என்னது..? விகாரமா..?"

நந்தினி அரண்டு விட்டாள்.. 'அம்மே' என நாத்தளுதளுத்து அவளை ஆராதிக்கும் ஓமனாவே விகாரம் என்று சொல்லும் அளவுக்கா அவளது மேக்-அப் இருக்கிறது..?

'எங்கே..? மீன் முட்டி அருவியைப் பார்க்கப் போகலாம்ன்னு இவன் கூப்பிட்டதில ரெண்டே டிரஸ்ஸோட மலையேறிட்டேன்.. மேக்-அப் கிட்டையும் இங்கேயே போட்டுட்டு போயிட்டேன்.. வெறும் பவுடரும், கண்ண மயும் எந்த மூலைக்குப் போதும்..? எனக்கிருக்கிற அழகு மூஞ்சி(?)க்கு எத்தனை மேக்-அப் பண்ணினாலும் பத்தாது.. இதில மேக்-அப்பே இல்லாம எண்ணை வழிகிற மூஞ்சியோட வந்து நின்னா ஓமனாக்குட்டி விகாரம்ன்னு சொல்லாம கொஞ்சவா செய்வா..?'

நந்தினிக்கு கண்ணாடி பார்க்க வேண்டும் போல இருந்தது.. ரவிச்சந்திரனைக் கண்டு தொலைத்த பின்னால்தான் கண்ணாடியின் தேவை அவளுக்கு அத்தியாவசியமாகிப் போனது.. அதற்கு முன்பு அப்படியொரு உபகரணம் இருப்பதையே மறந்து போயிருந்தவள் அவள்..

“கண்ணாடி பார்க்காத பொண்ணும் இந்த உலகத்தில் இருப்பாங்கிறதுக்கான கிரேட் எக்ஸாம்பிள் நீதாண்டி..” என்று சான்றிதழ் வழங்குவாள் உத்ரா..

அப்பேற்பட்ட நந்தினிதான் வயநாட்டுக்கு வந்த பின்பு தன் தோற்றத்தைக் குறித்த கவலையில் ஆழ்ந்து அடிக்கடி கண்ணாடி பார்க்க ஆரம்பித்திருந்தாள்..

“ஏன் ரம்யா.. என் மூஞ்சி நம்ம ஓமனாக் குட்டியே விகாரம்ன்னு சொல்கிற அளவுக்கு அத்தனை அகோரமாவா இருக்கு..?” ரவிச்சந்திரன் வருவதற்குள் தனது சந்தேகத்தை நிவர்த்தி செய்து விடும் அவசரத்துடன் கேட்டாள் நந்தினி.. ரம்ய மாலினியோ வாய் பொத்தி சிரிக்க ஆரம்பித்து விட்டாள்..

“எதுக்குச் சிரிக்கறிங்க..?”

நந்தினி கேட்டுக் கொண்டிருக்கும் போதே அங்கு வந்து விட்டான் ரவிச்சந்திரன்.. ஓமனாவே விஜாரம் என்று வர்ணித்து விட்ட முகத்தை அவன் பருகு பருகு என்று பார்த்து வைத்ததில்..

‘ஆனாலும் இவனுக்கு அசாத்திய மனோ தைரியம் தான்..’ என்று அதிசயப் பட்டுப் போனாள்..

நந்தினியின் கேள்விக்குப் பதில் சொல்லாமல் ரம்ய மாலினி சிரித்துக் கொண்டிருக்க..

“என்னத்தைப் பண்ணித் தொலைச்ச..? என் தங்கை விழுந்து விழுந்து சிரித்துக்கிட்டு இருக்காளே..” என்று நந்தினியிடம் புலன் விசாரணையை ஆரம்பித்து வைத்தான் ரவிச்சந்திரன்.. யெஸ் மை லார்ட் என்று வந்த வார்த்தைகளை குரல் வளையில் நிறுத்தி வைத்தாள் நந்தினி..

‘இவன் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறான்..?

என்னத்துக்குச் சிரிக்கிறாள் என்று தெரியாமல் இவன் தங்கை சிரிப்பதற்கு நான் பிணையா..?’ அவனை ஒரு மார்க்கமாக பார்த்தபடி..

“பார்த்து பாஸ்.. உங்க தங்கைக்கு காயம் கீயம் பட்டு விடப் போகிறது..” என்று நொடித்தாள்..

அவன் கண்களில் மின்னல் வந்தது.. அவளது நொடிப்பை ரசித்தபடி அவளைவிடப் பல மார்க்கமாக அவளைப் பார்த்தபடி..

“எதற்காம்..?” என்றான்..

“விழுந்து விழுந்து சிரிச்சாக் காயம் படாதா..?”

“ஜோக்கு..?”

“அப்படித்தான் நான் நினைக்கிறேன்..”

“அப்படின்னு நீ மட்டும் நினைச்சப் போதாது.. நாங்களும் நினைக்கனும்..”

“நீங்க..? நினைச்சுருவீங்க..?”

“தெரியுதில்ல..? அப்புறமும் ஏன் டிரை பண்ற..?”

“தெரியாம பண்ணிட்டேன் பாஸ்.. போதுமா..?”

“போதாது..”

“வேற என்ன செய்யனும்..? காதைப் பிடித்துக்கிட்டுத் தோப்புக்கரணம் போடனுமா..?”

“அதை அப்புறமாச் சொல்றேன்..”

அவனது கண்களில் தெரிந்த ரகசியப் புன்னகையில் அவன் வேறு எதையோ சொல்லப் போகிறான் என்ற நிச்சயம் இருந்தது.. நந்தினியின் உடல் சூடேறியது.. கன்னம் சிவக்க முகத்தைத் திருப்பிக் கொண்டாள்..

“நீ சொல்லு ரம்யா.. இவ என்னத்தைச் சொல்லி வைத்தா..?” நந்தினியைப் பார்த்தபடியே ரம்ய மாலினியிடம் கேட்டான் அவன்..

‘இவளா..?’ நந்தினிக்கு கோபம் வந்தது..

ரம்ய மாலினியின் முன்னால் எதையும் கேட்க முடியாமல் நம்பியாரைப் போலக் கைகளைப் பிசைந்தாள்..

“இவங்க இருக்காங்களே அண்ணா..”

“அதான்.. இருக்காளே.. நீ சொல்லு..”

“நம்ம ஓமனாக்குட்டி இவங்களைப் பார்த்ததும் ஓடிவந்து எனிக்கு நிங்க விஜாரம்தான்னு சொன்னா..”

“அதுக்கா இந்தச் சிரிப்பு சிரிக்கிற..?”

“அதில்ல அண்ணா.. இவங்க பதிலுக்கு என்னது, விகாரமான்னு கேட்டு அரண்டு போயிட்டாங்க..”

“விகாரமான்னு கேட்டாளா..? ஹா.. ஹா..”

“அத்தோடயும் நிறுத்தாம என்கிட்ட கேட்கிறாங்க..”

“என்னன்னு..?”

“ஏன் மாலினி.. நம்ம ஓமனாக் குட்டியே விகாரம்ன்னு பயப்படற அளவுக்கு என் முகம் என்ன அத்தனை அகோரமாவா இருக்குன்னு கேட்கிறாங்க..”

“ஹா.. ஹா..”

அண்ணனும் தங்கையும் கூட்டணி போட்டுக் கொண்டு சிரித்ததில் அடிக்கடி இப்படி மாட்டிக் கொள்கிறாளே என்று நொந்து போனாள் நந்தினி..

‘ஏற்கனெவே இந்த வார்த்தையைக் கேட்ட ஞாபகமாவும் இருக்கு.. எப்போன்னுதான் தெரிய மாட்டேங்குது..’

அங்கே அத்தனை களேபரம் நடந்து கொண்டிருக்க ஓமனா மட்டும் நந்தினியை கண்ணீர் மல்க கசிந்துருகிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.. நந்தினிக்கு அது வேறு பெருத்த இம்சையாக இருந்து வைத்தது..

“அம்மைக்கு என்னிப் பத்தின விஜாரம் இல்லையோ..?” என்று அவள் குறைபட்டுக் கொண்டதில்.

“விஜாரம்ன்னா சொன்ன..?” என்று திருதிருத்தாள் நந்தினி..

“அறிவுக் கொழுந்து..!” அவள் தலையில் குட்டிய ரவிச்சந்திரன்..

“விஜாரம்ன்னா நினைக்கிறதுன்னு அர்த்தம்.. எத்தனை தடவைதான் டியூஷன் எடுக்கிறது..?” என்று கடிந்து கொண்டான்..

“ஆமாமாம்.. எனக்கு டியூஷன் எடுத்து ஓய்ந்துதான் போயிட்டிங்க.. நம்பிட்டேன்..” நொடித்தாள் நந்தினி..

அந்த நொடிப்பை ரசித்த ரவிச்சந்திரனின் கண்கள் மின்னியதில்..

‘பல்லை எரிய விட்டுட்டானா..?’ என்று மானசீகமாக தலையில் கை வைத்தாள்..

அவளைக் கண்டாலே அவன் கண்களில் மின்னல் வந்து விடுவதன் மாயம் என்னவாக இருக்கக் கூடும் என்று யோசித்தவளுக்குக் காரணம் பிடிபடாமல் சிகையைப் பிய்த்துக் கொள்ளலாம் போல இருந்தது.. அவன் சொன்ன ‘ஐ லவ் யு’வை இன்னமும் அவளால் நம்ப முடியவில்லை..

‘ஏதேதோ சொல்றான்.. சான்ஸ் கிடைச்சாக் கட்டிப் பிடிக்க அலைகிறான்.. அசந்த நேரம் பார்த்து முத்தம் கொடுக்கிறான்..’

இத்தனையையும் அவள் விழித்திருந்த போதுதான் செய்தான்.. உறக்கத்தில் அவளின் விரல் நகத்தைக் கூடத் தொடாமல் தள்ளிப் படுத்திருந்தான் என்பதில் அவன் மீது அவளுக்குப் பிரியம் உண்டானது..

‘இவன் தள்ளித்தான் படுத்திருந்தான்.. நான்தான் தூக்கத்திலே இவன் மேலே கையைக் காலைப் போட்டு அரெஸ்ட் பண்ணி வைச்சிருந்தேன்..’

ரவிச்சந்திரனைப் பார்க்கும் போது பிரியத்துக்குரிய சிநேகிதனைப் பார்ப்பதைப் போலவே அவருக்கு இருந்தது.. அதையுணராமல் அவள் பார்வையில் குஷியானவனாய் அவன் சன்னமாக விசிலடித்து அவளை அரள வைத்தான்.

‘போச்சுடா..’

நந்தினி பயந்து போனவளாக அவனைப் பார்க்காமல் ஓமனாவை பார்த்தாள்.. அவள் ரவிச்சந்திரனுக்கும் மேலே இருந்தாள்.. நந்தினியின் சிறு பார்வையில் பரவசப்பட்டுப் போனவளாக..

“அம்மே..” என்று பசுவைத் தேடும் கன்றாக பாய்ந்து வந்தாள்..

“வேண்டாம் ஓமனா.. பொறுமையாய் இரு.. ஓவர் பாசம் உடம்புக்கு ஆகாது..” என்று அவளைத் தடுத்தாட்கொண்டு ஆற்றுப்படுத்தி அடக்கி வைத்தாள் நந்தினி..

“ரண்டு திவசமா அம்மே இல்லாம ஈ தரவாடில வெளிச்சமின்னுப் போயி..” ஓமனா உருகினாள்..

“ஏனாம்..? கரண்ட் இல்லைன்னா இன்வெண்டர்... அதுவும் இல்லைன்னா ஜெனரேட்டர்ன்னு இருக்கிற அரண்மனை இது.. நீ ஸ்விட்ச்சைப் போட்டிருக்க மாட்ட ஓமனா..” இலகுவாக விளக்கமளித்தாள் நந்தினி..

அவள் அளித்த விளக்கத்தில் ரம்ய மாலினி பொங்கிச் சிரித்தாள்..

‘இதென்னடா இது.. இந்தப் பொண்ணு நான் வாயைத் திறந்தாலே சிரிக்க ஆரம்பிச்சிருது.. அந்த அளவுக்கு நகைச்சுவை மன்னியா நான்..???’

ரம்ய மாலினியை நம்பாத பார்வை பார்த்தாள் நந்தினி.. அதில் ரம்யாவின் சிரிப்பு அதிகமானதில்..

“போதும்ங்க..” என்று அழ மாட்டாத குறையாக வேண்டிக் கேட்டுக் கொண்டாள்..

போனால் போகிறது என்று சிரிப்பை நிறுத்தத்தான் நினைத்தாள் ரம்ய மாலினி.. அவளது நினைவை தவிடு பொடியாக்க வேண்டுமென்று கங்கணம் கட்டியவளாக ஓமனாக் குட்டி பேச்சை வளர்த்தாள்.. அவளும் நந்தினியும் மாட்டாடிய லட்சணத்தில் ரம்ய மாலினியின் சிரிப்பு அடங்குவேனா என்று அடம் பிடித்து விடாமல் ரம்ய மாலினியைத் தொற்றிக் கொண்டது..

“அம்மே..!” ஓமனாக்குட்டி தழுதழுத்தாள்..

“ஆட்டுக்குட்டி போல ‘மே, மே’ங்காதே ஓமனா..” நந்தினி அலுத்துக் கொண்டாள்..

“சாய் கொண்டு வரட்டே..?”

“அதுக்கு முன்னாலே சாரோட ஜீப்பில இருக்கிற என் பையைக் கொண்டு வா..”

“நிங்க வல்லிய சுந்தரி..”

“ஹை.. இப்படி ஜஸ் வைச்சா வேலை சொல்ல மாட்டேன்னு நினைச்சியா..? அந்தக் கதையே இங்கே வேணாம்.. ஓடிப் போய் பையைக் கொண்டு வந்திரும்மா.. என் கண்ணுல்ல..”

“ஊன் கழிச்சோ..?”

“அப்புறமா கழிச்சுக்கலாம்.. அது எங்கே ஓடிறப் போகுது..? இல்ல நான்தான் அதை விட்டுட்டு எங்கே ஓடிறப் போறேன்..? எதை மிஸ் பண்ணினாலும் வயநாட்டு அரண்மனையோட சாப்பாட்டை மிஸ் பண்ண மாட்டேன்னு நீ தெரிஞ்சு வைச்சிருக்க வேணாமோ..? என்ன பொண்ணு நீ..”

“ஆ ரோஜாப்பூ நிங்களுக்கு வேண்டிப் பூத்தது போலத் தோணி..”

“தோணினாத் தோணட்டும்.. இப்ப எனக்கு ரோஜாப்பூ வைச்சுக்கற மூடு இல்ல.. கேட்டோ.. செம பசியில இருக்கேன்.. நீ ரோஜாப்பூவை மறந்துட்டுப் பையைக் கொண்டு வா பார்ப்போம்..”

“இவ்விடத்த நிங்க இல்லாத பொழுதில ஞான் நிங்களப் பத்தியே சம்சாரிச்சு..”

“ஆக.. நீ பையைக் கொண்டு வர மாட்ட..? இப்படிக் கதை பேசியே ஒப்பேத்திறலாம்ங்கிற குறிக்கோளோட இருக்கிற..?”

“எந்தா பறஞ் அம்மே.. நந்தினி மேடத்துக்கு வேணும்ன்னா ஞான் எண்ட உயிரையும் கொடுக்கும்.. மனசிலாயி..”

“இன்னும் ரெண்டு செகண்டில பை இங்கே வரலேன்னா ஞான் உன்னோட உயிரை எடுக்கும்.. மனசிலாயி..”

ரம்ய மாலினி வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரிக்க ஆரம்பித்தாள்..

அத்தியாயம் 106

கோதிக்கும் டீயைக் கெட்டிலில் இருந்து கப்பில் ஊற்றிக் கொண்டிருந்த வீணாவை ஊன்றிப் பார்த்தார் ரவிவர்மன்.. மனதை வசீகரிக்கும் பேரழகுடன் இருந்த மனைவியிடம் மையல் கொண்டது அவர் மனம்.. நிதானத்துடன் அவள் டீக்கப்பை அவரிடம் நீட்டிய விதம் அழகானதாக இருந்தது.. ஒளிர் விட்ட வைர முக்குத்தியில் அவள் முகம் அம்பிகையின் வடிவழகுடன் சாந்தமாக ஜ்வலித்தது.. அவளது சாந்தமே அலாதியானதொரு சோபையை அவளுக்குக் கொடுக்கிறது என்று நினைத்துக் கொண்டார் ரவிவர்மன்.. காருண்யம் நிரம்பிய சாந்தம்..!

வீணாவின் அழகு குத்துவிளக்கின் சுடர் போன்றது.. மனதை அமைதிப் படுத்தும் வல்லமை கொண்டது.. அவந்திகாவைக் குறித்த அல்லல்களினால் அலைபாயும் மனதோடு அவளிடம் அடைக்கலம் நாடி வரும் கணவனுக்கு சிறு புன்னனை கயில் இதமளிப்பாள்.. அவள் மடியில் அவர் தேடிய அமைதி கிடைத்து விடும்..

அவந்திகாவிற்கே வீணாவின் அருமை தெரியும்.. வீணாவின் மனதைப் புண்படுத்துவதற்காக அவள் ரவிவர்மனின் அத்தை மகள்களை நினைவுபடுத்தி அவர்களில் ஒருத்தியை ரவிவர்மன் திருமணம் செய்து கொள்ளாமல் வீணாவைத் திருமணம் செய்து கொண்டு விட்டார் என்று குத்திக் காட்டினாலும் அந்த அத்தை மகள்களில் ஒருத்தி ரவிவர்மனுக்கு மனைவியாகியிருந்தால் அவந்திகாவை அந்த அரண்மனையின் சுற்றுப்புற வளாகத்திற்குள் கூட காலடி வைக்க விடாமல் துரத்தியடித்திருப்பாள் என்பதை நன்கு அறிவாள்..

‘இவள்தான் எத்தனை சாத்வீகமானவள்..’

ரவிவர்மனின் இதயத்தில் சுரந்த அன்பை அவரது விழிகள் பிரதிபலித்தன.. கணவரின் கண்கள் பொழிந்த காதலில் மனம் நனைந்த வீணா வெட்கச் சிரிப்புச் சிரித்தபடி..

“டீயைக் குடிங்க..” என்றாள்..

மனைவியின் வெட்கத்தை கணவனுக்கே உரிய கர்வத்துடன் ரசித்தபடி டீயை உறிஞ்சிய ரவிவர்மன்.. “டீயில் சர்க்கரை போடலியா..?” என்றார்..

“ஏன்..?”

“இனிப்பு கம்மியாயிருக்கே..”

“போட்டேனே.. பத்தலை போல.. கப்பைக் கொடுங்க.. சர்க்கரை கலந்து தர்றேன்..”

“வேண்டாம்..”

ரவிவர்மன் சுற்று முற்றும் பார்த்தார்.. அருகில் யாருமில்லை என்பதை உறுதிப் படுத்திக் கொண்டபின் தாழ்ந்த குரலில்..

“வேற ஒன்றைச் செய்..” என்று கிசுகிசுத்தார்..

ரகசியம் பேசிய அவரது குரலிலும் பார்வையிலும் முகம் சிவந்த வீணா ஒன்றும் புரியாதவளாக..

“என்ன செய்யனுமாம்..” என்று கேட்டாள்..

மனைவியின் சிவந்த முகத்தில் ரவிவர்மனின் காதல் அதிகரித்தது..

“ஒரு முத்தம் கொடு.. மொத்த ‘டீ’யும் இனிப்பாகிரும்..” என்றார் கொஞ்சலாக..

“என்னது..?” பதட்டத்துடன் சுற்று முற்றும் பார்த்தாள் வீணா..

“யாருமில்லே..” ரவிவர்மன் கன்னத்தைக் காட்டினார்..

“ஆசையைப் பாருங்க.. அதுக்கு வேற ஆளைப் பாருங்க..”

“நீயே சொல்லிட்ட பின்னாலே மாட்டேன்னா சொல்லப் போறேன்..? இப்பவே வேற ஆளைத் தேடிடறேன்.. என்ன ஒண்ணு.. என் அத்தை மகள்களுக்கு கல்யாணமாகி பேரன், பேத்தி எடுத்துட்டாங்க.. ம்ஹூம்..”

“ஐயாவுக்கு அதில ரொம்ப வருத்தம் போல..”

“இருக்காதா பின்னே..? வேலை மிச்சம்ல்ல..”

ரவிவர்மன் கண் சிமிட்ட தன்னை மறந்தவளாக கணவனின் கண் சிமிட்டலில் கட்டுண்டு நின்று விட்டாள் வீணா.. அவளது விழிகளில் மயக்கம் வந்தது.. திருமணமாகி வந்த புதிதில் ரவிவர்மனைக் கண்டவுடன் அவள் கண்களில் வரும் அதே மயக்கத்தை அப்போதும் கண்ட ரவிவர்மன் சொக்கிப் போனார்.. மனைவியைக் கட்டிக் கொள்ளும் தாபம் கொண்டவராக..

“வீணா..” என்று கிசுகிசுத்தார்..

“ம்ம்ம்.. போதும்.. உங்க அத்தை மகள்கள் மட்டும் கிழவியாகிடலை.. நீங்களும் கிழவர்தான்.. நம்ம ரவிக்கு மட்டும் காலாகாலத்திலே கல்யாணம் நடந்திருந்தா நம்ம அரண்மனையிலேயும் பேரன், பேத்தி விளையாடிக்கிட்டு இருந்திருப்பாங்க.. எங்கே..? எல்லாத்திலயும் என் சொல் பேச்சைக் கேட்கிறவன் கல்யாண விஷயத்தில அகப்பட மாட்டேங்கிறானே..” ஆதங்கப்பட்டாள் வீணா..

மனைவியின் நினைவூட்டலில் தாபம் குறைந்த ரவிவர்மன் யோசனையுடன் டீயைப் பருக ஆரம்பித்தார்..

“ரவிக்கும், ரம்யாவுக்கும் தகுந்த இடத்தில் கல்யாணமாகிருச்சுன்னா எனக்கு நிம்மதியாயிருக்கும்..” வீணாவின் முகத்தில் வருத்தம் கவிந்தது.. பிள்ளைகளைப் பற்றிய வருத்தம் அது.. காவல் பூதங்கள் போல அந்த வீட்டை ஆக்ரமித்திருக்கும் அவந்திகாவின் குடும்பத்திடமிருந்து அல்லும், பகலும் மகளைக் காப்பாற்றப் போராடிக் கொண்டிருப்பவள் அவள்.. ரவிச்சந்திரனைப் பற்றிக் கவலையில்லை.. அவன் ஊரையே காப்பாற்றுகிறவன்.. தன்னையா காப்பாற்றிக் கொள்ள மாட்டான்..?

‘ரம்யாவை நல்ல குடும்பத்தில சேர்த்திரனும்..’

இறுக்கமான அந்தச் சூழலைக் கலைப்பதைப் போல கலகல சிரிப்பொலி அவர்கள் காதுகளில் விழுந்தது.. வீணாவும் ரவிவர்மனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்..

“நம்ம ரம்யாவா சிரிக்கிறது..?” ஆச்சரியத்துடன் கேட்டார் ரவிவர்மன்..

ரம்ய மாலினி குணத்தில் வீணாவைக் கொண்டிருந்தாள்.. அதிர்ந்து பேச மாட்டாள்.. அவசியமின்றி சிரிக்க மாட்டாள்.. அதிலும் அவந்திகாவின் குடும்பம் மொத்தமும் அந்த அரண்மனையில் ஐக்கியமாகி விட்ட பின்பு ரம்ய மாலினி சிரிப்பையே மறந்து விட்டாள் எனச் சொல்லலாம்... சொந்த வீட்டிலேயே சுதந்திரமாக நடமாட முடியாமல் வீணாவின் பாதுகாவலின் மறைவில் வாழ்ந்து கொண்டிருப்பவள் அவள்.. ரவிவர்மனுக்கு கோபம் கோபமாக வரும்.. ஆனால் அவர் என்னத்தைக் கேட்க முடியும்..? ஏன் என் மகளின் சுதந்திரம் பறிபோனது என்று கேட்டால் அதை யார் தடுத்தது என்று அவந்திகா பதில் கேள்வி கேட்பாள்.. உன் மகள் எங்களுடன் ஒட்டிப் பழகுவதில்லை.. விட்டு விலகி நிற்கிறாள் என்று பதிலுக்குப் புகார் பட்டியலைக் கொடுப்பாள்.. அதற்கு ரவிவர்மனால் என்ன பதிலைச் சொல்ல முடியும்..?

உன்னுடன் என்மகள் ஒட்டிப் பழக மாட்டாள் என்று சொல்ல முடியுமா..? அவந்திகா அவளுடன் பிறந்த தங்கையாயிற்றே..

தளை போகும் பாசவலையில் சிக்குண்டவரால் தன் மகளின் புன்னகையை மீட்டுக் கொடுக்க முடியவில்லை.. கலகலத்துச் சிரிக்காமல் அமைதியாக தாயைப் போன்ற சாத்வீகத்துடன் எதையும் பேசாமல் மௌனமாக நத்தை தன் கூட்டுக்குள் ஒடுங்கிக் கொள்வதைப் போல ஒடுங்கிக் கொள்ளும் மகளைப் பார்க்கும் போதெல்லாம் அவரது மனம் வலிக்கும்.. துயரம் கவியும்.. எதையாவது செய்து மகளின் முகத்தில் மலர்ச்சியைக் கொண்டு வர வேண்டுமென்று துடிப்பார்.. என்ன செய்வதென்று தெரியாமல் திகைப்பார்..

ரவிச்சந்திரன் வயநாட்டுக்கு வரும் போது மட்டும் ரம்ய மாலினியின் முகத்தில் சிரிப்பு எட்டிப் பார்க்கும்.. தமையனாக இல்லாமல் ஒரு சிநேகிதனாக தங்கையிடம் கதை பேசும் ரவிச்சந்திரன் தங்கையின் முகத்தில் குதூகலத்தை வர வைப்பான்.. தாயையும், தங்கையையும் வெளியே அழைத்துச் சொல்வான்.. இந்தியா முழுவதும் அவர்கள் சுற்றுலா சென்றுவர ஏற்பாடுகள் செய்வான்..

ரவிவர்மனால் அது முடியாது.. தாய், தந்தை, தங்கையின் குடும்பம் என்று ஒட்டு மொத்தமாக அனைவரையும் அழைத்துக் கொண்டுதான் அவரால் வெளியில் செல்ல முடியும்.. மனைவி, மகன், மகள் என்று அவரது குடும்பத்தை மட்டும் அழைத்துக் கொண்டு வெளியில் சென்று வர இயலாது.. குற்ற உணர்வில் தவித்து விடுவார்.. அந்தக் குற்ற உணர்வு அவந்திகாவிடம் இருக்கவே இருக்காது.. தன் குடும்பமாக உலகம் சுற்றக் கிளம்பக்கூட அவள் தயங்க மாட்டாள்.. அதற்கான பணத்தையும் ரவிவர்மனிடம்தான் கறப்பாள்.. அவள் பெயரிலிருந்த சொத்துக்களை பாகம் பிரிக்க வைத்து.. அருள்மொழிவர்மனின் சொத்துக்களையும், யாழினியின் சொத்துக்களையும் ரவிச்சந்திரன் விலைக்கு வாங்கி.. யோகானந்தனிடம் கடன் பத்திரம் எழுதிவாங்கி.. யோகானந்தன் வாங்கும் கடன்களுக்கும் தனக்கும் எவ்விதச் சம்பந்தமுமில்லையென்று நாளேடுகளில் விளம்பரம் கொடுத்த பின்னால்தான் அவந்திகா அரண்மனைக்குள் அடங்கியிருக்கிறாள்.. இல்லாவிட்டால் அவளும் கணவருடன் ஜோடி போட்டுக்கொண்டு கடன் வாங்கி உலகச் சுற்றுலாவுக்குக் கிளம்பியிருப்பாள்..

அப்பேற்பட்ட அவந்திகா இருக்கும் வீட்டில் பிறந்திருக்கும் ரம்ய மாலினிக்கு சிரிப்பு எப்படி வரும்..?

“நம்ம ரம்யாதான் சிரிக்கிறா..” வீணாவின் முகம் விகசித்தது.. மகளின் புன்னகையில் தாயின் மனம் மலர்ந்தது..

“நந்தினியும், ரவியும் வந்திட்டாங்க போல.. இவ நந்தினியுடன் பேச ஆரம்பிச்சாலே சிரிச்சிருவா..”

“நந்தினி சுட்டிப் பெண்..! இல்லையா வீணா..”

“ஆமாங்க.. சுட்டித்தனமும் துறுதுறுப்பும் அவ கூடப் பிறந்தது போல.. அவ வந்த பின்னாலதான் இந்த வீடு வீடாவே இருக்கு..”

தன்னையறியாமல் சொல்லி விட்ட வீணா பதட்டத்துடன் நாக்கைக் கடித்துக் கொண்டு..

“நான் தப்பா எதுவும் சொல்லலைங்க..” என்று விளக்கம் சொல்ல ஆரம்பித்தாள்..

“நீ தப்பாச் சொன்னேன்னு நான் சொன்னேனா..?” பரிவுடன் சொன்னார் ரவிவர்மன்..

வீணாவின் பார்வை ஆவலுடன் வாசலை நாடியது.. மனைவியின் ஆவலை ரவிவர்மன் கவனித்தார்.. நந்தினியின் துறுதுறுப்பினால் ஈர்க்கப்படுவது ரம்ய மாலினி மட்டுமல்ல, வீணாவும்தான் என்று அவருக்குத் தோன்றியது.. அந்த அளவுக்கு அந்த அரண்மனையின் வெறுமை வீணாவைப் பாதித்திருக்க வேண்டும்.. உயிர்ப்பிற்காக அவள் ஏங்கியிருக்க வேண்டும்..

வீணாவை மணந்ததில் ரவிவர்மன் அதிர்ஷ்ட சாலியாகி விட்டார்.. அவளைப் போன்ற பொறுமையும், பிரியமும் கொண்ட மனைவி எவருக்கு கிட்டுவாள்..?

'பட்ஷே.. என்னை விவாகம் செய்ததில் எண்ட பார்யா அதிர்ஷ்டசாலியாகியிருக்காளா..?'

இல்லை என்பதை ரவிவர்மன் அறிவார்.. அவந்திகாவைப் போன்ற உடன் பிறப்பைக் கொண்ட கணவனுக்கு மனைவியாகியிருப்பவள் எப்படி அதிர்ஷ்ட சாலியாக முடியும்..? உடனிருந்து கொல்லும் வியாதி அவந்திகா.. ஒட்டுவாரொட்டி.. தேளின் கொடுக்கை போல விஷம் தடவிய வார்த்தைகளைக் கொட்டும் நாவைக் கொண்டவள்.. அவள் பேசும் வார்த்தைகளைச் சகித்துக்

கொண்டு ரவிவர்மனிடம் காதல் மாறாமல் வாழ்ந்த வீணாவின் மீது எப்போதும் போல அப்போதும் அளவற்றக் காதல் உண்டானது ரவிவர்மனுக்கு.. ரம்ய மாலினியுடன் விரல் கோர்த்து கதை பேசியபடி உள்ளே வந்தாள் நந்தினி.. அவளைக் கண்டதும் வீணாவின் முகம் பூவாக மலர்ந்தது.. இரண்டு நாள்கள் பிரிந்திருந்த பிரிவாற்றாமையைப் பேசிச் சரிக்கட்டப் போவதைப் போல ரவிவர்மனை மறந்து நந்தினியிடம் ஓடினாள்..

“அத்தை..”

நந்தினி பசுவிடம் தாவும் கன்றாகப் பாய்ந்து வீணாவைக் கட்டிக் கொண்டாள்.. கைகளை ஆட்டியாட்டி கதை சொல்வதற்கு அவளுக்கு நிறைய விவரங்கள் இருந்தன.. நீலி மலை.. மீன் முட்டி அருவி.. மரக் குடில்.. யானைக்கூட்டம்.. மீன் பிடித்தது என்று அவள் கொட்டிக் கவிழ்த்ததில் வயநாட்டு அரண்மனையே உயிர்த்தெழுந்தது..

“தூண்டிலைப் போடறேன்.. போடறேன்.. ஒத்தை மீன் சிக்கலை அத்தை.. அதுவே பாஸ் தூண்டிலைப் போட்டா போட்டி போட்டுக்கிட்டு அத்தனை மீன்களும் வலிய வந்து வாயைக் கொடுத்துச் சிக்குதுக.. நான் நினைக்கிறேன்..

அத்தனை மீன்களும் கேர்ஸ்ஸ் மீனா இருக்கும்ன்னு..” ரவிவர்மனுக்குச் சிரிப்பு வந்தது.. அவர் அங்கு இருப்பதை அறியாமல் கதை பேசிக் கொண்டிருந்தாள் நந்தினி.. அவள் உருவாக்கியிருந்த உயிர்ப்பலை அந்த அரண்மனையை களைகட்ட வைத்ததை அவர் உணர்ந்தார்.. நந்தினி அந்த அரண்மனைக்குள் கால் பதிக்கும்வரை இல்லாத உயிர்ப்பலை அது.. வீணாவின் முகத்தில் மலர்ச்சியையும் ரம்ய மாலினியின் முகத்தில் சிரிப்பையும் கொண்டு வந்திருக்கும் உயிர்ப்பலை அது.. ரவிச்சந்திரனைப் பார்த்தார்.. தந்தையைக் கவனிக்காமல் நந்தினியைப் பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.. அவனது பார்வையில் தெரிந்த ஏதோ ஒன்றில் ரவிவர்மனின் நெற்றியில் சிந்தனை ரேகைகள் படிந்தன.. ரவிச்சந்திரனின் மனதில் என்ன இருக்கிறது..? அவன் விழிகளில் ஒளிந்திருக்கும் உணர்வுகள் என்ன சொல்கின்றன..?

அத்தியாயம் 107

நகைப் பெட்டிகளை ஆராய்ந்து கொண்டிருந்தாள் அவந்திகா.. யோகானந்தனின் கண்களுக்குத் தெரியாமல் ஒளித்து வைத்திருந்த வைர நகைகள் அவை.. பரம்பரை நகைகள் என்று யாழினியால் அவந்திகாவுக்குக் கொடுக்கப் பட்டவை.. புகுந்த வீட்டிலும் இது போன்ற பாரம்பர்ய வைர நகைகள் அவளுக்குப் பரிசளிக்கப் பட்டன.. மருமகளுக்கென்று வந்த நகைகளை யோகானந்தன் விட்டு வைக்கவில்லை.. மகனுக்கு அடுத்துத்தான் மருமகள் என்று சட்டம் பேசிச் சிதறடித்து விட்டார்..

பிறந்த வீட்டு சீதனமாக வந்த வைர நகைகளை அவந்திகா இறுக்கிப் பிடித்தற்குக் காரணம் உண்டு.. பிறந்த வீட்டைச் சார்ந்து இருக்க வேண்டும் என்று ஆகி விட்ட பின்பு வீட்டிற்கு வரும் உறவினர்கள் பரம்பரை வைர நகைகளைப் பற்றிக் கேள்வியெழுப்பலாம்.. அவைகள் தற்போது இல்லையென்று சொல்வது அவந்திகாவுக்கான குறைவை உண்டாக்கி விடும்.. அது அஜந்தாவின் எதிர்காலத்தைப் பாதிக்கும்..

அதனால்தான் யோகானந்தனுக்குத் தெரியாமல் அவற்றை புதையலைக் காக்கும் பூதம் போலக் காத்து வந்தாள்.. அருள்மொழிவர்மனின் நெருங்கிய உறவினர் வீட்டு விசேஷங்களுக்குப் போகும் போது மறக்காமல் அந்த நகைகளை மகளுக்குப் போட்டு விட்டுத் தானும் போட்டுக் கொள்வாள்.. யோகானந்தனின் கழுகுப் பார்வையில் அவை பட்டுவிடும்.. மாமனாரின் உறவினர் வீடு என்பதால் பல்லைக் கடித்துப் பொறுமை காப்பார்.. திரும்பி வந்ததும் நகைகளைக் கேட்பார்.. என்னிடம் அவை இல்லை என்று கை விரிப்பாள் அவந்திகா.. வேறு எவரிடம் உள்ளது என்று கர்ஜிப்பார் யோகானந்தன்..

“ரவியிடம் உள்ளது..” என்று சொல்லி விடுவாள் அவந்திகா..

“ரவியிடமோ..?”

யோகானந்தன் கைகட்டி, வாய் பொத்தி, வலது கையின் ஆள் காட்டி விரலை வாயின் மீது வைத்து விடுவார்..

‘அஃதல்லோ...’

அவந்திகா மனதுக்குள் தன் பொய்யை சிலாகித்து மெச்சிப் போவாள்..

ரவிச்சந்திரனின் பெயரைக் கேட்டால் அழுதபிள்ளை வாய் மூடுகிறதோ இல்லையோ.. யோகானந்தன் கைகட்டி, வாய் பொத்தி நின்று விடுவார்.. அந்த அளவுக்கு அவருக்கு ரவிச்சந்திரனிடம் பயம் இருந்தது..

'பின்னே..? எண்ட மோன ஈ வயநாட்ட விட்டு ஓட்டி விட்டதப் போல, என்னையும் ஓட்டி விட்டுட்டா ஊன் கழிக்க ஞான் எந்தா பணி செய்யும்..?'

எது எப்படியோ.. எவருக்கும் அடங்காத யோகானந்தனை அடக்கி, ஒடுக்கி, வயநாட்டு அரண்மனையின் மூலையில் ரவிச்சந்திரன் முடக்கி வைத்திருப்பதில் அவந்திகாவுக்கு ஆழ்ந்த திருப்தி உண்டு.. அதை வெளிப்படுத்த மாட்டாள்.. அத்தையின் கணவனுக்கான மரியாதையை ரவிச்சந்திரன் கொடுக்கவில்லையென்று சண்டையிடுவதைப் போல நடிப்பாள்..

"எந்தா அச்சா இது.. அம்மாவனென்ட விஜாரம் ரவியோட மனசில உண்டெண்டா இவ்விதம் சம்சாரிக்குமோ..? ஞான் நிங்க மோளல்லோ.. ரவிய அன்வர்ஷிக்கனும் அச்சா.." என்று அருள்மொழிவர்மனிடம் முறையிடுவாள்..

“எவரா இருந்தாலும் அவரவர் இடத்தில் இருக்கனும் மோளே.. அவ்விதம் ஜீவிச்சாத்தான் பெகுமானம் கிட்டும்.. ஞான் எந்தா பறஞ் ..? ரவியிடம் சம்சாரிச்சா அவன் வல்லதும் காரணம் பறய்வான்.. பிணக்கம் கொள்வான்.. பிராதி வேண்டாம் மோளே.. ஞான் ரவியிண்ட இதுபத்தி சம்சாரிக்க வைய்யான் மோளே.. கேட்டோ..” அருள்மொழிவர்மன் கழண்டு கொள்வார்..

அவர் அதைத்தான் செய்வார் என்பது அவந்திகாவுக்கு நன்றாகவே தெரியும்.. அருள்மொழிவர்ம ன் பேரனைப் பகைத்துக் கொள்ள மாட்டார்.. அவந்திகாவைக் கொண்டு வந்து அரண்மனையில் தங்க வைத்திருப்பதினால் ரவிச்சந்திரன் வெளிநாட்டில் இருக்கும் தொழில்களைக் காரணம் காட்டி வயநாட்டு அரண்மனையில் தங்காமல் வெளியேறி விட்டதில் அவர் அதிர்ந்து போயிருந்தார்.. பெற்ற பிள்ளைகளிடம் பாரபட்சம் காட்டுகிறாரோ என்ற அவரது மனச்சாட்சி குற்ற உணர்வில் குறுகுறுத்தது.. மகனைப் பிரிந்து, மகளையும் அடைகாத்தபடி வாய் திறவாமல் அரண்மனையில் வளைய வரும் வீணாவைப் பார்க்கும் போதெல்லாம் அவரது மனம் கனக்கும்.. அவள் பெற்ற மகளுக்காக மருமகளை வேதனைப் படுத்தி விட்டாரே என்று

மனதுக்குள் தவித்துக் கொண்டிருந்தார்.. அவரிடம் போய் அவந்திகா நியாயம் கேட்டால் இதோ ரவிச்சந்திரனிடம் நியாயம் கேட்கிறேன் என்று பேரனுடன் சண்டையிடக் கிளம்பி விடுவாரா என்ன..?

அவர் எதையாவது சொல்லப் போய் ரவிச்சந்திரன் அதுதான் சாக்கு என்று அவருடன் சண்டை வளர்த்து விட்டு இனி இந்த வயநாட்டு அரண்மனைப் பக்கமே வரமாட்டேன் என்று சொல்லி விட்டால் என்ன செய்வது..?

ஆனானப்பட்ட அருள்மொழிவர்மனையே அடக்கித் தன் கைபிடிக்குள் வைத்திருக்கும் ரவிச்சந்திரனை எதிர்த்து ஒரு துரும்பைக்கூடக் கிள்ளிப் போட முடியாது என்பதை அவந்திகா நன்றாகவே அறிவாள்.. அதில் அவளுக்கு அளவிட முடியாத ஆத்திரமும் உண்டு.. இருந்தாலும் ரவிச்சந்திரனின் ஆளுமையும் அதிகாரமும் யோகானந்தனின் மீது பாய்ந்து அடக்கி வைப்பதில் மனதுக்குள் மகிழ்ந்து போவாள்.. அதை மறக்க அவ்வபோது யோகானந்தனின் கண்ணெதிரே அருள்மொழிவர்மனிடம் முறையிட்டு கண் துடைப்பு நாடகங்களை நடத்திக் காட்டுவாள்.. ரவிவர்மனைப் பற்றி அவள் எதைச் சொன்னாலும் என்னால் அது வைய்யான்

(முடியாது) மோளே என்று அருள்மொழிவர்மன் கைவிரித்து விடுவாரே..

நெருங்கிய உறவினர் வீட்டுத் திருமணம் என்பதால் மறைவிடத்திலிருந்து வெளிப்பட்டு இரண்டு தினங்களாக அவந்திகாவையும், அஜந்தாவையும் அலங்கரித்த வைர நகைகளை யோகானந்தனின் கண்களில் படாமல் ஒளித்து வைத்துவிட வேண்டுமென்ற முனைப்புடன் அவைகளை நகைப் பெட்டிகளில் பத்திரப் படுத்திக் கொண்டிருந்தாள் அவந்திகா.. சப்தமெழுப்பாமல் உள்ளே வந்த அஜந்தா வைர அட்டிகையை எடுக்க முயல பதறித் தட்டி விட்டாள்..

“எந்தா அம்மே.. ஞான் எண்ட ஜ்வல்ஸைத் தொட்டத் தள்ளுமோ..?” அஜந்தா கோபித்துக் கொண்டாள்..

“வெப்பராளம் வேண்டாம் மோளே.. ஞான் நின்னை நிண்ட அச்சனெண்டு விஜாரிச்சுட்டேனல்லோ..” அவந்திகா மகளைச் சமாதானப் படுத்தி விட்டு நகைப் பெட்டிகளை மறைவிடத்தில் ஒளித்து வைக்க ஆரம்பித்தாள்..

“எந்தா ஜீவிதம் அம்மே இது..” அஜந்தாவுக்கு வெறுப்பாக இருந்தது..

அவர்கள் கலந்து கொண்ட திருமணத்திற்கு வந்திருந்த இளம்பெண்கள் அனைவரும் ரவிச்சந்திரனைப் பற்றியே விசாரித்தார்கள்.. இளம் வயது ஆண்களோ, பேரழகியான அஜந்தாவை விட்டு விட்டு ரம்ய மாலினியின் அயர வைக்கும் அழகில் சொக்கிப் போனார்கள்.. அது குறித்து அஜந்தா தாயிடம் புலம்பிய போது அவந்திகா துயரம் கொண்டாள்.. யோகானந்தனின் செயல்கள் அவள் பெற்ற பிள்ளைகளை எப்படியெல்லாம் பாதிக்கிறது..

“ரம்ய மாலினி எண்ட சேட்டனோட மோள்.. நீ நிண்ட அச்சனோட மோள் அஜந்தா.. ரவிவர்மனோட மோளுக்கு கிட்டும் பெகுமானம், யோகானந்தனோட மோளுக்குக் கிட்டாது மோளே.. நினக்கு மட்டுமல்ல.. நிண்ட சேட்டனுக்கும் இதே நிலைதான்.. கேட்டோ.. ஈ விசேஷத்தில ரவிச்சந்திரன அன்வர்ஷிக்கும் பெண்கள் நிண்ட சேட்டன அன்வர்ஷிக்கலயே மோளே.. அத ஆலோசிக்கனும் மோளே.. நினக்கும் நிண்ட சேட்டனுக்குமான பெகுமானம் எண்ட சேட்டனோட பிள்ளைகளை விவாகம் கழிப்பதில்தான் கிட்டும் அஜந்தா.. மனசிலாயி..”

அவந்திகாவின் அறிவுறுத்தலில் கொதிக்கும் மனதை அடக்கிக் கொண்டு என்னவோ கேரளத்தின் இளவரசியே

அஜந்தாதான் என்பதைப் போல படு கர்வமாக முகத்தை வைத்துக் கொண்டு வளைய வந்தாள்.. அங்கிருந்தவர்கள் அவளை ஒரு பொருட்டாகவே நினைக்கவில்லை.. கர்வத்துடன் இருந்தவளிடம் முகம் கொடுத்துப் பேசக்கூட எவரும் முன்வரவில்லை.. மாறாக இவளுக்கெல்லாம் எதற்கு இத்தனை திமிர் என்ற ரீதியில் முறைத்து விட்டு வீணாவிடமும், ரம்ய மாலினியிடமும் விழுந்து விழுந்து உறவு கொண்டாடிப் பேசினார்கள்.. ஒதுக்கப்பட்ட உணர்வுகளை மனதுக்குள் புதைத்துக் கொண்டு வெளியில் காட்டிக் கொள்ளாமல் ஒரு விழாவில் கலந்து கொள்வது என்பது எத்தனை பெரிய கொடுமையென்பது அதை அனுபவித்த அவந்திகாவுக்கும் அஜந்தாவுக்கும்தான் தெரியும்.. யோகானந்தன்தான் எதையும் கண்டு கொள்ள மாட்டாரே.. அவள் மாமனாருடனும், மைத்துனருடனும் உறவு கொண்டாடி உடன் வந்திருக்கும் தைரியத்தில் திருமணத்திற்கு வந்திருந்த உறவினர்களிடம் கடன் கேட்டுக் கொண்டிருந்தார்.. அவந்திகாவுக்கும் அஜந்தாவுக்கும் அது தெரியாது.. அவர்களுக்கு இருந்த தலைகுனிவோடு யோகானந்தன் இழுத்து விட்ட தலை குனிவு வேறு புதிதாக சேர்ந்து கொண்டதை அவர்கள் அறியவில்லை.. அது தெரியாமல்.. ‘ஈ

மனுஷி எதுக்கோசரம் இவ்விதம் நோக்குது..?' என்று குழம்பிக் கொண்டிருந்தாள் அவந்திகா..

அவளுக்கு என்ன தெரியும்..? ஆ மனுஷியின் கணவனிடம் யோகானந்தன் ஒருகோடி கடன் கேட்டதில் ஆ மனுஷி அவந்திகாவின் மீதும் கொலைவெறி கொண்டிருந்தாள் என்பது..

யோகானந்தன் பண்ணிக் கொண்டிருந்த அட்டூழியத்தை அறியாமல் தாயும், மகளும் இரண்டு நாள்களை ஒப்பேற்றி விட்டு வயநாட்டுக்குத் திரும்பியிருந்தார்கள்.. வந்ததும் அஜந்தா ரவிச்சந்திரனைத் தான் முதலில் தேடினாள்.. அவன் மீது உள்ள மட்டற்ற காதலினால் (?) ஒன்றும் தேடவில்லை.. எப்படியாவது அவனுக்கு மனைவியாகி விட்டால் அவளைத் துச்சமாகப் பார்க்கும் உறவு ஜனங்கள் அவளை உச்சத்தில் வைத்துப் பிரமிப்புடன் பார்ப்பார்களே.. அதை எப்படியாவது நிகழ்த்தி விட வேண்டும் என்ற வெறி அவளுக்கு..

எந்த ஜனங்கள் ரவிச்சந்திரனின் தங்கையென்பதற்காக ரம்ய மாலினியிடம் உறவு கொண்டாடுகிறார்களோ.. அந்த ஜனங்களை ரவிச்சந்திரனின் மனைவியாகி தன் பக்கமாக இழுத்துக் காட்டி விட வேண்டும் என்ற ஆவேசம்

கொண்டிருந்தாள் அஜந்தா.. அந்த ஆவேசத்துடன் எப்படியெல்லாம் சாகசம் செய்து ரவிச்சந்திரனை மயக்க வேண்டும் என்ற வழிமுறைகளை வழி நெடுக யோசித்தபடி வீடு வந்து சேர்ந்தவளுக்கு ரவிச்சந்திரனும் நந்தினியும் நீலிமலைக் காட்டுக்கு மீன்முட்டி அருவிகளைப் பார்க்கப் போயிருக்கிறார்கள் என்ற செய்தி காத்திருந்தது. .

“ரெண்டு திவசமா..?” இடிந்து போனாள் அஜந்தா.. ரவிச்சந்திரனுக்கும் அவளுக்குமாக பிரத்யேகமான சில நொடிகள் கிடைத்தால் போதும்.. ரவிச்சந்திரனைத் தன் வசப்படுத்தி விடலாம் என்ற அதீத நம்பிக்கையுடன் அவன் வயநாட்டு அரண்மனைக்கு வரும் போதெல்லாம் மயக்கு மோகினியாக அவனை மயக்க முயன்று தோற்றுக் கொண்டிருப்பவளுக்கு முழுதான இரு தினங்கள் நந்தினிக்குக் கிடைத்திருப்பதில் கிலி பிடித்துக் கொண்டது..

‘யாருமில்லா மலைக்காட்டில் அத்தானும் அந்த நந்தினியும் எப்படியெப்படி யெல்லாம் இருந்திருப்பார்கள்..!’

ரத்தம் கொதித்ததில் அவளுக்கு மலையாளத்தில் யோசிக்க வேண்டும் என்பது மறந்து போய் விட்டது.. வழக்கமாக அவள் பேசும் தமிழில் யோசித்துப் பரபரக்க ஆரம்பித்து விட்டாள்..

ரவிச்சந்திரனும் நந்தினியும் தானாகத் திரும்பி வருவார்கள் என்று அவளுக்குத் தோன்றவில்லை.

‘ஞான் போய் அவ சிண்டைப் பிடிச்சு இழுத்து..’

கோபத்தில் அரைகுறை மலையாளம் திரும்பி விட்டது.. அம்மே.. ஞான் நீலிமலைக் காட்டுக்குப் போயி.. என்ற சேதியைச் சொல்ல அவந்திகாவைத் தேடி வந்தவள் என்றாவது ஒருநாள் கண்களில் பார்த்துப் போட்டுப் பார்க்கும் வைர நகைகளின் மீது ஆசை கொண்டு தொட்டு விட்டு அவந்திகாவிடம் திட்டு வாங்கி நொந்து போனாள்.. இந்த நிலை மாற வேண்டுமானால் அவள் ரவிச்சந்திரனை விவாகம் செய்தே தீர வேண்டும்..

அத்தியாயம் 108

“எந்தா மோளே..? இத்தரயும் ஆலோசிக்கனுது..?”

வைர நகைகளை மறைவிடத்தில் பத்திரப் படுத்தி விட்டு நிம்மதிப் பெருமூச்சு விட்ட அவந்திகா வினவினாள்..

“ஊம்..? ஈ வயநாட்ட கரம் பற்றலாம்ன்னு ஆலோசிக்கனுது..” வெடுக்கென்று பதில் சொன்னாள் அஜந்தா..

“எந்துக்கு மோளே வயநாட்டக் கரம் பற்றனும்..? ஆ ரவிச்சந்திரனக் கரம் பற்றினா நீ காயல் கடந்து ஈ உலகத்த சுத்தி வரலாமல்லோ..?”

“ம்ப்ச்..! எனிக்கென்னவோ அது கை கூடுமெண்டு மனசிலாகலை அம்மே.. ரவி கை நழுவிப் போயிடுவான்டு அச்சமாயிருக்கு அம்மே..”

அஜந்தாவின் முகச்சுளிப்பில் அவந்திகா துணுக்குற்றாள்.. எதற்கும் அஞ்சாத அஜந்தாவே அஞ்சுகிறாளா..? ஏன்..?

“எண்ட மோளோட மனசில அச்சமா..? எண்ட குருவாயூரப்பா..! அச்சமெண்டால் எங்ஙன இரிக்கும்ன்னு

பறயற குட்டியல்லோ எண்ட மோள்.. எந்தா மோளே..? எதுக்கோசரம் இவ்விதம் பறயறது..?''

''ரவிச்சந்திரனும் நந்தினியும் ஈ தரவாடில இல்லை அம்மே.. அறிஞ் ..?''

''அறியும் மோளே.. புறத்தாலே போயி..''

''ஆ புறத்தாலே எதுன்னு அம்மை அறியுமோ..?''

''எதாம்..?''

''நீலிமலைக்காடு அம்மே..''

''ஓ..''

உதடுகளைக் குவித்து 'ஓ' வென்ற அகவலோசையை எழுப்பிய அவந்திகாவின் முகத்தில் சிந்தனை படர்ந்தது.. மலையேறுவதில் சிரமம் இருப்பதால் குறைவான ஜன நடமாட்டத்துடன் இருக்கும் நீலிமலைக்காடும், மீன்முட்டி அருவிகளும் அவள் மனதில் வந்தன.. இயற்கையின் வனப்பும், தனிமையும் நிரம்பிய அந்த அடர்ந்த காட்டுக்குள் ரவிச்சந்திரனும் நந்தினியும் இன்னமும் அதிகமாக பின்னிப் பிணைந்து விடும் சாத்தியக் கூறுகள் அதிகம் என்பதை அவளது புத்தி அறிவுறுத்தியது..

ஆயினும் அவளது அறிவு சொன்னதை வெளிக் காட்டிக் கொள்ளாமல் அசட்டையாக முகத்தை வைத்துக் கொண்டாள்..

“ஆ நந்தினிக்கு மீன்முட்டி அருவிகளைக் காட்டோனும்னு அழைச்சுட்டுப் போயிருக்கலாம்.. கேட்டோ.. எதையும் அன்வர்ஷிச்சு பரிசோதிச்சுட்டுப் பறயாம்.. கேட்டோ..”

“கேட்டதைத்தான் பறஞ் அம்மே.. ரவியும், நந்தினியும் நீலிமலைக் காட்டுக்கு மீன்முட்டி அருவிகளைப் பார்க்கப் போகிறதாப் பறஞ்சுட்டுத்தான் போயி..”

“ஞான் பறஞ்சது சரியாயிட்டல்லோ..”

“எந்தா சரியாயிட்டல்லோ..? அவங்க கிளம்பிப் போயி ரண்டு திவசமாகிறதாம் அம்மே..”

“எந்து..? ரெண்டு திவசமா..?”

இரண்டு நாள்களாக வயநாட்டு அரண்மனைக்குத் திரும்பி வராமல் மீன்முட்டி மலையில் என்ன செய்து கொண்டிருக்கிறார்களாம்..?

“அதே.. அதே.. ஆ சம்சயம்தான் எண்ட மனசைப் போட்டு அரிக்குது அம்மே.. விஜாரமுண்டோ..?”

“எந்து விஜாரம் மோளே..?”

“ஆ நீலிமலைக் காட்டுக்குள்ளே ரவியோட கெஸ்ட் ஹவுஸ் உண்டல்லோ.. ஆ கெஸ்ட் ஹவுஸ் வுட்-ஹவுஸ் அம்மே..” அஜந்தாவின் மனம் வெம்பிக் கொதித்தது.. நீலிமலைக் காட்டுக்குள் ரவிச்சந்திரன் வடிவமைத்திருக்கும் மரக்குடிலைப் பற்றி அறிவாள்.. ரவிச்சந்திரன் வெளிநாட்டு நண்பர்களும் தொழில ஒப்பந்தந்திற்காக வருகை தருபவர்களும் அந்த மரக்குடிலில் மயங்கித் தங்கியிருந்து விட்டுச் செல்வதை பலர் சொல்லக் கேள்விப் பட்டிருந்தவளுக்கு அந்த மரக்குடிலில் தங்கி வரும் ஆசை ஏற்பட்டது.. அதை ரவிச்சந்திரனிடம் சொன்ன போது உனக்கெல்லாம் இப்படியொரு ஆசையா..? மரக் குடிலில் பாதம் பதிக்க உனக்கென்ன தகுதியிருக்கிறது என்ற ரீதியில் துச்சமாக ஓர் பார்வை பார்த்து விட்டு பதிலே சொல்லாமல் போய் விட்டான்.. வெகுண்ட அஜந்தா அருள்மொழி வர்மனிடம் பிராதி கொடுத்தாள்.. அவர் தாடையைச் சொரிந்து விட்டு அவரது வழக்கப்படி அவரால் ரவிச்சந்திரனைக் கேள்வி கேட்க ‘வெய்யான்’ (முடியாது) என்று கை விரித்து விட்டார்..

அவந்திகாவின் குடும்பத்தைத் தள்ளி வைத்து விட்டுத் தன் குடும்பத்தை மட்டும் அழைத்துக் கொண்டு போய் நீலி மலைக் காட்டின் மரக் குடிலைக் காட்டினான் ரவிச்சந்திரன்.. இரண்டு

நாள் அங்கு தங்கி ஓய்வெடுத்து விட்டு வந்த வீணாவும், ரம்ய மாலினியும் அவர்களுக்குள் வர்ணித்துக் கொண்ட மரக்குடிலின் அழகில் ஏக்கம் கொண்ட அஜந்தா அருள்மொழிவர்மனிடம் முறையிட்டாள்..

“ஆ மரக்குடிலுக்கு ஞான் போகலை கொச்சு மோளே..” என்று சமாதானம் செய்வித்தார் அவர்..

“பாட்டி..” யாழினியிடம் கண்ணைக் கசக்கினாள்..

“எனிக்கு முட்டிவலி கொச்சுமோளே.. ஞான மல ஏறல..” என்று யாழினி கழன்று கொள்ளப் பார்த்தாள்..

“தாத்தா, பாட்டிக்குத்தான் வயசாகிருச்சு... நீலிமலைக் காட்டில ஏற முடியாது.. எனிக்கென்ன பாட்டி..? ஞான் ஏறலாமல்லோ..? ரவியத்தான் ரம்ய மாலினியை விளிச்சுட்டுப் போயி.. கூட என்னியும் விளிச்சுட்டுப் போயிருக்கலாமல்லோ..?” யாழினியை விடாப்பிடியாக நிறுத்தி வைத்துக் கண்ணீரும் கம்பலையுமாக பெறுமினாள் அஜந்தா..

யாழினியின் மனம் துயர் கொண்டது.. பேத்தியின் கண்ணீர் அவள் மனதில் வலியை உண்டாக்கத்தான் செய்தது.. ஆனாலும் அவளால் என்ன செய்ய முடியும்..?

அஜந்தா பொருமித்தான் அவளையும் அழைத்துச் செல்லலாமே என்று ரவிச்சந்திரனிடம் யாழினி சிபாரிசு செய்ய வேண்டுமா..? அவள்தான் ஏற்கனெவே அதைச் செய்து விட்டாளே... ரவிச்சந்திரன் குடும்பத்துடன் நீலிமலை மரக்குடிலுக்கு கிளம்பிய போதே யாழினி வினவி விட்டாள்.

“நிண்ட அப்பச்சி (அத்தை) குடும்பத்தை விளிக்கலையோ..?” என்று..

“இல்லை பாட்டி..” முகம் இறுக பதில் சொன்னான் ரவிச்சந்திரன்..

“எந்தா பறயுனு ரவி..? ஈ தரவாடில நிண்ட அப்பச்சியும், அம்மாவனும் குடும்பத்தோட இரிக்கறப்ப.. நிண்ட குடும்பம்ன்னு தனிச்சுப் போகிறது நன்னாயிட்டே கொச்சு மோனே..?”

“என் குடும்பம்ங்கிறது என்னோட தாத்தா, பாட்டி, அம்மா, அப்பா, தங்கை மட்டும்தான்.. நாளைக்கு வொய்ஃபுன்னு ஒருத்தி வந்து எனக்குக் குழந்தைகள் பிறந்தால் அவளும் என் குழந்தைகளும் என் குடும்பத்தில சேருவாங்க.. மத்தபடி அத்தை குடும்பத்துக்கு அடைக்கலம் கொடுக்கலாம்.. அவங்க குடும்பத்தை என் குடும்பமா

நினைக்கிற அளவுக்கு பெரிய மனசு எனக்கு இல்லை பாட்டி.. ஷமிக்கனும்..”

மன்னிப்புக் கேட்டபடி மனதில் இருப்பதை மறைக்காமல் சொல்லி விட்ட பேரனிடம் யாழினியால் என்ன சொல்லி வாதாட முடியும்..? ரவிச்சந்திரன் தன்னுடைய குடும்பத்தைப் பற்றிச் சொல்லும் போது தாத்தா, பாட்டியென்று அவளையும் யாழினியையும் முதல் ஆள்களாக இணைத்துச் சொன்னதே மரியாதைக்குளீய பெரிய விஷயம்.. அதை கெடுத்துக் கொள்வதா..? ஆனாலும் மனது கேட்காமல்...

“பட்ஷே.. கொச்சு மோனே..! அஜந்தா சின்னப் பெண்ணல்லோ..? ஆ மனுஷிக்கும் நிண்ட மரக்குடிலக் காண வேண்டுமெண்டு ஆக்ரஹாம் இருக்குமல்லோ..? அஜந்தாவை மட்டும் விளிச்சுட்டுப் போயி கொச்சு மோனே..” என்று கெஞ்சத்தான் செய்தாள்..

“முடியாது பாட்டி..” ரவிச்சந்திரன் நிர்தாட்சண்யமாக மறுத்து விட்டான்..

“என் குடும்பத்துக்காகத்தான் வயநாட்டு அரண்மனைக்கு வந்து போகிறேன்.. இங்கே இருக்கிறப்பவே அத்தை குடும்பத்தைப் பார்த்தா எரிச்சல் எரிச்சலா இருக்கு..

அவங்களும் அறிந்து நடந்துக்க மாட்டேங்கிறாங்க.. கடுப்பைத்தான் கிளப்பறாங்க.. அஜந்தா ஒருத்தி போதும்.. அத்தையோட மொத்தக் குடும்பத்துக்கும் அவ ஈடு கட்டிருவா.. எந்த நேரம் அறைஞ்சு வைப்பேனோன்னு பல்லைக் கடிச்சுக்கிட்டு இருக்க வேண்டியதாய் இருக்கு.. நூத்துக்கணக்கான ரூம்கள் இருக்கிற அரண்மனையிலேயே இந்தப் பாடுன்னா.. சிங்கிள் பெட்ரூமோட இருக்கிற வுட் - ஹவுஸிலே எனக்கு மூச்சே முட்டிரும்.. உங்களைக் கையெடுத்துக் கும்பிடறேன்.. உங்க மகள் குடும்பத்தை நீங்க மட்டும் சீராடுங்க.. என் தலையில் கட்டப் பார்க்காதீங்க.. என்னால் சுமக்க முடியாது..”

ரவிச்சந்திரன் தலைக்கு மேல் கைகளை குவித்ததில் எதுவும் பேச முடியாமல் வாயடைத்துப் போய் விட்டாள் யாழினி.. இதை அஜந்தாவிடம் சொல்ல முடியுமா..? அதனால்.. “ஆலோசிக்கனும் அஜந்தா.. ஆ மரக் குடிலில பெட்ரூம் ஒந்நுதானம்.. ஸ்தலம் போதாதில்லோ..?” என்று நொண்டிச் சமாதானம் சொன்னாள்..

என்னதான் முறையிட்டாலும் ரவிச்சந்திரனுக்கு எதிராக அஜந்தாவின் சொல் அம்பலம் ஏறாது என்பதை புரிந்து வைத்திருந்த அஜந்தா தோல்வியைத் தழுவியவளாக உலா

வந்தாள்.. ரவிச்சந்திரன் குடும்பத்துடன் திரும்பி வந்ததும் நீலிமலைக்காட்டுக்குத் தனித்துப் பயணப்பட்டுக் குடிலைத் தேடினாள்.. மரங்களுக்கு இடையே மரக்கிளைகளின் இலைகளின் மறைவில் மறைந்திருந்த அந்த மரக்குடிலை அவளால் கண்டு பிடிக்கவே முடியவில்லை.. அந்த மரக்குடிலைப் பார்த்தவர்கள் அதன் அழகைப் பற்றி வியந்து புகழும் போது இவள் வியர்த்துப் புழுங்குவாள்.. அப்பேற்பட்ட மரக்குடிலைப் பார்க்கக்கூட முடியவில்லையே என்று ஆக்ரோஷப் படுவாள்..

அந்த மரக்குடில் இருக்கும் நீலிமலைக் காட்டுக்கு மீன் முட்டி அருவிகளைக் காட்டுகிறேன் என்று நந்தினியை ரவிச்சந்திரன் அழைத்துக் கொண்டு போயிருக்கிறான் என்றால் என்ன அர்த்தம்..?

அந்த மரக்குடில் இருக்கும் நீலிமலைக் காட்டுக்கு மீன் முட்டி அருவிகளைக் காட்டுகிறேன் என்று நந்தினியை ரவிச்சந்திரன் அழைத்துக் கொண்டு போயிருக்கிறான் என்றால் என்ன அர்த்தம்..?

அந்த மரக்குடிலை அவளுக்குக் காட்டி அவளுடன் அங்கே தங்கியிருக்கப் போயிருக்கிறான் என்றுதானே அர்த்தம்..

“எனிக்குக் கிட்டாத வுட்-ஹவுஸ் ஆ நந்தினிக்கு கிட்டுமோ அம்மே..?”

அவந்திகாவுக்குத் தலையில் அடித்துக் கொள்ளலாம் போல இருந்தது.. ரவிச்சந்திரன் கிடைத்து விட்டால் மரக்குடில் மட்டுமா கிடைக்கும்..? வயநாட்டு அரண்மனையும்.. சங்கிலித் தொடர்களாக உலகத்திலுள்ள அனைத்து மாநகரங்களிலும் வியாபித்திருக்கும் ‘யாழ்’ ஹோட்டல்களும்.. உலக நகரங்களில் உள்ள வீடுகளும்.. சேரளம் எஸ்டேட்டும், எக்ஸ்போர்ட் கம்பெனிகளும்.. ரப்பர், சணல் பேக்டரிகளும் என்று கணக்கு வழக்கில்லாத, கங்கு கரை காண முடியாத சொத்துக்களும் சேர்ந்தல்லவா கிடைக்கும்..?

அதை விட்டு விட்டு நீலிமலைக் காட்டின் மரக் குடிலுக்காக அவந்திகாவின் மகள் பரிதவிக்கிறாளே... இதை என்னவென்று அவந்திகா சொல்வாள்..? எங்கே போய் முட்டிக் கொள்வாள்..?

“நினக்கு பிராந்தோ மோளே..? ஈ தரவாட விட ஆ மரக்குடில் வளர சேலோ..? ரவி நிண்ட கணவனா ஆனா ஆ மரக்குடில் எந்தா மோளே.. ஈ திவ்ய தேசம் முழுசும் நினிக்குச் சொந்தமாயிண்டும் மோளே.. கேட்டோ..”

“எங்ஙன அம்மே..? ஞான் தடுக்கில் பாய்ஞ் ஆ ரவி கோலத்தில போயி.. ஞான் படிஞ்ஞாறில் (மேற்கில்) பயணம் செஞ் ரவி கிழக்கில பயணம் செய்யும்.. ஞான் இடத்துண்டா ரவி வலத்துண்டு பறஞ்ம்..”

“பேடிக்க வேணாம் மோளே.. தள்ளு மேல தள்ளு தள்ளினா அம்மிக் கல்லும் நகருமல்லோ..”

என்னத்தை அடி மேல் அடியடித்தாலும் ரவியென்னும் அம்மிக்கல் நகராது என்று பெருமூச்சு விட்டாள் அஜந்தா.. அவன்தான் பெயர்க்க முடியாத இமயமலையாய் இருக்கிறானே.. அவனை அசைக்கக் கூட முடியாது.. இதில் எப்படி அவள் நகர வைப்பதாம்..?

அவந்திகாவிடம் புலம்புவதால் யாதொரு பயனும் இல்லை என்று கொதித்த மனதுடன் தாயின் அறையை விட்டு வெளியேறித் தன் போக்கில் யோசித்தபடி நடந்த அஜந்தாவின் மீது கலகலவென சிரித்த வண்ணம் ஓடி வந்த நந்தினி மோதி விட்டாள்.

‘ஆரானு இது..?’

செம கடுப்புடன் விலகிப் பார்த்த அஜந்தாவிற்கு நந்தினியைக் கண்டதும் மேனியெங்கும் மிளகாயை அரைத்துப் பூசி விட்டதைப் போலப் பற்றி எரிந்தது.

“எந்தா தைரியம்..” என்று காண்டானாள்..

அஜந்தாவின் மீது மோதி விட்டதில் நந்தினியின் கை, கால்கள் வெடவெடக்க ஆரம்பித்து விட்டன..

‘கடவுளே..! இவ மீதா மோதிட்டேன்..? இவ சும்மாவே சாமியாடுவாளே.. இப்ப வேப்பிலையைக் கையில் கொடுத்துட்டேனே..’

கன்னத்தில் போட்டுக் கொள்ளாத குறையாக..

“ஐ ஆம் ஸாரி அஜந்தா.. பார்க்கலை..” என்று பவ்யமாக மன்னிப்புக் கேட்டாள்..

அஜந்தா அவளைக் கொத்து புரோட்டா போடாமல் விட்டு வைக்க வேண்டுமே என்று நந்தினியின் மனம் அடித்துக் கொண்டது..

அத்தியாயம் 109

நந்தினியை உச்சி முதல் உள்ளங்கால்வரை ஆராய்ச்சி பார்வை பார்த்தாள் அஜந்தா.. அவளது உஷ்ணப் பார்வையில் நடு நடுங்கிப் போனாள் நந்தினி.. எதற்காக இப்படியொரு பார்வை பார்க்கிறாள் என்று பதைத்தது அவள் மனது.. தெரியாமல் மோதி விட்டதற்கா இப்படியொரு லேசர் பார்வையை பார்க்கிறாள்..?

"குஷி அதிகமா இருக்கும் போல..? தலை கால் புரியாம ஓடி வர்ற..?" தெளிவான தமிழில் பேசினாள் அஜந்தா..

"அட..! தமிழில் பேசறிங்க.." மோதி விட்டதை மறந்து ஆச்சரியப் பட்டாள் நந்தினி..

"ஏன்..! நான் தமிழில பேசுவேன்னு உனக்குத் தெரியாதா..? உனக்கு மட்டும்தான் தமிழ் தெரியுமா..?"

"உங்களுக்கும் தெரியும்ன்னு தெரியும்ங்க.. என்னிடம் ஃபர்ஸ்ட் ஃபர்ஸ்ட் பேசறப்ப தமிழில்தான் பேசினிங்க.. அதுக்கப்புறம்தான் மலையாளத்தில சம்சாரிக்க ஆரம்பிச்சீங்க.."

“உன்னைத் தமிழில் காய்ச்சினா கண்டு பிடிச்சிருவ பாரு.. அதான் மலையாளத்தில தாளிக்கலாம்ன்னு மலையாளத்தில சம்சாரிச்சேன்..”

“ஈஸிட்..? நான் கண்டு பிடிச்சிருவேன்னு பயந்தீங்களா..?”

“பயமா..? உன்னிடமா..? யார் யாரிடம் பயப்படுவது..? ஹ..” அஜந்தா வாயைக் கோணிய கோணலில்..

‘மெதுவாய்.. பல் சுளுக்கிக்கப் போகிறது..’ என்று சொல்லத்தான் ஆசைப்பட்டாள் நந்தினி..

ஆசைப்படுவதையெல்லாம் சொல்லி விட முடிகிறதா என்ன..? அஜந்தாவைப் பார்த்தாலே அவளது அப்பாவின் நினைவு வந்து பயமுறுத்தியது.. யோகானந்த னின் மகளிடம் வம்பு வழக்கு வைத்துக் கொள்வது உசிதமல்ல என்று அவளது அறிவு எச்சரித்தது.. மாநிலம் விட்டு மாநிலம் வந்து யோகானந்தனைப் போன்ற பயங்கரவாதியின் பகையைச் சம்பாதித்துக் கொள்வது சாலச் சிறந்ததா..? அஜந்தா எப்படி வம்புக்கு வந்தாலும் வெற்றிகரமாக புறமுதுகு காட்டி விடவேண்டும் என்ற தீர்மானத்தை மனதுக்குள் நிறைவேற்றிய நந்தினி..

“நான் அந்த மீனிங்கில சொல்லலைங்க..” என்று வெள்ளைப் புறாவை பறக்க விட்டாள்..

“வேற எந்த மீனிங்கில சொன்ன..?”

“எந்த மீனிங்கிலயும் சொல்லலைங்க..”

“மீனிங்கே இல்லாம சொல்லுவியா..? அந்த அளவுக்கு தத்தியா நீ..? போயும் போயும் ஒரு மக்கிற்கா என் அத்தான் வேலை கொடுத்து வீட்டில் கொண்டு வந்து வைத்திருக்கிறார்..?”

அஜந்தா ‘என் அத்தான்..’இல் மட்டும் அழுத்தம் கொடுத்ததில் நந்தினியின் ரத்த அழுத்தம் எகிறியது..

‘அது என்ன ‘என்ன்ன.. அத்த்தான்..’..? சாதாரணமாக அத்தான்னு சொல்ல மாட்டாளாமா..?’

“அத்தான் இப்படித்தான்.. யார் யாரை எங்கே வைக்கனும்னு அவருக்குத் தெரியாது..”

இகழ்ச்சியாகச் சொன்ன அஜந்தாவின் பார்வை முள்ளாக நந்தினியைக் குத்தியது.. உண்மையெல்லாம் வீட்டுக்கு வெளியே நிறுத்தாமல் வீட்டுக்குள் கொண்டு வந்து சீராட்டுகிறானே என்று சொல்லாமல் சொல்லி சினந்தது..

நந்தினியின் சுயமரியாதை காயம் பட்டது... இது போன்ற பேச்சுக்களைக் கேட்டவளல்ல அவள்.. மேகநாதனின் மகளாக தஞ்சையிலும், பூர்விக கிராமத்திலும் உயர்நிலையில் இருந்து பழகியவளுக்கு அஜந்தாவின் பேச்சையும், பார்வையையும் தாங்கிக் கொள்ள முடியவில்லை..

அடிபட்ட மனதின் வேதனையை நந்தினியின் விழிகளில் கண்டு விட்ட அஜந்தாவுக்குள் குரூர திருப்தி உண்டானது.. அடுத்த அடியை அடிக்க அவள் தயாரானாள்..

"உன்னைப் போல வருகிறவங்கள் எல்லாம் இப்படித்தான்.."

அஜந்தாவின் உதாசீனப் பார்வையில் உருக்குலைந்தாள் நந்தினி.. இப்படித்தான் என்பதற்கு என்ன பொருள் என்று தெரியாமல் துணுக்குற்றாள்..

'நான் யாரைப் போல வந்திருக்கேன்..? இப்படித்தான்னா எப்படி..?'

"வேலைக்குன்னு வருவாங்க.. அப்படியே அத்தான்கிட்ட ஒட்டி உரசி மயக்கிப் பணத்தைக் கறப்பாங்க.. ஆமாம்.. உனக்கு எவ்வளவு பணம் கொடுத்தார்..?"

“என்னது..??...”

ஸ்தம்பித்துப் போன நந்தினியின் அதிர்வைக் கண்டு கொள்ளாததைப் போன்ற பாவனையுடன் பேச்சைத் தொடர்ந்தாள் அஜந்தா.. அவளால் பார்க்கக் கூட முடியாத நீலிமலையின் மரக்குடிலில் ரவிச்சந்திரனுடன் தங்கி வந்திருக்கும் தவறுக்காக நந்தினியை சின்னா பின்னமாக்கி விடும் வெறியில் இருந்தவள் பாவ புண்ணியம் பார்க்காமல் நந்தினியைப் பேச்சினால் சித்திரவதை செய்தாள்..

“எதுக்கு இந்த ஷாக்..? இப்படிக் கேட்டா நீ ஃபீடிங் பாட்டில கூடக் குடிக்காத பேபின்னு நான் நம்பிருவேனா..? அத்தானுக்கு இதுதான் வழக்கம்..”

“எது..?”

“அவர்கூட ஒட்டி உரசுகிற பெண்களை நீலிமலைக் காட்டு கெஸ்ட் ஹவுஸுக்குக் கூப்பிட்டுக்கிட்டுப் போயிருவார்.. ரண்டு திவசமோ.. மூந்நு திவசமோ.. உனக்கு இப்படிச் சொன்னா புரியாதில்ல.. ரெண்டு நாளோ, மூணு நாளோ.. என்ஜாய் பண்ணிட்டு வேணும்ங்கிர பணத்தைக் கொடுத்து கழட்டி விட்டிருவார்.. உன்னையெப்படி திரும்பவும் வீட்டுக்கு

அழைத்துக்கிட்டு வந்திருக்கார்..? யூஷுவலா அவர் இப்படிச் செய்ய மாட்டாரே..”

‘எதுக்கா..? அவன் ‘ஐ லவ் யு’ சொன்னதை நான் ஏத்துக்கிட்டு அவனுடன் என்ஜாய் பண்ணலைல்ல.. அதுக்கா கத்தான்..’ என்று கூவ வேண்டும் போல இருந்தது நந்தினிக்கு.. அடக்கிக் கொண்டாள்.. அழ வேண்டும் போல அவளது மனம் சோர்ந்தது.. அஜந்தா சொன்னதை பொய்யென்று புறம் தள்ள முடியவில்லை.. நீலிமலைக் காட்டுக்கு மீன் முட்டி அருவிகளைப் பார்த்து விட்டு வரலாம் என்றுதானே அவன் கூப்பிட்டான்..?

மரக் குடிலைப் பற்றி மூச்சுக்கூட விடவில்லையே.. இரண்டு செட் டிரஸ் எடுத்துக் கொள் என்று சொன்னது எதற்காக..? அருவிக் குளியலுக்காகவா..? இல்லையே.. மரக்குடிலில் இரண்டு நாள்கள் தங்க வேண்டும் என்பதை முன் கூட்டியே திட்டமிட்டுத்தானே அப்படிச் சொன்னான்..

‘நந்தினி.. நீ ஏமாளிடி..’ அவளது அறிவு திட்டித் தீர்த்தது..

“என்ன..? உன்கூட என்ஜாய் பண்ண முடியாம சல்லியம் வல்லதும் உண்டாகிருச்சோ..?”

“சல்லியம் வல்லதும்மா..?”

“அதான்.. தொந்தரவு ஏதும் உண்டாகிருச்சோன்னு கேட்டேன்..”

“ஒரு மண்ணாங்கட்டியும் உண்டாகலை..”

“அப்ப செமத்தியா என்ஜாய் பண்ணினீங்கன்னு சொல்லு..”

“யெஸ்..”

அழுத்தம் திருத்தமாக அஜந்தாவின் முகத்தை உற்றுப் பார்த்தபடி சொன்னாள் நந்தினி.. அஜந்தாவின் முகம் வெளிறியதில் இவள் மனதில் சந்தோஷம் மிகுந்தது..

“வாட்..?” அஜந்தா அலறினாள்..

‘கத்துடி..’ திருப்தியுடன் அஜந்தாவை ஏற இறங்கப் பார்த்தாள் நந்தினி..

‘ஒதுங்கிப் போகிறவளை இழுத்து வைத்து வம்புக்கு இழுக்கறியா..? இருக்குடி உனக்கு.. உன் அத்தானா..? உன் உரிமையை உன்னோடு வைத்துக்காம என்கிட்டப் பீற்றிக்க அலைகிறயா.. பதிலுக்குப் பதில் நான் திருப்பிக் கொடுத்தாத் தாங்கிக்குவியா..? இந்தா வாங்கிக்க.. இந்த பதில் போதுமா.. இன்னும் கொஞ்சம் வேணுமா..?’

“எதுக்காக டென்ஷன் ஆகறிங்க அஜந்தா.. ?”

“வாட் டு யு மீன்..?”

“ஐ மீன் வாட் ஐ ஸே.. நானும் பாஸும் என்ஜாய் பண்ணினோமான்னுதானே கவலைப்பட்டிங்க..? அந்தக் கவலையே உங்களுக்கு வேண்டாம்.. செமத்தியா என்ஜாய் பண்ணினோம்..”

ரசித்து நிதானமாக சொன்னாள் நந்தினி... அவளும் ரவிச்சந்திரன் நீலிமலைக் காட்டைச் சுற்றிப் பார்த்து என்ஜாய் பண்ணி ரசித்துத் திரும்பியிருப்பது உண்மைதானே.. இயற்கையை அவர்கள் ரசித்து என்ஜாய் பண்ணினார்கள் என்று சொன்னால் வக்கிர மனம் படைத்த அஜந்தா நம்பவா போகிறாள்..?

“எண்ணிடமே இப்படிச் சொல்ல உனக்கு எவ்வளவு துணிச்சல் இருக்க வேண்டும்..?”

“எடை போட்டுப் பார்க்கலை அஜந்தா.. நீங்க வேண்டும்ன்னா நிறுத்துப் பார்த்து எவ்வளவு துணிச்சல்ங்கிற புள்ளி விவரத்தைச் சரியாச் சொல்லிருங்களேன்..”

“யு.. யு.. யு..”

“ஐ ஆம் நந்தினி.. மறந்துட்டிங்களா..?”

“ஏய்ய்.. ஆப்டர் ஆல்.. நீயொரு செக்கரட்டரி..”

“ஹலோ.. செக்கரட்டரின்னா ஈஸியில்லைங்க.. எனக்காவது அந்த வேலையிருக்கு.. உங்களுக்கு என்ன வேலையிருக்கு..?”

“ஷட் அப் நந்தினி..”

“அட.. என் பெயர்கூட உங்களுக்கு நினைவிலிருக்கே.. நினைவில் வைத்துக்கிட்டா ஏய்ய், வாய்ய்ன்னிங்க..? சரிதான் போங்க.. உங்களுக்கு குறும்பு ஜாஸ்தி..”

“நோக்கு நந்தினி..”

“உங்களை நோக்கி எனக்கென்னங்க ஆகப் போகுது..? உங்க அத்தானை நோக்கினாலாவது பிரயோஜனமிருக்கும்..”

“இது வயநாடு நந்தினி.. உன் ஊரில்ல..”

“எனக்கு இந்த ஊரே வேண்டாம்.. வயநாடு என் நாடுன்னு நான் சொன்னேனா..?”

“அப்ப உன் ஊரைப் பார்த்து ஓடிப் போயிரு..”

“இல்லேன்னா..?”

அஜந்தாவிடம் திமிராக கேட்ட நந்தினியிடம் தெரிந்த நிமிர்வில் அஜந்தாவின் சினம் தலைக்கு ஏறியது.. இது போன்ற நிமிர்வு நந்தினியிடமிருந்து வெளிப்படும் என்று அவள் எதிர்பார்க்கவில்லை என்பதால் திகைத்துப் போனாள்..

“பாருங்க அஜந்தா.. நான் என் வழியில் போய்கிட்டு இருக்கேன்.. ஊடே மறிச்சுக் கண்டபடி பேசினிங்கன்னா நான் அதுக்கு மேலே பேசிருவேன்.. அப்புறம் உங்க விருப்பம்.. பேச்சுக் கேட்கனும்னு நீங்க ஆசைப்பட்டா நான் என்ன செய்கிறது..?”

அயர்ந்து நிற்கும் அஜந்தாவைப் பொருட்படுத்தாமல் தன் அறைக்கு விரைந்து விட்டாள் நந்தினி..

‘அப்பாடா..’ என்ற அயர்வுடன் கதவைத் திறந்தவளுக்கு அஜந்தாவின் முகத்தில் விழித்து விட்டோமேயென்று அத்தனை வெறுப்பாக இருந்தது..

‘இவளை எதிர்க்காலே பார்க்க வேண்டி வரும்ன்னு தெரிஞ்சிருந்தா மாடிப்பக்கம் வராம கீழேயே பம்மியிருப்பேன்..’

அக்கடா என்று அறைக்கதவை அடைக்கப் போனவளை..

“அம்மே..” என்ற குரல் தடுத்து நிறுத்தியது..

“ஓமனா..?”

“ஞான் அம்மே...”

“அம்மேன்னு கூப்பிட்டா உன்னை டைவர்ஸ் பண்ணிருவேன்..”

“ஒழி முறியா..?”

“ஒழியவு இல்ல.. முறியவும் இல்ல.. டைவர்ஸ்..”

“அதானு ஒழிமுறி அம்மே..”

“ஓ.. ஒமுமுறின்னா மலையாளத்தில டைவர்ஸா..?”

“அதே அம்மே..”

“அம்மேன்னா அவ்வளவுதான்.. டூ விட்டிருவேன்..”

“நந்தினி மேடம் என்னண்ட டூ விடுமோ.. ?”

“அஃது.. இப்ப கேட்கிறதுக்கு எவ்வளவு நல்லாயிருக்கு..”

“ஒழி முறியெல்லாம் கணவனும் பார்யாளும் செய்து கொள்றதல்லோ.. நந்தினி மேடம் எங்ஙன ஒழிமுறியுமாம்..?”

“எங்ஙனவும் ஒழி முறிச்சுருவேன்.. நீ அதை முறிக்காம அப்படியே பற்றி விடு ஓமனா..”

“நந்தினி மேடத்திண்ட இஷ்டம் ஈ ஓமனாக் குட்டியோட இஷ்டமானு..”

“புல்லரிக்குது போ..”

“எந்தா..?”

“ரோமாஞ்சனம் உண்டாகிருச்சுன்னு சொன்னேன்.. ஆமாம்.. இப்பத்தானே போர்டிகோவில் வழி மறிச்சு சம்சாரிச்ச..? பேசி முடிச்சு ஓய்ந்து போய் ரூமுக்கு வந்தா பின்னாடியே துரத்திக்கிட்டு வந்து நிற்கிறயே.. உனக்கு என்னதான் வேணும்..?”

“சாய் கொண்டு வரட்டே..?”

“இந்தக் கேள்வியை மட்டும் அலுக்காம கேட்டிருவியே.. உனக்கு போரடிக்காதா..? ம்ஹூம்.. மத்த சமயத்தில எப்படியோ.. இப்ப எனக்கு டீ குடிச்சாத் தேவலாம் போல இருக்கு ஓமனா..”

அஜந்தாவுடன் மாரடித்ததில் தலை வேதனை கொண்டவளாக தலையைப் பிடித்தபடி சொன்னாள் நந்தினி..

“ஒந்நு நிமிசா மேடம்..” ஓமனா பறந்தோடினாள்..

‘எனக்கு சாய் புகட்டறதில இவளுக்கு எம்புட்டு சந்தோஷம்..’ நந்தினி தலையை ஆட்டி தோள்களைக் குலுக்கி விட்டுக் கட்டிலில் சரிந்தாள்.. நாசி டீ வாசனையை உணர்ந்ததில்..

“அதுக்குள்ளே டீ கொண்டு வந்துட்டியா ஓமனா..?” என்று ஆச்சரியமானாள்..

“நந்தினி மேடத்துக்கு சாய் வேண்டும்ன்னு பறஞ் .. ஞான் வைகும் செய்யாம வந்து..”

“வைகும்..?”

“லேட்டுன்னு பறஞ் ..”

“ஓ.. வைகும் மீன்ஸ் லேட்..”

புதிதாக ஓர் மலையாள வார்த்தையை அறிந்து கொண்ட ஆர்வத்துடன் தலையை அசைத்தாள் நந்தினி.. ஓமனாவின் பிரேமம் கலந்த பாசம் அஜந்தாவால் புண் பட்டிரு ந்த அவள் மனதிற்கு இதமாக இருந்தது..

“தேங்க்ஸ் ஓமனா..” மனதாரச் சொன்னாள்..

“நன்னின்னு பறயாணாம் மேடம்.. இவ்விடத்தே நந்தினி மேடம் வந்ததில ஞான் சந்தோஷமாயிட்டு.. ஆ சந்தோஷத்த விட வள சந்தோஷம் எதுண்டு மேடத்திக்குத் தெரியுமோ..?”

“எது ஓமனா..?”

“அஜந்தா அம்மேயிண்ட நிங்க பதிலுக்குப் பதில் சம்சாரிச்சது.. கேட்டோ.. ஈ தரவாடில அஜந்தா அம்மேயிண்ட இவ்விதத்தில எவரும் சம்சாரிச்சதில்லயல்லோ.. ஞான் சந்தோஷமாயிட்டு..” ஓமனாவின் முக மலர்ச்சியில் பாவம் என்று பரிதாபப்பட்டுப் போனாள் நந்தினி..

நந்தினியையே இகழ்ச்சியாகப் பேசும் அஜந்தா ஓமனாவை எந்த அளவுக்குப் பேசியிருப்பாள்..?

அத்தியாயம் 110

அன்று எஸ்டேட்டிற்குப் போக வேண்டிய தில்லையென்று ரவிச்சந்திரன் சொல்லி விட்டதால் விஷ்ராந்தியாக தோட்டத்தில் வலம் வந்து கொண்டிருந்தாள் நந்தினி.. மனம் முழுவதும் நீலிமலைக் காட்டில் கழித்த இரண்டு நாள்களின் நினைவுகள்.. நினைத்தாலே அந்த நினைவுகள் இனித்து வைத்ததில் எதற்காக அந்த இனிப்பு உள்ளத்தில் மேவுகிறது என்று மருண்டாள் நந்தினி.. சுற்றுலா போய் வந்தால் இயற்கையழகு மட்டும்தானே மனதினில் தேங்கும்...? இங்கே என்னடாவென்றால் ரவிச்சந்திரனுடன் அவள் கழித்த மணித்துளிகளின் நினைவுகளே முதன்மையாக முன்னால் வந்து நின்று தொலைக்கின்றனவே..

முட்டி வலித்ததில் அருகிலிருந்த சாய்வு மர பெஞ்சில் சாய்ந்து அமர்ந்து கால்களை நீட்டி நீவி விட ஆரம்பித்தாள்.. மலையேறிப் பழக்கமில்லாத காலிரண்டும் கடுகடுத்து வலித்தன.. முட்டி பெயர்ந்து விட்டதோ என்று நினைக்கும் அளவிற்கு வலி இருந்தது.. முதல்நாள் மலையிறங்கும் போது தெரியாத வலி இரவில் படுத்தி எடுத்து விட்டது.. விண் விண்ணென்று தெறித்த வலியைத் தாங்க முடியாமல் அரற்ற

ஆரம்பித்து விட்டாள்.. சாப்பிடக் கூட அவள் கீழே இறங்காததில் ரவிச்சந்திரன் அவளுடைய அறைக்கு வந்து விசாரித்தான்..

“வாட் ஹேப்பன்..? அஜந்தாவெல்லாம் ஒரு ஆள்ன்னு அவ எதையோ சொன்னாள்ன்னு சாப்பிட வராம ரூமிலே அடைந்து கிடக்கிறயா..? இப்படியிருந்தா அவளுக்கு குளிர் விட்டுப் போயிரும்.. கமான்.. க்விக்.. வேக்-அப்..”

அவளது கைகளைப் பிடித்து இழுக்க முயன்றான் ரவிச்சந்திரன்.. அந்த வேதனையிலும்..

“இதுவே எங்க ஊரா இருந்திருக்கனும் பாஸ்.. வயசுப் பொண்ணு கையைப் பிடிச்சு இழுத்திட்ட குற்றத்துக்காக பஞ்சாயத்தில நிறுத்தி வைச்சிருவாங்க..” என்று மிரட்டினாள் நந்தினி..

“ஓ..” அழகாக உதடுகளைக் குவித்து அவளைக் கிறங்கடித்தான் அந்த மன்மதன்..

“பஞ்சாயத்தில நிறுத்தி என்ன செய்வாங்களாம். .?”

“விசாரிப்பாங்க..”

“விசாரித்து..?”

“தீர்ப்புச் சொல்லுவாங்க..”

“யு மீன் ஜட்ஜ்மெண்ட்..”

“யெஸ் பாஸ்..”

“அப்படியே கொள்ளைக் கூட்டத் தலைவனாக்கு.. என்ன ஜட்ஜ்மெண்டைக் கொடுப்பாங்களாம்..?”

“வேற என்ன ஜட்ஜ் மெண்டைச் சொல்லுவாங்களாம்.. கையைப் பிடிச்சு இழுத்தவன் அந்தப் பொண்ணோட கழுத்தில தாலியைக் கட்டனும்ங்கிற ஜட்ஜ் மெண்ட்தான்..” தன் போக்கில் சொல்லிக் கொண்டிருந்தவள் அவன் கண்கள் மின்ன..

“இண்ட்ரெஸ்டிங்..” என்று சொன்ன பின்னால்தான் சுதாரித்தாள்..

என்னதான் சுதாரித்தாலும் அது காலம் கடந்த சுதாரிப்புத்தானே.. சொன்ன வார்த்தைகள் சொல்லப் பட்டவைதானே.. அவற்றைத் திரும்ப வாங்க முடியுமா..?

“வாவா.. உன் ஊருக்குப் போகலாம்..”

“எதுக்கு பாஸ்..! அந்த பெல்ட் மன்னன் தலையில என்னைக் கட்டி விடறதுக்கா..?”

“பெல்ட் மன்னனைப் பத்திப் பேசாதேன்னு சொன்னேன்..” கோவைப் பழமாக அவன் கண்கள் சிவந்ததில் கோந்து போடாமலே நந்தினியின் இதழ்கள் இறுக்கமாக ஒட்டிக் கொண்டன..

வரும் வழியில்தான் அறை வாங்கியிருக்கிறாள்.. மறுபடியும் அறை வாங்க அவள் உடலில் தெம்பில்லை.. நீலிமலையில் ஏறி இறங்கியதில் முட்டிவலி வேறு கொலையாய் சொன்று கொண்டிருக்கிறது.. இதில் அறை வாங்கும் வலியும் சேர்ந்து கொள்ள வேண்டுமா..?

“ஓகே பாஸ்.. பேசலை..” சமர்த்துப் பெண்ணாக உடனடியாக சரண்டரானாள்..

“அஃது.. உன் ஊருக்குப் போயி உன் கையைப் பிடித்து இழுத்தேன்னா என்னையும் பஞ்சாயத்துக் கோர்ட்டில நிறுத்தி என்கொயர் பண்ணி உன்னையே நான் மேரேஜ் பண்ணிக்கனும்னு ஜட்ஜ்மெண்ட் கொடுப்பாங்கள்ல..? ஹௌ இஸ் இட்..?”

சூப்பர் என்று சொல்லத்தான் தோன்றியது நந்தினிக்கு.. அதைச் சொல்லாமல்..

“விளையாடாதீங்க பாஸ்..” என்றாள்..

“விளையாட்டா..?”

அவள் விழிகளையே உற்றுப் பார்த்தான் ரவிச்சந்திரன்.. அவளை விழுங்கி விடுவதைப் போல ஆழ்ந்து அவன் பார்த்து வைத்ததில் மனம் படபடக்க முகத்தைத் திருப்பிக் கொண்டாள் நந்தினி..

‘இப்படிப் பார்க்காதேடா..’ என்று மனம் அரற்றியது..

“என் காதல் உனக்கு விளையாட்டாத் தோணுதில்ல..?” குற்றம் சாட்டினான் ரவிச்சந்திரன்..

இதற்கு என்ன பதிலைச் சொல்வாள்.. அவன்தான் அவளுடைய உணர்வுகளுடன் விளையாடுகிறான் என்று நொந்து போனாள்.. அறியாப் பெண்ணின் மனதில் மோகத்தீயை மூட்டி அதில் குளிர் காய நினைக்கிறான்.. வயநாட்டில் குளிர் காய நந்தினிதான் கிடைத்தாளா..? கொடுமையிலும் கொடுமை..

“எனக்குத் தெரியலை பாஸ்..” அவள் முணுமுணுத்தாள்..

“என்ன தெரியலை..?” அவன் எரிந்து விழுந்தான்..

“அஜந்தாவெல்லாம் ஒரு ஆளான்னு நீங்க கேட்கறிங்க.. நீங்க அவளோட ஆள்ன்னு அவ சொல்கிறா.. இதில எது நிஜம் பாஸ்..?”

அறியாப் பெண்ணைப் போல அவள் இமைகளைக் கொட்ட அவன் செல்லமாக ஒரு கொட்டை வைத்து விட்டு..

“பேச்சை மாத்தற..?” என்று புருவங்களை உயர்த்தி அவளை மயக்க யத்தனித்தான்..

அவனது புருவங்கள் இரண்டும் மாறன் விடும் மலர்க்கணைகளைத் தொடுக்கும் மன்மதனின் வில் என்று தோன்றியது நந்தினிக்கு.. அவளை கிளின் போல்டாக்கி வீழ்த்த அவன் பலத்த பிரயத்தனங்களை மேற் கொள்ள வேண்டியதில்லை.. ஆழ்ந்த பார்வையுடன் புருவங்களை உயர்த்தி இறக்கினாலே போதும்.. அந்த வசீகரனின் காலடியில் அவள் மயங்கிச் சரிந்து விடுவாள்..

“பேச்சை மாத்திட்டாலும்..” அவள் நொடித்தாள்..

“இப்படிக் கழுத்தை வெட்டிப் பேச எங்கே கத்துக்கிட்ட..?”

“அதுவா பாஸ்.. எங்க ஊரில இதுக்குண்ணே ஒரு யுனிவர்சிட்டி இருக்கு பாஸ்.. அங்கே கத்துக்கிட்டேன்..

போதுமா..? பை தி வே.. உங்க ஆசை அத்தைமகள் அஜந்தா செகண்டுக்கொருதரம் இதே போல கழுத்தை வெட்டறாளே.. அவ எந்த யுனிவர்சிட்டியில பி.எச்.டி பண்ணி பட்டம் வாங்கினான்னு கேட்டுச் சொல்கிறீங்களா..?''

''ஏன்..? நீயே கேளேன்.. உனக்கென்ன நான் மீடியேட்டரா..?''

''அவகிட்ட நான் கேட்கிறதா..? ஏன் பாஸ் இந்த கொலைவெறி..?''

''அடங்க மாட்டேங்கறியே.. அதென்ன ஆசை அத்தை மகள்..? அத்தை மகள்ன்னு மட்டும் சொல்லு.. ஆசை தோசையெல்லாம் வேண்டாம்..''

ரவிச்சந்திரன் கடுப்பாக முகத்தை வைத்துக் கொண்டதில் நந்தினியின் மனதில் தென்றலடித்தது.. அது ஏனென்று தெரியாமல் திகைத்தாள் அவள்..

''இப்ப அவ பேச்சு எதுக்கு..?''

''பேசினது நானில்ல..''

“நான்தான் பேசினேன்.. ஒப்புக்கறேன்.. ஆசையாய் பேசலை. அவளுக்குப் பயந்துக்கிட்டு ரூமிலே அடைஞ்சு கிடக்கறியே.. இது சைல்டிஷா இல்லை..”

“அவளுக்குப் பயந்து ஒண்ணும் ரூமில அடைஞ்சுக்கலை..”

“பின்னே..? எனக்குப் பயந்து ரூமுக்குள்ள பதுங்கறியா..?” ரவிச்சந்திரனின் மேய்ச்சல் பார்வை அவளது உடலெங்கும் ஊர்ந்தது.. நந்தினியின் வயிற்றில் பட்டாம் பூச்சிகள் பறந்தன.. இதமான அந்த இம்சையைத் தாங்க முடியாமல் நெளிந்தாள்..

“ஏன் பாஸ், நீங்க வேற..”

“நான் ‘வேற’ன்னு சொல்றியா..?”

“ஹைய்யோ பாஸ்.. இது வேற ‘வேற’பாஸ்.. நீலிமலைக் காட்டில ஏறி இறங்க வைச்சிருக்கீங்க.. முட்டி பெயர்ந்து வலியாய் வலிக்குது..”

நந்தினி கால்களைத் தடவிக் கொண்டு வேதனையுடன் சொன்னாள்..

“ஓ.. அதை மறந்துட்டேனில்ல..”

ரவிச்சந்திரன் அவள் பக்கத்தில் கட்டிலில் உட்கார்ந்து விட நந்தினிக்குத் 'திக்' கென்று ஆகி விட்டது.. அவசரமாக வாசல் கதவைப் பார்த்தாள்.. அது பூட்டப் பட்டிருந்தாலும் தாழிடப் படவில்லை.. எந்த நொடியிலும் எவரேனும் உள்ளே வந்து விடலாம்..

'இப்படிக் கட்டிலில வந்து உட்கார்ந்திருக்கிறானே..' பதைத்தாள் நந்தினி..

அவனை எழுந்து கொள் என்று சொல்லவும் முடியவில்லை... மனதினில் விகல்பமில்லாமல் அவளது கால் வலியைப் பரிசோதிக்கப் பக்கத்தில் உட்கார்ந்திருப்பவனிடம் என்னவென்று சொல்வது..?

இங்காவது பக்கத்தில் உட்கார்ந்துதான் இருக்கிறான்.. நீலிமலைக் காட்டில் ஒரே கட்டிலில் அவள் பக்கத்தில் படுத்துறங்கினான்.. அங்கே வராத பதட்டம் இங்கே வந்து தொலைக்கிறதே.. அங்கே எவரும் இல்லாத தனிமை.. இங்கே அப்படியில்லையே.. வக்கிர மனம் கொண்ட அஜந்தாவும் அவளது குடும்பமும் இருக்கிறதே... ஏற்கனெவே அஜந்தா என்ஜாய் பண்ணினாயா என்று கேட்டு வைத்திருக்கிறாள்.. இந்த நிலையில் ரவிச்சந்திரனையும் நந்தினியையும் கட்டிலில்

பக்கத்தில் பக்கத்தில் பார்த்து விட்டாளென்றால் அவ்வளவுதான்.. நந்தினியின் பாடு திண்டாட்டமாகி விடும்... அஜந்தா சொல்வதை ரவிச்சந்திரனின் குடும்பம் நம்பாது என்றாலும் நந்தினி அவர்களின் முகத்தைப் பார்த்து எந்தவிதச் சங்கடமுமின்றிப் பேசிப் பழக வேண்டாமா..? அது கொஞ்சமாவது ரவிச்சந்திரனின் மனதில் இருந்து தொலைக்கிறதா..?

“பாஸ்..” சங்கடத்துடன் அவள் அழைத்தாள்..

“என்ன..?” கால் முட்டிகளைப் பரிசோதிப்பதில் கவனமாக இருந்தான் ரவிச்சந்திரன்..

‘இவன் பெரிய டாக்டர்..!’ பற்றிக் கொண்டு வந்தது நந்தினிக்கு..

அவளது முழங்கால்களை அவன் இறுக்கிப் பிடித்திருந்ததில் வலியையும் தாண்டி சுகமான ஓர் இம்சை கிளர்ந்து அவளை இம்சித்ததில் கால்களை இழுத்துக் கொண்டாள்..

“எதுக்கு காலை மடக்கற..?” அதட்டினான் அவன்..

“வலிக்குது பாஸ்..” சிணுங்கினாள் நந்தினி..

“அப்படித்தான் இருக்கும்.. அதனாலதான் உடனடியா மலையிறக்காம டூ டேஸ் ரெஸ்ட் எடுக்க வைத்தேன்..”

‘போடா.. டேய்..’ முகத்தைத் கோணி அழகு காட்டி அவன் சொல்வதைத்தான் நம்பத் தயாராக இல்லையென்று அறிவித்தாள் நந்தினி..

யானைக் கூட்டமென்று பயம் காட்டித் தங்க வைத்து விட்டு இப்போது புதிதாக வேறு கதை சொல்கிறானா..?

“நம்பலைன்னா விடு.. ஐ டோன்ட் கேர்..” என்று தோள்களைக் குலுக்கினான் ரவிச்சந்திரன்..

‘நீ எதைத்தான் கேர் பண்ற..?’ நந்தினி வாசலைப் பார்த்தாள்..

“அங்கே என்ன பார்க்கிற..?” புரியாமல் கேட்டான் அவன்..

“ச்சும்மா..” மழுப்பினாள் நந்தினி..

“ஓகே..” ரவிச்சந்திரன் எழுந்து கொள்ள..

‘அப்பாடி..’ என்று ஆசுவாசமானாள் நந்தினி..

“நீ ரூமிலேயே ரெஸ்ட் எடு.. ஓமனாவிடம் டிஃபனைக் கொண்டு வரச் சொல்றேன்.. முட்டி வலிக்கு அவ மருந்தைத் தடவி மஜாஜ் பண்ணி விடுவா.. டேக் கேர்..”

ரவிச்சந்திரன் நகர்ந்து விட்டான்.. நல்ல வேளையாக மருந்தைத் தடவி விட்டு மஜாஜ் பண்ணி விடுகிறேன் என்று அவளை பயமுறுத்தாமல் நடையைக் கட்டி விட்டானே என்ற நன்றி உணர்வு மிகுந்தது நந்தினிக்கு..

“எண்ட அம்மே..!” என்று ஓடி வந்த ஓமனா நந்தினியின் முறைப்பைக் கண்டதும்..

“எண்ட நந்தினி மேடம்..” என்று விளிப்பை மாற்றினாள்..

“அஃது.. இப்படியே மெயின்டெயின் பண்ணு..” என்றாள் நந்தினி..

ஓமனாக்குட்டி கொண்டு வந்திருந்த இரவு உணவை ஒரு துணுக்கு கூட மீதம் வைக்காமல் வெட்டி முடித்து ஏப்பம் விட்டுக் காலித் தட்டை நீட்டினாள்.. அவளது கால்களை நீட்டச் சொல்லி மருந்து தடவி பிடித்து விட்டாள் ஓமனா..

“தேங்க்ஸ் ஓமனா..” நன்றியுணர்வில் நந்தினியின் கண்கள் தழும்பி விட்டன..

“தேங்ஸ்ன்னு பறயாண்டாம் மேடம்.. எங்கட தேசத்தில நந்தினி மேடத்திக்கு நொம்பரம் உண்டாயிண்டா ஞான் நோக்கிட்டு இருக்குமோ..?”

உரிமையுடன் கடிந்து விட்டு ஓமனாக்குட்டி போனதும் கதவை அடைத்து விட்டுக் கட்டிலில் வீழ்ந்த நந்தினிக்கு வலி குறைந்து உறக்கம் தழுவியது.. கண்களை மூடி உறங்கி விட்டாள்.. ஓமனாவின் அழைப்பு மணியோசையில் கண் விழித்து கதவு திறந்து சாயை வாங்கிக் குடித்தவளுக்கு கனவுகள் இல்லாத நிம்மதியான உறக்கம் வாய்த்ததில் ஆச்சரியம் உண்டானது.. சற்று நேரம் ஓமனாவுடன் வாய் வளர்த்து விட்டுத் தோட்டத்துக்குப் போனவளுக்கு ரவிச்சந்திரனைப் பார்க்க வேண்டும் போல இருந்தது.. அன்று எஸ்டேட்டிற்கு போக வேண்டியதில்லையென்று ரவிச்சந்திரன் சொல்லியிருந்ததில் விச்சாந்தியான மனநிலையுடன் தோட்டத்தில் உலவியவளுக்கு கால் விலத்ததில் சாய்வு மர பெஞ்சில் சாய்ந்து அமர்ந்து கால்களை நீவி விட்டுக் கொண்டாள்..

“குட் மார்னிங்..”

கனத்த ஆண்குரல் காதில் விழுந்ததில் ரவிச்சந்திரன்தான் வந்து விட்டானோ என்று மனம் துள்ளத் திரும்பிப் பார்த்தவள் அதிசயப் பட்டுப் போனாள்..

அத்தியாயம் 111

என்னவோ காணாததைக் காணப் போவதைப் போல அவள் உள்ளம் படபடத்துத் தவித்தது.. ரவிச்சந்திரனுக்காக அவள் மனம் அந்த அளவுக்கு ஏக்கம் கொள்வதில் கவலை கொண்டாள் நந்தினி.. எந்த நொடியும் அவனை விட்டுப் பிரியநேரிடலாம்.. தஞ்சையிலிருந்து அவளுக்கான சேதி வருவதற்காக காத்திருப்பவள் அவள்.. அவன் காதல் சொல்லியும் நிராகரித்திருப்பவள்.. அப்படியிருக்கையில் அவன் அருகாமைக்காக அவள் மனம் ஏங்கித் துடிக்கலாமா..? விவாதமெல்லாம் மனதுக்குள்தான்.. வெளியில் அதைத் துப்புரவாகத் துடைத்துப் போட்டு விட்டு ரவிச்சந்திரனுடன் பேசும் ஆவலில் அவள் துள்ளி எழுந்தாள்.. எழுந்தவள் இமைக்கவும் மறந்து செதுக்கி வைத்த சிலைபோல அப்படியே நின்று விட்டாள்..

அங்கே நின்றிருந்தது ரவிச்சந்திரனல்ல.. டூப்ளிகேட் ரவிச்சந்திரன்..!

‘இவன் எப்படி இங்கே வந்தான்..?’

இந்த எண்ணம்தான் நந்தினியின் மனதில் ஓடியது.. ரவிச்சந்திரனைக் கண்டாலே பின்னங்கால் பிடறியில் பட காத தூரத்துக்கு ஓடுகிறவன் எப்படித் தைரியமாக ரவிச்சந்திரனின் அரண்மனைத் தோட்டத்திற்குள் பிரவேசித்திருக்கிறான்..? "ஹல்லோ..! என்னங்க.. என்னைக் கண்டதும் ஸ்டன் ஆகி நின்னுட்டிங்க..?" சுவாதீனமாக அவள் முன்னால் குனிந்து சொடக்குப் போட்டுக் கேட்டுவிட்டுக் கவர்ச்சிகரமாக சிரித்தான் அவன்..

ரவிச்சந்திரனளவு இல்லாவிடினும் அவனில் முக்கால்வாசியளவு ஆணழகனாக இருந்து தொலைத்தவனின் சிரிப்பு நன்றாகத்தான் இருப்பதாக நந்தினியின் ரசனை ஜொள்ளியது.. மேலும் ரவிச்சந்திரனின் முகம் போல சிடுசிடுப்புடன் இல்லாமல் சிரித்த முகமாக டூப்ளிகேட் இருந்ததில் அவனது அழகு கூடியிருப்பதாக சான்றிதழும் வழங்கியது..

"நீங்க எப்படி இங்கே..?" வியப்புடன் கேட்டாள் நந்தினி..

"அது சரி.." தலைசாய்த்து அவன் சிரித்தான்..

'சிரிப்பை விடமாட்டேங்கிறானே.. என்ன அலுவலுக்காக அது சரின்னு சொல்லிட்டுச் சிரிக்கிறான்..?'

அவன் சிரிக்கும்போது கவர்ச்சி கூடுவதைத் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்று அனுமானித்தாள் நந்தினி..

டேப்ளிகேட்டின் கண்களில் ஓர் கள்ளம் தெரிந்தது.. ஆழ்ந்த பார்வையினூடே கபடம் பளிச்சிட்டது.. நான் அக்மார்க் நல்லவனில்லை என்று சொல்லாமல் சொல்லும் விதமாக ஒரு மார்க்கமாக பார்த்து வைத்தான்.. அவன் பார்வை தூண்டில் போட்டது.. அதில் அவன் கைதேர்ந்த வல்லுனன் என்பதை தன்னம்பிக்கை மிளிர்ந்த அவனது முகபாவம் சொல்லியது.

‘இவன் தூண்டில் போட்டா நான் அதில் சிக்கிருவேனாக்கும்..?’

நந்தினிக்கு எரிச்சல் வந்தது.. இதுபோன்ற மன்மத பாணங்களை அவள் விரும்புவதில்லை..

‘மலரம்பை வீசிட்டா இவன் மன்மதன்னு நான் நினைச்சிருவேனா..? நினைப்புத்தான் இவனுக்கு..’

மாறன் கணைகளை வீசுபவனெல்லாம் மன்மதன் ஆகிவிட முடியாது என்று இவனுக்கு யார் சொல்வது என்று அலுப்பாக இருந்தது அவளுக்கு.. இந்தப் பார்வைகளை ரவிச்சந்திரன் பார்த்திருக்க வேண்டும்.. அவளுக்குள் என்னென்னவோ ஆகித் தொலைத்திருக்கும் என்று

எண்ணும்போதே அதுபோன்ற உணர்வுகள் ஏன் இவன் பார்வையில் உண்டாகவில்லை என்ற ஆச்சரியம் அவளுக்குள் எழுந்தது.. இவனும்தான் அழகன்.. கவர்ச்சிகரமானவன்.. ரவிச்சந்திரன் அளவுக்கு நெடியோனாக இல்லாவிடினும் அவன் காதைத் தொடும் அளவிற்கு உயரமானவன்.. அவனைப் போல கண்டிப்பும் கறாருமாக இல்லாமல் சிரித்த முகத்துடன் இருப்பவன்.. அதை இளித்த வாயுடன் இருப்பதாக நந்தினி மனதுக்குள் சிலாகித்தாள் (?).. கூடுதலாக 'ஜொள்ளன்..' என்ற காரண இடுகுறிப் பெயரையும் சூட்டி மகிழ்ந்தாள்..

அந்த ஜொள்ளன் நந்தினியை ஒரு மார்க்கமாக துளைக்கும் பார்வை பார்த்து வைத்தான்.. அவளது விழிகளை மயக்க முயன்ற அவனது விழிகளில் தெரிந்த அதீதத் தன்னம்பிக்கையில்..

'பாருடா..' என்று சிலும்பினாள் நந்தினி..

'இப்புடி பிராக்கெட் போட்டா நான் கவிழ்ந்திருவேனாக்கும்..?' உதட்டைக் கோணி பலமார்க்கமாக அழகு காட்டியபடி இகழ்ச்சியாக அவள் பார்த்த பார்வையில் முகம் மாறிப் போன டூப்ளிகேட்.

“என்னங்க.. இப்படிப் பார்க்கறீங்க..?” என்று கேட்டு விட்டான்..

“அது சரி..” அவனைப் போலவே கித்தாய்ப்பாக சொன்னாள் நந்தினி..

இப்போது அவனுடைய புருவங்கள் முடிச்சிட்டன.. எதற்காக அவள் அது சரியென்று இடக்காக சொல்கிறாள் என்று அவன் குழம்பியதில் நந்தினிக்கு இமாலய சந்தோஷம் ஏற்பட்டது..

‘இப்படித்தானே எனக்கும் இருந்திருக்கும்..? நீ சொன்னா மட்டும் சரி.. நான் சொன்னா மட்டும் தலையைச் சுத்துமா..? உனக்குத்தான் பொடி வைத்துப் பேசத் தெரியுமா..? எனக்கும் தெரியும்ங்கிறதை தெரிஞ்சுக்க.. யாருகிட்ட..? நான் தஞ்சாவூர்காரியாக்கும்.. நீ சொன்ன ‘அது சரி..’யை உனக்கேத் திருப்பி விட்டுட்டேனில்ல.. இது எப்படி இருக்கு..? அனுபவி ராஜா அனுபவி..’

அலட்சியமாக அவள் பார்த்து வைத்ததில் முகம் சுருங்கினான் டூப்ளிகேட்.. பதிலுக்குப் பதில் கொடுக்க வேண்டும் என்று தீர்மானித்தவனைப் போல..

“நைட் டின்னரிலேயே மீட் பண்ணியிருக்கலாம்.. டைனிங் ஹாலில் எதிர்பார்த்தேன்.. நீங்க சாப்பிட வரலை.. உங்க ரூமுக்கே டிஃபனை அனுப்பி வைத்திட்டதாச் சொன்னாங்க.. உங்களைப் பார்த்திருவேன்ங்கிற எக்ஸைட்டிங்கில இருந்தேனா.. ஏமாற்றமா ஆகிருச்சு..” என்று இயல்பாக சொல்வதைப் போலச் சொன்னான்..

‘என்னது..? நைட் டின்னருக்கு இவன் சாப்பிட வந்திருந்தானா..? எப்படி..?’ நந்தினிக்குத் தூக்கிவாரிப் போட்டது..

டூப்ளிகேட் முகம் சுருங்கி அதை மறைத்துப் பேச ஆரம்பித்தபோதே பொடி வைத்த வெடியை வீசப் போகிறான் என்று யூகித்து விட்டாள் நந்தினி.. அவன் எதைச் சொன்னாலும் அதற்கு ‘என்னது..?’ என்று வெளிப்படையாக அலறிவிடக் கூடாது என்று அப்போதே மனதுக்குள் தீர்மானித்திருந்ததால்தான் அவளால் மனதுக்குள் ‘என்னது..?’ என்று கேட்டுக் கொள்ள முடிந்தது..

நந்தினி எதையும் சொல்லாமல் நின்றதில் அவனுக்கு ஏமாற்றமாகி விட்டது போல..

“என்னங்க நீங்க.. எதுக்கும் அசைய மாட்டேங்கறிங்க..?” என்று அங்கலாய்த்து விட்டான்.

‘அஃது..’ நந்தினிக்குத் திருப்தியாக இருந்தது..

என்னவோ அவனுக்குத்தான் பொடி வைத்துப் பேசத் தெரியும்போல கெத்துக் காட்டினால் நந்தினியிடம் எடுபடுமா..? அவன் காட்டும் அல்டாப்பு எல்லா இடங்களிலும் வேலைக்கு ஆகாது என்பதை அவனும் தெரிந்து கொள்ளட்டும்..

“என்னத்தைப் பேசச் சொல்கிறீங்க..?”

அவனுடன் பேசுவதில் சுவராஸ்யம் இல்லையென்பதை வெளிப்படையாகக் காட்டியபடி தோளைக் குலுக்கி னாள் அவள்..

“என்னுடன் பேச எதுவுமில்லையா..?” அவன் முகம் விழுந்து விட்டது..

“யெஸ்.. எதுவுமேயில்லை.. உங்களிடம் பேச என்னங்க இருக்கு..?”

“என்னங்க.. இப்படிச் சொல்லிட்டிங்க.. யாராலும் உள்ளே வர முடியாத வயநாட்டு அரண்மனைக்குள் அந்த அரண்மனையின் டைனிங் டேபிளிலிருந்து தோட்டம்

வரைக்கும் நான் வந்திருக்கிறேன்.. இது உங்களை ஆச்சரியப் படுத்தலையா..?"

"உங்ககிட்ட ஆச்சரியப் பட்டுட்டாலும்.. ம்ஹூம்.. இதுதானே.. உங்கள் வேலை..? திடீர்ன்னு செஞ்சிக் கோட்டையைச் சுற்றிப் பார்க்க வந்திருப்பதாய்ச் சொல்லி இன்ட்ரொடுயூஸ் ஆனிங்க.. சென்ட்ரல் ஸ்டேஷனில நீங்கதான் ஒரிஜினல் ரவிச்சந்திரன்னு டூப் விட்டுட்டு அவரைக் கண்டதும் ஓடி ஒளிஞ்சிங்க.. நேத்து வயநாட்டில வந்து நின்னிங்க.. அப்பயும் ரவிச்சந்திரனைக் கண்டதும் சிட்டாப் பறந்துட்டிங்க.. இப்ப இங்கே வந்து நிற்கறீங்க.. இது அவரோட அரண்மனை.. மற்ற இடத்திலேயே டிஸ்யூன்னு காட்சி கொடுக்கிறவள் சொந்த அரண்மனையில் சும்மா இருப்பாரா..? டொய்ங்ன்னு வரத்தான் போறார்.. நீங்களும் சொய்ங்ன்னு ஓடத்தான் போறிங்க.. இதுக்கெல்லாம் ஆச்சரியப் பட்டுக்கிட்டு இருந்தா அவ்வளவுதான்.."

நந்தினி சொல்லி வாய் மூடவில்லை.. ரவிச்சந்திரன் வந்து விட்டான்.. அடுத்த நொடியில் டூப்ளிகேட் மாயமாக நந்தினி கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டு.. எங்கே டூப்ளிகேட் என்று தேடினாள்.. அவன் இருந்தால்தானே..? அவனுக்குப் பதில்..

“யாரைத் தேடற..?” என்று நெற்றிக் கண்ணைத் திறந்து கனல் கக்கியபடி ரவிச்சந்திரன்தான் நின்றிருந்தான்.

“இங்கே என்னுடன் பேசிக்கிட்டு இருந்தாரே.. அவர் எங்கே பாஸ்..?”

“அவரா..? ஓ..! மரியாதையெல்லாம் கொடி கட்டி பறக்குது..?”

‘இவன் ஒருத்தன்.. இம்சை அரசன்..!’

வாயை மூடிக் கொள்வதுதான் உத்தமம் என்று நந்தினியின் புத்தி எடுத்துக் சொல்லியதில் தன் திருவாயை இறுக்கி மூடிக் கொண்டு அசையா மரமாக நின்றாள் நந்தினி..

முதல்நாள்தான் டூப்ளிகேட்டிடம் பேசியதற்காக ரவிச்சந்திரனிடம் அறை வாங்கியிருகிறாள்.. மறுபடியும் கன்னத்தை பழுக்க வைத்துக் கொள்வதில் அவளுக்கு உடன்பாடில்லை.. அது என்ன கன்னமா..? இல்லை.. கடும்பாறையா..? ரவிச்சந்திரன் அறை விட்டால் பாறையே துகள் துகளாகி மணல் குவியலாகி விடும் எனும் போது நந்தினியின் பஞ்சுக் கன்னம் என்ன கதியாகும்..?

“நேற்றும் அவனிடம் பேசின.. இன்னைக்கும் பேசற.. நான் என்ன சொன்னாலும் கேட்கக் கூடாதுங்கிற முடிவோட இருக்கியா..?”

இதற்கும் பதில் சொல்லாமல் தன் கன்னத்தைக் காப்பாற்ற நந்தினி வாய் மூடி நின்றால் ரவிச்சந்திரன் சொல்வதெல்லாம் உண்மையென்றாகி விடுமே..

“இது அபாண்டம் பாஸ்.. நேத்தும் அவர்தான்..”

“அவரா..?”

“தப்புத்தப்பு.. அவன்தான்.. ஓகேயா..?”

நந்தினி பவ்யமாக பிழைத் திருத்தம் செய்து அது சரியா என்று ரவிச்சந்திரனிடம் அபிப்ராயம் கேட்டதில் அவன் அவளை முறைத்துப் பார்த்தான்.. அவன் பார்வையே அப்படி என்பதால் நந்தினி விளக்கத்தைத் தொடர்ந்தாள்..

“நேத்தும் அவன்தான் என்னைத் தேடி வந்து பேசினான்.. இன்னைக்கும் அவனாத்தான் வந்து பேசறான்..”

“பர்ட்டிகுலரா உன்கிட்ட வந்து பேச வேண்டிய அவசியமென்ன..?”

“இது என்ன பாஸ்.. அநியாயமா இருக்கு.. தெரிந்தவனா இருந்தா பேச மாட்டானா..?”

“அவன் உனக்குத் தெரிந்தவனா..?”

“ஊம்.. செஞ்சியில் மீட் பண்ணினோம்ன்னு நேற்றே சொன்னேனே பாஸ்.. மறந்துட்டிங்களா..?”

“நான் மறக்கலை.. உன்னாலயும் அவனை மறக்க முடியலை போல..”

“சும்மாக்காச்சும் எதையாச்சும் பேசனும்னு பேச வேணாம் பாஸ்.. அறியாத ஊரில தெரிஞ்சவங்க மீட் பண்ணிக்கிட்டா ஒருத்தருக்கொருத்தர் ஹலோ சொல்லிக்கிட்டு நலம் விசாரிச்சுக்க மாட்டாங்களா..? இது கேரளா பாஸ்.. அவனும் தமிழன்.. நானும் தமிழச்சி.. ஊர்ப்பாசத்தில சொந்தம் கொண்டாடிப் பேசிக்கிட்டா நீங்க எது வேணும்னாலும் பேசுவீங்களா..?”

மூக்கை விடைத்துக் கைகளை ஆட்டி நியாயம் கேட்டாள் நந்தினி.. படபடத்த அவளது பேச்சை இடுங்கிய கண்களுடன் பார்வையிட்டவன் லிப்ஸிடிக் போடாமலே சிவந்திருந்த அவனது உதடுகளைக் குவித்து..

“ஓ...” என்றான்..

‘எதுக்கு இப்ப ‘ஓ’ போடறான்..?’ நந்தினி விழித்தாள்..

‘ஜெமினி படத்தில விக்ரம் கூட இந்த அளவுக்கு ‘ஓ’ போட்டிருக்க மாட்டார்.. ஈ மலையாள திவ்ய தேசத்தில திரும்பின பக்கமெல்லாம் ‘ஓ’ போட்டுடறாங்க..’

“நீ தமிழச்சி..! ஓகே.. அவன் மறத் தமிழனா..?”

“அவன் மறத்தமிழனோ இல்லை மரக்காத் தமிழனோ எனக்குத் தெரியாது.. தமிழன்.. அது போதாதா..?”

“உனக்குப் போதும்தான்..”

இதை இகழ்ச்சியாக உதடுகளை மடித்து ஓர் விதமாக அவன் சொன்னதில் மறைபொருள் இருப்பதைப் போல தோன்றியதில் துணுக்குற்றாள் நந்தினி..

‘இவன் என்னதான் நினைத்துக்கிட்டு இருக்கான்.. தெரிஞ்சவனிடம் ரெண்டு வார்த்தை பேசித் தொலைச்சிட்டா அதுக்கு என்ன வேணும்னாலும் பேசிருவானா..?’ அவளுக்கு ரத்தம் கொதித்தது..

“அவன் தமிழன்னு எதை வைத்துச் சொல்கிற..?”

“இது என்ன பாஸ் கேள்வி..? ஆளைப் பார்த்தாத் தெரியாதா..?”

“ஓ..”

‘மறுபடியும் ‘ஓ’ போட்டுட்டானா..?’

“அந்த அளவுக்கு அவனைப் பார்த்திருக்கிற..?”

‘போடா டேய்.. வில்லங்கம் வீராச்சாமி.. எதுக்கெடுத்தாலும் வில்லங்கமாவே பேசி வைக்கிறான்.. கண்ணிருக்கிறவங்க பார்க்கத்தான் செய்வாங்க.. அது ஒரு குத்தமாடா..?’

“ஆளைப் பார்த்தாளாம்.. தமிழன்னு கண்டு பிடிச்சிட்டாளாம்.. இவ பெரிய புத்திசாலி..”

இல்லையா என்று ரோஷம் வந்தது நந்தினிக்கு.. புத்திசாலியாக இல்லாமலா பி.டெக் படிப்பை படித்திருக்கிறாள்..? எதற்கெடுத்தாலும் இதை ஒன்றை சொல்லி விடுகிறானே..

அத்தியாயம் 112

“லுக் பாஸ்..”

பேச்சு வாக்கில் சொல்லி விட்டு ஏன்தான் அப்படிச் சொன்னோமோ என்று நொந்து போனாள் நந்தினி.. அவளை ஊடுறுவும் லேசர் பார்வையோடு அங்குலம் அங்குலமாக பார்க்கத் தொடங்கி விட்டான் அவன்..

“பாருங்கன்னு சொன்னா கவனிங்கன்னு அர்த்தம் பாஸ்.. என்னை சைட் அடிங்கன்னு அர்த்தமில்லை..”

அவள் வேண்டிக் கேட்டுக் கொண்டதில் வெகு நேரமாக மறைந்திருந்த சிரிப்பு அவனிடம் வெளிப்பட்டது..

‘அம்மாடி.. சிரிச்சுட்டான்..’

மனதில் நிம்மதி பரவிய போதே.. அவனுடைய கோபம் இந்த அளவுக்கு அவளைப் பாதித்திருக்கிறதா என்று திகைத்து விட்டாள் நந்தினி.. அவன் சிரித்த முகமாக இருந்தால் அவள் மனம் பூவாக மலர்கிறது.. அதுவே அவன் சிடுசிடுவென்று இருந்து விட்டால் பாறையாய் கனக்க ஆரம்பித்து விடுகிறதே.. ஏன்..?

“மக்குன்னு சொன்னா கோபம் மட்டும் வந்திருது..”

“என் கோபத்தை என்னோட பாஸ் கன்சிடர் பண்ணிட்டுத்தான் வேற வேலையைப் பார்க்கிறாராக்கும்..?”

“இப்படி மடத்தனமா பிஹேவ் பண்ணினா வேற எப்படி ரியாக்ட் பண்ண முடியுமாம்..”

மறுபடியும் அவன் முகம் கடுத்து விட்டது.. இன்றைய விடியல் இப்படியா விடிய வேண்டும் என்று அவளுக்கு அழுகை அழுகையாக வந்தது.. அவளா அந்த அரண்மனையின் தோட்டத்துக்கு டூப்ளிகேட்டை வரச் சொன்னாள்..? அவனாக வந்து நின்றால் அவள் என்ன பண்ணுவாள்..?

‘ஆமாம்.. இத்தனை வித்தாரம் பேசறானே.. இவனோட அரண்மனைக்குள்ளே அவன் எப்படி வந்தானாம்..?’ இதைவிடக் கூடாது என்று கங்கணம் கட்டிக் கொண்டாள் நந்தினி.. அது என்ன.. அவளை மட்டும் அவன் வறுத்து எடுப்பது..? பதிலுக்கு கேள்வி கேட்க ஒரு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.. இதை விட்டு விடக் கூடாது..

“நான் மடத்தனமா பிஹேவ் பண்றதாகவே இருக்கட்டும்.. புத்திசாலித்தனமான என்னோட பாஸ் எதுக்காக

அவனை அவரோட அரண்மனைக்குள்ளே அலோவ் பண்ணினாராம்..? இதுதான் எனக்குப் புரிய மாட்டேங்குது.. வழியோடு போகிறவன் கிட்டப் பேசினா ஏன் பேசினேன்னு அரட்டலாம்.. பாதுகாப்பான அரண்மனைக்குள்ளே வந்து நிற்கிறவன்கிட்ட என்ன கேள்வியைக் கேட்கிறதாம்..? அவனிடம் பேசறதைத் தவிர வேற வழியில்லை பாஸ்.. இப்படிக் கோவிச்சுக்கிறவர் அவனை அரண்மனைக்குள்ளே அலோவ் பண்ணியிருக்கக் கூடாது..”

இடுப்பில் கை வைத்து நந்தினி கேட்ட கேள்விக்கு உடனடியாகப் பதில் சொல்லாமல் முகம் இறுகினான் ரவிச்சந்திரன்.. அவனது புருவங்களின் மத்தியில் வந்த சுளிப்பில் நந்தினியின் பார்வை படிந்தது.. நெற்றியில் சிந்தனை ரேகைகள் படிந்ததில் உனக்கும் எனக்கும் வாக்குவாதம் வேண்டாம்.. விட்டு விடு.. என்று பின்வாங்கி விடவேண்டும் போல குற்ற உணர்வு வந்தது... அலட்டிக் கொள்ளாதே என்று அவனை மடி சாய்த்து புருவ மத்தியின் சுளிப்பை நீவி விட வேண்டும் போலத் தோன்றியதில் அரண்டு போனாள் நந்தினி..

‘என்ன நினைப்பு இது.. எப்படி இப்படியெல்லாம் நினைக்கிறேன்..’

பதைபதைத்த மனது எதையெதையோ சொல்லி சமாதானமாக முயன்றது.. அவள் மனதில் சோகம் வந்தால் அவன் தோள் சாய்ந்து தேம்புவதில்லையா..? அவனும் ஆறுதல் சொல்லி மார்போடு அணைத்துக் கொள்வதில்லையா..? அதுபோல்தான் இதுவும் என்று சப்பைக் கட்டுக் கட்டிக் கொண்டாள்..

“அபராஜிதன் இந்த அரண்மனைக்குள்ளே வருவதில் எனக்கு விருப்பமில்லை நந்தினி.. பட்... வந்து விட்டான்.. உள்ளே வராதேன்னு துரத்தியடித்தா தாத்தாவும் பாட்டியும் வருத்தப் படுவாங்க.. ஸோ.. ஒன் ஆர் டூ வீக் இருந்து தொலைக்கட்டும்ன்னு விட்டு வைத்துட்டு மும்பைக்கு துரத்தி விட்டாகனும்..” ஆழ்ந்த சிந்தனையுடன் ரவிச்சந்திரன் சொல்லிக் கொண்டிருக்க..

“அபராஜிதனா..? யார் அது..?” என்று கேட்டு வைத்தாள் நந்தினி..

விசித்திரமாக அவளைப் பார்த்தான் ரவிச்சந்திரன் .. ஏன் இப்படிப் பார்க்கிறான் என்று விந்தையாக அவனைப் பார்த்தாள் நந்தினி..

“அபராஜிதன்னா யார்ன்னு உனக்குத் தெரியாதா..?” ஓர் தினுசாகக் கேட்டான் ரவிச்சந்திரன்..

“ஊஹூம்..” தலையை ஆட்டி மறுத்தாள் நந்தினி..

“ஓ..” உதடுகளைக் குவித்த ரவிச்சந்திரனின் பார்வை அவளை ஊடுறுவியது..

இந்த ஓர் பார்வைக்காகத்தானே அவள் தோட்டத்தில் ரவிச்சந்திரன் இருப்பான் என்று தேடி வந்தாள்.. அது தெரியாமல் அவள் டூப்ளிகேட்டிடம் இரண்டு வார்த்தை பேசிவிட்டாள் என்ற குற்றத்திற்காக பொங்கிக் கொண்டிருக்கிறாளே..

“அபராஜிதன் அஜந்தாவோட அண்ணன்...” ரவிச்சந்திரனின் பார்வை கூர்மையானது..

“ஈஸிட்..? அஜந்தாவின் அண்ணன் வந்திருக்கிறாரா..? மை காட்.. அஜந்தாவையே என்னால சமாளிக்க முடியலை.. இதில் அவளோட அண்ணன் வேறா..? பாஸ் பேசாம என்னை குவார்ட்டர்ஸுக்குக் கடத்திருங்களேன்..”

“குவார்ட்டர்ஸுக்கா..? எந்த வொர்ட்டர்ஸுக்கு..?”

“எஸ்டேட்டில வேலை பார்க்கிறவங்களுக்கு குவார்ட்டர்ஸ் கட்டிக் கொடுத்திருக்கீங்களே பாஸ்.. ஆனந்தன் சாரோட குவார்ட்டர்ஸ் பக்கத்திலே இருக்கிற குவார்ட்டர்ஸ் காலியாத்தான் இருக்காம்..”

“யார் சொன்னது..?”

“மோகன்..”

“எதுக்கு..? அவன் வீட்டுக்குப் பக்கத்தில குடி போயிட்டா அவன்கூட கடலை போட வசதியாயிருக்கும்ன்னு பிளான் பண்றியா..?”

“பாஸ்..”

வாயடைத்துப் போனாள் நந்தினி.. பேச்சு என்று வந்து விட்டால் வாய்க்கு வந்ததைப் பேசி விடுகிறான்.. இன்ன பேச்சு என்றில்லை.. அதனால் அவள் மனம் புண்ணாகும் என்று பாவம் பார்க்க மாட்டேன் என்கிறான்.. இப்படியா பேசுவது..?

நந்தினியின் கண்கள் கலங்கி விட்டன..

“மோகன் எனக்குத் தம்பி மாதிரி பாஸ்..”

“தம்பி மாதிரிதான்.. தம்பியில்லை.. அதையும் நீதான் சொல்கிற.. அவன் மலர் டீச்சர்ன்னு பினாத்திக்கிட்டு

இருக்கான்.. நினைவில் இருக்கட்டும்.. இப்ப வயநாட்டு அரண்மனையை விட்டு வெளியேறுகிற அளவுக்கு என்ன நடந்திருச்சு..? நான் எதுவும் உன்னிடம் மிஸ்பிஹேவ் பண்ணினேனா..?”

பண்ணவில்லையா என்று கேட்க வேண்டும் போலதான் இருந்தது நந்தினிக்கு.. அப்படிக் கேட்டு வைத்தால் அவன் என்ன பண்ணினேன் என்று விளக்கம் கேட்பான்.. அந்த விளக்கத்தைக் கொடுக்க அவளால் முடியாது என்பதால் கேட்காமல் விட்டு விட்டாள்..

“உங்களுக்காக ஒண்ணும் சொல்லலை..”

“வேறு யாருக்காக சொன்னாய்..?”

“அஜந்தாவின் அண்ணன் வந்திருக்கிறானே..”

“அவன் கூடத்தான் பல்லைப் பல்லைக் காட்டிப் பேசினாயே..”

“நானா..?”

திகைத்துப் போனாள் நந்தினி.. அஜந்தாவின் அண்ணனுடைய பெயர் அபராஜிதன் என்பது கூட அவளது நினைவில் இல்லை.. எவன் அந்த அபராஜிதன் என்று

கேட்டாள்.. அவனிடம் நந்தினி பேசினாளாம்.. அதை ரவிச்சந்திரன் பார்த்தானாம்..

“நீயேதான்..” அழுத்தம் திருத்தமாகச் சொன்னான் அவன்.. “வேண்டாத பெர்சனல் மேனேஜர் கைபட்டாலும் குத்தம்.. கால் பட்டாலும் குத்தம்.. அதுக்காக இந்த அளவுக்கு எக்ஸ்ட்ரீமாப் பேசக் கூடாது பாஸ்...”

“ஓ..”

“ஓ.. போட்டுட்டா நீங்க சொல்வதெல்லாம் உண்மைன்னு ஆகிருமா..?”

“பின்னே.. ஆகாதா..?”

“அந்த அபராஜிதன் யாருன்னே எனக்குத் தெரியாது.. அப்புறம் எப்படி அவனுடன் நான் பேசியிருக்க முடியும்..? அதிலும் பல்லைப் பல்லைக் காட்டினேனாம்.. பழி போடறதுக்கும் ஓர் அளவிருக்கனும் பாஸ்..”

“ஏய்ய்.. சும்மா எண்ணையில போட்ட அப்பம் போலப் பொரியாதேடி.. உள்ளதைச் சொன்னா குதிக்கிறா..”

“என்னது..?”

எத்தனை இலகுவாக அவளை வாடி, போடி என்கிறான் என்று கொதித்துப் போனாள் நந்தினி.. கோபம் வந்து விட்டால் வாடி, போடிதான்.. அவளும் ஆட்சேபித்துப் பார்த்து விட்டாள்.. அடங்க மாட்டேன் என்கிறானே..

“எதுக்கு இந்த என்னது..?”

“இப்படிப் பேசாதீங்க பாஸ்..”

“எப்படிப் பேசக் கூடாது..? எண்ணையில போட்ட அப்பம் போலன்னு பேசக் கூடாதுங்கறியா..? வேற எப்படித்தாண்டி பேசறது..? உனக்கு எக்ஸாம்பிள் சொல்லனும்னா திங்கிறதைத் தவிர வேற எதுவும் வாயில் வந்து தொலைக்க மாட்டேங்குதே..”

‘நான் என்னத்தைச் சொன்னா இவன் என்னத்தைச் சொல்கிறான் பார்...’ நந்தினிக்கு முட்டிக் கொள்ள வேண்டும் போல இருந்தது..

இதில் கொடுமையிலும் கொடுமையாக அப்பம் நினைவுக்கு வந்து வயிறு பசித்தது.. காலையில் ஓமனாக் குட்டி கொண்டு வந்து கொடுத்த ‘சாய்..’ எந்த மூலைக்குப் போதும்..?

வெறும் வயிற்றுடன் டூப்ளிகேட் ரவிச்சந்திரனுடன் வாயாடி.. அந்தத் தவறுக்காக ஒரிஜினல் ரவிச்சந்திரனுடன் போராடி.. என்று வெகுவாகக் களைத்துப் போய் விட்ட நந்தினிக்குப் பசிக்காதா..?

அப்போது நடந்து கொண்டிருந்த பிரச்னையில் பசிப் பிரச்னையைச் சொல்ல முடியாது என்பதினால்..

“கேட்டதுக்கு மட்டும் பதில் சொல்லுங்க..” என்று பல்லைக் கடித்தாள்..

“அடி அறிவுகெட்ட மக்கு..! இப்ப நீ பல்லைப் பல்லைக் காட்டிப் பேசிக்கிட்டு இருந்தியே.. உன் ஊர் மறத்தமிழன்..! அந்த மறத்தமிழன்தான் அபராஜிதன்..”

“என்னது..?”

அன்றைய தினம் ‘என்னது..?’ என்று அவள் நெஞ்சைப் பிடித்து நிற்கும் தினம் என்று இறைவனால் வடிவமைக்கப் பட்டிருக்கிறது என்று நந்தினி மண்டை காய்ந்தாள்..

“டூப்ளிகேட்டோட பெயர் அபராஜிதனா..?”

“டூப்ளிகேட்டா..?”

“ஆமாம் பாஸ்.. அவனுக்கு அப்படித்தான் பெயர் வைச்சிருக்கேன்..”

“அருமையான பெயர்..” ரசித்துச் சொன்னான் ரவிச்சந்திரன்.. அடுத்தவனுக்கு வைத்த பெயர் என்றால் அப்படித்தான் இருக்கும் என்று சொல்ல வந்ததை சொல்லாமல் விட்டாள் நந்தினி.. இருக்கும் தலை வேதனைகள் போதாதா..? இன்னும் ஒன்றை இழுத்துக் கொள்ள வேண்டுமா..?

“இந்த வயநாட்டில பிறந்து வளர்ந்த கேரளாக்கார தமிழன் அவன்.. அவனை உன் ஊர் ஆள்ன்னு சொந்தம் கொண்டாடற..”

“எனக்குத் தெரியாதே பாஸ்..”

“அவனைத் தெரியாது.. அவன் யார்ன்னும் தெரியாது.. ஊரும் தெரியாது.. பெயரும் தெரியாது.. இப்படி எதுவுமே தெரியாம எப்படிடீ அத்தனை குளோசா அவனிடம் பேசிப் பழகின..?”

“பாஸ்..”

“எதுவுமே தெரியாதப்பவே இப்படிப் பேசிப் பழகறியே.. எல்லாம் தெரிந்திருந்தா எப்படியெல்லாம் பழகியிருக்கமாட்ட..?”

“ஸ்டாப் இட்..”

அதிர்ந்து விட்டாள் நந்தினி.. விஷக் கொடுக்கு என்பது இதுதானோ என்று அவளது தேகமெல்லாம் நடு நடுங்கியது.. நிறுத்து என்று அவள் கத்தியதை அவன் பொருட் படுத்தவில்லை.. நில்லென்று நீ சொன்னால் என் பேச்சு நின்று விடுமா என்று வன்மம் கொண்டவனாக தேள் கொடுக்காய் கொட்டிக் கொண்டிருந்தான்..

“பார்த்தேனே.. அவனைக் கண்டா முகமே பூவா மாறிருது.. அவ்வளவு கொண்டாட்டம்..? ம்ம்ம்..?” இதில அவன் இவளோட ஊர்க்காரனாம்.. செஞ்சியிலே பார்த்தாளாம்.. அவன் அத்தனை நல்லவனில்லன்னு சொன்னா நீ மட்டும் நல்லவனான்னு என்னையே கேள்வி கேட்கிறா.. ஆமாண்டி.. நான் நல்லவனில்லைதான்.. வுமனைசர்தான்.. அவன் நல்லவன்தானே..? அவன் பின்னாடி போ..

“வேண்டாம் பாஸ்..”

“நான்தான் உனக்கு வேண்டாமே.. உன் மேல ஆசைப்பட்டேன் ஐ லவ் யு சொன்னேன்.. ஏத்துக்கலையே.. விட்டுருன்னு சொன்னியேடி.. உன் தனிமையை யூஸ் பண்ணிக்கப் பார்த்தேன்னு குற்றம் சொன்னியே.. அவன் எப்படிப்பட்டவன்னு உனக்குத் தெரியுமா..? கேடு கெட்டவன்.. இதைச் சொன்னா உன்னை விடவா அவன் கேடு கெட்டவன்னு கேட்ப.. உனக்குத்தான் என்னைத் தவிர எல்லோரையும் பிடிக்குமே..”

‘போடா..’ நந்தினிக்கு அழுகை வந்தது..

அவளுக்கா அவனைப் பிடிக்காது..? இதையே சொல்லித் தொலைக்கிறானே.. அவளுக்கு அவனைப் பிடிக்கும்.. ரொம்ப ரொம்ப பிடிக்கும்.. இதை பலமுறை சொல்லியிருக்கிறாளே.. அது ஏன் அவன் மரமண்டையில் ஏறவில்லை..?

“செஞ்சிக் கோட்டைக்கு வந்தானாம்.. இவ பார்த்தாளாம்.. பேசிப் பழகினாளாம்.. பார்த்தவுடன் பேசிப் பழகிருவியா..? அந்த அளவுக்கு அவன் உன்னை அட்ராக்ட் பண்ணியிருக்கான்.. நீயும் அட்ராக்ட் ஆகியிருக்க.. வயநாட்டில் கால் வைக்கக் கூடாதுன்னு வார்ன் பண்ணியிருந்தேன்.. இருக்கிற இடம் தெரியாம மும்பையிலே

பதுங்கியிருந்தவன் துணிச்சலா அரண்மனைக்குள்ள கால் வைச்சிருக்கான்... எப்படி வந்தது இந்தத் துணிச்சல்..? யாருக்காக வ ந்தது இந்தத் துணிச்சல்..? சொல்லுடி..”

ரௌத்ரம் என்றால் அப்படியொரு ரௌத்ரம்.. விழிகளை உருட்டி மிரட்டி ரவிச்சந்திரன் உறுமிக் கொண்டிருக்க விதிர்த்துப் போனவளாக அரண்மனையை நோக்கிப் விரைந்தோடி விட்டாள் நந்தினி..

அத்தியாயம் 113

குனிந்த தலை நிமிராமல் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள் ரம்ய மாலினி.. அவள் முகத்தில் விரவியிருக்கும் சாந்தமும் மென்மையும் தொலைந்து கடுகடுப்பு நிறைந்திருந்தது.. முகச் சுளிப்புடன் சாப்பிட்டுக் கொண்டிருந்தவளை இது நம் ரம்ய மாலினிதானா என்ற ஆச்சரியத்துடன் பார்த்தபடி பக்கத்தில் உட்கார்ந்த நந்தினி..

“ஹாய்.. குட்மார்னிங்..” என்றாள்..

சின்னஞ்சிறு முணுமுணுப்புக்கூட பதிலுக்குக் கிடைக்கவில்லை.. எவருக்கு வந்த குட்மார்னிங்கோ என்பதைப் போல விட்டேற்றியாக இருந்தவளிடம்..

“என்னங்க.. ஹாய் சொன்னா பேச மாட்டேங்கறிங்க ..” என்று மனத்தாங்கலுடன் கேட்டாள் நந்தினி..

“பேசினா அவ தட்டில இருக்கிறதையும் நீ பிடுங்கித் தின்றிருவியோன்னு பயப்படறா போல.. அந்த அளவுக்கு உன்னை புரிஞ்சு வைத்திருக்கிறா..” ஏளனமாக சொன்னாள் அஜந்தா..

‘மலையாள சுந்தரி கலாய்க்கிறாளாம்..’

பற்றற்ற துறவி போல அஜந்தாவைப் பார்த்த போதுதான் அவள் பக்கத்தில் உட்கார்ந்திருந்த டேப்ளிகேட்டை பார்த்து வைத்தாள் நந்தினி..

‘ஓ.. இவன் இங்கேதான் இருக்கிறானா..?’

அவனோ ‘என்னைத் தெரியுமா..?’ என்ற ரீதியில் கெத்தாக முகத்தை வைத்துக் கொண்டு நந்தினியை பார்வையிட்டுக் கொண்டிருந்தான்..

‘இப்போத் தெரியும்டா..’

நந்தினி மௌனப் பார்வையுடன் தட்டில் பரிமாறப் பட்டிருக்கும் பட்சண வகைகளை மொக்க யத்தனித்த போது..

“டைனிங் ஹாலுக்கு சாப்பிடத்தானே வந்த..?” என்று அதட்டினான் ரவிச்சந்திரன்..

‘பார்க்கத்தானேடா செய்தேன்..? வேறென்ன செய்தேன்..?’ அழமாட்டாத குறையாக ரவிச்சந்திரனைப் பார்த்தாள்.. அவனோ சிவந்த கண்களுடன் உறுத்து விழித்துக் கொண்டிருந்தான்.. நந்தினிக்கு பயமாக இருந்தது.. ஓடி ஒளிந்து கொள்ள வழியில்லாமல் அது சாப்பிடும் அறையாக இருந்தது..

“அதெல்லாம் நீங்க சொல்லவே வேணாம் அத்தான்.. சாப்பிடறதுக்கு நந்தினிக்கு சொல்லியா கொடுக்கனும்..? செம வெட்டு வெட்டிருவா இல்ல.. என்ன நந்தினி.. ஆம் ஐ கரெக்ட்..?” அஜந்தா விஷப் புன்னகையுடன் கேட்டாள்..

ஒன்றுக்கு இரண்டாய் இளம்வயது ஆண்கள் இருக்கிறார்களாம்.. அவர்களின் முன்னிலையில் நந்தினி நளினமாக நடந்து கொள்ள முயல்வாளாம்.. அப்படி இருக்க விடாமல் அஜந்தா நந்தினியை மட்டம் தட்டுகிறாளாம்.. இளம் வயது ஆண்கள் முன்னிலையில் நந்தினி கூனிக் குறுகிப் போக வேண்டுமாம்.

‘என்ன கழுதைக்கு..?’ என்று நினைத்துக் கொண்டாள் நந்தினி..

நளினமெல்லாம் அவளுக்கு வந்து தொலைக்காத விவகாரம்.. வயிறு பசித்தால் வெட்டு வெட்டென வெட்ட வேண்டியதுதானே.. இளம்வயது ஆண்கள் இருந்தால் வயிறு பசிக்காதா..?

அஜந்தாவின் முன்னாலிருந்த தட்டில் ஒ ரு கவளம் குழாய்புட்டும் நேந்திரம்பழமும் மட்டுமே இருந்தன.. இதை மட்டும் சாப்பிட்டு எப்படி ஜீவிதம் பண்ணுகிறாள் என்று

ஆச்சரியம் கொண்டாள் நந்தினி.. நிச்சயமாக அது வயிற்றுக்குப் போதாது..

‘தனியாய் மொக்குவாளாயிருக்கும்..’

மற்றவர்கள் முன்னால் நாசுக்காய் சாப்பிட்டுத் தனிமையில் மொக்க வேண்டிய அவசியமென்ன இருக்கிறது என்ற கேள்வி நந்தினியின் மனதில் எழுந்தது.. அஜந்தா எப்படிப் போனால் அவளுக்கென்ன..? அவள் வயிறு நிறைந்தால் சரி என்ற எண்ணத்துடன் தட்டைக் காலி செய்ய ஆரம்பித்தாள்..

“சாப்பாட்டு விஷயத்தில நந்தினி யாரையும் கண்டுக்க மாட்டா..” விஷமமாக சொன்னாள் அஜந்தா..

“என்னையே கண்டுக்கலையே..” டூப்ளிகேட் வாய் திறந்தான்..

‘இவனை என்ன அலுவலுக்கு கண்டுக்கனுமாம்..?’ ரவிச்சந்திரன் நெற்றிக் கண்ணைத் திறந்து விடுவானே என்ற பயத்துடன் பார்த்தாள் நந்தினி.. அவள் பயந்தது சரியாகி விட்டது.. அவன் ருத்ர அவதாரம் எடுத்திருந்தான்..

“முதலில் உனக்குக் கொடுத்த வேலையைக் கண்டுக்கப் பழகு அபராஜிதா.. மும்பை ஹெட்டுவார்ட்டர்ஸ உன்னை நம்பி ஒப்படைச்சா நீ ஆபிசுக்குப் போகாம ஊரைச் சுத்திக்கிட்டு இருந்திருக்க.. வெட்டியாய் சேலரி கொடுக்கிற அளவுக்கு நான் பரந்த மனதுக்காரன் இல்லை.. சொல்லிட்டேன். . தாத்தா, பாட்டி.. நீங்க ரெண்டு பேரும்தானே இவனுக்கு சப்போர்ட்டுக்கு வருவீங்க..? உங்களுக்காத்தானே இவனுக்கு வேலை கொடுத்தேன்..? கொடுத்த வேலையை உருப்படியாய் பார்க்காம ஊரைச் சுற்றிக்கிட்டு இருக்கானே.. இதற்கு மேலும் இவன் என் கம்பெனியில கண்டினியூ பண்ணனுமா..?”

“வேணாம் கொச்சு மோனே..” யாழினி பதறினாள்..

அவளுக்கு அபராஜிதனைப் பற்றித் தெரியும்.. ரவிச்சந்திரனின் கம்பெனியில் பொறுப்பான பதவியில் இருப்பதினால்தான் உறவு ஜனங்கள் சற்றாவது அவந்திகாவை மதித்து நான்கு வார்த்தைகள் பேசுகிறார்கள்.. ரவிச்சந்திரன் மட்டும் அபராஜிதனைத் துரத்தி விட்டு விட்டால் அவந்திகாவின் கதி அதோகதியாகி விடும்..

“வேண்டாம்ன்னா எப்படி பாட்டி..? இவன் மும்பை ஆபிசுக்குப் போய் ஒரு மாதத்திற்கும் மேலாகிறது... எங்கே போனான்.. எதற்காக போனான்னு கேட்டுச் சொல்லுங்க..”

“ரவி பறயறதிலயும் நாயமுண்டு அபராஜிதா.. நினக்குன்னு பொறுப்பான ஜோலியளிச்சா அதில பணி செய்யாம புறத்தாலே அலையறது நியாயமில்ல.. கேட்டோ.. மும்பையை விட்டு நீ எவடுந்து போயி..?”

யாழினியின் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் திணறினான் அபராஜிதன்.. புரையேறுவதைப் போல அவன் இருமல..

“வெள்ளம் கழிக்கு மோனே..” என்று தண்ணீர் தம்ளரை மகன் கையில் திணித்தாள் அவந்திகா..

தண்ணீர் குடிப்பதைப் போல அபராஜிதன் தப்பிக்க முனைய..

“நந்தினியை உனக்குத் தெரியுமா..?” என்று நேரடியாக கேள்வி கேட்டு அபராஜிதனின் திணறலை அதிகப்படுத்தினான் ரவிச்சந்திரன்..

“அது.. அது..” அபராஜிதன் தடுமாற..

“எதிக்கு ஈ வினாவ பறயறது ரவி..?” என்று புருவங்குலூ முடிச்சிடக் கேட்டார் அருள்மொழிவர்மன்.

“என்னையே கண்டுக்கலையேன்னு நந்தினியைப் பார்த்து இப்பத்தானே இவன் சொன்னான் தாத்தா..? எல்லோரும்தானே கேட்டுக்கிட்டு இருந்தோம்..? ஃபர்ஸ்ட் டைம் நந்தினியைப் பார்க்கிறவன் கேட்கிற கேள்வியாய் இது இல்லையே..”

“அஃதே ரவி.. ஞானும் இதை ஆலோசிச்சு.. எந்தா அபராஜிதா.. எதுக்கோசரம் நந்தினியிண்ட நீ அவ்விதம் பறஞ்சது..? பறயான்..”

“தாத்தா.. அது வந்து..”

அபாஜிதன் தட்டுத் தடுமாறிக் கொண்டிருக்க.. அந்த விசாரணைக்கும் தனக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை என்பதைப் போல கடமையே கண்ணாக சாப்பிட்டுக் கொண்டிருந்த நந்தினியின் பாராமுகத்தில் வெகுண்டாள் அஜந்தா.. எப்படியாவது அந்த விசாரணையில் நந்தினியையும் மாட்டி விட்டு விட வேண்டும் என்று கருவியவளாக குரோதமாக ரவிச்சந்திரனைப் பார்த்தவள்..

“ஈ வினாவின நந்தினியிண்ட பறயனும்..” என்றாள்..

“எந்தா..?” அருள்மொழிவர்மனின் கவனம் அஜந்தாவிடம் திரும்பியது..

“எண்ட சேட்டன அன்வர்ஷிக்கிறதப் போல நந்தினியிண்டயும் அன்வர்ஷிக்கனும் தாத்தா..” அழுத்தம் திருத்தமாக சொன்னாள் அஜந்தா..

“நந்தினியை எதுக்காக விசாரிக்கனும்..?” ரவிச்சந்திரன் கடுமையாக குறுக்கிட்டான்..

“எந்தா நியாயம் இது அத்தான்..? முன்னப் பின்னத் தெரியாத பெண் குட்டியிண்ட என்னையே கண்டுக்கலையேன்னு பறய முடியுமோ..? வைய்யான்.. (முடியாது..) பட்ஷே.. சேட்டன் நிங்க செக்கரட்டரியண்ட என்னையே கண்டுக்கலையேன்னு பறயறதிண்டுன்னா எந்தா அர்த்தம்..? ஒரப்பு (நிச்சயம்) சேட்டன நந்தினி அறியுமெண்டுதானே அர்த்தம்..?” நயவஞ்சகப் புன்னகையோடு விளக்கம் சொன்னாள் அஜந்தா..

“ஷட் அப்.. அஜந்தா..”

“என் வாயை மூட வேண்டாம் அத்தான்.. நந்தினியைத் தாத்தா அன்வர்ஷித்தே ஆகனும்..”

“இரு கொச்சு மோனே..”

அருள்மொழிவர்மன் தலையிட்டு அத்தைமகள், மாமன் மகன் சண்டையை நிறுத்தி வைத்தார்..

“பிராதின்னு வந்திட்டா அன்வர்ஷிச்சரனும்... ஆத்யம் நந்தினியிண்ட எந்துண்டு கேட்டோ.. அவகானம் அபராஜிதன ஞான் அன்வர்ஷிச்சு.. பறஞ் நந்தினி.. நீ அபராஜிதன அநியுமோ..?”

அருள்மொழிவர்மன் நந்தினியிடம் கேட்டதில் சாப்பிடுவதை நிறுத்திய நந்தினி நிமிர்ந்து நேருக்கு நேரான பார்வையுடன்..

“தெரியும் தாத்தா.. பட்.. அபராஜிதன்னு தெரியாது.. டூப்ளிகேட் ரவிச்சந்திரன்னுதான் தெரியும்..” என்றாள்..

ரவிச்சந்திரனின் கண்களில் சிறு மின்னலும் உதடுகளில் சன்னமான குறுநகையும் வந்து போனது.. நந்தினி இப்படிப் போட்டுக் கொடுப்பாள் என்று எதிர்பார்த்திராத அபராஜிதன் திருடனுக்குத் தேள் கொட்டியதைப் போலத் திறுதிறுத்தான்.. நந்தினியை மாட்டி விட முனைந்த அஜந்தாவே இந்தப் பதிலை எதிர்பார்த்திருக்கவில்லை என்பதால்.. என்னதாண்டா

பண்ணித் தொலைத்த என்று தன் அண்ணனை முறைத்து வைத்தாள்..

“டூப்ளிகேட் ரவிச்சந்திரனோ..?”

அருள்மொழிவர்மன் குழப்பமாக யாழினியைப் பார்க்க.. யாழினி ரவிவர்மனைப் பார்த்தாள்.. ரவிவர்மன் வீணாவைப் பார்க்க, வீணா தன் மகளைப் பார்த்தாள்.. ரம்ய மாலினியோ அபராஜிதன் வந்திருப்பதால் உண்டாகியிருந்த எரிச்சலையும் கோபத்தையும் மறந்து ‘ஆ’ வென சுவராஸ்யத்துடன் நந்தினியைப் பார்த்தாள்..

“நந்தினி டூப்ளிகேட் ரவிச்சந்திரனென்டா பறஞ்சது..? எண்ட செவிகளில தெற்றாக் கேட்டோ..?”

“இல்லை தாத்தா.. உங்க காதுகளில சரியாதான் விழுந்திருக்கு.. எனக்கு இவரை டூப்ளிகேட் ரவிச்சந்திரன்னுதான் தெரியும்.. இவர் பெயர் அபராஜிதன்னு இப்ப நீங்கள்ளாம் பேசிக்கிட்ட பின்னாலதான் தெரியும்.. இதுவரைக்கும் இவரை டூப்ளிகேட் ரவிச்சந்திரன்னுதான் நினைச்சிருந்தேன்..”

“ஆ விஜாரம் எந்துக்கு கொச்சு மோளே..?” அருள்மொழிவர்மன் விசாரித்துக் கொண்டிருக்க நந்தினி

நடந்ததைச் சொல்லி விட்டால் என்ன செய்வது என்ற பதட்டத்துடன்..

“சும்மா.. விளையாட்டுக்கு அப்படிச் சொல்லிக் கூப்பிடுவாங்க தாத்தா.. இல்லை நந்தினி..?” என்று குறுக்கிட்டான் அபராஜிதன்..

“இல்லை..” திட்டவட்டமாக மறுத்தாள் நந்தினி..

“உங்களிடம் விளையாட்டுப் பேச்சு பேசும் அளவிற்கு பழக்கம் இல்லையே மிஸ்டர் அபராஜிதன்.. உங்களிடம் ஏன் நான் விளையாட்டாய் பேசனும்..?”

அபராஜிதனின் முகம் கருத்து விட்டது.. நந்தினியிடம் உரிமை பாராட்டிப் பேசினால் ரவிச்சந்திரன் டென்ஷன் ஆகிறான் என்பதை கண்டு வைத்திருந்ததினால் தான் அவனையே நந்தினி கண்டு கொள்ளவில்லையே என்று சொல்லி ரவிச்சந்திரனைக் கடுப்பேற்றி விட்டான்.. அது பூதாகரமாக மாறி வேறு வகையில் அபராஜிதனை அட்டாக் பண்ணுகிறதே..

‘அஜந்தா.. காப்பாத்து..’ தங்கையிடம் அவன் விழிகள் மன்றாடின..

தமையனின் சரணாகதியில் அஞ்சாதே.. ஞான் இருக்கிறேன் என்று அபயக் கரம் உயர்த்திய எதற்கும் அஞ்சாத அஜந்தா தமையனின் சார்பில் நந்தினியை மண்ணைக் கவ்வ வைக்க களம் இறங்கினாள்..

“ஈஸிட்..? பழக்கமில்லாத ஆளுக்கா டூப்ளிகேட் ரவிச்சந்திரன்னு பெயர் வைப்ப..? இண்ட்ரெஸ்டிங்..” அஜந்தாவின் சுட்டிக்காட்டலில் அருள்மொழிவர்மன் யோசனையானார்.. யாழினியும் நந்தினியை ஒருவிதமாக பார்த்து வைத்தாள்.. பெரியவர்களின் முக மாறுதலில் அஜந்தாவின் முகத்தில் வெற்றிக்களிப்பு வந்தது.. அபராஜிதன் பக்கம் பாய்ந்த பந்தை மிகச் சாதுர்யமாக நந்தினியின் பக்கம் அவள் திருப்பியடித்து விட்ட சாகசத்தில் பல்லைக் கடித்தான் ரவிச்சந்திரன்..

‘யாருகிட்ட..?’ நந்தினியை ஏளனமாக பார்த்தாள் அஜந்தா.. நந்தினி அலட்டிக் கொள்ளவேயில்லை.. அமைதியாக அஜந்தாவைப் பார்த்தவள் படு நிதானமாக..

“உங்க அண்ணனுக்கு டூப்ளிகேட் ரவிச்சந்திரன்னு நான் பெயர் வைக்கலைங்க.. அவரேதான் வைத்துக் கிட்டார்..” என்று சொன்னாள்..

தங்கையின் சாதுர்யத்தில் தப்பித்து விட்ட நிம்மதியுடனிருந்த அபராஜிதன் மறுபடியும் பொறியில் மாட்டிக் கொண்டவனாக எலி போல தத்தளிக்க ஆரம்பித்தான்..

“தெளிவாப் பறயனும் நந்தினி.. எண்ட கொச்சு மோன் அவனிண்ட பேரு டூப்ளிகேட் ரவிச்சந்திரனெண்டா பறஞ் ..?”

“அப்படிச் சொன்னால்கூடத் தேவலையே தாத்தா.. இவர் ஒரிஜினல் ரவிச்சந்திரனே இவர்தான்னு சொன்னார்..”

‘போட்டுக் கொடுத்துட்டாளே..’ அபராஜிதன் தலை மீது கை வைத்து இடிந்து போய் உட்கார்ந்து விட்டான்..

அவன் சொன்ன பொய்யை அருள்மொழிவர்மனின் முன்னிலையில் நந்தினி போட்டு உடைத்து விட்ட துக்கம் ஒரு புறமிருக்க.. அவன் சொன்ன பொய்யை ரம்ய மாலினியும் கேட்டுக் கொண்டிருக்கிறாள் என்ற சங்கடம் மறுபுறம் அவனைப் பிய்த்துத் தின்றது..

அவந்திகாவின் பிள்ளைகளுக்காக வாதாட அருள்மொழிவர்மனும் யாழினியும் மட்டுமே இருந்தார்கள்.. அவர்களின் ஆதரவு கொஞ்சம் குறைந்தால்கூட அவந்திகா திண்டாடிப் போவாள்.. அவர்களின் ஆதரவு குறையாமல் இருக்க வேண்டுமென்றால் அவந்திகாவின் குடும்பம் பொய்,

பித்தலாட்டங்களைக் கைவிட்டுக் கப், சிப்பென்று இருக்கும் இடம் தெரியாமல் இருக்க வேண்டும்..

அவந்திகாவினாலும், அவளது குடும்பத்தினராலும் இருக்கும் இடம் தெரியாமல் இருந்து விட முடியுமா..? யார் அவர்கள்..? ஒரு சாம்ராஜ்யத்தையே தொலைத்து விட்டு.. ரவிச்சந்திரனின் சாம்ராஜ்யத்திலும் கை வைக்க முடியுமா என்று காலம், நேரம் பார்த்துக் காத்துக் கொண்டிருப்பவர்கள்.. அவர்களிடம் போய் இருக்கும் இடம் தெரியாமல் இருக்கச் சொன்னால் எப்படி இருப்பார்கள்..? அவர்களின் ஆட்டத்தினால் அருள்மொழிவர்னும், யாழினியும் தங்களின் ஆதரவுக் குரல்களை உரத்து ஒலிக்க முடியாமல் சங்கடப் பட்டுப் போனார்கள்.. அது அவந்திகாவை அச்சுறுத்தியது..

அத்தியாயம் 114

அவந்திகாவின் கணவர் யோகானந்தன்தான் முதன் முதலாக அந்த வயோதிகர்களுக்கானத் தலைவலியைத் துவக்கி வைத்தார்.. அவர்களும் மருமகன் ஆயிற்றே என்று பொறுத்துப் போனார்கள்.. தாங்கிப் பிடித்தார்கள்.. அவரோ அவர்களின் பொறுமையை உடைத்தார்.. தாங்கிப் பிடித்தவர்களின் தலைமேல் ஏறி உட்கார்ந்து ஆட்டிப் படைத்தார்.. ரவிச்சந்திரன் அவரை அடக்கி மூலையில் உட்கார வைத்ததினால் அவர்கள் தப்பிப் பிழைத்து நிம்மதிப் பெருமூச்சு விட்டார்கள்.. இல்லையென்றால் என்ன ஆவது என்று நினைத்துப் பார்க்கவே அவர்களின் நெஞ்சம் நடுங்கியது..

யோகானந்தனின் பாரத்தை அவர்களால் சுமக்க முடியுமா..? சுமக்கும் அளவிற்கான பாரத்தையா அவர் சுமத்துவார்..? நசுக்கி உருத்தெரியாமல் ஆக்கிவிட மாட்டாரா..? யோகானந்தனின் கதை இப்படியென்றால் அவந்திகா பெற்ற பிள்ளைகளோ தகப்பனுக்கும் மேல் இருந்தார்கள்.. இருப்பதற்கு அரண்மனைவாசம்.. உடுத்த உயர்ந்த ரக துணிவகைகள்.. செலவுக்கு கை நிறைய பணம்..

படிப்பதற்கு தமிழகத்தின் ஊட்டி கான்வென்ட்.. சென்னையின் கல்லூரிபடிப்பு.. என்று ஒரு குறைவு மில்லாமல் ரவிச்சந்திரன் வாழ வைத்தால் அவர்கள் இருவரும் உண்ட வீட்டிற்கே ரெண்டகம் நினைத்தார்கள்..

அந்த வீட்டின் இளவரசியான ரம்ய மாலினியின் சுதந்திரத்தை அபகரித்தான் அபராஜிதன்.. கள்ளப் பார்வையும் கபடப் பேச்சுக்களுமாக ரம்ய மாலினியை சுற்றி வளைத்தான்.. அபராஜிதனுக்குப் பரிந்து பேச முடியாமல் அருள்மொழிவர்மனும் யாழினியும் கைகளைப் பிசைந்து கொண்டிருக்க கொஞ்சம்கூடத் தயவு தாட்சண்யம் காட்டாமல் அவனை மும்பைக்கு விரட்டியடித்தான் ரவிச்சந்திரன்.. வயநாட்டு அரண்மனைப் பக்கம் வரக் கூடாதென்று எச்சரிக்கை செய்திருந்தான்.. அதை மீறி அபராஜிதன் வந்து நின்றதை அருள்மொழிவர்மனும் யாழினியும் விரும்பவில்லை.. ரவிச்சந்திரனின் கோபத்தை அது அதிகப்படுத்திவிடும் என்று பயந்தார்கள்.. அவர்கள் பயந்ததைப் போலவே ரவிச்சந்திரன் சப்தம் போட ஆரம்பித்து விட்டான்..

அஜந்தா எவருக்கும் அடங்காதவள்.. அவள் மட்டும் அவந்திகாவின் வயிற்றில் பிறக்காமல் இருந்திருந்தால்

அருள்மொழிவர்மனும், யாழினியும் அவளிடம் முகம் கொடுத்துக் கூடப் பேசியிருக்க மாட்டார்கள்.. அத்தகைய குணநலன்கள் கொண்டவள் அவள்..

பல தருணங்களில் ரவிச்சந்திரன் சுட்டிக் காட்டாமலே அஜந்தாவின் குறைகளை உணர்ந்து அவளை அதட்டி முகம் சுளித்திருக்கிறார்கள்.. வயதில் பெரியவர்கள்.. தாத்தா, பாட்டி என்ற எண்ணமின்றி எதிர்த்துப் பேசிவிட்டு வாங்கிக் கட்டிக் கொள்வாள் அஜந்தா.. இப்படியும் ஒரு பெண் இருப்பாளா என்று மனம் வெறுத்துப் போனாலும் அவர்களும் வெறுத்து விட்டால் அவந்திகாவின் நிலை என்ன ஆவது என்ற பெற்ற பாசத்தினால் பெரியவர்கள் பொறுமை காத்தார்கள்.. அந்த பொறுமை வெடித்துச் சிதறிவிடக் கூடாது என்ற பயம் அவந்திகாவுக்கு.. அதை வெடிக்க வைக்கும் செயலை அவள் பெற்ற பிள்ளைகள் செவ்வனே செய்து கொண்டிருந்ததில் அவள் நிலை குலைந்து போயிருந்தாள்..

நந்தினியிடம் அபராஜிதன் பேச்சுக் கொடுத்ததில் அவளுக்கென்னும் ஆட்சேபனையில்லை.. ரவிச்சந்திரன் கடுப்பாவதில் அவளுக்கும் சந்தோஷமே.. அதை உடனடியாகச் செய்ய வேண்டுமா என்பதுதான் அவளுக்கு.. அப்போதுதான் அபராஜிதன் வந்திருப்பதற்காக அருள்மொழிவர்மன் கடிந்து

கொண்டிருந்தார்.. கூட இருந்த யாழினி அதை ஆமோதித்தாள்.. உடனே

“எந்தா அச்சா இது..? எண்ட மோன ஞான் கண்ணில நோக்கக்கூட வெய்யானோ..? ஈ கொட்டாரத்தில நிண் மோன் மட்டும் பார்யாள், பிள்ளைகளெண்டு ஜீவிதம் செய்யலாம்.. நிங்க மோஸிண்ட மோன் கண்காணாத தேசத்தில ஜோலி பாக்கனுமோ..? நிங்களிண்ட ஞானும் எண்ட குடும்பமும் அடைக்கலமெண்டு வந்திட்டதினால

ஈ கொட்டாரத்தில நாங்க அகதிகளாயிட்டோ..?” என்று பொருமி அழுது ஆகாத்தியம் பண்ணி விட்டாள்..

“அதல்ல மோளே.. ரவியிண்ட வெப்பராளம் அதிகமாயி.. அதுக்கோசரம் ஞான் பறஞ் ..” அருள்மொழிவர்மன் இறங்கி வந்து மகளைச் சமாதானம் செய்வித்து அப்போதைக்கு எதையும் விசாரிக்காமல் விட்டிருந்தார்..

‘அப்படியே விட்டிருக்க வேண்டாமோ.. ஒற்று, ரண்டு திவசம் கழிச்சு ஆ நந்தினியிண்ட சரசமா சம்சாரிச்சு பேடிக்க வைச்சு அவளிண்ட நாடுக்கு துரத்தலாமல்லோ.. இன்னல வந்து.. புலரியில ஊன் கழிக்கறப்பவே சம்சாரிச்சு.. ஈ

பெண்குட்டி, எந்துன்னா எண்ட மோன டூப்ளிக்கேட்டுன்னு பறஞ் ..' அவந்திகாவுக்குத் தலைவேதனையாக இருந்தது..

"ரவியிண்டப் பேரத் தன்னோடப் பேரா அபராஜிதன் பறஞ்சதோ...?" அருள்மொழிவர்மனின் கண்கள் இடுங்கின..

"ஆமாம் தாத்தா.. இவர் பெயர் ரவிச்சந்திரன்னுதான் சொன்னார்.." அழுத்தம் திருத்தமாகச் சொன்னாள் நந்தினி..

"எந்தினா அவ்விதம் பறஞ்சது..?"

"எனக்குத் தெரியாது தாத்தா.. மங்களூர் எக்ஸ்பிரஸ்ஸில கோழிக்கோடு வருகிறதுக்காக நான் டிரெயினில் உட்கார்ந்திருந்தேன்.. இவர் என் கம்பார்ட்மெண்ட்டில் ஏறினார்.. இவர் பெயர் ரவிச்சந்திரன்னு சொன்னார்.. என்னுடன் இவர்தான் டிராவல் பண்ணப் போகிறதா சொன்னார்.. இவர் பீலா விட்டுக்கிட்டு இருந்தப்ப பாஸ் வந்திட்டாரா.. அவரைப் பார்த்ததும் இவர் ஓடிட்டார்.. அப்ப இவர் ஓடின ஓட்டத்தைப் பார்க்கனுமே ரம்யா.. என்னமா ஓடினார் தெரியுமா..? ஹா.. ஹா.. ஹா.."

நந்தினி குலுங்கிச் சிரிக்க அபராஜிதனைக் கடுப்படிக்க கிடைத்த வாய்ப்பை இறுக்கிப் பற்றிக் கொண்டவளாய் ரம்ய மாலினியும் கலகலத்து சிரித்தாள்..

அருள்மொழிவர்மன் அபராஜிதனைப் பார்த்த பார்வையில் மரியாதை சுத்தமாக இல்லை.. வெறுப்புக் கொட்டிக் கிடந்தது..

“எனிக்குச் சம்சாரிக்கப் பிரியமில்லா அவந்திகா.. நிண்ட மோனுக்காக ரவி ஜோலி போட்டுக் கொடுத்து.. பட்ஷே.. நிண்ட மோன் அங்ஙன இருந்து பனி செய்யாம ஊரைச் சுற்றி இவ்விதம் இருந்தா ஞான் எங்ஙனம் நிண்ட மோனுக்காக ரவியிடம் பரிஞ்சு சம்சாரிக்கும்..? கேட்டோ..”

“எந்தா அச்சா இது..?”

“பறயாண்டாம் மோளே..”

“இது நியாயமில்ல அச்சா.. ரவிய மட்டும் நிங்க கொச்சு மோனின்டு பறஞ் .. அபராஜிதன எண்ட மோனின்டு பறஞ் .. எந்த அச்சா.. அபராஜிதன் நிங்க கொச்சு மோனல்லோ..”

“ஆ பந்தத்துக்குண்டான பெகுமானத்த அபராஜிதன் வழங்கனுமல்லோ.. மும்பையில ஜோலி பார்க்கிறவன் சென்னைக்கு எந்துக்குப் போயி..?”

“வல்லதும் ஜோலியிருந்திருக்கலாமல்லோ..?”

“ஆ வல்லதும் ஜோலி எந்துன்னு பறயனும் மோளே.. சென்ட்ரல் ரயில்வே ஸ்டேஷனில.. மங்களூர் எக்ஸ்பிரஸ்ஸில ஏறி ஞான் ரவிச்சந்திரனாக்கும் எண்டு நொனா (பொய்) பறயறதோ..? பறயனும் மோளே..”

அவந்திகா என்னத்தைச் சொல்வாள்..? இப்படி கட்டிய கணவனும், பெற்ற பிள்ளைகளும் ஏடாகூடமாக எதையாவது செய்து வைத்து இம்சையைக் கொடுக்கிறார்களே.. ஒரு பொறுப்பான (?) குடும்பத்தலைவியாக இருப்பது என்பது மிகமிகக் கடினமான ஒன்று என்று ஏங்கிப் போனாள்..

தாயும், தமையனும் கிடுக்கிப்பிடியில் மாட்டிக் கொண்டுத் தவிப்பதைக் காணச் சசிக்கவில்லை அஜந்தாவுக்கு, யோகானந்தனைப் பார்த்தாள்.. நடந்து கொண்டிருக்கும் வாக்குவாதம் அவருடைய மகனைப் பற்றியது என்ற உணர்வின்றி அவர் காலைப் பலகாரத்தை ஒருபிடி பிடித்துக் கொண்டிருந்தார்..

‘இப்பேற்பட்ட அச்சனுக்கு பிள்ளைகளாப் பிறந்தால் இந்தக் கதிதான்..’ வெறுத்துப் போனாள் அஜந்தா..

யோகானந்தனைச் சொல்லியும் குற்றமில்லை... அவர் ரவிச்சந்திரனின் முன்னிலையில் வாயைத் திறக்க மாட்டார்..

அதிலும் அவர் மீதும் அவர் பெற்ற பிள்ளைகளின் மீதும் தவறு இருந்தால் மூச்சை விடக்கூட யோசிப்பார்.. அரண்மனையை விட்டு வெளியே போ என்று ரவிச்சந்திரன் விரட்டி விட்டால் எங்கே போவது என்ற பயத்தில் மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டு அகப்படும் மறைவிடத்தில் பதுங்கி விடுவார்..

அங்கே பதுங்க வேண்டுமானால் டைனிங் டேபிளின் அடியில்தான் பதுங்கியாக வேண்டும்.. அப்படிப் பதுங்க நேர்ந்தால் டிஃபன் தட்டோடு பதுங்கும் யோசனையோடு கைப்பிடியாய் காலைப் பலகாரம் இருந்த தட்டை இறுக்கிப் பிடித்திருந்தார்..

தாயோ செய்வதறியாத நிலையையில் நிற்கிறாள்.. தகப்பனாரால் யாதொரு பிரயோஜனமும் இல்லை என்றானதில் அஜந்தாவே தமையனைக் காக்க கச்சை கட்டிக் கொண்டு சண்டைக்கு கிளம்பினாள்.. அவள் வாயைத் திறக்கப் போகிறாள் என்பதை அவளது முகக் குறிப்பிலிருந்து உணர்ந்து கொண்ட ரம்ய மாலினிக்கு கவலை உண்டானது.. எப்பேற்பட்ட நெருக்கடியான நிலையையும் தவிடு பொடியாக்கி விடும் தகிடுதத்தம் தெரிந்தவள் அஜந்தா.. சுமத்தப் படும் குற்றங்களை அப்படியே திருப்பி எதிரிகளின் பக்கம் எய்து விடுவாள்.. அதற்கான லாஜிக்கைப் பற்றி அலட்டிக் கொள்ளவே

மாட்டாள்.. கழுத்தை அறுத்தபடி என் கத்திக்கு குறுக்கே உன் கழுத்து ஏன் வந்தது என்று கருத்தறுபடுபர்களை குற்றவாளியாக்கிவிடும் அடாவடிக்காரிதான் அஜந்தா..

அந்த அஜந்தா என்னத்தைச் சொல்லித் தொலைக்கப் போகிறாளோ என்ற யோசனையுடன் தாயைப் பார்த்தாள் ரம்ய மாலினி.. வீணாவுக்கும் அதே கவலைதான் என்பது இறுக்கமான அவளது முகத்திலிருந்தே தெரிந்தது.. இயல்பான நந்தினியை சூழ்ச்சிகள் நிரம்பிய அஜந்தா என்னவெல்லாம் பேசப் போகிறாளோ என்ற அச்சம் அவர்கள் இருவரின் மனங்களிலும் கவிந்திருந்தது.. வீணாவின் முக இறுக்கத்தை ஜாடையாகக் கவனித்த ரவிச்சந்திரனின் விழிகள் சிவந்தன..

‘இவ மட்டும் நந்தினியை எக்குத்தப்பாப் பேசிப் பார்க்கட்டும்.. அப்புறமா இருக்கு இவளுக்கு..’ மனதுக்குள் கருவினான்..

“எண்ட சேட்டன் நிண்ட பாஸைக் கண்டு பிடறியில பாதம் பட ஓடியது இருக்கட்டும் நந்தினி.. எண்ட சேட்டன் எதிக்காக நிண்ட கம்பார்மெண்டில ஏறிப் பேசனும்..?”

என்னவோ கோர்ட்டில் குறுக்கு விசாரணை செய்யும் வக்கீலைப் போலத் தோரணையாக கேட்டாள் அஜந்தா..

“அதை உங்க அண்ணனிடம்தானே நீங்க கேட்கனும்..?” அலட்டிக் கொள்ளாமல் பதில் சொன்னாள் நந்தினி.. வீணாவின் முகம் சற்றுத் தெளிந்தது.. ரம்ய மாலினியும் தான்.. நந்தினியின் துறுதுறுப்பான புத்திசாலித்தனம் அஜந்தாவின் சூழ்ச்சி வலையை எதிர்த்து எந்த அளவுக்குத் தாக்குப் பிடித்து எதிர்த்து நிற்கப் போகிறது என்ற கவலை மட்டும் அவர்களுக்குக் குறையவில்லை..

என்னதான் புத்திசாலியாக இருந்தாலும் நந்தினி நேர் வழியில் பயணிக்கிறவள்.. யோகானந்தனின் மகளாக, அயராஜிதனின் தங்கையாக பிறந்து தொலைத்திருக்கும் அஜந்தா குறுக்கு வழியைத் தவிர வேறு வழியை அறியாதவள்..

நேர்மையும் கயமையும் மோதிக் கொண்டால் எது வெல்லும்..? இன்றைய காலகட்டத்தில் கயமையை எதிர்த்து நேர்மையால் எதுவும் செய்ய முடியவில்லையே..

“சேட்டனிடம் கேட்டா ஞான் நந்தினியை அறியும்ன்னு பறயும்.. அப்படியோ..? நந்தினி எண்ட சேட்டன அறியுமோ..?”

விஷம் தடவிய கேள்வி.. உனக்கும் என் அண்ணனுக்கும் தொடர்பு உண்டு என்று உறுதிப் படுத்த முனையும் கேள்வி.. அதைக் கேட்டுக் கொண்டிருந்த அருள்மொழிவர்மன் முகம் சுளித்தார்.. அதில் செய்வதறியாது தவித்துக் கொண்டிருந்த அவந்திகா உயிர்த்தெழுந்தாள்..

'எண்ட மோள் வல்லிய சாகசக்காரியாக்கும்..' தாய் மனம் சிலாகித்தது..

நந்தினி நிமிர்ந்து அஜந்தாவின் முகத்தை நேருக்கு நேராகப் பார்த்தாள்.. அருள்மொழிவர்மனைப் பார்த்த அதே நேருக்கு நேரான பார்வை.. அதில் தெரிந்த நேர்மையில் அருள்மொழிவர்மனின் புருவங்கள் நெறிந்தன..

"கடைத் தெருவுக்குப் போகிறோம்.. ஜவுளி வாங்கறோம்.. ஜவுளிக்கடையில நாம மட்டுமா ஜவுளி எடுக்கிறோம்..? எத்தனையோ பேர் எடுக்கறாங்கள்ல..? அப்படி யதேச்சையாப் பார்த்துக்கிறவங்க தெரிஞ்சவங்களா ஆகிருவாங்களா..?"

"ஆக மாட்டாங்கதான்.. பட்ஷே.. ஆ ஜவுளிக் கடையில பேசிப் பழகியிருந்தா தெரிஞ்சவங்களா ஆகலாமில்ல..?"

“பேசினது உண்மை.. பழகலை.. எங்க தமிழ்நாட்டில செஞ்சின்னு ஒரு ஊர் இருக்கு.. அங்கே ஃபேமஸான ஒரு கோட்டை இருக்கு.. அந்தக் செஞ்சிக் கோட்டையைச் சுற்றிப் பார்க்க நானும் என் ஃபிரண்டும் போனோம்..”

“கேர்ள் ஃபிரண்டா..? பாய் ஃபிரண்டா..?”

அஜந்தாவின் குசும்புத்தனமான நட்டுக்குத்தலான கேள்வியில் எரிச்சலைடைந்தாள் நந்தினி.. இவளெல்லாம் என்ன வகையில் சேர்த்தி என்று கோபம் வந்தது.. இவளுடைய அண்ணனின் ரோமியோத் தனத்தை மறைக்க ஊரார் வீட்டுப் பெண்ணின் மீது பழி போடுவதைப் போலப் பேசி வைப்பாளா..?

அஜந்தா பேசியது ஒருபக்கமென்றால்.. இதையெல்லாம் கண்டு கொள்ளாதே.. ப்ளீஸ்.. என்ற தினுசில் முணுமுணுத்தபடி கெஞ்சுதலாக அவளைப் பார்த்து எவருக்கும் தெரியாமல் கன்னத்தில் போட்டுக் கொண்டு சோதித்து வைத்தான் அபராஜிதன்..

இருமுனைத் தாக்குதல் என்பது இதுதானோ..?

அத்தியாயம் 115

இதையெல்லாம் ரவிச்சந்திரன் கவனித்துக் கொண்டிருக்கிறான் என்ற நினைவில் நந்தினியின் மனம் நடுங்கியது.. மற்றவர்கள் முன்னால் அவளை விட்டுக் கொடுக்காமல் பேசிக் கொண்டிருப்பவன் தனிமையில் அவள் சிக்கினால் கொத்துப் புரோட்டா போட்டு விடுவான் என்பதை அவள் அறிவாளே..

'சும்மாயிருடா..' மனதுக்குள் அபராஜிதனைத் திட்டித் தீர்த்தாள்..

என்ன மனிதன் இவன்..! எதிரில் இருக்கும் ரம்ய மாலினியிடமும் நூல் விடுகிறான்.. நந்தினியிடமும் கடலை போடுகிறான்.. மனதுக்குள் இவனை காதல் மன்னன் என்று நினைத்துக் கொண்டிருக்கிறானா..?

"நான் தஞ்சாவூரில் பிறந்து வளர்ந்தவ அஜந்தா.. பூர்விகம் கிராமம்.."

"பாத்தாலே தெரியுது.."

"எது..?"

"அரதப் பட்டிக்காடுன்னு.."

“தெளிவாத் தமிழ் பேசறிங்க.. இப்படியே மெயின்டெயின் பண்ணலாமே.. எதுக்காக மலையாளத்தை இம்சிக்கிறீங்க..?”

“அதைப் பத்தி மலையாளம் கவலைப்படனும்.. நீ கவலைப்படக் கூடாது.. கேரளத்தில பிறந்து வளர்ந்தவ மலையாளத்தை எப்படி வேணும்னாலும் பேசுவா..”

“பேசிக்கங்க.. நீங்களாச்சு.. உங்க மலையாளமாச்சு.. எனக்கென்ன வந்தது..? பாவம் மலையாளம்ன்னு சொல்ல வந்தேன்..”

“நீயெல்லாம் பாவம் பார்க்கிற அளவுக்கு எங்க மலையாளமில்லை..”

“அப்படியே இருக்கட்டும்.. எனக்கொன்னும் அப்ஜெக்ஷன் இல்லை..”

“ஏன்..? அப்ஜெக்ட் பண்ணித்தான் பாரேன்..”

“என்ன தேவைக்கு..? எனக்கிருக்கு ஆயிரம் வேலை..”

“அப்ப எனக்கு வேலையில்லை... நான் வெட்டியாத்தான் இருக்கேன்னு சொல்கிறயா..? வேலை பார்த்துச் சோறு சாப்பிடனும்ங்கிற அவசியம் எனக்கில்லை.. கேட்டோ.. ஞான் ஈ தரவாடின் இளவரசியாக்கும்..”

“என்னவோ போங்க.. ரம்யா ஒர்நாள் கூட இதைப் போலச் சொன்னதில்லையா.. அதனால எனக்கு இந்த இளவரசி கதையெல்லாம் மறந்து போச்சு..”

நந்தினி மறைமுகமாக ரம்ய மாலினிதான் அந்த அரண்மனையின் இளவரசி என்பதை உணர்த்தியதில் அஜந்தாவுக்கு வெறி வந்து விட்டது.. என்ன தைரியம் இவளுக்கு என்று கொந்தளித்தவள்..

“உனக்கு அது மட்டுமா மறந்து விட்டது..? ஈ வயநாட்டுக்கு நீ ஜோலி பார்க்க வந்தவள் என்பதும் மறந்து விட்டதல்லோ.. ஜோலி பார்க்க வந்தவளை கொட்ட ாரத்தில (அரண்மனையிலே) சேர்த்தா இப்படித்தான் ஆகும்..” என்று மட்டம் தட்டினாள்..

நந்தினிக்கு மனம் வலிக்கத்தான் செய்தது.. ஆனாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் சிரித்தாள்..

“எப்படியும் ஆகலை அஜந்தா.. எனக்கு நான் யார், ரம்யா யார் அப்படிங்கிறதெல்லாம் நல்லா நினைவில் இருக்கு.. ஸோ.. யு டோன்ட் வொர்ரி..”

நீ யார் என்பதை நீயும் நினைவில் வைத்துக் கொள் என்று நந்தினி சொல்லாமல் சொல்லியதில் வெகுண்டாள் அஜந்தா..

“அருள்மொழிவர்மனோட கொச்சு மோள் ஞான்.. எனிக்குக் கவலையெண்டா என்னின்னு தெரியாது.. கேட்டோ..” என்று நொடித்தாள்..

‘அதுதானே.. யோகானந்தனின் மகள்ன்னு சொல்லவே மாட்டியே.. இதிலெல்லாம் நீ படு விவரம்..’

அஜந்தா அனைத்திலும் விவரமானவள் என்பதில் நந்தினிக்குள் குளிர் பரவியது.. அஜந்தாவுக்கு நந்தினியைக் கண்டாலே ஆகவில்லை என்பது பட்டவர்த்தனமாகத் தெரிந்தது.. அவளால் நிச்சயமாக நந்தினிக்கு அபாயம் நேரும் என்று நந்தினியின் உள்மனம் சொன்னது..

‘அதுக்குள்ளே அப்பாம்மா மனசு மாறி என்னை அழைத்துக்கிட்டுப் போயிரனும்..’

அவளையே பார்த்துக் கொண்டிருந்த ரவிச்சந்திரனின் ஆழ்ந்த பார்வையில் நந்தினியின் மனம் குழுங்கியது.. வயநாட்டை விட்டுப் போக வேண்டு மென்றால் ரவிச்சந்திரனையும் விட்டுப் போயாக வேண்டுமே..

‘போய்த்தான் ஆக வேண்டும்.. இவன் யார்.. நான் யார்..?’ நந்தினிக்குள் விசனம் பொங்கியது.. எவருடனும் ஒட்டாமல் அவள் தனித்து நிற்பதைப் போனற் சோக மேகம் கவிந்தது.. தன் உணர்வுகளைக் கட்டுப் படுத்திக் கொண்டாள்..

இது மருக வேண்டிய தருணமல்ல.. அஜந்தாவின் வேள்விக் கணைகளை எதிர் கொண்டு பதில் சொல்ல வேண்டிய தருணம்.. அதில் அவளது சுயமரியாதையும் அடங்கியிருக்கிறது.. அருள்மொழிவர்மனின் மனதில் சந்தேகப் பொறியை உண்டாக்கியிருக்கிறாள் அஜந்தா.. அது பற்றி எரிவதற்குள் ஊதி அணைத்தாக வேண்டும்.. நந்தினிக்கு அது அதி முக்கியம்..

“பட்டிக்காடு பூர்வீகம்ங்கிறதினால எனக்கு பாய் ஃபிரண்டைப் பற்றியெல்லாம் தெரியாது.. ஃபிரண்டுன்னா அது கூடப் படிச்ச, பழகின தோழிகள்தான்.. நான் சொன்ன ஃபிரண்டின் பெயர் உத்ரா.. செஞ்சிதான் அவ பிறந்த ஊர்.. அவளோட மேரேஜ் எங்கேஜ்மெண்டுக்காக செஞ்சி போயிருந்தப்பதான் செஞ்சிக் கோட்டையைச் சுத்திக் காட்ட என்னை அழைத்துக்கிட்டுப் போனாள்..”

எதற்காக செஞ்சி போனாள்.. யார் வீட்டுக்குப் போனாள் என்பது உட்பட அனைத்து விவரங்களையும் வரிசைப் படுத்தித் தெளிவாக நந்தினி விவரித்ததில் அருள்மொழிவர்மனின் சந்தேக முகபாவனை மாறியது.. அதில் அஜந்தா உஷாரானாள்..

"உயிரே, உயிரேங்கிற மணிரத்னம் சாரோட படப் பாடலை ஷீட் பண்ணின பேகல் போர்ட் கோட்டை இருக்கிற ஊர் எங்க ஊர்.. உன் செஞ்சிக்கோட்டையைப் பற்றி எங்களுக்கு இண்ட்ரெஸ்ட் இல்லை கேட்டோ.." என்று எரிந்து விழுந்தாள்..

"உங்களுக்குன்னு ஒட்டுக்கா ஜாயின் அடிச்சா எப்படி..? உங்க அண்ணனுக்கு எங்க ஊருக் கோட்டையைப் பத்தின இண்ட்ரெஸ்ட் இருந்ததினால தான் மும்பையில இருந்து செஞ்சிக்கு ஓடோடி வந்தாராம்.. அதை முதலில் கேட்டோ.." ரவிச்சந்திரனின் விழிகளோ பாட்டனாரிடம்..

'கேட்டோ..?' என்றன..

அவர் பல்லைக் கடித்தார்.. என்னதான் கோபம் இருந்தாலும் அத்தையின் மகன் என்ற பரிதாபத்தில் மும்பையில் அபராஜிதனுக்கு வேலை கொடுத்து அனுப்பி

வைத்திருந்தான் ரவிச்சந்திரன்.. கிடைத்திருந்த வேலையை இறுகப் பற்றிக் கொண்டு உண்மையாக அபராஜிதன் உழைத்தால் எதிர்காலத்தில் மும்பை எக்ஸ்போர்ட் கம்பெனியை அபராஜிதனுக்கே கொடுத்து விடும்படி ரவிச்சந்திரனிடம் பரிந்துரை செய்ய வேண்டுமென்ற அருள்மொழிவர்மனின் திட்டத்தில் மண் விழுந்து விட்டதில் அவருக்கு ஆத்திரம் மேலிட்டது..

அவருக்கு என்ன தெரியும்..? அபராஜிதனின் நோக்கம் மும்பைக் கம்பெனிக்கு மட்டும் உரிமையாளன் ஆவதில்லை என்பது.. அவன் ரவிச்சந்திரனின் ஒட்டு மொத்தச் சொத்திற்கும் அதிபதி ஆக விரும்பினான்..

“எந்துக்கு நீ செஞ்சிக் கோட்டை போயி..?” அவள் அபராஜிதனைக் கடிந்து கொண்டார்..

“அதான்.. சுற்றிப் பார்க்கப் போனான்னு நந்தினி சொல்கிறாளே தாத்தா..” அஜந்தா குறுக்கிட்டாள்.. அபராஜிதனைப் பற்றி நந்தினிக்குத்தான் தெரியும் என்ற விதத்தில் அவள் பேசியதில் ரவிச்சந்திரன் மூர்க்கமானான். .

‘சும்மாயிருடி.. ஏற்கனெவே அவன் கொலைவெறியில இருக்கிறான்.. நீ வேற கிளப்பி விடாதே..’

நந்தினி ரவிச்சந்திரனைப் பார்ப்பதைத் தவிர்த்தாள்.. சர்வ

ஜாக்கிரதையாக அவளுக்கு அபராஜிதனை எப்படித் தெரியும் என்று விளக்கம் சொல்லியும் அஜந்தா அதை எளிதாக முறியடித்து அபராஜிதனுக்கும் நந்தினிக்கும் ஆழ்ந்த பழக்கம் உண்டு என்று நிலை நிறுத்தப் பார்த்ததில் அவளுக்குள் கலவரம் உண்டாகத்தான் செய்தது... மனதை திடப்படுத்திக் கொண்டு அஜந்தாவின் பேச்சை எதிர் கொண்டாள்..

"ஊஹூம்.. நான் சொல்லலை அஜந்தா.. உங்க அண்ணன்தான் சொன்னார்.. மாத்திப் பேசாதீங்க.." கண்டிப்புடன் மறுத்தாள் நந்தினி..

"யாரிடம் சொன்னான்..? உன்னிடம்தானே சொன்னான்..? வழியில் போகிறவளை நிறுத்தி வைத்துச் சொல்கிற அளவுக்கு அவன் என்ன பிராந்தோ.. (பைத்தியமோ..)..? நீ கேட்டதினால்தானே சொன்னான்..? நீ ஏன் கேட்ட..?"

"திரும்பவும் தப்பாச் சொல்றீங்க.. நான் கேட்கலை.. இன்னும் சொல்லப் போனா உங்க அண்ணனிடம் நான் பேச்சே வைத்துக்கலை.. கோட்டையைப் பத்தி உயர்வா உத்ராவிடம் பேசினார்.. அவளோட ஊரைப் பத்தி வெளியூர்

ஆள் பெருமையாப் பேசினதில உத்ராவுக்கு சந்தோஷமாகிருச்சு.. உங்க அண்ணன் யார்.. எவர்ன்னு அவதான் விசாரிச்சா.. இவரும் அவளிடம் தான் ஒப்பிச்சாரு.. தட்ஸ் ஆல்..''

''தட்ஸ் ஆல்ன்னு நழுவினா விட்டுருவேனா..?''

''விடாம இறுக்கிப் பிடித்து என்ன செய்யப் போறிங்க..? செஞ்சிக் கோட்டையைச் சுற்றிப் பார்க்க என் தோழியுடன் போனேன்.. அங்கே உங்க அண்ணனும் கோட்டையைச் சுற்றிப் பார்க்க வந்திருந்தார்.. என் தோழியிடம் கோட்டையைப் பத்தி உயர்வாப் பேசினார்.. அதில அவ இம்ப்ரெஸ் ஆகி உங்க அண்ணனைப் பத்தி விசாரிச்சா.. இவரும் மும்பையில இருக்கிதாகவும் செஞ்சிக் கோட்டை மேல இருக்கிற இண்ட்ரெஸ்டினால பார்க்க வந்ததாகவும் கதை சொன்னாரு..''

''கதையா..?''

''யெஸ்.. உங்க அண்ணன் எதைச் சொன்னாலும் அது கதையாகத்தான் இருக்கும்ன்னு எனக்குத் தோணி வைக்குது.. ஏன்னு தெரியலை.. ஒருவேளை இவர் டிரெயினில ஏறித்

தன்னை ரவிச்சந்திரன்னு சொல்லிக்கிட்டதினால அப்படித் தோணி வைக்குதோ என்னவோ..”

“ஷட் அப் நந்தினி.. எண்ட சேட்டன் ரிச் பேமிலியில பிறந்து வளர்ந்தவன்.. உன்னிடமெல்லாம் கதை சொல்கிற அளவுக்கு தரம் இறங்க மாட்டான்..”

அஜந்தா பேசுவதை லட்சியம் செய்யாமல் அருள்மொழிவர்மனைப் பார்த்தாள் நந்தினி..

“அவர் சொன்னதைத்தான் நான் சொல்கிறேன் தாத்தா.. இவரை செஞ்சியில் பார்த்தப்ப நான் எதுவும் பேசலை.. உத்ராதான் இவரிடம் பேசிக்கிட்டு இருந்தா.. இரண்டு நாள் கழிச்சு நான் கோழிக்கோடு வர மங்களூர் எக்ஸ்பிரஸுக்காக காத்திருந்தப்ப ரயில்வே ஸ்டேஷனில் பிளாட்பாரக் கடையில் புத்தகம் வாங்கிக்கிட்டு இருந்தப்ப இவர் வந்து என்னிடம் பேச்சுக் கொடுத்தார்.. அதைப் பார்த்துட்டு உத்ராவும் அவளோட வுட்-பியும் வந்து இவரைத் திட்டினாங்க.. இவர் ஸாரி கேட்டுட்டு போயிட்டார்.. டிரெயின் வந்ததும் நான் ஏறி உட்கார்ந்துட்டேன்.. உத்ராவும் அவளோட வுட்பியும் பை சொல்லி போயிட்டாங்க.. அதுக்கப்புறம் பார்த்தா திடிர்ன்னு இவர் என் முன்னால வந்து உட்கார்ந்து இவர்தான் என்கூட

டிராவல் பண்ணப் போகிற ரவிச்சந்திரன்னு சொன்னார்.. நானும் நிஜம்தான்னு நினைச்சுட்டேன்.. சாதாரணமாப் பேசிக்கிட்டு இருந்தவர் பாஸ் வர்றதைப் பார்த்ததும் ஓடிட்டார்.. ஹா..ஹா..”

தன்னை நிருபித்து விட வேண்டுமென்ற கவலையுடன் கோர்வையாகச் சொல்லிக் கொண்டே வந்தவளுக்கு அவன் ரவிச்சந்திரனைக் கண்டதும் ஓடியதை விவரிக்கும் போது

மட்டும் சிரிப்பை அடக்க முடியவில்லை.. அதில் ரம்ய மாலினி சிரித்து விட்டாள்..

அஜந்தாவின் முகம் கொடூரமானது.. சிரித்துக் கொண்டிருந்த ரம்ய மாலினியை துவேஷத்துடன் பார்த்தாள்.. போடி என்பதைப் போல அவள் அலட்சியமாக முகத்தைத் திருப்பிக் கொண்டதில் ஆடிப் போய் விட்டாள்..

அபராஜிதனுக்குப் பயந்து இருபத்தி நான்கு மணி நேரமும் தாயின் முந்தானைக்குள் ஒளிந்து கொண்டிருக்கும் ரம்ய மாலினி அபராஜிதனின் தங்கையை அலட்சியப் படுத்துவதா..

‘மகளே.. இருக்குடி உனக்கு..’ வன்மம் வைத்தாள்..

“நிண்ட குடும்பத்தோட நிலையைப் பத்தின ஓர்மை நினக்கு இல்லே அபராஜிதா.. எதுக்கோசரம் ஈ வய நாட்ட விட்டுப் போயி..? ஆ ஓர்மையும் நினக்கு இல்ல... ஞான் எந்து செய்யும் அவந்திகா.. நிண்ட பிள்ளைகளைப் பத்தின அக்கறையும் பாசமும் எனக்கில்லண்டு நீ பறஞ் .. இவ்விதத்தில அலைஞ்சு நொனா பறஞ்சா எவ்விதம் பாசம் வரும்..? கேட்டோ..”

“எண்ட மோன் சின்னவனல்லோ அச்சா.. நிங்க அவன ஷெமிக்கனும்.. மாப்புத்தரனும்..”

“எங்ஙன மோளே..? எவுடுந்து இவன் வருந்நூ. .? ஞான் அறியேன்.. நீ அறியுமோ..? மும்பையிலதான இவனிண்ட ஜோலி..? ஆ ஸ்தலத்தில இவன் இல்லா.. செஞ்சிக்குப் போயி.. சென்னைக்கும் போயி.. திடிரென்று வயநாட்டுக்கு வந்து.. எனிக்குப் பிடிக்கல மோளே.. இவன் மேல எனிக்கு இஷ்டமில்லா.. நம்ப தரவாடோட பெகுமானத்த இவன் ரட்சிக்க மாட்டான் அவந்திகா.. கேட்டோ..”

“அச்சா..”

அவந்திகா விக்கித்து விட்டாள்.. அருள்மொழிவர்மனே கை கழுவி விட்டால் அபராஜிதனின் நிலை என்னவாகும்..?

அதுவரை அவள் அதுபோன்ற கடுஞ்சொற்களைச் சொன்னதில்லையே...

"பேடிக்காண்டாம் அம்மே.."

அத்தியாயம் 116

அஜந்தா அன்னையைத் தேற்றினாள்.. எவ்வளவுதான் தேறுதல் சொன்னாலும் அவந்திகாவின் கண்ணீர் அடங்கவேயில்லை.. வயநாட்டு ஊற்றைப் போல நிற்காமல் பொழிந்து கொண்டே இருந்தது.. அழுது அழுது அவளது கண்கள் சிவந்திருந்தன..

“சேட்டன தாத்தா கடிந்து கொள்வது புதுசானு..? எந்தினா கரையூந்தே அம்மே..? வேணாம் அம்மே..”

“நன்னா போயிண்டிருக்கப்ப வல்லதும் வந்து எண்ட மனச நொம்பரமாக்கி.. ஈ நந்தினிக்குட்டி எவுடுந்து வருந்நூ மோளே..? இருந்திட்டிருந்த துன்பங்க போதாதின்னு இவ இன்னம் கொஞ்ஞு பிணக்க உண்டாக்கி.. எண்ட அச்சன் வெப்பராளம் கொண்டு..”

“விடனும் அம்மே.. ஆரானு ஈ நந்தினி..? ஆ அரிச்சந்திரன் இல்லத்துக்கு அரிசில் இல்லத்துக் காரியோ..? எனிக்கு என்னவோ சம்சயம் உண்டாகி..”

“எந்துக்கு மோளே..”

“ஈ நந்தினி நொனா பறஞ் ..?”

“ஆ சம்சயம் எனிக்கு இல்லா.. நிண்ட சேட்டனப் பத்தி ஞானும் அறியும்.. நீயும் அறியும்.. ஆ பெண்குட்டி பறஞ்ஞது நொனா இல்ல.. ஓரப்பானு சத்தியமல்லோ..”

கிழிந்தது போ என்று தலையில் கை வைத்துக் கொண்டாள் அஜந்தா.. பெற்றதாயே மகனைப் பற்றி நந்தினி சொன்னதில் நிச்சயமாக உண்மைதான் இருக்க வேண்டும்.. அது பொய்யாக இருக்க வாய்ப்பே இல்லையென்று அடித்துச் சொன்னால் எப்படி..?

“நிங்க போதுமல்லோ.. சேட்டன் சரியில்லேண்டு பேரு கட்டறதுக்கு..”

“சத்தியம் எதுவோ அதித்தான் ஞான் பறஞ் .. நிண்ட சேட்டன் எதிக்காக சென்னை போயி..?”

“இதி ஞானும் அறியும்.. அம்மையும் அறியும்.. பட்ஷே சேட்டன் இவ்விதம் சொதப்பிண்டு வந்துன்னுதான் நாம அறியாம்.. கேட்டோ..”

நந்தினியின் அறிவுறுத்தலில் அடங்கிப் போனாள் அவந்திகா.. அவர்கள் இருவரும் பூடகப் பார்வைகளைப் பார்த்துக் கொண்டார்கள்.. அஜந்தாவின் முகத்தில் கொடூரம் விரவியிருந்தது..

“விஜாரம் கொள்ளனும் அம்மே.. ஒரப்பானு ஞான் ஈ ரவிச்சந்திரன பழி தீர்த்து..”

“எங்ஙன அஜந்தா..? எந்து செய்யி..?”

“வல்லதும் செய்யி அம்மே.. ரவிச்சந்திரன நிம்மதியா சிரிக்க விட மாட்டேன்.. கேட்டோ.. ஒந்நு.. ஆ ரவி என்ன விவாகம் கழிக்கனும்.. அல்லா.. நிம்மதியிண்டி அலையனும்..”

அவந்திகாவின் மனதிலும் அதே வன்மம்தான்.. அருள்மொழிவர்மனும் யாழினியும் மகள் மீது மட்டற்ற பாசம் கொண்டிருந்தார்கள்.. ரவிவர்மன் தங்கைக்கொரு கீதம் பாடிக் கொண்டிருந்தார்.. அந்த வயநாட்டு அரண்மனையில் அவந்திகா வைத்ததுதான் சட்டமாக இருந்தது... என்று ரவிச்சந்திரன் தலையெடுத்தானோ.. அன்றே அவந்திகாவின் தலையில் தட்டி மூலையில் உட்கார வைத்து விட்டான்..

“ஈ கொட்டாரத்தில அவனிட்ட கொட்டத்த அடக்கனும் மோளே..”

“ஒரப்பானு அம்மே.. ஞான் அதி செய்யி..”

என்றைக்கும் இல்லாத வகையில் அருள்மொழிவர்மன் அதிகமாக மகளைத் திட்டி விட்டார்.. அதையும் மற்றவர்களின் முன்னிலையில் திட்டி விட்டார்.. அதை யாழினி தடுக்கவில்லை.. மௌனமாக இருந்தாள்.. இவையிரண்டும் அவந்திகாவின் மனதை வாள் கொண்டு அறுத்தன.. அவள் மனதை துயரம் பிழிந்து எடுத்துத் துவைத்து உலர்த்தியது.. மனம் ஆறவில்லை.. தேறவில்லை..

“ஈ பெண்குட்டி எதிக்காக வயநாட்டுக்கு வந்து..?”

“ஆ வினாவத்தான் ஞானும் பறஞ் .. கேட்டோ.. இவ வரலைன்னு எவர் அழுது..?”

“அதிப் பறஞ் மோளே.. எண்ட அச்சன் என் மேல பிணக்கம் கொண்டு.. வெப்பராளம் கொண்டு.. எண்ட அம்மே எதியும் பறஞ்ஞல.. எல்லாம் இவளாலே..”

“வல்லிய வார்த்தை பறஞ் .. ஞான் இவள ஓட்டி..”

“எந்து திவசம் மோளே..”

“திவசமா..? ஒந்நு மணிக்கயிறு போதும் அம்மே..”

அதுசரி என்று அலுப்பானது அவந்திகாவுக்கு.. அந்த நந்தினியோ ஓட்டுப்புல்லைப் போல ரவிச்சந்திரனுடன் ஒட்டிக்

கொண்டே அலைகிறாள்.. அவளை ஓட்டுவது அத்தனை சுலபமா..? எந்த நாளில் ஓட்டி விடுவாய் என்று அவள் மகளைக் கேட்டால் ஒரு மணி நேரம் போதும் என்கிறாளே.. அது சாத்தியமா..?

“நோக்கு மோளே.. மணிக்கயிறு திவசமாயி, திவசம் ஆய்ட்சாவாகி.. ஆய்ட்சா மாசமாகி.. மாசம் கொள்ளமாகிண்டு ஆகிருமல்லோ.. ரவிச்சந்திரணிண்ட செக்கரட்டரிய ஓட்டறது அத்தினி சுலபமல்ல மோளே.. எதி பறயறதா இரிந்தாலும் யோசிச்சு பறஞ்ஞனும் கேட்டோ..” மகளுக்கு அறிவுறுத்தினாள்..

அஜந்தா அதை விரும்பவில்லை.. அவளுக்கு யார் அறிவுரை சொன்னாலும் பிடிக்காது.. சொல்பவர்களை விரோதியைப் போலப் பார்த்து வைப்பாள்.. எனக்குத் தெரியாதா என்ற ஆணவம் அதில் கொப்பளிக்கும்.. அன்றும் அதுபோன்ற பார்வையுடன் நகர்ந்து விட்டாள்..

‘இவளிக்கு சினம்தான் பகையல்லோ..’ அவந்திகா விசனத்தில் ஆழ்ந்தாள்..

யோகானந்தனைப் போன்ற கணவனும்.. அபராஜிதனைப் போன்ற மகனும்.. அஜந்தாவைப் போன்ற

மகளும் வாய்த்தால் விசனம் கொள்ளாமல் எப்படி இருக்க முடியும்..?

நந்தினியின் விவரிப்பில் கோபம் சற்றுக் குறைந்தவனாக காணப்பட்டான் ரவிச்சந்திரன்.. அதில் சற்று நிம்மதி யானாள் நந்தினி.. இப்படியா ஒரு மனிதன் உறுத்துப் பார்த்தே உயிரை வாங்குவான் என்று அலுப்பாக இருந்தது அவளுக்கு.. எவருக்காகவும் இந்த அளவுக்கு அவள் பதறியதில்லை.. ஆனானப்பட்ட மேகநாதனின் அதட்டலையே கண்டு கொள்ள மாட்டாள்.. தானாய் சரியாகி விடுவார் என்று இருந்து விடுவாள்..

இங்கே அப்படியா..?

எந்த நேரம் முறைப்பான்.. எந்த நேரம் சிரிப்பான் என்று தெரிய மாட்டேன் என்கிறதே.. இப்படித்தான் ஒருநாள்..

“தொட்டதுக்கெல்லாம் கோவிச்சுக்கறிங்க பாஸ்..” என்று சிணுங்கினாள்..

அவன் பதில் சொல்லாமல் ஒரு மார்க்கமாக பார்த்து வைத்தான்.. ஆழ்ந்த அந்தப் பார்வையில் அரண்டு போனாள் நந்தினி..

‘இவன் பார்வையே சரியில்லையே..’

அவளது சந்தேகம் ஊர்ஜிதமானது.. படு நிதானமாக அவன் கேட்டான்..

“எங்கே..? நீதான் என்னைத் தொட மாட்டேன் என்கிறாயே.. நீ தொட்டால் நான் கோவிச்சுக்குவேனா..? சொல்லு..”

பேசுவதற்கு அவனுக்கு எளிதாகத்தான் இருக்கிறது.. அவள்தான் தூக்கத்தைத் தொலைத்து விட்டு இரவு முழுவதும் படுக்கையில் புரண்டு கொண்டிருக்கிறாள்.. அதைப்பற்றி அவனுக்கென்ன..? மேய்ச்சல் பார்வையும் கிளர்ச்சி கொள்ளச் செய்யும் பேச்சுக்களுமாக அவளை முற்றுகையிட்டு மூர்ச்சையாகச் செய்கிறானே..

எஸ்டேட்டின் வேலைகள் கொஞ்சம் பிடிபட்டிருந்தன.. மாதாந்திர வரவு செலவு அறிக்கைகளைத் திறம்படத் தயாரிக்கும் நுட்பம் அவளுக்குத் தெரிந்து விட்டிருந்தது... அதற்கு அவன் பாராட்ட வேண்டாம்.. அதிலும் குற்றம் கண்டு பிடித்து கத்தித் தொலைக்க வேண்டாமே.. அங்கே அவள் மட்டுமா இருக்கிறாள்..? ஆனந்தனும் சேர்ந்து அல்லவா இருக்கிறார்..?

ஆனந்தனைப் பற்றி நினைக்கும் போதே மோகனைப் பற்றிய நினைவும் சேர்ந்து வந்தது.. கூடவே ரவிச்சந்திரன் கூப்பாடு போடும் நேரமெல்லாம் மோகன் வந்து நிற்கும் நேரமாகவே இருந்திருக்கிறது என்ற நினைவும் வந்ததில் வெறுத்துப் போனது நந்தினிக்கு..

'எங்கேயாச்சும் ஓடி விடலாமா..?'

எங்கே ஓடுவது..? ஏற்கனெவே தஞ்சையிலிருந்து தப்பித்து ஓடி வந்திருக்கிறாள்.. வயநாட்டிலாவது அவளுக்கென்று இருக்க இடமும் பாசம் காட்ட சில மனிதர்களும் பாதுகாப்பும் கிடைக்கிறது.. மற்ற இடங்களில் இவை கிடைக்குமா..?

எதற்கெடுத்தாலும் குற்றம் கண்டு பிடித்தால் அவளும்தான் என்ன செய்வாள்..? மோகனைக் கண்டாலே ரவிச்சந்திரன் காண்டாகிறான்.. எதற்கு வம்பு என்று நந்தினி ஒதுங்கி ஒதுங்கிப் போனாலும் மோகன் சற்றும் சலிக்காமல் அவளைச் சுற்றி வந்து கடுப்பேற்றினான்.. நந்தினியைக் கண்டாலே பாட ஆரம்பித்து விடுகிறான்..

"மலரே.. நின்னைக் காணாதிருந்தால்

மிழிவேகிய நிறமெல்லாம்

மாயுண்ண போலே..”

குரல் என்னவோ அழகாகத்தான் இருந்தது.. அச்சு அசல் ஜேசுதாஸ்தான்.. இதைச் சொன்னால் ரவிச்சந்திரன் அவளைக் கொன்று புதைத்து விடுவான்.. ரசிக்கக் கூடத் ‘தடா’ போடுகிறான்.. கொடுமை.. அவள் எதைச் செய்தாலும் குற்றம் என்கிறான்..

“கை பட்டால் குற்றம்.. கால் பட்டால் குற்றம்..” என்று பொருமினால்..

“நீலிமலை வுட்-ஹவுஸில் என்மேல் கையைக் காலைப் போட்டுத் தூங்கினாயே.. அப்ப உன் கை, கால் என் மேலே பட்டதுக்கு நான் குற்றம் சொன்னேனா..?” என்று கேட்டு அவளைக் கன்னம் சிவக்க வைத்தான்..

இது வேலைக்கு ஆகாது என்று தோன்றியது நந்தினி.. ரவிச்சந்திரனின் ஆளுமையில் அவளுக்கு மூச்சு முட்டியது.. அதே சமயம் அவனது கட்டுப்பாட்டை உடைத்தெறியவும் அவளால் முடியவில்லை.. விலங்கைப் பூட்டிச் சிறை வைக்கிறான் என்று தெரிகிறது.. அதை உடைத்து வெளியேற வேண்டுமென்ற வேகம் ஏன் அவளுக்கு வரவில்லை..?

அடக்கு முறையை அவள் விரும்ப மாட்டாளே.. அவன் அவளை அடக்கி ஒடுக்கிக் கொண்டிருக்கிறானே..

இருக்கும் இம்சை போதாதென்று அபராஜிதன் வேறு இம்சை கொடுத்துத் தொலைத்தான்.. அவளைத்தேடி வந்து பேச்சுக் கொடுத்தான்.. வருகிறதுதான் வருகிறான்.. ரவிச்சந்திரன் இல்லாதபோது வந்து தொலைக்கிறானா..? ரவிச்சந்திரனின் கண்களில் படும்படிதான் அவளிடம் பேச வருவான்..

“ஐ ஆம் ஸாரி நந்தினி.. என்னாலே நீங்க எக்ஸ்பிளெயின் பண்ண வேண்டியதாகிப் போச்சு.. அஜந்தாதான் தாத்தாவைத் தூண்டி விட்டுட்டா.. இதில் என் தப்புன்னு எதுவும் இல்லை..”

டைனிங் ஹாலில் இருந்து தப்பித்து மாடியேறிக் கொண்டிருந்தவளை வழி மறித்து அவன் மன்னிப்புக் கேட்க மாடிப்படிகளின் உச்சத்தில் நின்றிருந்த ரவிச்சந்திரன் கனல் கக்கினான்..

“இப்பத்தானே உன்மேல குற்றமில்லாததைப் போல தாத்தாகிட்ட விளக்கம் கொடுத்துட்டு வந்த..? பேசிக் கொஞ்ச

நேரம் கூட ஆகலை.. படியேறி வர்றப்பவே அவனிடம் பல்லைக் காட்டற..”

சிரித்துக் கொண்டிருக்கிாய் என்று சொல்லி யிருந்தால் கூட அவள் தாங்கிக் கொண்டிருப்பாள்.. பல்லைக் காட்டினாள் என்று சொன்னதில் பல்லைக் கடித்தாள்..

துன்பமாக இருந்தது.. அபராஜிதனை ‘வில்லன்’ என்று நினைக்க முடியவில்லை.. ‘ஜொள்ளன்..’ என்றுத்தான் நினைக்க முடிந்தது.. சிரிக்கச் சிரிக்கப் பேசினான்.. அஜந்தாவைப் போலத் துச்சமாகப் பார்க்காமல் நட்புடன் பார்த்தான்.. அவனே சொன்னதைப் போல டைனிங் ஹாலில் அவன் ஒன்றும் நந்தினியின் மீது பழி போடவில்லையே.. அவனுக்கும் நந்தினிக்கும் சம்பந்தம் உண்டு என்பதைப் போல அஜந்தாதானே பேசி வைத்தாள்..? அதை அபராஜிதன் ஆட்சேபிக்கவில்லை உறைக்கவில்லை..

நந்தினியின் எண்ணமே வேறு.. அவள்தான் அந்த வயநாட்டு அரண்மனைக்கு விருந்தாளி.. அபராஜிதன் அப்படியல்ல.. அந்த அரண்மனையில் பிறந்து வளர்ந்த அவந்திகாவின் செல்ல மகன்.. அருள்மொழிவர்மனுக்கு

மகள்வழிப் பேரன்.. அங்குதான் அவன் வளர்ந்திருக்கிறான்.. ரவிச்சந்திரனின் அத்தை மகள்..

உரிமையுள்ள உறவினனாக அரண்மனையில் வளைய வருபவனிடம் நந்தினி விரோதம் பாராட்ட முடியுமா..? அவன் விரோதம் பாராட்டும் வகையில் நடந்து கொள்ளவில்லையே.. அவனாக வந்து பேசும்போது நந்தினி நின்று கூடப் பேச மாட்டாள்.. அவசரமாக அகன்று விடுவாள்.. போகிற போக்கில் எதையாவது பதில் சொல்லுவாள்.. அதற்கே ரவிச்சந்திரன் அவளை வாட்டி எடுத்து விடுவான்.. நந்தினிக்கு வாழ்க்கையே வெறுத்து விடும்..

“எதுக்குப் பல்லைக் காட்டிக்கிட்டு இருக்கிற..?”

ஒருநாள் தோட்டத்தில் அபராஜிதன் சொன்ன ஜோக்குக்கு சிரித்து விட்டக் குற்றத்திற்காக நந்தினியிடம் இத்தனை நாகரிகமான கேள்வியைக் கேட்டு வைத்தான் ரவிச்சந்திரன்..

“நத்திங்..”

“ஒன்றுமில்லாததற்கு இப்படிச் சிரிப்பாயா..? அப்படிச் சிரிக்கிறவங்களுக்கு என்ன பெயர் தெரியுமா..?”

அவளைப் பைத்தியம் என்று மறைமுகமாக சொல்கிறான்.. நந்தினிக்கு எரிச்சல் வந்தது..

“தெரியும் சாரே.. பிராந்துன்னுதானே பேரு..?” என்று முறைத்தாள்..

“கோபம் மட்டும் வந்திருது.. செய்கிறது தப்புங்கிற அறிவு மட்டும் இல்லை.. ஆள் வளர்ந்து என்ன பிரயோஜனம்..? அறிவு வளரனுமில்ல..?”

“ஆளோடு அறிவும் வளர்ந்துதான் இருக்கு.. உங்க ரிலேடிவ் ஜோக்கடிச்சா சிரிக்கக் கூடாதா..?”

“அவனை ரிலேடிவ்ன்னு சொல்லாதே..”

“பெந்துன்னு சொல்லவா..?”

இமை கொட்டி அவள் கேட்க.. இமைக்காமல் அவன் பார்த்தான்.. இமைகள் படபடக்க எங்கோ அவள் பார்த்தாள்.. அவன் முகத்தில் மென்மை படர்ந்தது..

‘வாய்..!’ ரசித்தான்..

‘ஒன்று, இரண்டு மலையாள வார்த்தைகளைத் தெரிஞ்சு வைச்சுக்கிட்டு இவ பண்ணுகிற அழும்பு இருக்கே.. அப்பப்பா..’

“அவன் நல்லவனில்லை நந்தினி..”

இதமாகச் சொன்னான்.. அதில் நந்தினி விழிகளை உயர்த்திப் பார்த்தாள்.. அதற்காகவே காத்திருந்ததைப் போல அவன் பார்வை அவள் பார்வையைக் கவ்விப் பிடித்ததில் கிளர்ச்சி அடைந்தாள்.. கிறக்கமானாள்..

'இப்படியே ஸாப்ட் நேச்சரா இவன் இருந்தா எவ்வளவு நல்லாயிருக்கும்..?' அவள் மனம் ஏங்கியது..

அவளது ஏக்கத்தை அவள் விழிகள் பிரதிபலித்ததில் இரண்டே எட்டில் அவளை அணுகியவன் அணைத்துக் கொண்டான்.. மறுக்காமல் அவன் மார்பில் சாய்ந்து கொண்டவளுக்கு உலகம் மறந்து போனது..

அத்தியாயம் 117

பச்சைக் கம்பளத்தை விரித்து வைத்து அவளை உட்காந்து இளைப்பாறச் சொல்லி அழைத்தது புல்வெளி.. கேரளத்துப் புல்வெளிகள் கூட படு அழகுதான்.. செதுக்கி வைத்தச் சதுரக் கட்டத்திற்குள் இருக்கும்.. வரைபடம் வரைந்து வளர்த்து விட்டதைப் போன்ற நேர்த்தி.. இறைவனால் ஆசிர்வதிக்கப் பட்ட இயற்கையின் கொடை கேரளா.. காணக் காணத் தெவிட்டாத அழகு.. வெப்பமில்லாக் குளிர் நிறைந்த வளமான மலைப் பிரதேச மலையாள மாநிலம்.. கண் கொள்ளாக் காட்சிகளைத் தினமும் கண்டு தன் செல்ஃபோனில் படம் பிடித்துப் பத்திரப் படுத்திக் கொண்டாள் நந்தினி.. தஞ்சைக்குப் போன பின்னால் அனைவரிடமும் காட்ட வேண்டும்.. இவ்வளவு அழகான மலைநாட்டில் நான் இருந்தேனே என்று பெருமை பீற்றிக் கொள்ள வேண்டும்..

“என்ன செய்கிற..?”

அவள் செல்ஃபோனில் படம் பிடித்துக் கொண்டிருப்பதைப் பார்த்த ரவிச்சந்திரன் விசாரித்தான்.. அவள் நாக்கைத் துருத்தி அழகு காட்டிவிட்டு அவன் கோபித்துக் கொள்வானோ என்ற

பயத்துடன் அவனைப் பார்த்தாள்.. அவன்தான் எதற்கு கோபித்துக் கொள்வான்.. எதற் குக் கொஞ்சுவான் என்று தெரிய மாட்டேன் என்கிறதே.. ஒரு நிலையான புத்தியுடன் இருந்து தொலைக்கிறானா..? அடங்க மறுத்துக் காற்றில் அலைபாய்ந்து அவனுடைய முன் நெற்றியில் படிந்து முகக் கவர்ச்சியை அதிகப்படுத்தும் முரட்டுத்தனமான சிகையைப் போல கட்டுக்குள் அடங்காத முரட்டுக் காளையாய் இருந்து தொலைக்கிறானே..

அன்று உல்லாச மனநிலையில் இருந்தான் போல.. அவளது நாக்குத் துருத்தலை ரசித்துச் சிரித்தான்..

‘ஹை..!’ நந்தினியின் மனம் சிறகடித்தது..

அவனது உல்லாசம் அவளுக்கு உற்சாகத்தைக் கொடுத்தது.. அது ஏன் என்ற ஆராய்ச்சியில் அவள் இறங்கவில்லை.. அபராஜிதன் வந்த பின்பு ரவிச்சந்திரன் எப்போதும் முகத்தில் முள்ளைக் கட்டி வைத்ததைப் போல சிடுசிடுப்புடனே காணப்பட்டான்.. அத்தி பூத்தாற் போலதான் உல்லாச மனநிலையில் இருப்பான்.. அதில் நந்தினி சந்தோஷப்படாமல் இருக்க முடியுமா..? அதை ஏன், எதற்கு என்று காரணம், காரியம் கண்டு பிடித்து ஆராய்ச்சி செய்ய

வேண்டிய அவசியதான் என்ன..? அவன் அவளுடைய பாஸ்.. அவன் என்ஜாய் பண்ணினால் இவள் ஹேப்பி என்று கூவி விட்டுப் போய் விடுவதே சாலச் சிறந்தது..

“பார்த்தாத் தெரியலை..? படம் பிடிக்கிறேன்..” துடுக்குத் தனமாக பதில் சொன்னாள் நந்தினி..

“ஊஹூம்..?” அவன் புருவங்களை உயர்த்தி வசீகரமாக சிரித்து வைத்தான்.. அவனுடைய வசீகரத்தில் மனம் மயங்கினாள் நந்தினி.. பேசாமல் அவனிடம் ஐ லவ் யு சொல்லி விடலாமா என்று மனம் ஏங்கியதில் திடுக்கிட்டுப் போனாள்.. அவன்மீது ஆசையாசையாய் இருந்து தொலைத்ததில் மிரட்சி வந்தது.. அலைபாயும் அவனது சிகையில் சிக்கிய அவள் மனது அலைபாய்ந்தது.. அதை மறைக்க..

“எதுக்கு இந்த ஊஹூம்..?” என்று சண்டைக்குப் போனாள்.. பதிலுக்கு அவன் பார்த்த ஆழ்ந்த பார்வையில் சிறைபட்டுப் போனவளாக சிலையானாள்.. சகலத்தையும் மறந்து நீயே எனக்குச் சகலமும் என்று அவன் மார்பில் அடைக்கலமாகி விடத் துடித்தது அவள் மனது..

“போட்டோவைப் பார்த்தாத்தான் உனக்கு இந்த இடம் நினைவுக்கு வருமா..?”

அவன் கேட்ட கேள்வி அவளுக்குப் புரிந்தும் புரியாமல் திகைப்பைக் கொடுத்தது.. பூடகமாக எதையோ சொல்கிறான் என்று மட்டும் புரிந்தது.. அது என்னவாக இருக்கும்..?

“இந்த இடம் நினைவுக்கு வரனும்ங்கிறதுக்காக படம் பிடிக்கலை பாஸ்.. இதோட அழகைப் பத்திரப்படுத்திக்க படம் பிடிக்கிறேன்..”

“அதை மனதில் பத்திரப் படுத்திக்கலாமே..?”

“மனதை மத்தவங்களிடம் காட்ட முடியுமா பாஸ்..?”

ஆச்சரியத்துடன் அவளைப் பார்த்தான் அவன்.. எதற்கா க இந்த ஆச்சரியம் என்று விழித்தாள் நந்தினி.. தி கிரேட் ரவிச்சந்திரனே ஆசைப்படும் அளவிற்கு அப்படி என்னத்தைச் சொல்லி விட்டாள்..?

“நீ அறியாமல் பேசற வார்த்தைகளில் கூட ஆயிரம் அர்த்தம் இருக்கு நந்தினி.. சில சமயம் நீ கூட ஆச்சரியப்படுத்தற..?”

“அதென்ன ‘நீகூட’ன்னு ஒரு பிராக்கெட் போடறிங்க..? நானென்ன தத்தியா..?”

“பின்னே.. இல்லையா..?”

அவன் விழிகள் பளிச்சிட்டன.. அவளை மட்டம் தட்டுவதில் அவனுக்கு வந்த சந்தோஷத்தில் பல்லைக் கடித்தாள் நந்தினி..

“என்னைக் கழுவிக் கழுவி ஊத்தறதில பாஸுக்கு வளர சந்தோஷமாயிட்டு.. பேஷ்.. பேஷ்.. ரொம்ப நன்னாயிருக்கு..”

“ஹா.. ஹா..”

உரக்கச் சிரித்தபடி அவளைத் திரும்பிப் பார்த்த ரவிச்சந்திரன் இமைக்கும் பொழுதிற்குள் இமைகளைச் சிமிட்டி அவளை அரள வைத்தான்..

‘அடப்பாவி..!’ என்று தடுமாறிய போதும் அன்றைய நாள் அழகான நாள் என்று தோன்றியது நந்தினிக்கு..

‘இப்படியே குணசாலியா இவன் இருந்தா வளர நன்னாயிண்டுண்டு இருக்கும்..’ அவனைப் பார்த்தபடி நகத்தைக் கடித்துத் துப்பினாள்..

“என்ன பழக்கம் இது..? நகத்தைக் கடிக்காதே..” ரவிச்சந்திரன் அதட்டினான்..

“இதைத்தான் அவனும் சொல்வான் பாஸ்.. அதையே நீங்களும் சொல்கிறீங்க.. எப்படி பாஸ்..?” கிறுக்குத்தனமாக கேட்டு விட்டாள் நந்தினி..

“எவன் சொல்வான்..?” ஒரு தினுசான குரலில் ரவிச்சந்திரன் வினவியபோதுதான் அவள் செய்து விட்ட தவறு அவளுக்குப் புரிந்து தொலைத்தது.. இப்படியா ஆகனும் என்று நொந்து போனாள்..

‘சொந்த வாயில் சூனியத்தை வைச்சுக்கிற கெட்டிக்காரி நீ ஒருத்திதாண்டி நந்தினி.. இவன் தத்தின்னு சொன்னா மட்டும் ரோஷம் வருதே.. இப்ப தத்தித்தனமாத்த ானே பேசி வைச்சிருக்கிற..? நீ தத்தியிலும் தத்தி, கடைஞ்செடுத்த தத்திடி..’ அவள் மனது சாட்டையடிச் சான்றிதழை வழங்கியது..

“சொல்லு..” அழுத்தமான குரலில் அதட்டினான் ரவிச்சந்திரன்..

“அவன்தான் பாஸ்..” மென்று விழுங்கினாள் நந்தினி..

‘இப்படி விசாரிக்கிறானே.. டூப்ளிகேட்டின் பெயரைக் கேட்டவுடன் எப்படியெல்லாம் பேசிக் கிழிக்கப் போகிறானோ.. நந்தினி.. இன்னைக்கு உன் கதை கந்தல்தாண்டி..’ அவள் மனம் பயமுறுத்தியது..

“எவன்தான்னு சொல்லு..”

“அவன்தான் பாஸ்.. அபராஜிதன்..”

நந்தினி சொல்லி விட்டாள்.. அவள் பயந்ததைப் போலவே ரவிச்சந்திரனின் முகம் பயங்கரமாக மாறியது.. அவளை கொன்று புதைத்து விடுவதைப் போல கொலைவெறிப் பார்வை பார்த்தான்..

‘ஆத்தி..’

நந்தினிக்கு முகத்தை இருகைகளாலும் மூடிக் கொண்டு ஏதேனும் புதரில் ஒளிந்து கொள்ள வேண்டும் போல இருந்தது. ரவிச்சந்திரனின் கோப முகத்தை அவளால் கண் கொண்டு பார்க்க முடியவில்லை.. நடுங்கினாள்..

‘இருந்திருந்து இன்னைக்குத்தான் பழைய மாதிரி பேசினான்.. சிரித்தான்.. கண்ணடிச்சான்.. பாவி.. ஒரே

செகண்டில அத்தனையையும் கொட்டிக் கவிழ்த் திட்டேனே..' மனதுக்குள் அரற்றினாள்..

"ஓ..." உதடுகளைக் குவித்து ஓ போட்டான் அவன்..

'ஆரம்பிச்சுட்டான்..' நந்தினி இமைகளை மூடித் திறந்தாள்.. "நீ நகம் கடிக்கக் கூடாதுன்னு சொல்கிற அளவுக்கு உனக்கும் அவனுக்கும் பழக்கம் இருந்திருக்கு.."

"இப்படிப் பேசாதீங்க பாஸ்.. அவன்கூட நானென்ன வருசக் கணக்கில் பேசிப் பழகினேனா..? மணிக் கணக்கில் கூடப் பேசினதில்லை பாஸ்.. செஞ்சிக் கோட்டையில் பார்த்துக்கிட்டோம்.. கொஞ்ச நேரம் பேசியிருப்போம்.. அடுத்து சென்ட்ரல் ஸ்டேஷனில் பேசினான்.. உங்களைப் பார்த்ததும் ஓடிட்டான்.. அதுகப்புறமா வயநாட்டிலதான் அவனைப் பார்த்தேன்.. இந்தப் பழக்கமெல்லாம் ஒரு பழக்கமா..?"

அருள்மொழிவர்மனிடம் ஒப்பித்ததையே ரவிச்சந்திரனிடமும் ஒப்பித்தவளுக்கு ஆயாசமாக இருந்தது.. எத்தனை முறைதான் இதை ஒப்பிப்பது என்ற எரிச்சல் வந்தது..

'உனக்கெல்லாம் இந்த எரிச்சல் வரக்கூடாது.. இப்போது டூப்ளிகேட்டைப் பத்தின பேச்சை இந்தக் கம்மாண்டரா

எடுத்தான்..? நீதானே எடுத்த..? நகத்தைக் கடிக்காதேன்னு இவன் அதட்டினா ஹி..ஹி.. இனிமே கடிக்க மாட்டேன்னு சொல்லிட்டுப் போக வேண்டியது தானே..? இவனும் ஜில்லுன்னு ஆகியிருப்பானில்ல..? அதை விட்டுட்டு என்னவோ வருசக் கணக்கில் பேசிப் பழகினவ சொல்கிறதைப் போல அவனும் இதைத்தான் சொல்வான்னு சொன்னா இவன் சும்மா இருப்பானா..? இவனே வேதாளம்..! நீ முருங்கை மரத்தைக் காட்டினா ஏறாமல் தரையிலா நிற்பான்..?'

"நீ பேசுகிறதைப் பார்த்தால் அப்படித் தெரிய வில்லையே.. எதுக்கெடுத்தாலும் அவன் அப்படிச் சொன்னான் இப்படிச் சொன்னான்னு அவனையே உன் பேச்சு சுத்திச்சுத்தி வருதே.. வெறும் பேச்சுப் பழக்கத்துக்கும் இதுக்கும் கனெக்ட் ஆகலையே.. எங்கேயோ இடிக்குதே.."

"எங்கே பாஸ் இடிக்குது..? நீங்களா எதையாவது சொல்லாதீங்க.. ப்ளீஸ்.."

"நானா அவனைப் பத்தின பேச்சை எடுத்தேன்..?"

"நான்தான் எடுத்தேன்.. தப்புத்தான்.."

"அதைத்தான் நானும் சொல்றேன்.. இது தப்பா இருக்கு.."

“எது..?”

“உனக்கு அவனுக்குமான ரிலேஷன்..?”

“எனக்கு அவன் ரிலேடிவ்வா..? நல்ல கதையாய் இருக்கே.. அவன் உங்களுக்குத்தான் அத்தை மகன்..”

“உனக்கு அத்தை மகனாய் இல்லாமல் போயிட்டானேன்னு வருத்தப் படுகிறதைப் போல இருக்கே..”

“நீங்க கண்டிங்க..”

“கண்டதினால்தான் சொல்கிறேன்..”

“எதைக் கண்டீங்களாம்..?”

“அவன் உன்னைச் சுற்றிச் சுற்றி வர்றான்.. நீயும் அவன் சொல்கிறதுக்கெல்லாம் பல்லைக் காட்டற..”

“பாஸ்..”

“எதுக்குப் பல்லைக் காட்டின..?”

“எப்ப..?”

“அன்றைக்குத் தோட்டத்தில அவன் பேசினப்ப பல்லைக் காட்டலை..?”

“சிரிச்சேன்னு சொல்லுங்க.. இது லோகல் லாங்வேஜ்..”

“அவன் லோக்கலிலும் படு லோக்கலான ஆள்.. நீ நகம் கடிக்கக் கூடாதுன்னு சொன்னானா..? இன்னும் என்னவெல்லாம் சொன்னான்..?”

“நினைவில்லை..”

“ஓ.. இன்னும் என்னவெல்லாம் செய்தான்..?”

“என்னது..????”

நந்தினி அதிர்ந்து போனாள்.. ரவிச்சந்திரனின் முகத்தைப் பார்க்கக்கூட அவளுக்குப் பிடிக்கவில்லை.. என்ன கேள்வியைக் கேட்டு விட்டான் என்று அவளது மனம் குமுறியது.. மற்றவர் கேட்டால் கூட அறியாதவர்கள் கேட்கிறார்கள் என்று மனதை சமாதானப் படுத்திக் கொண்டு விளக்கம் சொல்லி விடலாம்.. அருள்மொழிவர்மனுக்கு அவள் விளக்கம் சொல்ல வில்லையே..

ஆனால்.. இங்கே இதைக் கேட்பது ரவிச்சந்திரன்..

‘கேட்கலாமா..? இவன் இப்படிக் கேட்கலாமா..? இவன் வாயிலிருந்து இப்படிப்பட்ட வார்த்தைகள் வரலாமா..? இப்படிக் கேட்க எப்படி இவனுக்கு மனம் வந்தது..? இவனுடன் பழகிய

மற்ற பெண்களைப் போல என்னை நினைத்து விட்டானா..? நந்தினியென்றால் இவனுக்கு அவ்வளவு ஈஸியா..?'

நந்தினி ஜீப்பின் கதவைத் திறக்க முயன்றாள்..

"பைத்தியமா உனக்கு..?" சீறினான் ரவிச்சந்திரன்..

"இன்னும் கொஞ்ச நாள் உங்களுடன் இருந்தேன்னா நிச்சயமா எனக்குப் பைத்தியம் பிடிச்சுரும் பாஸ்.."

"நந்தினி.."

"ஜீப்பை நிறுத்துங்க.. இல்லேன்னா நான் குதிச்சுருவேன்.."

"முட்டாள்.. இது தமிழ்நாடில்லை.. வயநாடு.."

"ஞான் அறியும்.."

தன்னையும் அறியாமல் மலையாளி போல அவள் பதில் சொன்னதில் அவன் மனம் குளிர்ந்தது.. கோபம் குறைந்தவனாக ஜீப்பை ஓரம் கட்டி நிறுத்திவிட்டு அவள் தோளில் கைபோட்டு இழுத்தான்.. முரண்டு பிடித்து விலகிய நந்தினி அவன் கையைத் தள்ளி விட்டாள்.. சிறு குழந்தையின் கோபத்தை ரசிப்பதைப் போல அவள் கோபத்தை ரசித்துச் சிரித்த ரவிச்சந்திரன்..

“ஸாரிடி செல்லம்..” என்றான்..

நந்தினியின் நாசி விடைத்தது.. உதடுகள் துடித்தன.. அவன் எடுத்துக் கொண்ட உரிமையை அவள் விரும்பவில்லை..

பேசுவதையெல்லாம் பேசிவிட்டு வாடி, போடி, என்று செல்லம் கொஞ்சுவதா என்று வெறுத்தாள்..

“மைண்ட் யுவர் டங் பாஸ்.. நான் உங்க செக்கரட்டரி..”

“பெர்சனல் மேனேஜர்ன்னு சொல்லிக்குவ..?”

“செக்கரட்டரியாவே இருந்துட்டுப் போறேன்.. அதில் ஒரு குறைவுமில்ல..”

“வேற எதில குறைவாம் என் கண்மணிக்கு..?”

“உங்க செல்லமாவும், கண்மணியாவும் இருக்கிறதிலதான் குறைவு வருது.. ஐ ஹேட் இட்.. வாடி, போடியாம்..”

ரவிச்சந்திரனின் முகம் மாறியது.. கண்கள் இடுங்க அவளை உறுத்துப் பார்த்தான்.. நந்தினி அவன் முகம் பார்க்காமல் ஜீப்பை விட்டு இறங்க முயன்றாள்.. அவளது உள்ளங்கையை இறுக்கிப் பிடித்துத் தடுத்தான்.. அவன்

விரல்களுக்கு சிறைபட்ட அவளது விரல்கள் வலித்ததில் அவள் முகத்தைச் சுளித்தாள்..

“ஓ. என் முகத்தைப் பார்த்தாச் சுளிக்கிற.. அவன் முகத்தைப் பார்த்தாச் சிரிக்கற.. ஏண்டி..? என்னைப் பிடிக்கலை.. அவனைப் பிடிக்குதா..?”

“ஆமாம்.. ஆமாம்.. ஆமாம்..”

நெருஞ்சி முற்களாய் தைத்த அவனது வார்த்தைகளின் வீரியம் தாங்காமல் சொல்லி விட்டாள் நந்தினி..

“என்னடி சொன்ன..?”

உன்மத்தம் கொண்டவனாக அவள் கன்னத்தில் அறைந்து விட்டான் ரவிச்சந்திரன்..

அத்தியாயம் 118

குனிந்த தலை நிமிராமல் வேலையில் கவனமாக இருந்தாள் நந்தினி.. ரவிச்சந்திரன் கேட்கும் விவரங்களைப் பதில் சொல்லாமல் பிரிண்ட் அவுட் எடுத்து அவனுடைய டேபிளில் வைத்தாள்.. அவளைச் சந்திக்க முயலும் அவனது பார்வையினைத் தவிர்த்தாள்..

அவன் புருவங்கள் முடிச்சிட்டன.. ஒரு வாரமாக தொடரும் அவளது மௌன யுத்தத்தை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. அவள் முகத்தில் பரவியிருந்த மெலிதான சோகம் அவனை பாதித்தது.. முதன் முதலாக அவன் பார்த்தபோது இருந்த துறுதுறுப்பு எங்கே போனது..? அதை அவன் காணாமல் போக வைத்து விட்டானா..? அவளது துள்ளலையும் துடிப்பையும் மீட்டெகக அவன் துடித்தான்.. "நந்தினி.." இதமாக அழைத்தான்..

அவள் அசையவில்லை.. பதுமை போல பிடிவாதமாக கம்யூட்டரின் திரையில் பார்வையைப் பதித்திருந்தாள்..

"என்னுடன் பேச மாட்டாயா..?"

"....."

“ஐ ஆம் ஸாரி..”

“.....”

“ஸாரி சொன்னாக் கூட மனம் இரங்க மாட்டாயா..?”

“.....”

ரவிச்சந்திரன் சுழல் நாற்காலியில் சுழன்று அவள் பக்கமாக திரும்பினான்.. இமைகளை உயர்த்தி வசீகரமாக பார்த்து வைத்தான்.. அவள் விழிகளில் சலனம் வந்து மறைந்தது.. அவளது அந்த மயக்கத்தை அவன் விரும்பினான்.. அவனிடம்

கோபம் கொண்டு அவள் பேசாமல் இருந்த அந்த நிலையிலும் அவனிடம் அவள் மயங்குவது அவனுக்குப் பிடித்திருந்தது.. மை தடவிய அவளது விழிகளில் வந்து போன சலனத்தில்..

“மை விழியே..! மயக்கமென்ன..?” என்றான்..

அவள் கேள்வியாக அவனைப் பார்த்தாள்.. அவள் கம்யூட்டரின் கீ போர்டை டொக், டொக்கெனத் தட்டினாள்..

“மெல்ல..” என்றான் ரவிச்சந்திரன்.. கோபமாக அவள் உதட்டைச் சுழித்ததில்..

“கம்யூட்டர் என்னுடையது..” என்று கடுப்படித்தான்.. நந்தினி சீட்டை விட்டு எழுந்து விட்டாள்..

“எங்கே போகிற.. நான் கேட்ட டீடெயில்ஸ் எங்கே..?”

புருவங்களை உயர்த்தி இறக்கி அவளைக் கிறங்கடித்து சீட்டில் உட்கார வைத்தான்.. பல்லைக் கடித்தபடி கம்யூட்டரின் திரையைக் கவனிக்க ஆரம்பித்தாள் நந்தினி.. சுழல் நாற்காலியில் இப்படியும் அப்படி யுமாக சுழன்றபடி..

“மன்னிக்க மாட்டாயா..? - கொஞ்சம்

மனம் இரங்கி..?

நீயொரு மேதை.. நானொரு பேதை..

நான் சொன்ன வார்த்தைகள்

உன் நெஞ்சில் காயங்கள்

கண்ணீரில் ஆறாதோ..?

கோபம் தீராதோ..?”

என்று ஸ்வரம் பிசகாத குரலில் ஆழ்ந்து பாடினான்.. நந்தினியிடம் அசைவு வந்தது.. அவளது விழிகளில் கண்ணீர் திரையிட்டது.. சட்டென எழுந்து வெளியே போய் விட்டாள்..

ரவிச்சந்திரனால் அவளைத் தடுக்க முடியவில்லை.. பெருமூச்சு விட்டான்.. அவளது கோபத்தில் இருந்த நியாயம் அவனுக்குப் புரிந்தது.. அவன் பேசிய பேச்சிற்கான நியாயம் அவன் பக்கமும் இருக்கிறது என்பதை ஏன் அவள் புரிந்து கொள்ளவில்லை..?

காதலுக்கான நியாயங்கள் தனி.. அது தன்னுடைய உடமையாக காதலை நினைக்கும்.. சந்தேகிக்கும்.. எல்லை மீறிய பேச்சுக்களைப் பேசும்..

காதல் நியாய, அநியாயங்களைக் கடந்தது.. எல்லைக் கோடு அதற்கு இல்லை.. அது நந்தினிக்குத் தெரிய வேண்டுமே... காதலில் விழுந்தவர்கள் அதைப் புரிந்து கொள்வார்கள்.. நந்தினிதான் காதலில் விழுக மறுக்கிறாளே.. அவனிடம் அவளுக்குப் பிரியம் இருக்கிறது.. மயக்கம் இருக்கிறது.. ஆறதலாக அவன் தோளில் சாய்ந்து கொள்ளத் தயக்கம் காட்டுவதில்லை.. இருந்தும் அவன் மீத ான காதலை ஒப்புக் கொள்ள மறுக்கிறாள்.. தள்ளித் தள்ளிப் போகிறாள்.. தஞ்சைக்குத் திரும்புவதில் ஆர்வம் காட்டுகிறாள்..

லேப் டாப்பின் திரையை உயிர்ப்பித்தான்.. ஸ்கிரின் பிக்சராக நந்தினி தலை சாய்த்துச் சிரித்தாள்.. பொங்கி வழியும்

அருவியைப் போன்ற சிரிப்பு.. விழிகளை மயக்கி மனதுக்குள் புகுந்து வரும் வசீகரச் சிரிப்பு.. கள்ளமில்லாத வெள்ளைச் சிரிப்பு.. யௌவனச் சிரிப்பு..

“மயக்கறயேடி..” முணுமுணுத்தான்..

அவனுடைய லேப்-டாப்பின் ஸ்கீரின் பிக்சராக அவளது படம் தான் இருக்கிறது என்பது நந்தினிக்குத் தெரியாது..

அவனுடைய லேப்-டாப்பைத் தொட அவன் விடமாட்டான்.. அதில் அவளுக்கு மனத்தாங்கலுண்டு.. முகத்தை ஒரு முழ நீளத்துக்கு வைத்துக் கொள்வாள்..

‘எங்கே போயிட்டா இவ.. இன்னும் காணலையே..’

நந்தினி இல்லாத அறை வெறுமையாக இருந்தது.. பொறுமையிழந்தவனாக அவன் அவளைத் தேடிச் சென்றான்.. ஆனந்தனின் அறையில் அவள் இல்லை.. வாசல் பக்க பூச்செடிகளின் பக்கமாக உலாத்திக் கொண்டிருப்பாள் என்று பார்த்தால் அங்கும் அவள் இல்லை..

‘கோபத்தில் மங்களூர் எக்ஸ்பிரஸ்ஸை பிடிக்கனும்னு கோழிக்கோடுக்கு கிளம்பிட்டாளா..?’

நந்தினி அப்படிக் கிளம்பக் கூடியவள்தான் என்பதில் ரவிச்சந்திரனுக்குக் கவலை வந்தது.. சின்னப்பெண்.. அறியாத ஊரில் தெரியாத்தனமாக வழி மாறித் தொலைந்து விட்டால் என்ன செய்வது..? அவளுக்கு கோபம் வந்து விட்டால் யோசித்துத் தொலைக்க மாட்டாளே..

ஜீப்பைக் கிளப்பலாமா என்று யோசித்தான்.. சற்றுத் தொலைவில் ஆரஞ்சு வண்ண மலர்கள் சிதறியிருந்த மரங்கள் அமர்ந்திருந்த பகுதியில் சிரிப்புச் சப்தம் கேட்டது..

‘அது நந்தினியின் சிரிப்பாச்சே..’

அவளின் குரலை அடையாளம் தெரிந்து கொண்டவன் புருவங்களை நெரித்தான்..

‘யார் கூடப் பேசிச் சிரிக்கிறா..? மோகன் கூடப் பேசறாளா..?’ ரவிச்சந்திரனுக்கு சினம் வந்தது.. என்னதான் படித்துப் படித்துச் சொன்னாலும் காதில் போட்டுக் கொள்ளாத நந்தினியை நான்கு அப்பு அப்ப வேண்டும் போல இருந்தது.. ஏற்கனெவே அப்பயி அப்பிற்காகத்தான் அவள் ஒரு வாரமாக அவனுடன் பேசாமல் மௌனயுத்தம் செய்து கொண்டிருக்கிறாள் என்பதை மறந்தவனாக அவன்

ஆவேசத்துடன் நந்தினியின் சிரிப்புச் சத்தம் கேட்ட பகுதிக்கு விரைந்தான்..

‘இவ அவனைத் தம்பின்னு நினைத்தாப் போதுமா..? அவன் இவளை அக்கான்னு நினைக்க வேண்டாமான்னும் கேட்டாச்சு..’

மோகன் நந்தினியை மலர் டீச்சர் என்றுதான் விளிக்கிறான் என்பதை பலமுறை நினைவூட்டி விட்டான் ரவிச்சந்திரன்.. அவன் சொல்வதைக் காதில் போட்டுக் கொள்ளாமல்..

“சின்னப் பையன் பாஸ்.. டீன் ஏஜ்.. எடுத்துக் சொன்னால் கேட்டுக்குவான்..” என்று நம்பிக்கை தெரிவித்திருந்தாள் நந்தினி..

‘எடுத்துச் சொல்கிறதை இவ முதலில் கேட்டுப் பழகட்டும்.. அப்புறமா அவனுக்கு டியூஷன் எடுக்கட்டும்..’

மரத்தின் இந்தப்பக்கமாக நந்தினியின் துப்பட்டா கொடி போல பறந்து ரவிச்சந்திரனுக்கு வழி காட்டி அழைத்தது..

‘மரத்துக்கு அந்தப் பக்கமா சாய்ந்து நின்னு பேசிக்கிட்டு இருக்கிறா போல..’ யூகித்தான் ரவிச்சந்திரன்..

வேக நடையுடன் மரத்தை அணுகித் திரும்பியவனுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.. அங்கே நந்தினியை சிரிக்க வைத்துக் கொண்டிருந்தது மோகன் இல்லை.. அபராஜிதன்..!

‘இவனா..?’ நந்தினியை முறைத்தான்..

கோவைப் பழமாய் சிவந்த கண்களுடன் ரவிச்சந்திரன் விழிகளை உருட்டிப் பார்த்ததில் நடுங்கிப் போனாள் நந்தினி..

‘விதி வலியது..’ என்று மயங்குவதைத் தவிர அவளுக்கு வேறு வழியிருக்கவில்லை..

ரவிச்சந்திரனின் பாடலில் மனம் இளக எங்கே அவன் முன்னால் உட்கார்ந்திருந்தால் கட்டுப்பாட்டை மீறி அழுது விடுவாளோ என்று அலுவலகக் கட்டிடத்தை விட்டு வெளியே வந்தவளுக்கு காலாற நடந்து வர வேண்டும் போல இருந்தது.. அவளுக்குத் தனிமை தேவைப்பட்டது.. மனதை பாரமாய் அழுத்தும் உணர்வுகளின் சுமையிலிருந்து தப்பிக்கக் கூடிய தனிமை..

நந்தினி கட்டிடத்தை விட்டு விலகி மரங்களின் ஊடே நடந்தாள்.. சிமிண்ட் வண்ணக் கற்கள் பதிக்கப்பட்ட அழகான பாதை.. பாதையெங்கும் ஆரஞ்சு வண்ண மலர்கள் சிதறிக்

கிடந்தன.. மலர்கள் பூத்துக் குழுங்கும் மரங்களுக்கு மத்தியில் நடக்கும் போது மனது லேசாவதைப் போல இருந்தது..

“எந்தா கொஞ்சு மோளே.. இவ்விடத்திதலா ஜோலி..?” அதட்டலான குரலில் நின்று விட்டாள்.. யார் இப்படி அதிகாரத் தோரணையில் அதட்டுவது என்று பார்த்தால் அங்கே அருள்மொழிவர்மன் நின்று கொண்டிருந்தார்.. பக்கத்திலே அபராஜிதன்..

‘இவன் எங்கே இங்கே வந்து தொலைத்தான்..?’

மறைந்து கொள்ள பதுங்குகுழி ஏதாவது இருக்கிறதா என்று துழாவினாள் நந்தினி.. அவள் அவனுடன் பேச வேண்டுமென்பதே இல்லை.. அவள் பக்கத்தில் அவன் நிற்கிறான் என்பதை ரவிச்சந்திரன் பார்த்தாலே போதும்.. அவள் பாடு திண்டாட்டமாகி விடும்..

நந்தினிக்கு அபராஜிதனைப் பார்க்கக் கூடப் பிடிக்கவில்லை..

‘இவனும்.. இவன் மூஞ்சியும்..’ என்று வெறுப்பாக இருந்தது.. வந்த வழியில் திரும்பி விடலாம் என்றால் அபராஜிதனுடன் அருள்மொழிவர்மனும் நின்று கொண்டிருந்தார்..

‘ஈ தாத்தா எந்துக்காக இவனோட சுத்தி..?’

மனதில் நினைப்பதை மலையாள மக்கள் அறிய மாட்டார் கள் என்ற தைரியத்தில் மனதுக்குள் கேள்வியை எழுப்பினாள்..

“எந்தா கொச்சு மோளே... இத்தரயும் ஆலோசிக்கனுது..? நிண்ட ஜோலி ஓபிஸிலோ.. அல்ல.. ஈ ஸ்தலத்திலோ..?”

“ஆபிசில்தான் தாத்தா..”

“பின்னே எந்துக்கு ஈ ஸ்தலத்துக்கு நந்தினி வரனும்..?”

“தெரியாத்தனமா வந்துட்டேன் தாத்தா..”

விதியை நொந்து கொண்டே பதில் சொன்னாள் நந்தினி.. அருள்மொழிவர்மனைப் பக்கத்தில் வைத்துக் கொண்டே அவளை ஆர்வமாக அபராஜிதன் பார்த்து வைத்தது அவளை சோதித்து வைத்தது..

‘அடங்க மாட்டேங்கிறானே..’ என்று ஆற்றாற்றுப் போனாள்.. அவனைக் கண்ணில் கண்டாலே ரவிச்சந்திரன் பொரித்து எடுத்து விடுகிறான்.. இவனும் ரவிச்சந்திரனைக் கண்டு விட்டால் ஓடி ஒளிந்து கொள்ளாத குறையாக தப்பித்துப்

பிழைக்கிறான்.. பெண்ணைக் கண்டு விட்டால் மட்டும் அனைத்தையும் மறந்து கடலை போட ஆரம்பித்து விடுகிறானே.. எப்படி..?

“எந்தா பறஞ் ..? நினக்கு வழி தெரியலையோ..?”

அவள் சொன்னதை அருள்மொழிவர்மன் வேறு விதமாக புரிந்து கொண்டு படுத்தி எடுத்தார்.. நந்தினி அலுவலகக் கட்டிடத்தைத் திரும்பிப் பார்த்தாள்.. கூப்பிடு தொலைவில் அது கண் சிமிட்டிச் சிரித்து வைத்தது..

‘இந்தா இருக்கிற ஆபிஸ் பில்டிங்குக்குப் போக வழி தெரியலையா..? ஹப்பா.. கண்ணைக் கட்டுதே..’ அருள்மொழிவர்மனின் புலன் விசாரணையில் அகப்பட்டிருந்தவளை சுவராஸ்யமாகப் பார்த்துக் கொண்டிருந்த அபராஜிதனின் இதழ்களில் அவளது திண்டாட்டத்தை ரசிக்கும் குறுஞ்சிரிப்பு தவழ்ந்தது.. அதில் செம காண்டானாள் நந்தினி..

‘அடேங்கப்பா.. இவனோட தாத்தா பெரிய வில்லாதி வில்லன்.. இவர்கிட்ட நான் மாட்டிக்கிட்டதில இவன் சந்தோஷம் கொண்டாடறான்.. இருக்குடா உனக்கு..’

பவ்யமாக முகத்தை வைத்துக் கொண்ட நந்தினி.. வினயத்துடன் அருள்மொழிவர்மனைப் பார்த்து..

“ஆபிசுக்கு வாங்க தாத்தா.. பாஸ் ஆபிசில்தான் இருக்கிறார்..” என்று அழைத்தாள்..

“ரவிச்சந்திரன் அங்ஙன உண்ளே..?” அருள்மொழிவர்மன் கேட்டார்..

“ஆமாம் தாத்தா.. பாஸ் அங்கேதான் இருக்கார்.. மத்தவங்களைப் போல வயநாட்டையா சுத்தறார்..?” அபராஜிதனை ஜாடையாய் பார்த்தபடி எடுத்துக் கொடுத்தாள் நந்தினி..

அவள் கோட்டைப் போட்டதில் அருள்மொழிவர்மன் ரோட்டைப் போட்டு விட்டார்.. அபராஜிதனைத் தன் சிவந்த கண்களால் உறுத்துப் பார்த்து.. முரட்டு மீசையைத் திருகி..

“கேட்டோ..” என்று கர்ஜித்தார்..

ஆஹா என்று மகிழ்ந்து போன நந்தினி.. இமைகளைக் கொட்டி ஒன்று மறியாதவளைப் போல.

“சேட்டன்னா சொன்னீங்க தாத்தா..? ஆமாம் தாத்தா.. இவர் எனக்குச் சேட்டன்தான்.. ஞான் இவரோட அணியத்திதான்..” என்று நெக்குருகிளாள்..

அருள்மொழிவர்மனின் அதட்டலுக்கு அஞ்சாத அபராஜிதவர்மனை நந்தினியின் சேட்டன், அணியத்தி உறவுமுறை நடுங்க வைத்து விட்டது.. அதிர்ச்சியில் அவன் நெஞ்சைப் பிடித்து விட்டான்..

அத்தியாயம் 119

“என்னங்க நீங்க.. தாத்தா கேட்டோன்னுல்ல சொன்னார்..? நீங்க ஏன் தேவையில்லாம சேட்டன்னு சொல்லி சேட்டை பண்றிங்க..?” தாழ்ந்த குரலில் புலம்பினான் அபராஜிதன்..

“உங்க சேட்டையை அடக்கத்தான்..” அவனை விடத் தாழ்ந்த குரலில் சொன்னாள் நந்தினி..

அபராஜிதனுக்கு என்ன.. அவன் முணுமுணுப்பது அருள்மொழிவர்மனின் காதுகளில் விழுந்தாலும் கண்டு கொள்ளாத பாவனையுடன் நகர்ந்து விடுவார்.. அபராஜிதன் அவருடைய செல்ல மகளின் மகன்.. அவன் தவறு செய்தாலும் தட்டிக் கேட்க முடியாது.. அவந்திகா கண்ணைக் கசக்கி விடுவாள்..

நந்தினி அப்படியா..? ரவிச்சந்திரனிடம் வேலை பார்க்க என்று வயநாட்டுக்கு வந்திருப்பவள்.. அபராஜிதனுக்கு எதிராக அவள் பேசுவதை அருள்மொழிவர்மன் கேட்டு விட்டால் என்ன ஆவது..?

“இதியும் கேட்டோ..” மறுபடியும் முங்கினார் அருள்மொழிவர்மன்..

“எதைத் தாத்தா..?” திருதிருத்தான் அபராஜிதன்..

“ஈ நந்தினி எந்து பறஞ் ன்னு கேட்டோ..”

‘கேட்டுத் தொலைச்சிட்டேனே..’

“நின்ன அவளிண்ட சேட்டனின்டு பறஞ் ..”

‘போதும் தாத்தா போதும்.. ஏற்கனெவே நெஞ்சு வெடிச்சுப் போய் உட்கார்ந்திருக்கேன்.. இதில நீங்க வேற சவுண்டு விடாதீங்க.. சொல்லலாமா..? இவ என்னை அண்ணன்னு சொல்லலாமா..?’

“நந்தினி நினக்க அணியத்தியெண்டு பறஞ் ..”

‘என்ன கழுதைக்கு..? அழகான பெண்ணை தங்கைன்னு நினைக்க நான் ஒண்ணும் தியாகியில்லை..’

“நீ வளர நன்னாயிட்டு கொச்சு மோளே..”

அருள்மொழிவர்மன் நந்தினியின் தலையில் கை வைத்து ஆசிர்வதித்தாள்.. பரவாயில்லையே.. பெரியவருக்கு அரட்டத்தான் தெரியும்ன்னு நினைத்தால் ஆசிர்வாதம் கூடப்

பண்ணுகிறாரே என்று இமை மூடித் தலை காட்டி நின்றிருந்தாள் நந்தினி..

“ஞான் வரட்டே...” அவர் கிளம்ப ஆயத்தமாக..

“ஆபிசுக்கு வரலையா தாத்தா..?” என்றாள் நந்தினி..

“இல்லை கொச்சு மோளே.. ஆ ஸ்தலத்தில ரவிச்சந்திரன் உண்டு..”

“ம்ம்ம்.. அதனால் என்ன..?”

“அவன் ஜோலி பார்க்கிறத ஞான் சல்லியம் பண்ண வைய்யான்.. கேட்டோ.. ஞான் கொட்டாரத்துக்குப் போயி..”

“எஸ்டேட்டுக்கு வந்துட்டு பாஸைப் பார்க்காம போவிங்களா..? வாங்க தாத்தா..”

நந்தினியின் பிரியமான வற்புறுத்தலில் அவர் பாசமாக சிரித்தார்.. அவரது விழிகளில் வாத்சல்யம் பளிச்சிட்டது..

“ஞான் ரவிச்சந்திரன நோக்க வரலை.. ஈ ஸ்தலத்தில ஒரு ஜோலியிண்டு வந்து.. ஜோலி முடிஞ்சு.. ஞான் போகட்டே..? அபராஜிதா.. நீ எந்துக்கு இங்ஙன நிந்நூ..?”

“எஸ்டேட்டில எனக்கும் ஓர் வேலை இருக்கு தாத்தா..”

“எந்து பணி கொச்சுமோனே..? எதினாச்சும் வம்பு வழக்கிண்டு தள்ளு முள்ளு ஜோலியோ..?”

அருள்மொழிவர்மனின் கேள்வியில் வாய் பொத்திச் சிரித்தாள் நந்தினி.. அபராஜிதனை அவர் அருமையாக கணித்து வைத்திருக்கிறார் என்ற குறுஞ்சிரிப்புடன் அபராஜிதனை ஜடையாக பார்த்தாள்..

‘உனக்குத்தான் குறுஞ்சிரிப்பு சிரிக்கத் தெரியுமா..? இந்தா.. எனக்கும் தெரியும்.. பார்த்துக்க..’

அவன் தாடையைத் தடவியபடி ஒரு மார்க்கமாக பார்த்து வைக்கவும் பார்வையைத் திருப்பிக் கொண்டாள்.. அருள்மொழிவர்மன் தவறாக நினைத்து விட்டால் என்ன செய்வது என்று எரிச்சலாக இருந்தது..

‘எப்படிப் பார்க்கிறான் பார்.. ராஸ்கல்..’

“அத்தான் என்மேல கோபமா இருக்கார் தாத்தா.. அவரிடம் மாப்புக் கேட்கனும்.. கொட்டாரத்தில அவரிடம் தனியா சம்சாரிக்க முடியலை.. இங்கே தனியா இருக்கிறார்.. மாப்புக் கேட்டுட்டு வந்துடறேன்.. நீங்க கிளம்புங்க தாத்தா..”

“வல்லிய எண்ணம் அபராஜிதா.. நினக்கு மதியில்லண்டு ஞான் ஆலோசிச்சு..”

நந்தினி மறுபடியும் சிரிக்க.. இந்தக் கிழம் வாயை வைத்துக் கொண்டு சும்மாவே இருக்காதா என்று வெறியானாள் அபராஜிதன்.. அதையறியாத அருள்மொழிவர்மன் ஆதுரத்துடன் பேரன் தலையில் கை வைத்து ஆசிர்வதிக்க முனைய.. அவனோ மொணமொணவென வாய்க்குள் அவரைத் திட்டித் தீர்த்தான்..

“ரவிச்சந்திரண்ட மாப்பு கேட்கனுமிண்டு நீ பறஞ்ஞதில எண்ட மனசு நிறைஞ் .. கேட்டோ.. நினக்கு மதி வந்திட்டு.. நிண்ட மேல எனிக்கு வளர இஷ்டமானு..”

“ம்ஹூம்.. நீங்க இஷ்டப்பட்டு எனக்கென்ன ஆகப் போகுது..?”

“எந்தா..?”

“அத்தானில்ல இஷ்டப்படனும்.. அதைச் சொன்னேன் தாத்தா..”

“ஓ.. ஞான் வரட்டே..?”

“வரட்டே.. வரட்டேன்னு இங்ஙனயே நிற்கறிங்களே தாத்தா.. போகட்டேன்னு கிளம்ப மாட்டேங்கறிங்களே..”

“ஞானும் நிண்ட கூட ரவிச்சந்திரனைக் காண வரட்டே..?”

“கிழிஞ்சது போங்க..”

“எந்துக்கு..?”

“நான் தனியாப் பேசணும்னுதானே அரண்மனையை விட்டு எஸ்டேட் வரைக்கும் வந்திருக்கேன்..? நீங்க கூட வந்தா எப்படி நான் அத்தானுடன் தனியாப் பேச முடியும்..?”

“நீ எந்துக்கு சம்சாரிக்கப் போயி..? ஷமிக்கனும்ண்டு பறஞ்சானு.. அதிக்கி ஞான் உடனிருந்தா நன்னா யிட்டுண்டு கொச்சுமோனே..”

“எனக்கு நல்லாயிருக்காது தாத்தா..”

“எந்துக்கு..? நீ எந்தா ரவிச்சந்திரண்ட பிரேமம் பத்தியா பறஞ் ..? ஷமிக்கனும்ண்டுதான பறஞ் ..?”

“தாத்தா..”

கை எடுத்துக் கும்பிட்டுக் காலில் விழுகாத குறையாக அவரைக் காருக்குத் தள்ளிக் கொண்டு போனான்

அபராஜிதன்.. அப்போதும் அவர் காரில் ஏறாமல் மல்லுக் கட்டி..

“நினக்குக் கார் வேணுமே அபராஜிதா..” என்று அவனுடன் ஒட்டிக் கெள்ளப் பார்த்தார்..

“ஞான் அத்தானோட வரும்..” என்று அவருக்கு ரோமாஞ்சனத்தை உண்டாக்கி வழியனுப்பி வைத்தான் அவன்..

ஒருவழியாகக் கார் கிளம்பியதும்..

“உஷ்ஷ்.. அப்பாடா..” என்று குனிந்து முழங்கால்களில் கைகளை ஊன்றி மூச்சிரைத்தவனைப் பார்க்க வேடிக்கையாக இருந்தது நந்தினிக்கு..

“என்னவோ காரைத் தள்ளி விட்டதைப் போல இப்படி மூச்சு வாங்கறிங்களே..” என்று சிரித்தாள்..

“தாத்தாவைத் தள்ளி விட்டிருக்கேங்க.. அது இமாலய சாதனையில்லையா..?” என்றபடி அவனும் சிரித்தான்.. அருள்மொழிவர்மனுடன் அவன் வழக்கடித்துக் கொண்டிருப்பதை வேடிக்கை பார்க்கத் தோதாக மரத்தில் சாய்ந்திருந்தாள் நந்தினி.. அவளது தோள் மீது சரிந்திருந்த

துப்பட்டா காற்றில் பறந்து கொடி போல அசைந்தாடிக் கொண்டிருந்தது.. அவளது அழகில் ஈர்க்கப்பட்டவனாக போதையுடன் அவளைப் பார்த்தான் அபராஜிதன்..

“ஹலோ.. உங்க அத்தான்கிட்ட காதல்மொழி பேசப் போகலையா..?” கலாய்த்தாள் நந்தினி..

“அவரிடம் காதல் பேசி வேலைக்கு ஆகுமா..? அதுக்கு உங்ககிட்டப் பேசினாலும் தகும்..” ஜொள்ளினான் அவன்..

“தகும்.. தகும்.. உதைதான் விழும்..” ஒற்றை விரலை உயர்த்தி மிரட்டினாள் நந்தினி..

“அழகான பெண்ணிடம் உதை வாங்கக் கூடக் கொடுத்து வைத்திருக்கனுங்க..”

“அனுபவம் பேசுது போல..”

“அப்படித்தான் வைத்துக்கங்களேன்..”

அவன் ‘வைத்துக்கங்களேன்..’ என்ற வார்த்தையில் அழுத்தம் கொடுக்க அதை உணராத நந்தினி..

“அப்ராக்ஸிமேட்டா எத்தனை அழகான பெண்களிடம் உதை வாங்கியிருப்பீங்க..?” என்று அவனை வாருவதிலேயே கவனமாக இருந்தாள்..

“தோராயமா ஒரு ஆயிரம் பேர்ன்னு வைத்துக்கங்களேன்..” மறுபடியும் அதே அழுத்தம்.. அதை உணராத நந்தினி சிரித்துக் கொண்டிருந்தபோதுதான் ரவிச்சந்திரன் வந்து சேர்ந்தான்..

‘இவன் உதை வாங்கிய கதையை இன்றைக்கு ரம்யாகிட்டச் சொல்லிச் சிரிக்கனும்..’ என்ற நினைவுடன் கிளம்ப யத்தனித்தவளின் முன்னால் கோவைப் பழம் போல சிவந்த கண்களுடன் வெட்டவா, கொல்லவா என்ற முறைப்புடன் வந்து நின்றான் ரவிச்சந்திரன்..

‘விதி வலியது..’ நந்தினிக்கு மயக்கம், மயக்கமாக வந்தது..

“இங்கே என்ன செய்கிற..?”

நந்தினியைப் பார்த்தபடி அபராஜிதனிடம் அதட்டினான் ரவிச்சந்திரன்.. கேள்வி இருவருக்குமானது என்பதில்..

“பாஸ்..” என்று ஆரம்பித்தாள் நந்தினி..

“உன்னைக் கேட்கலை..” எரித்து விடுவதைப் போலப் பார்த்தான் அவன்.. நந்தினி வாயை மூடிக் கொண்டாள்..

“இங்கே.. வந்து.. ஒன்றுமே செய்யலையே.. நான் வந்து.. அது.. வந்து.. ஆ.. நினைவுக்கு வந்திருச்சு.. என் ஃபிரண்டைப் பார்க்க வந்தேன்..” உளறினான் அபராஜிதன்..

அவனது கை, கால்கள் நடுங்கி விரல்கள் தந்தியடித்ததில் எப்பேற்பட்ட வீரன் இவன் என்ற இகழ்ச்சி உண்டானது நந்தினிக்கு.. ‘இதில் ரோமியோ பார்வை வேறு பார்க்கிறான்.. இவனுக்கெல்லாம் எதற்கு மீசை..? கள்ளப் பார்வை வேறு.. ராஸ்கல்..’

“ஃபிரண்ட்டுன்னு யாரைச் சொல்கிற..” ரவிச்சந்திரன் நந்தினியை சந்தேகமாக பார்த்ததில்..

“நானில்லை.. நானில்லை..” என்று கையை உதறினாள் அவள்..

ரவிச்சந்திரனின் முகச் சுளிப்பில் அவளது கை உதறல் நின்றது..

“அது வேற ஒரு ஃபிரண்ட்..” அபராஜிதன் மழுப்பினான்..

“பெயரைச் சொல்லு..” விடாமல் மடக்கினான் ரவிச்சந்திரன்..

“ஜானி.. ம்ம்ம்.. ஜானிதான்..”

“ஜானியா..? அப்படியொரு பெயரை எஸ்டேட்டில் நான் கேள்விப்பட்டதே இல்லையே..”

“ஜானின்னுதான் சொன்னான் அத்தான்.. லாஸ்ட் டைம் நான் வந்தப்ப மீட் பண்ணினேன்.. ஒருவேளை வயநாட்டுக்கு புதுசோ என்னவோ.. டூரிஸ்டா வந்திருப்பானோ..?”

“என்கிட்டேயே கேள்வி கேட்கிறயா..? ஃபிரண்டுன்னு சொல்கிற.. யார், எவர்ன்னு தெரிந்துக்காமலா ஃபிரண்ட் ஆன..? நம்பறது மாதிரி இல்லையே..”

“அவன் நம்பற மாதிரிதான் இருந்தான் அத்தான்..”

“உன்னையும் உன் குடும்பத்தையும் தவிர மத்த எல்லோருமே நம்பிக்கைக்குத் தகுந்தவங்கதான்..”

அதற்கு மேலும் அங்கே நின்றால் ரவிச்சந்திரன் எப்படியெல்லாம் கழுவிக் கழுவி ஊற்றுவானோ என்ற பயத்தில் ஓடி விட்டான் அபராஜிதன்.. நந்தினியின் முன்னால் ஓட வேண்டியிருக்கிறதே என்ற சங்கடம் துளியுமின்றி தப்பித்தேன் பிழைத்தேன் என்று எஸ்டேட்டிலிருந்து வெளியேறிக்

கொண்டிருந்த காய்கறி வேனில் தொற்றிக் கொண்டவனைப் பார்த்து தலையில் அடித்துக் கொண்டாள் நந்தினி..

'இவன் வயநாட்டு அண்மனையில் பிறந்தவனாம்.. வெட்கம்..' வெற்றிகரமாக அபராஜிதனை புறமுதுகு காட்ட வைத் துவிட்டு நந்தினியின் பக்கம் திரும்பிய ரவிச்சந்திரன் கொலை வெறியில் இருந்தான்.. நந்தினிக்குள் குளிர் பிறந்தது..

"உன் சிரிப்புச் சத்தம் இந்த எஸ்டேட் முழுவதும் கேட்குது.. இவனுடன் சிரிச்சுப் பேசத்தான் எஸ்டேட்டுக்கு வந்தியா..?"

ஊசி முனையாய் துளைக்கும் கேள்விக் கணைகளில் முதல் கணையை எய்து விட்டான் ரவிச்சந்திரன்.. வலி தாளாமல் நந்தினியின் மனம் வேதனையுடன் அரற்றியது.. இமை மூடித் திறந்த நந்தினியின் விழிகள் அந்த வேதனையை பிரதிபலித்தன.. அதை கண்டு கொள்ளாத பிடிவாதத்துடன் அவளை வதைப்பதே குறியாக இருந்தான் ரவிச்சந்தி ரன்..

"இங்கே எதுக்கு வந்தான்..?"

"எனக்குத் தெரியாது.."

"நீதான் வரச் சொன்னியா..?"

“இல்லை..”

“நீ வரச் சொல்லாமலா கரெக்டா இந்த டயத்துக்கு இந்த இடத்துக்கு வந்திருப்பான்..? இவனைப் பார்க்கத்தான் என்கிட்டக் கூடச் சொல்லாம ஓடி வந்தியா..?”

“நான் இவனைப் பார்க்க வரலை..”

“வேற எவனைப் பார்க்க வந்த..?”

தாள முடியாமல் விழிகளை உயர்த்தி அவனைப் பார்த்த நந்தினியின் விழிகளில் நெருப்பு இருந்தது.. அவளது குற்றம் சாட்டும் பார்வையினை “ஹ..” என்று ஒற்றை எழுத்தில் அவன் புறக்கனித்தான்..

அத்தியாயம் 120

“என்னைப் பார்க்கப் பிடிக்கல.. இவனைப் பார்க்கப் பிடிக்குதா..?”

“அப்படி நான் சொல்லலையே..”

“நீ சொன்னால்தானா..? எனக்கே தெரியுமே..”

“என்ன தெரியும்..?”

“என் முகத்தைப் பார்க்கப் பிடிக்காமல்தானே இங்கே வந்த..? இவனிடம் சிரிச்சுச் சிரிச்சுப் பேசிக்கிட்டு இருக்கேன்னா என்ன அர்த்தம்..?”

“நீங்க நினைக்கிறதைப் போல அர்த்தமில்லை..”

“நீ சொன்னா நான் நம்பிரனுமா..?”

“நம்ப வேண்டாம்.. போங்க..”

நந்தினி திரும்பி நடக்க முயன்றாள்.. அதில் கோபமான ரவிச்சந்திரன் வெகுண்டு..

“நில்லுடி..” என்று கர்ஜித்து அவளது கையைப் பிடித்து நிறுத்தினான்..

“விடுங்க பாஸ்..” நந்தினி திமிறினாள்..

யாராவது பார்த்து விடப் போகிறார்களே என்ற பதட்டத்துடன் சுற்று முற்றும் பார்த்தாள்.. ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு என்பதற்கு எடுத்துக் காட்டாய் ரவிச்சந்திரன் சுற்றுப் புறத்தை மறந்து சீறிக் கொண்டிருந்தான்..

“எங்கேடி ஓடப் பார்க்கிற..? அவன் கிட்டன்னா நின்று பேசுவ.. என்னிடம்ன்னா ஓடப் பார்ப்பியா..?”

“பாஸ்.. வேண்டாம்..”

“நான் வேண்டாம்.. அவன் மட்டும் வேணுமா..?”

“மைண்ட் யுவர் டங் பாஸ்..”

“என்னை மைண்ட் பண்ண மாட்ட.. அதுவே அவன் பேச வந்தா மைண்ட் பண்ணுவ.. பல்லைப் பல்லைக் காட்டிச் சிரிச்சுப் பேசுவ.. அப்படி என்னடி அவன் வசியப்பொடி போட்டிருக்கான்..? சொல்லுடி.. நானும் அந்த வசியப் பொடியை வீசி உன்னை வசியம் பண்ண முடியுதான்னு பார்க்கிறேன்..”

“திங் கிங் தி லிமிட் பாஸ்.. லிமிட்டைக் கிராஸ் பண்ணாதீங்க..” நந்தினியின் உதடுகள் துடித்தன..

வசியப்பொடிக்கு வசியமாகிறவளா அவள்..? ஒரு பெண்ணின் மனதை வசியம் செய்வது என்பது அத்தனை எளிதானதா..?

“லிமிட்..?”

ரவிச்சந்திரன் அவளை இழுத்து அவளது முகத்தை இரு கைகளாலும் அழுத்திப் பிடித்து விழிகளுக்குள் உற்று நோக்கி உறுமினான்..

“உன்னிடம் எந்த லிமிட்டையும் என்னால ஃபாலோ பண்ண முடியாதுடி.. லிமிட்டுங்கிற ஒன்றை நான் ஏற்றுக்கிட்டாத்தானே அதைக் கிராஸ் பண்றதைப் பத்தினப் பேச்சு வரும்..? என்கிட்ட அது வரக்கூடாது..”

இறுக்கிப் பிடித்திருந்த அவனது கைகளின் அழுத்தத்தில் நந்தினியின் முகத்தில் அவனது விரல்கள் பதிந்து வலித்தது.. அவன் கைகளின் மீது படிந்த அவளது கைகள் அவனது கைகளை விலக்கி விட முயற்சி செய்தன.. முடியவில்லை என்பதில் அவள் கண்களில் கண்ணீர் அரும்பியது..

“விடுங்க பாஸ்..”

“விட முடியாதுடி..”

“வலிக்குது பாஸ்..”

அவளது கெஞ்சலில் அவன் அவளது முகத்தை விட்டு விட்டான்.. அவனது விரல் தடங்கள் பதிந்திருந்த இடம் கன்றிச் சிவந்திருந்தது.. நந்தினி கன்னங்களைத் தடவியபடி தள்ளி நின்றாள்..

‘இரும்புப் பிடி..’

அவளை என்னவென்று நினைத்துக் கொண்டிருக்கிறான் என்ற அழுகை பொங்கியது.. அவனுடைய உடல் வலிமையை அவளிடம் காட்டுவது முறையா..? அவள் அதைத் தாங்குவாளா..?

அவனுடைய உடல் வலிமையைக் கொண்டு அவன் அவளை பலாத்காரம் செய்ய முனையவில்லை என்பதை அவளது மனச்சாட்சி சுட்டிக்காட்டியது... அவன் நினைத்திருந்தால் நீலிமலைக் காட்டின் மரக் குடிலில் அவளுடன் குடும்பம் நடத்தி முடித்திருக்க முடியும்.. அவ்வாறு அவன் செய்யவில்லை.. அவனது வலிமையை பிரயோகித்து அவளைக் கசக்கி முகர நினைக்கவில்லை என்று சாட்சி சொன்னது..

‘சுரணை கெட்ட மனச்சாட்சி..’

அவளுக்கு கோபம் கோபமாக வந்தது.. ரவிச்சந்திரன் அவளைப் பாடாய் படுத்துகிறான்.. கோபம் வந்து விட்டால் இன்னது பேசுகிறோம் என்ற வரைமுறையில்லாமல் எதையெதையோ பேசுகிறான்.. அவளை அடித்து விடுகிறான்.. வாடி, போடி என்கிறான்.. இத்தனை அட்டூழியங்களைச் செய்கிறவனைத் தாங்கிப் பிடித்து அவனுக்காக அவளுடைய மனச்சாட்சி வக்காலத்து வாங்கலாமா.?

“சின்னப் பெண்..! கடுமையா பிஹேவ் பண்ணிட்டேனேன்னு கில்ட்டியா ஃபீல் பண்ணினேண்டி.. அதை தேவையில்லேன்னு ஆக்கிட்ட.. நீ இப்படித்தாண்டி.. உன்னைப் பேசினதில தப்பே இல்லை.. இன்னும் நாலு வார்த்தை பேசியிருக்கனும்..” ரவிச்சந்திரன் பொரிந்து தள்ளினான்..

‘அடப்பாவி..’ என்று அவனைப் பார்த்தாள் நந்தினி..

இந்தப் பேச்சையே அவளால் தாங்க முடியவில்லை.. இன்னும் நன்றாக நான்கு வார்த்தைகளை பேசியிருக்க வேண்டும் என்று கொதிக்கிறானே..

அப்படியே ஊரைப் பார்த்து ஓடிவிடுவது சாலச் சிறந்தது என்ற முடிவுக்கு வந்தாள் நந்தினி..

‘அடுத்துக் கிளம்பற காய்கறி வேனுக்குள்ள ஒளிஞ்சுக்கிட்டாவது இந்த இடத்தை விட்டுக் கிளம்பிடனும்.. கோழிக்கோடுக்கு ஜீப் பிடிக்கனும்.. மங்களூர் எக்ஸ்பிரஸ்ஸில வித்தவுட்டில டிராவல் பண்ணியாவது சென்னைக்கு ஓடிப் போயிரனும்..’ அவசர கதியில் அவள் மனம் திட்டமிட்டுக் கொண்டிருக்க அவன் புருவங்களை நெறித்தபடி தீர்க்கமாக பார்த்து வைத்தான்..

அவனது பார்வையில் தீட்சண்யத்தில் அவளது உடல் நடுங்கியது..

‘ஏன் இப்படி வெறி பிடிச்சதைப் போல முறைக்கிறான்..?’

“என்ன..?”

“என்ன.. ‘என்ன..?’”

“மனதுக்குள்ள பிளான் போடறதைப் போல இருக்கு.. என்ன..? தப்பிச்சுப் போகப் பிளான் போடறியா..?”

‘கண்டு பிடிச்சுட்டானே..’

“இதைக் கண்டு பிடிக்கிறது ரொம்பச் சிரமம் பாரு.. இதை விட்டா வேற என்ன பிளான் போட்டிருக்கப் போற..?”

“ப்ளீஸ் பாஸ்..”

“எதுக்கு இந்த ப்ளீஸ்..?”

“என்னை விட்டிருங்க.. நான் ஊருக்குப் போயிடறேன்..”

“போய்..? இந்த பெல்ட் மன்னனைக் கல்யாணம் பண்ணிக்கப் போறியா..? ஊம்..?”

ஆமாம் என்பதைப் போல மௌனம் சாதித்தாள் நந்தினி.. வாய் விட்டுச் சொன்னால் அதற்கும் அடி பின்னுவானே..

‘இவன் அடிக்குப் பெல்ட் மன்னனின் அடியே தேவலாம் போல இருக்கே.. அவசரப்பட்டுட்டியேடி நந்தினி.. கல்யாணத்தைப் பண்ணிக்கிட்டு.. ஒரு காபியைக் கலந்து அதில சொக்குப் பொடியைத் தூவி.. அத்தான்னு ஒரு மார்க்கமாப் பார்த்துக் காலில் விழுந்திருந்தா காலமெல்லாம் அவன் உன் காலடியிலே விழுந்து கிடந்திருப்பானே.. கிராமத்தில இருந்து வந்திருந்த அத்தைப் பாட்டி அப்படித்தானே சொல்லுச்சு.. அடங்காத ஜல்லிக்கட்டுக் காளையாய் திரியறவன்கூட பெண்டாட்டியோட புடவை முடிச்சில அடங்கிருவானாம்ல்ல.. அப்படி அந்த பெல்ட் மன்னனை முந்தானை முடிச்சில முடிஞ்சு வைச்சுக்கிறதை விட்டுட்டுப் பயந்து ஓடி வந்தேனே.. அவனாவது என்னைக்காச்சும்

ஒருநாள்தான் அடி கை வைப்பானாம்.. இவன் தினம் தினம் அடிச்சு நொறுக்கறானே..'

"என்னை விட்டுத் தப்பிச்சுப் போகிறது அத்தனை சுலபமில்லைடி.."

"அது ரிஸ்க்காவே இருக்கட்டும்.. நான் ஓடத்தான் போறேன்.."

"என்னவோ மாரத்தான் ரேஸில கலந்துக்க ஓடப் போகிற மாதிரி சேலன்ஜ் பண்ற..? இதுக்கு ஏண்டி வயநாட்டுக்கு ஓடி வந்த..? என் மனதைக் கலைக்கிறதுக்கா..?"

நந்தினியின் மனம் கலங்கியது.. கலக்கத்துடன் அவனைப் பார்த்தாள்.. தலைமுடி கலந்து கோபாவேசமாக இருந்த அந்தக் கோலத்திலும் வெகு கவர்ச்சிகரமான அழகோடு இருந்தான்... ஆண்களே மயங்கும் பேரழகன்..!

'இவனை விடவா அந்த டுப்ளிகேட் அழகா இருக்கான்..?' அப்படி அபராஜிதன் அழகனாக இருந்தாலும் ரவிச்சந்திரனின் குணாதியங்களின் அருகில் கூட வரமுடியாது என்பதை இந்தக் கோபக்கார கம்மாண்டருக்கு எப்படி உணர்த்துவாள்..? ரவிச்சந்திரனின் காலடி மண்ணுக்கு இணையாவானா அபராஜிதன்..?

‘இவன் எங்கே..! அவன் எங்கே..?’

“எதற்கெடுத்தாலும் ஓடிப் போயிருவேன்னு பிளாக் மெயில் பண்றதை வழக்கமா வைத்திருக்கடி..”

“பிளாக் மெயிலா..? நானா..?”

“நீதான்.. பின்னே உன் பாட்டியா பிளாக் மெயில் பண்றாங்க..?”

“என் பாட்டியை நீங்க பார்த்ததில்லை பாஸ்.. அதான் இப்படிப் பேசறிங்க.. அது பிளாக்மெயில் பண்ற கேட்டகிரியில்ல.. வெட்டு ஒண்ணு, துண்டு ரெண்டுன்னு எதையும் சப்ஜாடா முடிச்சுக்காட்டற கேட்டகிரி.. எங்க பரம்பரைக்கே பிளாக்மெயில் பண்ணத் தெரியாது..”

“ஓடி வரவும்.. திரும்ப ஓடிப் போகவும் தெரியும் போல..”

“என்னதைச் செய்யச் சொல்றீங்க.. இந்த அடி அடிக்கறிங்களே.. தினமும் ஏதாச்சும் ஒரு காரணத்தை வைச்சு அடி பின்னினா ஓடிப் போகலாம்ன்னு தோணாம என்ன பண்ணுமாம்..?”

“ஆமாண்டி.. சும்மா உன்னை அடிக்கனும்ன்னு நான் கடவுள்கிட்ட பிரே பண்ணியிருக்கேன் பாரு..”

“யு மீன் நேர்த்திக்கடன்..?”

“கடவுள்கிட்ட பிரேயர் பண்றதை உங்க ஊரில் அப்படிச் சொல்வாங்களா..?”

“எல்லா ஊர்களிலும் அப்படித்தான் சொல்வாங்க..”

சிரிக்காமல் சொன்னாள் நந்தினி.. அழுத்தப் பட்டிருந்த கன்னங்களின் வலி இன்னும் குறையவில்லை.. அவன் கேட்டுவிட்ட வார்த்தைகளால் உண்டான வலி மனதில் அப்படியே இருந்தது.. இந்த நிலையில் அவளால் சிரிக்க முடியுமா..?

ரவிச்சந்திரன் அவள் முகத்தில் எதையோ தேடினான்.. துழாவியது கிடைக்காததில் அவனது கண்கள் ஜ்வலித்தன.. கோபத்தின் ஜ்வலிப்பு அது..

‘இப்ப என்னவாம்..?’

எதற்கும் இருக்கட்டும் என்று அவன் கைகளில் சிக்காமல் நான்கடி தள்ளி நின்று கொண்டாள் நந்தினி..

‘அகப்பட்டால்தானே அடி பின்னுவான்..? இப்ப என்ன பண்ணுவான்..? இப்ப என்ன பண்ணுவான்..?’

“உன்னோட அடையாளமே உன் சிரிப்புத்தாண்டி.. இப்ப எங்கே அது தொலைந்து போனது..?”

நந்தினியின் கண்கள் கலங்கின.. தொலைய வைத்தவனே அவள் தொலைத்து விட்டதைப் போல குறுக்கு விசாரனை செய்தால் அவள் என்னவென்று பதிலைச் சொல்வாள்..?

“என்னிடம் சிரிக்கக் கணக்குப் பார்க்கிற.. அபராஜிதனிடம் மட்டும் யோசிக்காம சிரிக்கறயேடி.. ஏண்டி..? நான் வில்லன்.. அவன் உனக்கு ஹீரோவா..?”

இது தகாது என்று உதட்டைக் கடித்துக் கொண்டாள் நந்தினி.. என்னதான் அவன் அவள் மனதை முள்ளாக குத்தினாலும் நந்தினியால் அவனை வெறுக்க முடியவில்லையே.. இப்படிப்

பேசுகிறானே என்று விலகிப் போக முடியவில்லையே.. இவனா வில்லன்..?

‘ஈ சுந்தரன் சூப்பர் ஸ்டாரல்லோ..’ அவள் மனம் ஜொள்ளியதை அவன் அறியவில்லை..

“பூனை போல நழுவி இங்கே வந்து அவனிடம் சிரித்துச் சிரித்துப் பேசிக்கிட்டு இருக்கிற.. என் ரத்தம் கொதிக்குதுடி.. அவன் என்ன பேசினாலும் பல்லைக் காண்பிப்பாயா..?”

“ச்சை..! என்ன லாங்வேஜ் பாஸ் இது.. எனக்குப் பிடிக்கலை..”

“ஓ.. என்னைப் பிடிக்கலை.. அவனைப் பிடிக்குதோ..”

‘இதையே திரும்பத் திரும்பச் சொல்கிறான்..’ நந்தினிக்கு மரத்தில் முட்டிக் கொள்ள வேண்டும் போல இருந்தது.. அவனை அவளுக்குப் பிடிக்கும்.. மிக, மிக பிடிக்கும் என்பதை இப்படிப் பேசுகிறானே.. இவனுக்கு மனச்சாட்சி என்பதே இல்லையா..

“அவன் கூப்பிட்டான்னு ஆபிஸ் பில்டிங்கை விட்டு இவ்வளவு தூரம் தள்ளி வந்திருக்கயே.. அவன் எங்கே கூப்பிட்டாலும் போயிருவியா..?”

‘என்னது..?’

நந்தினிக்கு அதிர்ச்சயில் பேச்சே வரவில்லை.. அப்படியே உள்ளங்கையால் வாய் பொத்தி பின்னால் நகர்ந்தாள்.. அவளது விழிகளில் தெரிந்த அதிர்ச்சியில் ரவிச்சந்திரன்

அப்படியே நின்று விட்டான்.. அதிகப்படியாக பேசி விட்ட குற்ற உணர்வு மனதில் வந்தாலும் அவள் அபராஜிதனுடன் பேசிச் சிரித்துக் கொண்டிருந்ததை அவனால் மன்னிக்கவே முடியவில்லை..

'அதுவும் மரத்துக்குப் பின்னாலே மறைஞ்சு நின்னுக்கிடு பேசிச் சிரிக்கிறா..' குற்ற உணர்வு சடுதியில் மறைந்து கோபம் அதிகரித்தது..

"எதுக்கெடுத்தாலும் நான் பெண்களுடன் தப்பாப் பழகினவன்னு என்னையே குறைவாய் பேசுவியே.. இப்ப நீ என்ன பண்ணிக்கிட்டு இருக்கிற..?"

நந்தினி துடித்துப் போயிருந்தாள்.. இவன் எப்படி அவளை இப்படியெல்லாம் பேசலாம் என்ற சீற்றம் எழுந்ததில் அதிர்ச்சியிலிருந்து வெளியே வந்தவள் நீ யார் அதைக் கேட்க என்பதைப் போல அவனை முறைத்து வைத்தாள்.. அதில் ரவிச்சந்திரன் ஆத்திரம் அடைந்தான்..

"என்னடி முறைக்கிற..?"

"ஷட் அப் சார்.. இந்த வாடி, போடிங்கிற விளிப்பையெல்லாம் உங்க அத்தைமகளிடம் வைத்துக்கனும்.. ஐ நீட் ரெஸ்பெக்ட்.."

‘பாஸ்’ என்ற அழைப்பு ‘சார்’ என்று மாறி விட்டதை ரவிச்சந்திரன் கவனித்தான்.. அதற்கான அர்த்தம் ஒன்றுதான்.. அது நந்தினி அவனிடம் வேலை பார்க்க விரும்பவில்லை என்பது..

அவனிடம் வேலை பார்த்தால்தானே அவளுக்கு அவன் ‘பாஸ்..’ ஆவான்..? வேலையே வேண்டாம் என்று தூக்கியெறிந்து விட்டுப் போக முனைகிறவள் அவனை எப்படி ‘பாஸ்..’ என்று அழைப்பாள்..

நந்தினி அவனை விட்டுப் பிரிய நினைக்கிறாள் என்பதில் ரவிச்சந்திரன் வெறி கொண்டான்..

அத்தியாயம் 121

“உனக்கு எல்ல்ல்ல்..லாமே ஈஸிதானே..?”

எல்லாமே என்ற வார்த்தையில் ரவிச்சந்திரன் கொடுத்த அழுத்தம் நந்தினியின் மனதைப் புண்ணாக்கியது.. கோழிக்கோடின் ‘யாழ்..’ ஹோட்டலில் புதுவருடம் பிறந்த பின்னிரவு வேளையில் அவன் தோள் தழுவி ஆடிய நடனம் அவளது மனதில் வந்ததில் இதயம் குழுங்கியது.. நீலிமலைக் காட்டின் மரக்குடிலில் அவனும் அவளுமாகக் கழித்த இரண்டு தினங்களின் நினைவில் அவளது நெஞ்சம் அசைந்தது..

‘போடா டேய்.. என்னைக் கொல்லாமல் கொல்கிறாயேடா..’

“ஈஸியாத் தூக்கியெறிஞ்சிருவ இல்ல..? அதுசரி.. உன் மனம் போல நடக்கலைங்கிறதுக்காக உன்னைப் பெற்று வளர்த்த அப்பபாம்மாவையும், கூடப் பிறந்த தம்பியையும் தூக்கியெறிஞ்சுட்டு ஓடி வந்தவதானே.. நீ..? உன் மனதுப் பிரகாரம் பேசலைங்கிறதுக்காக என்னையும் தூக்கியெறிஞ்சுட்டு ஓடத்தான் நினைப்ப.. இதில் ஆச்சரியம் என்ன இருக்கு.. உன்னைக் கண்டிக்கலைன்னா நான் பாஸ்..

நான் கொடுத்திருக்கிற வேலையிலே கண்டினியூ பண்ணுவ.. கண்டிச்சா சார்..! போடான்னு சொல்லிட்டுப் போய்க்கிட்டே இருப்ப.. அப்படித்தானே..?”

‘நான் மனசுக்குள்ளே போடான்னு சொன்னது இவனுக்கு எப்படித் தெரிஞ்சது..?’

“ஒரு செகண்ட்.. என் பக்கம் இருக்கிற நியாயத்தை நீ நினைத்துப் பார்த்தியா..? நீதான் என்னை லவ் பண்ணலை.. பட்ஷே.. நான் உன்னை லவ் பண்றேன்.. உன் விஷயத்தில் நான் பொசசிவ்வாத்தான் இருப்பேன்.. பொசசிவ் இல்லாத காதல் இல்லை.. அபராஜிதன் கூட நீ பேசிப் பழகற விதம் எனக்குப் பிடிக்கலை.. மோகனிடமும் அதைத்தான் செய்கிற.. மோகன் மனசில கள்ளம் இருக்கிறது உனக்குத் தெரியும்.. தெரிந்தும் அவனை அவாய்டு பண்ண மாட்டேங்கிற.. கேட்டால் அவனைப் பார்த்தால் உன் தம்பி நினைவு வருதுன்னு சொல்கிற.. அதையாவது ஏத்துக்கலாம்.. அபராஜிதனைப் பார்த்தா உனக்கு யார் நினைவு வருது..? அண்ணன் நினைவா..?”

“எனக்கு அண்ணன் இல்லை..”

“நல்லவேளை.. நான் பிழைச்சேன்..”

“காமாலைக் கண்ணுக்கு கண்டதெல்லா மஞ்சளாத்தான் தெரியும் சாரே.. அதுக்கு நான் பொறுப்பில்லை..”

“வாட்ஸ் தி மீனிங்..?”

“குறை நீங்க பார்க்கிற விதத்தில்தான் இருக்குங்கிற மீனிங்..”

“ஓ.. நான் தப்பான கண்ணோட்டத்தோட பார்க்கிறதினாலே எனக்கு எல்லாமே தப்பாத் தெரியுதாக்கும்..?”

“அதே..”

“நீ சொல்கிறதைப் போலவே நான் தப்பான கண்ணோட்டத்தோடு பார்க்கிறவனாகவே இருந்துட்டுப் போகிறேன்... பட்... அந்த அபராஜிதன் யார்...? உத்தமனா..?”

நந்தினியால் பதில் சொல்ல முடியவில்லை.. அபராஜிதன் உத்தமனாகவே இருந்தாலும் அவன்மீது ஒன்றும் நந்தினிக்கு ஈர்ப்பு ஏற்பட்டு விடவில்லையே.. அவனைப் பார்க்கவா அவள் மரங்களுக்குள் வந்தாள்..? தனிமையை நாடியல்லவா வந்தாள்..? அது தெரியாமல் ரவிச்சந்திரன் தன் மனதுக்குத்

தோன்றியதை பேசிக் கொண்டிருந்தால் எப்படி அவள் கேட்டுக் கொண்டிருப்பாள்..?

“உத்தமன்ங்கிறதுக்கான டெஃபனிஷன் என்ன சார்..?”

“பாஸ்ன்னு கூப்பிடு..”

ரவிச்சந்திரன் முகச் சுளிப்புடன் கண்டித்தான்.. நந்தினி பிடிவாதமாக பேசாமல் இருந்தாள்.. அவன் உறுமினான்..

“நீ யாரிடம் விளையாடறன்னு தெரியாம விளையாடற நந்தினி.. நான் ரவிச்சந்திரன்.. என் வாழ்க்கையை நான்தான் தீர்மானிப்பேன்..”

“உங்க வாழ்க்கையை மட்டும்தான் நீங்க தீர்மானிக்கனும்.. என் வாழ்க்கையை நீங்க தீர்மானிக்கக் கூடாது..”

நந்தினி மிகக் கவனமாக ‘பாஸ்’, ‘சார்’ என்ற இரண்டு அழைப்புகளையும் தவிர்த்து விட்டு உறுதியான குரலில் சொன்னாள்..

“இல்லை..”

அழுத்தம் திருத்தமான குரலில் மறுத்தான் ரவிச்சந்திரன்.. அதில் தெரிந்த தீவிரத்தில் நந்தினியின் முகுதுத் தண்டு

ஜில்லிட்டது.. அவன் அவளுக்குப் பாதுகாவலனா.. இல்லை.. அடிமைப் படுத்தியிருக்கும் ஆண்டானா..?

“உன் வாழ்க்கைன்னு தனியா எதுவும் இல்லை நந்தினி.. என்னோடுதான் உன் வாழ்க்கை..”

“அப்படியொரு வாழ்க்கையே எனக்கு வேண்டாம்..”

“அதையும் பார்த்துரலாம்..”

சவால் விட்டான் ரவிச்சந்திரன்.. கட்டிப் போட்டு அவளைக் காவலில் வைக்க நினைக்கிறானா என்று சினம் கொண்டாள் நந்தினி.. அவளைப் பெற்றவர்களே அவளுடைய வாழ்க்கையைத் தீர்மானிக்க முடியாது எனும்போது இவன் யார் அதைத் தீர்மானிக்க..?

“என்னை அசோக வனத்து சீதையாக்கனும்னு பிளான் பண்றீங்களா..? ஒருநாளும் அது நடக்காது..”

“அசோகவனத்து சீதையா..?” அவன் கண்கள் இடுங்கின..

“என்னை ராவணன்னே டிசைட் பண்ணிட்ட..”

“ராவணன்கள்தானே சீதையை எதிர்பார்க்கிறாங்க..? ராமன்தான் அதை எதிர்பார்க்கனும்..”

நந்தினியின் குத்தலில் ரவிச்சந்திரனின் சிவந்த முகம் சினந்தது..

“உன்னோட ராமன் யார்..? அபராஜிதனா..?”

“ச்சீ..”

நந்தினியின் முகம் சுளித்ததில் அவளையே பார்த்தபடி அசையாமல் நின்றான் ரவிச்சந்திரன்.. அவனது சினந்த முகத்தில் மெலிதான இளக்கம் படர்ந்தது..

“ச்சீன்னு சொல்கிறவ எதுக்காக அவனைத் தேடி வர னும்..?” என்றான்..

அவன் அதை விடவே மாட்டான் என்பதில் சலிப்புற்ற நந்தினி.

“நான் ஒண்ணும் அவனைத் தேடி வரலை.. தனியா ஒரு வாக் போகலாம்ன்னுதான் வந்தேன்..” என்று எங்கோ பார்த்தபடி சொன்னாள்..

‘என் முகத்தைப் பார்த்துப் பேச மாட்டாளாம்..’

நந்தினியின் கதுப்புக் கன்னங்களைக் கடித்துத் தின்னும் ஆசை மிகுந்தது அவனுக்கு.. முறைத்துக் கொண்டிருப்பவளின் மனதை வசப்படுத்த என்ன செய்வது என்று தெரியாமல்

திகைத்தான்.. அவனை வசப்படுத்த இளம் பெண்கள் ஏங்கிக் கொண்டிருக்க அவனோ

காட்டுப்பூ போன்ற இயற்கையின் யௌவனம் நிறைந்த வனப்பு மிகுந்த அந்த அட்டுழியக்காரியின் மீது அன்பு வைத்து விட்டுத் திண்டாடிக் கொண்டிருந்தான்..

‘காதலிக்கிறேன்னுதானடி சொன்னேன்..? கடத்தப் போறேன்னா சொன்னேன்..? என்னை ராவணனாக்கறியே..’ அவளைத் துளைத்த அவனது பார்வையை எதிர் கொள்ள முடியாமல் எங்கோ பார்த்துக் கொண்டிருந்தாலும் ஓரவிழிப் பார்வையால் அவனது துளைக்கும் பார்வையை உணர்ந்தவளின் மனது படபடவென அடித்துக் கொண்டது.. அவனது பார்வையைத் தாள முடியாமல் கன்னங்கள் சிவந்து தொலைத்தன..

“தனியா வாக் பண்ண வந்தேன்னு சொல்கிற.. நான் வந்தப்ப அவனுடன் பேசிச் சிரிச்சுக்கிட்டு இருந்தியே.. அது எப்படி.?” தூண்டித் துருவி அவன் செய்த புலன் விசாரணையில் சினம் மிகுந்தவள் பல்லைக் கடித்தபடி..

“தெரிந்தவங்களிடம் பேசிச் சிரித்தா அது ஒரு தப்பா..?” என்று கடுகடுத்தாள்..

“அதை ஒளிஞ்சு மறைஞ்சு செய்தாத் தப்புத்தான்..”

“யார் ஒளிஞ்சு மறைஞ்சிருந்தது..?”

“நீதான்.. மரத்துக்குப் பின்னாடி ஒளிஞ்சு நின்னு அவன் கூடப் பேசிச் சிரித்துக்கிட்டு இருந்த..”

“உங்களுக்குத்தான் அது பின்னாடி.. எனக்கு முன்னாடி..”

“வாட் இஸ் த மீனிங்..?”

“தட் மீன்ஸ்.. நான் மரத்து மேல சாய்ந்திருந்தேன்.. அவன் என் முன்னால் நின்று பேசிக்கிட்டு இருந்தான்..”

“அவனுடன் உனக்கென்ன பேச்சு..? நீ வாக் பண்ண வந்த.. அவனும் வந்தான்.. நீங்க பேசிச் சிரிச்சீங்க.. கதை நல்லாத்தான் இருக்கு.. அவனைப் பாத்தா நின்று பேசனும்னு என்ன அவசியம்..?”

“அவன் மட்டும் தனியா வந்திருந்தா நின்று பேச வேண்டிய அவசியமில்லைதான்.. ஹலோன்னு லேசாத் தலையை அசைச்சுட்டுப் போய்க்கிட்டே இருந்திருக்கலாம்தான்.. கூடவே உங்க தாத்தாவும்

வந்திருந்தாரே.. அவரைக் கண்டா நின்று பேசித்தானே ஆகனும்..?”

“வாட்..? தாத்தாவும் கூட வந்திருந்தாரா..?”

“ஆமாம்..”

நந்தினிக்கு அழுகையழுகையாய் வந்தது.. கொஞ்சமாவது என்ன, ஏது, என்று கேட்டு விட்டு கோபப் படுகிறானா..? எடுத்ததெற்கெல்லாம் சந்தேகம்..

“தாத்தா வந்திருந்தாரா..?” அவன் குரல் இறங்கியிருந்தது.. தாடையைத் தடவியபடி சுற்று முற்றும் பார்த்து விட்டு..

“அவர் எங்கே..?” என்று கேட்டான்..

“அரண்மனைக்கு போய் விட்டார்..”

“தாத்தா கூட வந்த இவன் மட்டும் உன் கூடப் பேசிக்கிட்டு நின்றானா..? தாத்தா அதை அலோவ் பண்ண மாட்டாரே..”

“மாட்டார்தான்.. இங்கே யாரையோ பார்க்க வந்தாராம்.. இவன் கூட வந்திருக்கிறான்.. வந்த வேலை முடிந்து அவங்க கிளம்பிக்கிட்டு இருக்கிறப்ப நான் இந்தப் பக்கமா வாக் வந்ததைப் பார்த்ததும் நின்னுட்டாங்க.. தாத்தா நீங்க

எங்கேன்னு கேட்டார்.. ஆபிஸ் ரூமில இருக்கீங்கன்னு சொன்னேன்.. பார் க்க வருகிறீங்களான்னு கேட்டேன்.. உங்க வேலை கெடும்.. டிஸ்டர்ப் பண்ணக் கூடாதுன்னு சொல்லிட்டுக் கிளம்பிட்டார்..”

“கூடவே இவனும் போக வேண்டியதுதானே..?”

“தாத்தா கூப்பிட்டார்.. இவன்தான் உங்களிடம் மன்னிப்புக் கேட்கனும்னு சொல்லி நின்றுட்டான்.. தாத்தா அதில் சந்தோஷமாகிக் கிளம்பிப் போயிட்டார்.. அவங்க ரெண்டு பேரும் பேசறதைப் பார்க்க வேடிக்கையாயிருந்தது.. வேடிக்கை பார்க்கத் தோதா மரத்தில சாய்ந்து நின்னுக்கிட்டு இருந்தேன்.. அதை நீங்க ஒளிஞ்சிருக்கிறதா மீன் பண்ணிக்கிட்டீங்க..”

“ஓ.. அவனிடம் எதுக்குச் சிரிச்சுப் பேசின..?”

கொக்குக்கு ஒன்றே மதி என்பதைப் போல அவன் ஆரம்பித்த இடத்திலேயே அசையாமல் நின்றான்.. எவ்வளவு விளக்கம் சொன்னாலும் மலையிறங்காமல் அடம் பிடித்தவனை ஆயாசத்துடன் பார்த்தாள் நந்தினி..

‘முடியல..’ களைப்பாக உணர்ந்தாள்..

“தாத்தாவும் அவனுடன் உங்களைப் பார்க்க வருகிதாச் சொன்னார்.. இவன் தில்லாலங்கடி வேலை பார்த்து அவரிடமிருந்து எஸ்கேப் ஆகிட்டான்.. உங்க அத்தானிடம் மன்னிப்புக் கேட்கனும்னு தாத்தாவிடம் சொன்னீங்களே.. மன்னிப்புக் கேட்கலையான்னு கேட்டேன்.. அவன் பொய்காரன்ங்கிறதில எனக்குச் சிரிப்பு வந்திருச்சு..”

உணர்வுகள் துடைத்த வெறுமையான குரலில் அவள் விளக்கம் சொல்லி முடித்தாள்.. ஒரு சின்னச் சிரிப்புக்கும் பேச்சுக்கும் இத்தனை விளக்கம் சொல்ல வேண்டுமா என்ற துயரத்தில் அவளது தொண்டை கமறியது.. அவளையே பார்த்துக் கொண்டிருந்த ரவிச்சந்திரன்..

“நான் ராமனா வேனும்னா இல்லாம இருக்கலாம்.. அதுக்காக ராவணன்னு நிக்நேம் வைக்காதே.. ஐ டோன்ட் லைக் இட்..” என்றான்..

நந்தினி பேசவில்லை.. மௌனமாக இருந்தாள்.. அவளுக்கே அவனை ராவணன் என்று சாடி விட்டதில் மனதுக்கு கஷ்டமாகத்தான் இருந்தது.. என்ன செய்வது..? அவன் பிடுங்கிய பிடுங்கலில் அவளையும் அறியாமல் வாயில் வந்து தொலைத்து விட்டதே..

"சப்போஸ் நான் ராவணனா இருந்தா சீதையின் மேல் ஆசைப்பட மாட்டேன்.. மண்டோதரியைத்தான் உயிராய் நினைப்பேன்.. அந்த வகையில் இந்த ராவணனின் மண்டோதரி நீதான்.."

சுட்டு விரலை நீட்டி அவன் சுட்டிக் காட்டியதில் உதட்டைக் கடித்த நந்தினிக்கு ஓடிப் போய்விட வேண்டும் போல இல்லை.. அந்த ஒற்றைத் தலை ராவணனின் மார்பில் முகம் புதைத்து ஏண்டா என்னை இப்படி வதைக்கிறாய் என்று கதறி அழ வேண்டும் போல இருந்தது..

"கற்பில் சிறந்தவள் சீதை மட்டுமில்லை.. மண்டோதரியும் தான்.. ராமனின் சீதை கற்புக்கரசியாய் இருந்ததில் ஆச்சரியம் ஏதுமில்லை.. ஏகபத்தினி விரதனின் மனைவி அப்படித்தான் இருப்பாள்... ராவணனின் மண்டோதரி கற்புக்கரசியாய் இருந்தாளே.. அதுதான் ஆச்சரியம்.. உன்னால் அப்படி இருக்க முடியாதா நந்தினி..?"

உலுக்கி விட்டதைப் போல மலங்க மலங்க விழித்தாள் நந்தினி.. அவனுடைய பேச்சும் விவரிப்பும் ஆழ்கடலுக்குள் அவளை மூழ்க வைத்ததைப் போல மூச்சுத் திணற

வைத்தன.. இதுபோன்ற அபரிதமான காதலை அவள்மீது ஏன் பொழிகிறான் என்று அவள் மனம் மயங்கினாள்..

கந்தவர்வனை மிஞ்சிய பேரழகன் அவன்.. அவனது கரம் பிடிக்க கந்தர்வலோக மங்கை போல இருக்க வேண்டும்...

அஜந்தாவின் பாதியளவாவது அழகாக இருக்க வேண்டாமா..?

அத்தியாயம் 122

“யாரோ.. யாருக்குள் இங்கு யாரோ..

யார் நெஞ்சை இங்கு யார் தந்தாரோ..?

விடையில்லாத ஒரு கேள்வி..

உயிர்காதல் ஒரு வேள்வி..”

நந்தினியின் மனதைத் தோண்டிப் பார்த்தது பாடல்.. ஜீப்பில் ஒலித்த சிடியுடன் இணைந்து பாடியபடி ஜீப்பை ஓட்டிக் கொண்டிருந்தவனை ஏக்கமாக பார்த்தாள் நந்தினி.. எதிர்காற்றில் பறந்த அவனது முடியுடன் சேர்ந்து அவளது மனமும் பட்டம் போல அலைக்கழிந்தது..

“காதல் வரம் நான் வாங்க..

கடைகண்கள் நீ வீச..

கொக்கை போல நாள் தோறும்

ஒற்றைக் காலில் நின்றேன் கண்மணி..!”

தாபத்துடன் அவளைப் பார்த்தான்.. அதில் அவளது இதயம் ஓர் நொடி நின்று மறுநொடியில் படபடவென அடித்துக்

கொள்ள ஆரம்பித்தது.. வயநாட்டின் குளிர் காற்று மேனியில் படிந்தும் அவளுக்கு வியர்த்தது.. இதோ தேவர்களை மிஞ்சிய பேரழகன் ஒருவன் அவள்மீது காதல் கொண்டிருப்பதாகச் சொல்லி உருகுகிறான்.. நம்பலாமா..? அவன் காதல் உண்மையா..?

"ஊரை வெல்லும் தோகை நான்..

உன்னால் இன்று தோற்றுப் போனேன்..

கண்ணால் யுத்தமே நீ

செய்தாய் நித்தமே.."

பாடிய பெண்குரல் அவளது மனதை பிரதிபலிப்பதைப் போல ஒலித்தது.. யுத்தகளத்தில் தோற்றுக் கொண்டிருப்பவளாக களைப்படைந்தாள் நந்தினி.. அவன் மனதில் அவளா..? இது என்ன நிஜமா..?

"நின்றாய் எங்கும் மின்னல் கீற்றாய்..

நித்தம் வாங்கும் மூச்சுக் காற்றாய்

உன்னைச் சூழ்கிறேன் - நான்

உன்னைச் சூழ்கிறேன்.."

ரவிச்சந்திரனின் பார்வை அவளைச் சூழ்ந்து அனைக்க அழைத்தது.. நந்தினியின் தேகம் சூடானது.. அவனது அழைப்பை மறுக்கும் திராணியில்லாதவளாக முகத்தைத் திருப்பித் தப்பிக்க முனைந்தாள்.. அருகில் இருந்தவனின் அசைவில் உராய்ந்த அவனது முழங்கை அவள்மீது பட்டதில் மின்சாரம் பாய்ந்ததைப் போன்ற ஜிவ்வென்ற உணர்வு உண்டாகி அவளை சோதித்து வைத்தது..

“காற்றில் வைத்த சூடம் போல

காதல் தீர்ந்து போகாது..

உன்னை நீங்கி உஷ்ணம் தாங்கி

என்னால் வாழ இயலாது.. அன்பே..! வா..”

சிடியின் பாடல் ஒலியை மீறி ஒலித்தது ரவிச்சந்திரனின் குரல்.. நந்தினி சோர்ந்து போனவளாக கண்களை இறுக மூடிக் கொண்டாள்.. அவளது சுய மரியாதையை பதம் பார்க்கும் கேள்விகளை அவன் கேட்கும் இதோ அவன் பின்னால்தான் சென்று கொண்டிருக்கிறாள்.. அவனை விட்டு விலகி ஓட முடியாமல் கனமான இரும்புக் குண்டு கால்களைப் பிணைத்திருந்தது..

வயநாட்டு அரண்மனையின் போர்டிகோவில் ஜீப் நின்றது.. ரவிச்சந்திரன் குதித்து இறங்கி நந்தினி இறங்குவதற்காக கையை நீட்டினான்.. அதைத் தவிர்த்த நந்தினி தானாக இறங்கியதில் ரவிச்சந்திரனின் முகம் கடுத்தது..

“வொய்..?”

நந்தினியின் காதோரமாக அவன் போட்ட சப்தத்தில் காதே அடைத்துக் கொண்டு ‘நொய்’ என்ற சப்தத்தை உண்டு பண்ணியது.. நந்தினி தலையைக் குலுக்கி அச்சப்தத்தை விரட்டினாள்..

“வரனும் ரவி..”

தோட்டத்திலிருந்து வந்த அருள்மொழிவர்மன் உற்சாகக் குரல் கொடுத்தார்.. ரவிவர்மனின் கடுத்த முகம் சிரித்த முகமாக மாறியது..

“தாத்தா..” என்றான்..

“ஞான் நிண்ட எஸ்டேட்டுக்கு வந்திட்டே..”

“நந்தினி சொன்னா தாத்தா.. ஆபிஸ்க்கு வந்திருக்கலாமே..”

“ஞான் ஆக்ரஹாம் கொண்டு.. பட்ஷே.. அபராஜிதன் ஆட்சேபிச்சுல்லோ..”

“அவன் எதுக்கு அப்ஜெக்ட் பண்ணினான்..”

“நிண்ட அத்தையின் மோன் ரவிச்சந்திரண்ட மாப்புப் பெறனும்னு பறஞ் .. ஞான் கூட வந்தா ஆ மனுஷனுக்கு சங்கடம் உண்டாகுமல்லோ..?”

“ஓ...”

இது தெரியாமல் நந்தினியை சந்தேகித்து விட்டோமே என்ற சங்கடத்துடன் ரவிச்சந்திரன் நந்தினியைப் பார்த்தான்.. அவன் விழிகள் ‘மன்னிக்க மாட்டாயா.. கொஞ்சம் மனம் இரங்கி..?’ என்று கெஞ்சின.. நந்தினி உதட்டைக் கடித்துக் கொண்டு அரண்மனைக்குள் விரைந்தாள்.. ஹாலில் இருந்த வீணா நந்தினியைக் கண்டதும்..

“வாம்மா.. ஏன் இவ்வளவு நேரம்..?” என்று பிரியத்துடன் வரவேற்றாள்..

“வேலையிருந்தது அத்தை..” தளர்வான குரலில் சொன்னாள் நந்தினி..

அவளது தளர்ச்சியில் துணுக்குற்ற வீணா நந்தினியின் அருகே வந்து நெற்றியில் கை வைத்து காய்ச்சல் இருக்கிறதா என்று பார்த்தாள்..

அவளது பாசத்தில் நெகிழ்ந்து போன நந்தினியின் கண்களில் இருந்து கரகரவென கண்ணீர் வந்து விட்டது.. எவரும் இல்லாமல் தனிமையில் நிற்கும் துயர் தொண்டையை அடைக்க..

“அத்தை..” என்று விம்மியபடி வீணாவின் தோள் சாய்ந்து விட்டாள்..

“என்னடா.. என்னடா ஆச்சு..” பதட்டத்துடன் நந்தினியை அணைத்துக் கொண்ட வீணா சிறு குழந்தையின் தலையை வருடிக் கொடுப்பதைப் போல நந்தினியின் கூந்தலை வருடிக் கொடுத்து அமைதிப் படுத்தினாள்..

நந்தினி பதிலே சொல்லாமல் கேவிக் கேவி அழுததில் வீணாவின் பதட்டம் அதிகரித்தது.. அருள்மொழிவர்மனுடன் பேசியபடி ரவிச்சந்திரன் வருதைக் கண்ட வீணா..

“மாமாவும், ரவியும் வருகிறாங்க நந்தினி.. கண்ணைத் துடைச்சுக்க..” என்று அறிவுறுத்தினாள்..

சடுதியில் நந்தினி முகத்தைத் துடைத்து இயல்பாகியதைக் கவனித்த வீணாவின் முகம் யோசனையானது.. பூஜையறையிலிருந்து வெளிப்பட்ட யாழினி..

“எந்தா ரவி.. எஸ்டேட்டில இருந்து வந்தா நிண்ட தாத்தன் கிட்ட மட்டும் செல்லம் கொஞ்சுமோ..? ஈ பாட்டிய நீ மறந்து போயி..” என்று பொறாமைப் பட்டாள்..

“தாத்தா போர்டிகோவிலேயே மடக்கிட்டார் பாட்டி.. நான் உங்களைத் தேடி ஓடி வர்றதுக்கு ஸ்பீடு பிரேக் போடனும்னு சதி பண்ணி அங்கே நின்றுக் கிட்டிருந்தார்ன்னு இப்போயில்ல தெரியுது.. நான் ஜீப்பில இருந்து குதிக்கும் போதே எங்கே என் பாட்டி.. எங்கே என் பாட்டின்னு தேடிக்கிட்டே இல்லே குதித்தேன்..? வேணும்னா நந்தினியைக் கேட்டுப் பாருங்க.. சொல்லு நந்தினி.. நான் பாட்டியைத்தானே தேடி னேன்..?”

சாட்சிக்கு அழைப்பதைப் போல ரவிச்சந்திரன் நந்தினியை பேச்சுக்கு அழைக்க அவள் மௌனப் பார்வையுடன் பேசாமல் இருந்தாள்.. அவன் கேட்கிறானே என்று சின்னதாகச் சிரிக்கக் கூட இல்லை.. வீணாவின் முகத்தில் யோசனை அதிகரித்தது.. பேரனுடன் உரையாடும் உற்சாகத்திலிருந்த யாழினியும்

அருள்மொழி வர்மனும் நந்தினியின் மௌனத்தைக் கவனிக்கவில்லை..

“போதுமடா.. வேலிக்கு ஓணானல்லோ சாட்சி.. நிண்ட செக்கரட்டரி நினக்கு எதிரா சாட்சி பறஞ் மோ..?” யாழினி பேரனின் காதைத் திருகுவதைப் போல பாவனை செய்தாள்..

“இதி நியாயமல்ல யாழினி.. எண்ட பேரனின் செவி மடல் நொம்பரம் கொள்ளுமல்லோ..”

அருள்மொழிவர்மன் ரவிச்சந்திரனைக் காப்பவரைப் போல ஊடே புகுந்தார்..

“நிங்கள ஞான் அறியும்.. எண்ட பேரனிண்ட ஞான் சம்சாரிக்கறதில நிங்களுக்கு பொறாமையாயி..”

“எந்துக்கு..? இவன் எனிக்கும் பேரனல்லோ.. மனசிலாயி..”

“நிங்களும் நிங்க பேரனும் சம்சாரிக்கயில ஞான் ஊடே வருமோ.. அங்ஙன இருக்கப்போ நிங்க மட்டும் எந்துக்கு ஊடே வந்துட்டே..? எனிக்கு இதில் பிடித்தமில்லையல்லோ..”

“ஆரானு ஊடே வந்து..? ஞானோ..?”

“நிங்கள்தான்.. வேறு எவரு ஊடே வந்து..? நிங்கட குளோனிங்கோ..?”

“ஓ.. கேட்டோ ரவி.. நிண்ட பாட்டி குளோனிங்ன்னு பறஞ் .. ஈ கிழவி குளோனிங்பத்தி அறிஞ் ..”

“ஓ.. ஞான் கிழவியெண்டா நிண்ட தாத்தன் மட்டும் வல்லிய குமரனோ..? கேட்டோ ரவி..”

“ஞான் பெயளவன சுந்தர புருஷனாக்கும்..”

“இவ்விடத்திலும் அதே.. ஞான் யெளவன வல்லிய சுந்தரியாக்கும்.. கேட்டோ..”

அழகிகளில் பேரழகியான யாழினி வரிந்து கட்டிக் கொண்டு சண்டைக்குக் கிளம்பினாள்.. மனைவியை உற்றுப் பார்த்த அருள்மொழிவர்மன் அவள் அழகில் மையலாகி..

“நிஜமானு யாழினி.. நீ வல்லிய சுந்தரியல்லோ..” என்று சொக்கினார்..

மருமகள் இருக்கும் நினைவில் முகம் சிவந்த யாழினி சண்டையை மறந்தவளாக வெட்கத்துடன்..

“நிங்களுக்கு எந்து சமயம் எதிப் பறஞ்ஞனும்னு இங்கிதம் இல்லாமப் போயி..” என்று சிணுங்கினாள்..

“கேட்டோ ரவி.. நிண்ட பாட்டி வெட்கமாயி.. ஹா.. ஹா..”

உரத்த குரலில் சிரித்தார் அருள்மொழிவர்மன்..

“நிண்ட தாத்தாவுக்கு வயசு திரும்பி.. இங்கிதமில்லாம சம்சாரிக்கிறாரல்லோ.. எனிக்கு ஜோலியுண்டு ரவி.. ஞான் போகட்டே..” யாழினி விரைந்து விட்டாள்..

“யாழினி.. யாழினி..” அருள்மொழிவர்மன் மனைவியின் பின்னாடி ஓடோடிப் போனார்..

தாத்தா, பாட்டியின் கொஞ்சலை தலையை ஆட்டி ரசித்த ரவிச்சந்திரன் அருகிலிருந்த நந்தினியைக் காதலுடன் பார்த்தான்.. அவர்களைப் போல வாழ வேண்டும் என்ற ஆசை அவன் விழிகளில் மிதந்தது.. நந்தினி தொய்ந்து போனவளாக நின்றிருந்ததில் அவன் விழிகளில் கேள்வி வந்தது..

“ஏன் என்னவோ போல இருக்கிற..?”

அவன் கேட்ட கேள்வியில் நந்தினி அவனைச் சுட்டெரிப்பதைப் போல பார்த்தாள்.. உனக்குத் தெரியாதா என்று கணல் கக்கின அவளது விழிகள்..

"நீ சக்கையாய் வேலையைப் பிழிஞ்சா டயர்டாகி என்னவோ போல இருக்காம என்ன செய்வா..? அப்பாவி ஒருத்தி சிக்கிட்டா நீ இஷ்டத்துக்கு வேலை வாங்குவியா..?" வீணா மகனிடம் சண்டைக்கு வந்தாள்..

"அப்பாவியா..? இவளா..? ஹா.. ஹா.."

ரவிச்சந்திரன் சிரித்துக் கொண்டிருக்க நந்தினி வீணாவிடம்.. "அத்தை.. நான் என் ரூமுக்குப் போய் ரெஸ்ட் எடுத்துக்கவா..?" என்று கேட்டாள்..

ரவிச்சந்திரனின் முகம் மாறியது.. அவன் நந்தினியுடன் சிரித்துப் பேசிக் கொண்டிருக்க விரும்பினான்.. அவளுடைய மனத்தாங்கலைப் போக்கி சகஜமாக உரையாட வைக்க வேண்டுமானால் அவள் அங்கே இருக்க வேண்டும்.. வீணாவையும் ரம்ய மாலினியையும் ஊடே வைத்து நந்தினியிடம் வாய் வளர்க்கலாம் அவர்களின் முன்னிலையில் அவள் அவனுடன் பேசித்தான் ஆக வேண்டும்.. தப்பிக்க முடியாது..

"இப்படி ஃபிலிம் காட்டினா என் அம்மா என்னை இன்னும் கொஞ்சம் வறுத்தெடுக்க மாட்டாங்களா..? மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்லு.. நீ ஆபிசில் வெட்டி

முறிச்சியா..? சும்மா ஈ ஓட்டிட்டு இங்கே வந்து டயர்டா இருக்குன்னு சொன்னா என் அம்மாவும் தங்கையும் உனக்காக என்கூட சண்டை போடுவாங்கன்னுதானே பிளான் பண்ற..?”

நந்தினி பதில் சொல்லாமல் உதட்டைக் கடித்துக் கொண்டு நின்றதில் வீணா மகனைப் பார்த்தாள்.. நந்தினியின் அழுகையும் வாடியிருந்த முகமும் வீணாவை பாதித்தன..

“நீ நந்தினியைத் திட்டினயா ரவி..?” கண்டிப்புடன் கேட்டாள்..

இல்லையென்று சொல்லாமல் ஏன் அப்படி அவள் கேட்கிறாள் என்று கேட்டு வைத்தான் ரவிச்சந்திரன்..

“நந்தினி அழுகிறா.. வேலை அதிகமிருந்தா டயர்டா மட்டும்தான் ஃபீல் பண்ணனும்.. அழுகை வராதே.. நீதாண்டா எதையோ சொல்லியிருக்கிற..”

‘அழுதாளா..?’

நந்தினியைப் பார்த்தான்.. அவளது இமைகள் வீங்கி கண்கள் சிவந்திருந்தன.. கலங்கியிருந்த முகத்துடன் எங்கோ பார்த்தாள்..

“இவ தொட்டாச் சிணுங்கிம்மா.. வேலையை தப்புத் தப்பாச் செய்தா.. அதுக்காக கொஞ்சமா கோவிச்சுக்கிட்டேன் அதுக்காக உங்ககிட்ட கம்ப்ளெயிண்ட் பண்ணி அழுதிருப்பா..”

“நீ கொஞ்சமாத்தான் கோவிச்சிருப்ப.. நான் நம்பனும்..”

“என்னை நம்ப மாட்டிங்க.. இவளை நம்புவீங்க..”

“ஆமாண்டா.. அப்படித்தான்.. பிள்ளையின் குணம் எப்படின்னு பெத்தவளுக்குத் தெரியாதா..? நீ திட்ட ஆரம்பிச்சுட்டா நான் ஸ்டாப்பா திட்டுவியே.. ஸ்பீடு பிரேக் போட மாட்டியே..”

“நீங்க ஒருத்தங்க போதும்மா.. எனக்கு சொர்டிஃபிகேட் கொடுக்கிறதுக்கு.. ஏய்ய்.. வாயாடி.. உன்னால என் அம்மா என்கூட சண்டைக்கு வர்றாங்க.. போட்டுக் கொடுத்துட்டேல்ல..”

“அவ போட்டுக் கொடுத்ததை நீ பார்த்தியா..? இப்படித்தான் அபாண்டமா அவமேல குற்றம் கண்டு பிடிச்சு எதையாவது சொல்லியிருப்ப.. மனசு தாங்கமா அழுகிறா..”

சட்டென உடல் அதிர ரவிச்சந்திரனைப் பார்த்தாள் நந்தினி.. இருவரின் விழிகளும் சந்தித்துக் கொண்டன.. குற்ற

உணர்வுடன் மன்னிப்பை வேண்டின ரவிச்சந்திரனின் விழிகள்.. சோர்வுடன் பார்வையைத் திருப்பிக் கொண்ட ன நந்தினியின் விழிகள்..

“நான் மாடிக்குப் போறேன் அத்தை..”

அதற்கு மேலும் அங்கு நிற்க முடியாமல் மடமடவென மாடிப் படிகளில் ஏறிவிட்டாள் நந்தினி..

அத்தியாயம் 123

"புள்ளி மானைப் போலத் துள்ளி குதித்து ஓடி வருகிற..? என்ன..? இப்படிப்பட்ட அரண்மனைக்குள் நமக்கும் ஒண்ட ஒரு மூலையிலே இடம் கிடைத்திருக்குங்கிற சந்தோஷமா..?" மாடி பால்கனியிலிருந்து ஹாலுக்குள் வந்தபடி கேட்டாள் அஜந்தா.. நந்தினியை வழி மறித்து நிறுத்துவதைப் போல அவளுக்கு எதிரில் வந்து நின்றாள்.. அப்போதுதான் மதியத் தூக்கம் கலைந்து கண் விழித்திருந்தவள் மாடி பால்கனியில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.. வயநாட்டு அரண்மனையின் விஸ்தீரணத்தை மனதில் கணக்கிட்டபடி எப்படி அந்த அரண்மனையை வசப்படுத்துவது என்ற ஆழ்ந்த சிந்தனையிலிருந்தாள்.. அரண்மனை அவள் வசமாக வேண்டுமானால் அரண்மனைக்குச் சொந்தக்காரன் அவள் வசமாக வேண்டும்.. அவன்தான் அஜந்தா எனும் மாய மோகினியின் மோகாஸ்திரத்தில் சிக்காமல் எஸ்ஸாகிக் கொண்டிருக்கிறானே..

'ஆ ரவியை எங்ஙன மடக்கறது..?'

மூளையைக் கசக்கி அவள் ஆலோசித்துக் கொண்டிருக்க.. அவளது மோகாஸ்திரத்திற்கு அகப்படாத ரவிச்சந்திரன் நந்தினியுடன் ஜீப்பில் வந்து இறங்கினான்.. இறங்கியவன் நந்தினி இறங்குவதற்காக கை நீட்டியதில் அஜந்தாவின் மனம் கொதிகலனானது..

'ஈ நந்தினியென்ன என்னை விட அழகியோ..? அஜந்தா ஓவியமெண்டு கொண்டாடப்படற என்னை விட்டு விட்டு.. ஈ பக்கியக் கொண்டாடறானே.. இவனென்ன பிராந்தையோ..?'

ரவிச்சந்திரன் நந்தினியிடம் பேச முயல்வதையும் அவள் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு அவனிடம் பேசாமல் கடந்து செல்வதையும் கவனித்தவளுக்கு அவர்களுக்கு இடையே ஏதோ ஒரு விரிசல் இருப்பது புலப்பட்டு விட்டது..

'வாட் எ பிளெஸென்ட் சர்ப்ரைஸ்..! ஈ நந்தினிப் பக்கிக்கும்.. ஆ ரவிச்சந்திரனென்ட திமிர் பிடிச்சவனுக்கும் இடையே டிஷ்யூம்.. டிஷ்யூமா..? வல்லிய சந்தோஷம்..'

நந்தினி உள்ளே போய்விட.. தொடர்ந்து போக முடியாமல் அருள்மொழிவர்மனிடம் மாட்டிக் கொண்ட ரவிச்சந்திரனின் கண்கள் நந்தினியைத் தேடியதில் கடுப்பானாள் அஜந்தா.. அவளுக்கு மிளகாயை அரைத்து

உடலில் பூசி விட்டதைப் போல மேனியெங்கும் பொறாமைத்தீ பற்றியெரிந்தது..

‘ஆ மனுஷி பெரிய ரதிபோல இவன் கிடந்து அல்லாடறானே.. வயநாட்டு அரண்மனையில் பிறந்தவனைப் போலவா நடந்து கொள்கிறான்..? வெட்கம்..’

அதை கிலோ என்ன விலை என்று கேட்கும் அஜந்தா சொல்லிக் கொண்டதுதான் விந்தையிலும் விந்தை..

‘இப்போ அவளைத் தொடுத்து க் கிட்டு போயிருவான்..’

அவள் மனதுக்குள் ஒன்று இரண்டு சொல்ல ஆரம்பித்தாள்.. பத்து எண்ணுவதற்குள் ரவிச்சந்திரன் பறப்பாய் பறந்து வீட்டுக்குள் ஓடிவிட்டான்..

‘ஈ மனுஷனை ஆ நந்தினி காந்தம் போலயில்ல ஈர்க்கிறா.. வசியப் பொடியைத் தூவியிருப்பாளோ..?’

அவளிடம் இல்லாத வசியப் பொடிகளா..? அவளும் ஆன மட்டும் தூவிப் பார்த்து விட்டாள்.. ரவிச்சந்திரன் அவற்றையெல்லாம் ‘ஊஃப்..’ என்று ஒரு ஊது ஊதிக் கடந்து போய் விடுவான்.. மற்ற சமயங்களில் கூட அவளிடம் ஓரிரு

வார்த்தைகள் பேசுவான்.. அவள் வசியப் பொடியை வீசித் தொலைக்கும்போது சுத்தமாக பேச மாட்டான்..

“எந்தா அம்மே இது..? ஈ ரவிச்சந்திரன் மன்மத பாணத்துக்கும் மசிய மாட்டேங்கிறான்.. மாந்திரிக வசியத்துக்கும் மசிய மாட்டேங்கிறான்.. இவன் மாந்திரிகனுக்கும் மாந்திரிகனோ..?”

மோகினி போலத் தாயிடம் புலம்பித் தவிப்பாள் அஜந்தா.. அப்படி அவளிடம் சிக்காதவன் நந்தினியிடம் மட்டும் எப்படிச் சிக்கினான்..? அஜந்தா அறிந்த வரையில் நந்தினி ரவச்சந்திரனைக் கவர்வதற்காக எந்த முயற்சியும் எடுக்கவில்லை.. மெனக்கெடவில்லை.. நளினமாகப் பேசிப் பழக முயலவில்லை பிடித்ததைப் பேசினாள்.. பிடித்ததைச் சாப்பிட்டாள்.. ரவிச்சந்திரன் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பதற்காக சாப்பாட்டின் அளவை ஓர்நாளும் அவள் குறைத்ததில்லை.. விட்டு வெளுத்துக் கட்டினாள்.. அதில் அஜந்தாவுக்கு பரம சந்தோஷம்..

‘இவளிடம் எப்படி ரவிக்கு அட்ராக்ஷன் வரும்..?’

வந்ததே.. அவள் பேசுவதை, சிரிப்பதை, ஏன் சாப்பிடுவதைக் கூட அவன் ரசித்தான்.. அதில் அஜந்தாவின் வயிறும் மனமும் எரிந்தது..

‘இவன் பார்க்கிறான் என்பதுக்காக கால் வயிறுக்கு மேல் நான் சாப்பிட்டதில்லை.. படுபாவி.. என்னை பட்டினி போட்டு விட்டு சாப்பாட்டு ராமியிடம் வழிகிறான்..’

அந்தச் சாப்பாட்டு ராமி ஓட்டமும் நடையுமாக மாடியேறி வந்தபோது வழி மறித்து வம்பிழுத்தாள் அஜந்தா.. அஜந்தாவைக் கண்டாலே நந்தினி பயந்து பதுங்குவதை அவள் அறிந்து வைத்திருந்தாள்.. இவள் இந்தப் பக்கம் போனால் அவள் அந்தப் பக்கமாக ஒளிந்து மறைந்து ஓடி விடுவாள்..

‘சிக்க மாட்டேன் என்கிறாளே..’

நம்பியாரைப் போலக் கை பிசைந்து காத்திருந்த அஜந்தாவிடம் வசமாக சிக்கி விட்டாள் நந்தினி.. இன்று இவளைக் குழாய் புட்டுப் போட்டு விட வேண்டும் என்று அஜந்தா பல்லைக் கடிக்க.. அவள் சற்றும் எதிர்பாராத விதமாக நந்தினி பல்லைக் கடித்தாள்..

“நானாவது வேலை பார்க்க வந்திருக்கிறேன்.. இந்த அரண்மனையின் மூலையில் ஒண்டிக் கொண்டிருக்கிறேன்.. நீ என்ன செய்கிற..?”

அதுவரை நந்தினி அஜந்தாவிடம் நேருக்கு நேர் நின்று நிமிர்வாகப் பேசியதில்லை.. ஒருமையில் அழைத்ததில்லை.. இரண்டையும் அவள் செய்ததில் அஜந்தா ஸ்தம்பித்துப் போய் விட்டாள்.. என்ன தைரியம் என்று கண் சிவந்தாள்..

“ஏய்ய்.. நீ யாரிடம் பேசிக்கிட்டு இருக்கிறேன்னு தெரியுமா..?”

“தெரியுமே.. என் பாஸோட அத்தை மகள்ங்கிற சொந்தத்தைச் சொல்லிக்கிட்டு வெட்டியா உட்கார்ந்து கொட்டிக்கிற உன்னிடம்தான் பேசிக்கிட்டு இருக்கேன்.. என்னங்கிற..?”

“வெட்டியாக் கொட்டிக்கிட்டு இருக்கிறேனா..? வேலை பார்க்க வந்தவளுக்கு வாயைப் பார்.. இது என் அம்மாவின் அரண்மனை.. மனசிலாயி..”

“இல்லையாமே.. உன் அத்தான் இதை விலைக்கு வாங்கிட்டாராமே.. கிரயப் பத்திரமே இருக்கிறதானே.. அன்றைக்கு உன் முன்னாடிதானே இதையெல்லாம்

சொன்னார்..? மறந்ததைப் போல ஆக்ட் கொடுக்கிற பார்த்தியா.. அங்கே நிற்கிற நீ..”

‘இது நந்தினியா..?’ அயர்ந்து போய் விட்டாள் அஜந்தா..

அவளைப் பார்த்தாலே கிடுகிடுவென நடுங்கி ரவிச்சந்திரனின் முதுகுக்குப் பின்னால் ஒளிந்து கொள்ளும் அந்தப் பயந்த நந்தினி எங்கே தொலைந்து போனாள்..

‘இவளுக்கு இன்னைக்கு எந்தப் பேய் பிடிச்சிருக்கு..?’ அஜந்தாவின் ஆராய்ச்சி பார்வைக்குப் பதில் ப ார்வையாக நெருப்புப் பார்வை பார்த்த நந்தினி..

“வழியை விடு..” என்று அதட்டினாள்..

“ஏய்ய்.. எங்கே வந்து யாரிடம் வழியை விடச் சொல்கிற..?”

“ஊம்..? வயநாட்டு அரண்மனைக்கு வந்து அஜந்தாவாகிய உன்னிடம்தான் வழியை விடச் சொல்றேன்.. ஆளைப் பாரு.. எங்கே வம்புன்னு அலைகிறயா..? உனக்கும் உன் அண்ணனுக்கும் வம்பு வளர்க்க நான்தான் கிடைச்சேனா..?”

“இப்ப எதுக்காக என் அண்ணனைப் பறஞ் ..?”

“இப்படியே பேசிக்கிட்டு இருந்தேன்னு வைய்யி.. ஞான் உன் கன்னத்தில அறஞ் .. பறஞ் வாம் பறஞ் .. இப்ப என்ன அலுவலுக்கு மலையாளத்தை டிஸ்டர்ப் பண்ற..? அதுதான் உனக்கு வர மாட்டேங்குதில்ல.. வராத மலையாளத்தை வா, வான்னு படுத்தி எடுக்காம எப்போதும் போல தமிழில் பேசுவியா.. அதை விட்டுட்டு பறஞ் வாம்.. பறஞ் ..”

“எங்கட மொழிய கிண்டல் பண்ணி..?”

“இங்கே பார்.. நீ படுத்துகிற பாட்டுக்கு மலையாள மொழிக்கு வாயிருந்தா அது தேம்பித் தேம்பி அழுதிரும்.. நான் ஒண்ணும் மலையாளத்தைக் கிண்டல் பண்ணல.. நீதான் கிண்டல் பண்ணிக்கிட்டு இருக்க.. தெரிஞ்சுக்க.. மலையாளம் பேசறாளாம்.. மலையாளம்.. அடச்சீ.. வழியை விடு..”

“நந்தினி..”

அஜந்தா அலறினாள்.. நீ பாட்டுக்கு அலறிக் கொண்டிரு என்று நந்தினி வேகமாக போய் விட்டாள்.. அஜந்தாவால் நந்தினியின் பேச்சையும், உதாசீனத்தையும் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. இதை இப்படியே விட்டு விடக் கூடாது என்று கருவியவளாக யாழினியிடம் புகார் பண்ண ஓடோடினாள்.. இருந்திருந்து நந்தினியின் மீது புகார் சொல்ல ஒரு சம்பவம்

சிக்கியிருக்கிறது.. அதை நழுவ விட்டு விடுவதா..? யாழினியிடம் ஒன்றுக்கு கோடியாக பற்ற வைத்து நந்தினியை ஏனென்று கேட்க வைத்து அந்த அரண்மனையை விட்டுத் துரத்த வைக்க வேண்டாமா..?

நீ என்னவோ செய்து கொள் என்று அறையின் கதவைத் திறந்து கட்டிலில் விழுந்த நந்தினியின் தலை விண்விண் எனத் தெறித்தது..

'வாசலிலே இறங்கி ரூமுக்குள்ள வந்து சேர்கிறதுக்கு இத்தனை பாடா..?' வெறுப்பாக இருந்தது..

கண்களை மூடிப் படுத்திருந்தவள் அறைக் கதவு திறக்கப்படும் சப்தத்தில் பூட்ட மறந்து விட்டோமே என்று அவசரமாக கண் விழித்தாள்..

'அந்த அஜந்தா இங்கேயும் வந்து தொலைத்து விட்டாளா..?' வந்தது அஜந்தா இல்லை.. ரம்ய மாலினியும் ஓமனாக் குட்டியும்..!

"உஷ்..."

வாயில் ஒற்றை விரலை வைத்து ஓமனாவிடம் எச்சரித்த ரம்ய மாலினி.. அவளைச் சப்தம் எழுப்பாமல் உள்ளே வரச்

சொன்னாள்.. அவள் வந்ததும் கதவை மூடித் தாழிட்டவள் அதுவரை அடக்கி வைத்திருந்த சிரிப்பை சிரிக்க ஆரம்பித்தாள்.. பொங்கிப் பொங்கி அவள் சிரிக்க.. கூட வந்திருந்த ஓமனாவோ கையிலிருந்த பலகாரத்தட்டையும், டீக் கோப்பையையும் அங்கிருந்த டீப்பாயின் மீது வைத்து விட்டு தரையில் உட்கார்ந்து உருண்டு புரண்டு சிரிக்க ஆரம்பித்து விட்டாள்..

'ஙே..' என்று அவர்கள் இருவரையும் வேடிக்கை பார்த்த நந்தினிக்கு தலைவலி ஓடிப் போய் விட்டது..

"எதுக்குப்பா இப்படிச் சிரிக்கறிங்க..?" ஆவலுடன் கேட்டாள்..

"நந்தினி.. நீங்க அந்த அஜந்தாவை லெப்ட் அண்ட் ரைட் வாங்கினதை நாங்க பார்த்துட்டோம்.. அஜந்தாவோட மூஞ்சி இருக்கில்ல மூஞ்சி.. அது இஞ்சி தின்ன குரங்கைப் போல ஆகிருச்சுன்னு ஓமனாக்குட்டி சொல்றா.. ஹா.. ஹா.. தன்னை உலகப் பேரழகின்னு நினைச்சுக்கிட்டு இருக்கிற அஜந்தா.. இஞ்சி தின்னக் குரங்காகிப் போயிட்டா.. ஹா.. ஹா.."

"நான் அவகூடப் பேசினதை நீங்க பார்த்தீங்களா..?"

“ம்ம்ம்.. வாசலிலே ஜீப்பைப் பார்த்ததும் நீங்களும் அண்ணனும் வந்திட்டிங்கன்னு உங்களைத் தேடி வந்தேன்.. உங்களுக்கு உடம்பு சரியில்லை.. ரூமுக்கு போயிட்டிங்கன்னு அம்மா சொன்னாங்க.. ஓமனாக் குட்டியிடம் டீ, பலகாரம் கொடுத்து விட்டாங்களா..? நானும் ஓமனாவும் உங்களைப் பார்க்க உங்க ரூமுக்கு வந்துக்கிட்டு இருந்தோமா..? மாடி ஹாலில் பார்த்தா நீங்களும் அஜந்தாவும் நின்று பேசிக்கிட்டு இருக்கீங்க.. அவகிட்ட மாட்டிக்கக் கூடாதுன்னுதான் ஒளிஞ்சு நின்னோம்.. ஆஹா.. கண்கொள்ளாக் காட்சி நந்தினி.. நானும் ஓமனாவும் மகிழ்ந்து போயி.. என்னமா விட்டு விளாசினிங்க.. ஓமனாக்குட்டியை விட்டா சிறகு இல்லாமலே பறந்துருவா போல ஆகிட்டா.. நீங்க இப்படிக் கூடப் போட்டுத் தாக்குவீங்களா..? அவளைக் கண்டாலே பயந்து ஒளிந்துக்குவீங்க..”

வியப்புடன் கேட்ட ரம்ய மாலினிக்கு பதில் சொல்லாமல் பேச்சை மாற்றி விட்டாள் நந்தினி.. என்ன பதிலைச் சொல்வாள்..? உன் அண்ணன் காய்ச்சு காய்ச்சு எனக் காய்ச்சியதில் கடுப்பாகி இருக்கிறேன்.. அந்தக் கடுப்பை அஜந்தாவின் மீது காட்டி விட்டேன் என்றா சொல்ல முடியும்..? சொல்ல முடியாத உணர்வுகள் பத்திரப் படுத்த வேண்டியவை..

அனைத்தையும் அனைவரிடமும் பகிர்ந்து கொள்ள முடியாது... இதில் ஆச்சரியம் என்னவென்றால் இதுபோன்ற ரகசிய உணர்வுகள் நந்தினிக்குப் புதிதானவை.. ரவிச்சந்திரனுக்கும் அவளுக்கும் இடையில் நடக்கும் புதிதானவை.. ரவிச்சந்திரனுக்கும் அவளுக்கும் இடையில் நடக்கும் நூதன உணர்ச்சிப் போராட்டம் ரகசிய உணர்வுகளை உள்ளடக்கியதாக அல்லவா இருக்கிறது..?

அவனைச் சந்திக்கும் போது முழுவதும் மலராத அரும்பைப் போல இருந்தவள் எந்த நொடியில் மணம் வீசும் மலராக மலர்ந்து விரிந்தாள் என்று அவளுக்கே தெரியவில்லை..

அத்தியாயம் 124

ஓமனா நந்தினியைப் பார்த்த பார்வையில் ஆதர்ஷம் கொப்பளித்தது.. சும்மாவே அவள் நந்தினியைக் கொண்டாடுவாள்.. ஆதர்ஷத்தைக் கூடைகூடையாக நந்தினியின் மீது கொட்டுவாள்.. அம்மே என்று நாத்தழுதழுப்பாள்.. பிரேமம் கொள்வாள்.. இதில் அவளுக்குச் சிம்ம சொப்பனமாக இருக்கும் அஜந்தாவிடம் நந்தினி விரல் சொடுக்கி தொலைத்து விடுவேன் தொலைத்து என்ற ரீதியில் அரட்டி வைத்து விட்டு வந்ததை நேரலையில் பார்த்ததில் புளகாங்கிதப் பட்டுப் போனாள்.. ஆரத்தி எடுத்து சூடம் சாம்பிராணி காட்டாத குறைதான்..

“எண்ட நந்தினி அம்மேதானா..?” தள்ளி நின்று அடையாளம் பார்த்து அவள் கன்னம் வழித்ததில் நந்தினிக்கு கடுப்பு மறைந்து சிரிப்பு வந்து விட்டது..

“நந்தினி மேடம்ன்னு சொல்லு.. சும்மா ஆட்டுக் குட்டியைப் போல அம்மே, அம்மேன்னு சொல்லி வைக்காதே..” என்றபடி ஓமனாவின் கைகளை விலக்கி விட்டாள்..

“அம்மே அறிஞ் மோ.. ஆ அஜந்தா அம்மே ராட்சசியாக்கும்.. ஈ கொட்டாரத்தில ஆ அம்மையிண்ட வார்த்தைக்கு எதிர் வார்த்தை எவரும் பறயாண்டாம்.. கேட்டோ..”

“எல்லாத்தையும் கேட்டாச்சு.. நிறையக் கேட்டாச்சு.. விடு ஓமனா... அவளெல்லாம் ஓர் ஆளுன்னு நம்ம டயத்தை வேஸ்ட் பண்ணி அவளைப் பத்திப் பேசிக்கிட்டிருக்கனுமா..? கொடுமை..”

“கொடுமையானு அம்மே.. ஈ கொட்டாரத்திண்ட ஜோலி செய்யும் பணியாளுக வல்லதும் தெற்று செய்தா அஜந்தா அம்மை வல்லிய வெப்பராளம் கொள்ளுமல்லோ.. எந்துண்டு அன்வர்ஷிக்காம சிஷா அளிச்சிடுமல்லோ.. சில சமயங்களிட்ட வேணுமின்னே தெற்று பறஞ் .. ஆ மனுஷிக்குப் பிடித்தமில்லேண்டா வல்லதும் பறஞ் சிஷா அளிச்சு.. ஈ திவசம் எண்ட நந்தினி அம்மே ஆ அஜந்தா அம்மையிண்டா எந்தான்னு எதுத்து நின்னு.. ஆ காட்சியினக் கண்டு ஞான் ரோமாஞ்சனம் கொண்டு.. நன்னி.. அம்மே.. நன்னி..”

“போதும் ஓமனா போதும்.. இன்னைக்கு இது போதும்.. நாளைக்கும் கொஞ்சம் மிச்சம் வைய்யி..”

ஓமனா காட்டிய சாம்பிராணிப் புகையைக் கலைத்து அவளை ஆற்றுப்படுத்தி அமைதியாக்குவதற்குள் நந்தினிக்கு போதும், போதும் என்று ஆகி விட்டது.. ஒரு வழியாக ஓமனா கண்ணீர் மல்க காலி பரலகாரத்தட்டும், டீக் கோப்பையுமா இடத்தைக் காலி செய்தாள்.. நந்தினி ஏன் சோர்வாக இருக்கிறாள் என்று ரம்ய மாலினி கேட்டுக் கொண்டிருந்த போது வீணா வேகமாக அங்கு வந்தாள்.. அவளைக் கண்டதும் நந்தினி அவசரமாகக் கட்டிலை விட்டு எழுந்தாள்..

“அத்தை.. நீங்களா..?”

“உட்காரு நந்தினி..”

ரம்ய மாலினிக்குப் பக்கத்தில் இருந்த சோபாவில் உட்கார்ந்த வீணா யோசனையுடன் நந்தினியைப் பார்த்தாள்.. என்னவாக இருக்கும் என்று நந்தினிக்குப் படபடப்பாக இருந்தது.. ஏதேனும் காரணம் இல்லாமல் வீணா நந்தினியைத் தேடி அவள் அறைக்கே வந்திருக்க மாட்டாள்..

“என்ன அத்தை..?”

“உனக்கும் அஜந்தாவுக்கும் இடையே ஏதாச்சும் வாக்குவாதம் வந்ததா..?”

‘என்னடா இது..’ என்று ஆகி விட்டது நந்தினிக்கு..

அப்போதுதான் அஜந்தாவுடன் மோதி விட்டு அறைக்குள் வந்திருக்கிறாள்... அதற்குள் விவரம் அரண்மனை முழுவதும் பரவி விட்டதா..? வீணாவே நந்தினியைத் தேடி வந்திருக்கிறாள் என்றால் அஜந்தா விஷயத்தை ஊதிப் பெரிதாக்கியிருக்க வேண்டும்..

“ஆமாம் அத்தை.. பட்.. அவங்கதான் என் வழியை மறித்து வம்புக்கு இழுத்தாங்க.. குறைவா மட்டம் தட்டறதைப் போலப் பேசினாங்க.. சொர்டயின் லிமிட்டுக்கு மேலே என்னால் பொறுமையாய் போக முடியலை.. எதிர்த்துப் பேசிட்டேன்..”

“இப்படித்தான் நடந்திருக்கும்ன்னு நானும் நினைத்தேன்..”

“உங்களுக்கு எப்படித் தெரியும் அம்மா..? ஓமனா சொன்னாளா..? நானும் ஓமனாவும் வந்தப்ப மாடி ஹாலில நந்தினியிடம் அஜந்தா சண்டை போட்டுக்கிட்டு இருந்தா.. நாங்க மறைந்து நின்னு பார்த்தோம்..”

“ஓமனா சொல்லலை ரம்யா.. அஜந்தாதான் உன் பாட்டியிடம் வத்தி வைத்துக்கிட்டு இருக்கிறா.. எங்கிருந்தோ வந்த பெண்கூட என்னை மதிக்கலைன்னா இந்த

அரண்மனையில நான் யாருன்னு அழுது புலம்பி ஆகாத்தியம் பண்ணிக்கிட்டு இருக்கிறா..”

“ஓ.. வெரி ஸ்டேன்ரஜஸ்..! பாட்டி அவ சொல்றதை அப்படியே கேட்டுக்குவாங்களே.. என்ன ஏதுன்னு விசாரிக்க மாட்டாங்களே..”

“அதுதான் எனக்கு ரம்யா..”

“அம்மா.. நாம நந்தினியை விட்டுக் கொடுக்கக் கூடாது.. இவங்க நம்ம கெஸ்ட்.. அஜந்தா எப்படி இவங்களிடம் மரியாதை குறைவாய் பேசலாம்..? இந்த அரண்மனையிலே அவ வைத்ததுதான் சட்டமா..?”

“நீ சொல்கிறது எனக்குப் புரியுது ரம்யா.. ஆனா அஜந்தா உன் பாட்டியிடம் கோள் மூட்டிக்கிட்டு இருக்காளே.. உன் பாட்டியைப் பத்தி உனக்கே தெரியும்.. அஜந்தாவை விட்டுக் கொடுக்க மாட்டாங்க..”

“நாம மட்டும் நந்தினியை விட்டுக் கொடுக்கனுமா..? நெவர்..”

“நந்தினியை விட்டுக் கொடுக்கிறதுங்கிற பேச்சுக்கே இடமில்லை ரம்யா.. நீயேன் கவலைப்படற..”

“நீங்கதான் தாத்தா, பாட்டிக்கு எதிரா ஒருவார்த்தை கூடப் பேச மாட்டிங்களே..”

“பட்ஷே.. உன் அண்ணன் பேசுவானே..”

“அம்மா..!”

ரம்ய மாலினி கண்களை விரிக்க.. வல்லமை மிகுந்த மகனைப் பெற்றிருந்த அந்தத் தாய் கர்வத்துடன் புன்னகைத்தாள்..

“எங்கேயோ போயிட்டீங்கம்மா.. என்னமா காய் நகர்த்தறீங்க.. சூப்பர்ம்மா.. அண்ணன் இருக்கிறப்ப அஜந்தாவுக்கு அஞ்ச வேண்டாம்..”

“யாருக்கும் அஞ்ச வேண்டாம்..” வாசல் பக்கமிருந்து குரல் ஒலித்தது..

அது ரவிச்சந்திரனின் குரல் என்பதில் நந்தினிக்குள் ஓர் மின்சார அதிர்வு வந்தது.. வெகு காலம் பார்க்காமலிருந்தவனைப் பார்த்து விட்டதைப் போல அவள் மனம் தடதடத்தது.. எதற்காக இந்த விசித்திர உணர்வுகள் ஏற்பட்டுத் தொலைக்கின்றன என்று அவள் கலங்கினாள்..

வேட்டைக்காரனின் மீது புள்ளி மானுக்கு ஈர்ப்பு வந்து தொலைக்குமா..? ஏன்..?

அந்த அறையில் அவனுடைய அன்னையும், தங்கையும் இருக்கிறார்கள் என்ற நினைவின்றி நந்தினியைப் பிய்த்துத் தின்று விடுவதைப் போல வெட்கமில்லாமல் பார்த்தபடி உள்ளே வந்தான் ரவிச்சந்திரன்..

'எப்படிப் பார்க்கிறான் பார்.. காய்ஞ்ச மாடு கம்மங் கொல்லையைப் பார்க்கிறதைப் போல மேய்ச்சல் பார்வை.. வெட்கம் கெட்டவன்..'

அந்த வெட்கம் கெட்டவன் அவளுடைய முறைப்பையும் ரசித்துத் தொலைத்தான்.. என்னவோ குளிர்ச்சி நிரப்பி அவள் பார்ப்பதைப் போலக் கொஞ்சலாக பார்த்து வைத்தான்..

'அத்தையும், ரம்யாவும் நோட் பண்ணிட்டா என்ன செய்கிறது..?'

நந்தினிக்குத்தான் பயமாக இருந்தது.. அந்த பயமெல்லாம் அவனுக்கு இல்லை.. அவன் உரிமையுடன் அவளைப் பார்த்தபடி கட்டிலில் அவள் பக்கத்தில் சுவாதீனமாக உட்கார.. பதறிப் போன நந்தினி விசுக்கென எழுந்து வீணாவின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள்..

‘ம்ப்ச்..’ ரவிச்சந்திரனின் பார்வை அவளது செய்கையை ஆட்சேபித்தது..

‘கட்டிக்கிட்டவனைப் போல மிரட்டறான் பாரு..’ நந்தினி அவன் பார்வையைச் சந்திப்பதைத் தவிர்த்து வீணாவின் பக்கம் திரும்பிக் கொண்டாள்..

‘இவனைப் பார்த்தாலே டேன்ஜர்தான்.. அத்தையும், ரம்யாவும் இருக்கிறாங்கங்கிற நினைப்பில்லாம வெட்கம் கெட்டத்தனமா பார்த்து வைப்பான்.. ராஸ்கல்..’

ரவிச்சந்திரனாகப்பட்ட அந்த ராஸ்கல் அவளையே பார்த்தபடி “வாட்’ஸ் தி பிராப்ளம் மாம்..?” என்று அவனுடைய ம ம்மியிடம் விசாரித்தான்..

“நந்தினியிடம் அஜந்தா வம்பிழுத்திருப்பா போல ரவி.. நந்தினி கோபப் பட்டுட்டா போல.. அஜந்தா உன் பாட்டியிடம் பற்ற வைச்சுக்கிட்டு இருக்கிறா..” கவலையுடன் விளக்கினாள் வீணா..

“இவ்வளவுதானா..? இதுக்குப் போயா கான்ஃபரன்ஸை கூட்டியிருக்கீங்க.. பாட்டியிடம் நான் பேசிக்கறேன்..” அபயமளித்தான் ரவிச்சந்திரன்..

அப்பாடி என்ற நிம்மதி வீணாவின் முகத்தில் படர்ந்ததைக் கண்ட நந்தினிக்குள் குற்ற உணர்வு வந்தது.. அவளால்தானே பிரச்னை என்ற மனது குறுகுறுக்க..

“ஸாரி அத்தை.. நான் கொஞ்சம் பொறுமையாய் இருந்திருக்கலாம்..” என்று வருத்ததுடன் சொன்னாள்..

“எதுக்காக நீ பொறுமையாய் இருக்கனும்..? என்ன தேவைக்கு..?” அன்புடன் நந்தினியைக் கடிந்து கொண்ட வீணா அவளை பாசத்துடன் அணைத்துக் கொண்டாள்.. வீணாவின் தோள் சாய்ந்த நந்தினிக்குள் சிலிர்ப்பு உண்டானது.. என்ன தவம் செய்தேன் இந்த பாசத்தைப் பெற என்று நெகிழ்ந்து போனாள்..

வீணாவிற்கு அவள் என்ன சொந்தமா..? பந்தமா..? மகனின் பெர்சனல் மேனேஜர் (?) அல்லது செக்கரட்டரி (!) அவளுக்கு ஆதரவாக மாமியாரை எதிர்த்து நிற்க வேண்டிய அவசியம் என்ன..? வீணா நினைத்திருந்தால் இருக்கின்ற பிரச்னைகளில் இது வேறு புதுப் பிரச்னையா என்று முகம் சுளித்திருக்கலாம்.. அவள் அதைச் செய்யவில்லை.. மாறாக குற்ற உணர்வு கொண்ட நந்தினியை அன்புடன் கண்டித்து அரவணைத்துக் கொள்கிறாள்..

ரவிச்சந்திரனால் உண்டாகியிருந்த மன ரணம் ஆறி இதமாகி விட்டதைப் போல உணர்ந்தாள் நந்தினி.. அவள் மனதை அவன் புண்படுத்தினாலும் மற்றவர்கள் ஓர் வார்த்தை சொல்ல அனுமதிப்பதில்லை.. குடும்பத்தை விட்டுப் பிரிந்து வந்திருப்பவளின் தனிமை உணர்வை புரிந்து கொண்டு அவளைத் தன் குடும்பத்தில் ஒருத்தி போல பாவிக்க வைத்து அரண்மனையில் தங்க வைத்திருக்கிறான்..

‘எல்லாம் சரிதான்.. இப்படி முள் குத்தற மாதிரிப் பேசற பேச்சுக்களையும்.. தேள் போலக் கொட்டற சுபாவத்தையும் மாத்திக்கிட்டாத் தேவலை.’

இதை அவனிடம் சொல்ல முடியுமா..? உனக்கேற்றாற் போல நான் மாற வேண்டுமா என்று கேட்டு வைப்பான்.. அவன் குணத்திற்கு ஏற்ப அவள்தான் மாற வேண்டும் என்று கிளாஸ் எடுப்பான்..

‘தேவையா..?’

திருவாயை இறுக மூடிக் கொண்டாள் நந்தினி.. வழக்கமற்ற அமைதியுடன் இருந்தவளின் மீது அவன் பார்வை வட்டமிட்டது.. நந்தினி பிடிவாதமாக அவன் பக்கம் திரும்பாமல்

வீணாவின் புடவை முந்தானையைப் பிடித்துத் தன் விரலில் சுற்றிக் கழற்றியபடி பேசிக் கொண்டிருந்தாள்..

“இன்னும் இந்தப் பழக்கத்தை விடலையா..?”

ரவிச்சந்திரன் அதட்டியதும் அவசரமாக வீணாவின் சேலை முந்தானையை விட்டு விட்டாள்.. வீணா செல்ல கோபத்துடன் மகனை முறைத்தாள்..

“உனக்கு என்னடா பொறாமை..?”

“பின்னே..? நீங்க என்னோட மாம் ஆச்சே..”

“அவளுக்கு நான் அத்தையாக்கும்..”

“இவளுக்கு ரொம்பத்தான் செல்லம் கொடுக்கறிங்கம்மா.. ஐ அப்ஜெக்ட் இட்..”

கோபப்படுபவனைப் போலச் சொன்னவனின் முகத்தில் துளிக்கூட கோபமில்லை.. ஆட்சேபமில்லை.. பிரியத்துடன் அவளை வருடிக் கொடுத்தது அவன் பார்வை.. அவனுடைய தாயின் பாசத்தை மௌனப் புன்னகையில் அங்கீகரித்தான்..

‘இவன் மனது பெரிது..’ என்று நினைத்துக் கொண்டாள் நந்தினி..

விசாலமானதுதான் அவன் மனது.. வீட்டை விட்டு ஓடி வந்தவளுக்கு அடைக்கலம் கொடுத்து, வேலை கொடுத்து, அவள் தங்குவதற்கு வீட்டி ல் இடமும் கொடுத்திருக்கிறான்.. இவனைப் போல யாரிருப்பார்..?

“அம்மை விளிச்சு..” ஓமனாக் குட்டி ஓடி வந்தாள்..

அந்த வீட்டிலிருக்கும் அனைத்துப் பெண்களம் அவளுக்கு அம்மைதான் என்று ரம்ய மாலினியின் காதோடு சொன்னாள் நந்தினி.. அதனால் எந்த அம்மை என்ற குழப்பம் ஏற்படுகிறது என்றாள்.. அப்படியல்ல என்று மறுத்தாள் ரம்ய மாலினி..

“நீங்க இப்பத்தானே வந்திருக்கீங்க..”

“நான் வந்து ரொம்ப நாளாகியிருச்சு ரம்யா..”

“நாளை எண்ணிக்கிட்டு இருக்கீங்க போல.. நீங்க வருகிறதுக்கு முன்னால் நாங்களும்.. நாங்களும்ன்னா நானும் அம்மாவும்ன்னு அர்த்தம்..”

“நீங்களும்..?”

“நாங்களும் நாள்களை எண்ணிக்கிட்டுத்தான் இருந்தோம் நந்தினி.. நீங்க வந்த பின்னாலே நாள் ஓடறதே

தெரியலை.. இறக்கை கட்டிக்கிட்டுப் பறக்குது.. உங்ககிட்ட ஒரு பாஸிடிவ் எனர்ஜி இருக்கு நந்தினி..”

“சும்மா எதையாச்சும் சொல்லனும்னு சொல்லாதீங்க.. உங்க அண்ணன் வாயைத் திறந்தாலே நெகடிவ் பாயிண்ட்ஸகித்தான் அடுக்கிறார்.. அவளுக்குத் தெரிகிற நெகடிவ் பாயிண்ட்ஸ் உங்களுக்குத் தெரியாம இருக்கிறது ஆச்சரியம்தான்..”

“பிகாஸ்.. அண்ணன் உங்களுக்கு பாஸ்.. நான் உங்க ஃபிரண்ட் தட்ஸ் ஆல்..”

தலையைச் சாய்த்துச் சிரித்த ரம்ய மாலினியைப் பார்த்த போது இவளிடம்தான் உயிர்ப்பு சக்தி இருக்கிறது என்று பிரமித்தாள் நந்தினி..

இவள் இருக்குமிடம் உயிர்ப்புடன் இருக்கும்.. அதை ஏன் இவள் உணரவில்லை..?

அத்தியாயம் 125

நந்தினியின் சிந்தனையைக் கவனிக்காமல் ஓமனாக் குட்டியின்

‘அம்மே..’ என்ற விளிப்புகள் பலவிதம் என்பதைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தாள் ரம்ய மாலினி..

“ஓமனா ‘அம்மே’ன்னு பயபக்தியோட சொன்னா அவ பாட்டியைப் பற்றிச் சொல்கிறான்னு புரிஞ்சுக்கனும்..

‘அம்மே..’ன்னு உரிமையாச் சொன்னா எங்கம்மாவைப் பத்திச் சொல்கிறா.. ‘அம்மே..’ன்னு செல்லமாச் சொன்னா அது நான்..

மத்தபடி அவந்திகா அத்தையையும் அஜந்தாவையும் இவ ‘அம்மே’ன்னு விரிக்க மாட்டா..”

“நிஜமாவா..?”

விழிகளை விரித்தாள் நந்தினி.. ஓமனாவின் ‘அம்மே..’ என்ற விளிப்பு அஜந்தாவுக்கும் அவளைப் பெற்ற அவந்திகாவுக்கும் கிட்டுவதில்லை என்பதில் அவளுக்கு அதீதமான ஆனந்தம் உண்டானது..

“ஆமாம் நந்தினி.. அவங்களைப் பத்தி பாட்டியிடம் சொல்லும் போது மட்டும் ‘நிங்கட மோள் அம்மே.. கொச்சு மோள் அம்மே..’ன்னு சொல்லுவா.. எங்களிடம் சொல்லும் போது..

‘ஆ அஜந்தா..’ ‘நம்ம அச்சரிட அணியத்தி..’ன்னு சொல்லுவா..”

“ஓ..”

நந்தினி ஓமனாவை வாத்சல்யம் பொங்கப் பார்த்தாள்.. அதில் பரவசப்பட்டுப் போன ஓமனா பசுவைக் கண்ட கன்றாய் உருகி..

“அம்மே..” என்று பாய்ந்து வந்தாள்..

‘போச்சுடா.. சும்மாவே இவ பாசரசம் பிழிவா.. இதில நான் வேறு இவளைக் கிளப்பி விட்டுட்டேனே..’

ரம்ய மாலினியின் பக்கம் ஒன்றிக் கொண்ட நந்தினி..

“ஓமனா.. பாட்டி உன்னை விளிச்சு..” என்று அவளை திசை திருப்பி விட்டுத் தப்பித்தாள்..

“ஞான் வரட்டே..” ஏழுகடல் ஏழுமலை தாண்டிப் பயணம் செய்யப் போகிறவளைப் போல ஏக்கத்துடன் கேட்டபடி அங்கிருந்து நகர மனமில்லாமல் நகர்ந்தாள் ஓமனா..

“பிழைச்சேன்..” நெஞ்சில் கை வைத்து ஆசுவாசமானாள் நந்தினி..

“பாசம் காட்டியே பயமுறுத்தறாளா..?” ரம்ய மாலினி சிரித்தாள்..

யாழினி அழைக்கிறாள் என்பதில் கவலை கொண்டிருந்தாள் வீணா.. அதை முகத்தில் காட்டினால் நந்தினி குற்ற உணர்வு கொள்வாள் என்பதினால் மறைத்துச் சிரித்த முகமாய் இருப்பதைப் போலத் தன்னைக் காட்டிக் கொண்டாள்..

“நந்தினிகூடப் பேசிக்கிட்டு இரு ரம்யா..” எழுந்தாள்..

“நீங்க எங்கேம்மா போகிறீங்க..?” ரம்ய மாலினி தடுத்தாள்..

“பாட்டி கூப்பிட்டிருக்காங்கல்ல.. போய் என்னன்னு கேட்டுட்டு வந்துடறேன்..” விளக்கம் சொன்னாள் வீணா..

“நானும் வரேன் அத்தை..” நந்தினி எழப் போனாள்..

“நீ இரு.. அம்மாவும் நானும் போகிறோம்..” ரவிச்சந்திரன் கண்டிப்புடன் சொன்னான்..

“இல்லை பாஸ்..” நந்தினி வாதாடினாள்..

“நான் தான் அஜந்தாவுடன் ஆர்கியூ பண்ணினேன்.. என்னைப் பத்தித்தான் அவ பாட்டியிடம் கம்ப்ளெயிண்ட் பண்ணியிருக்கா.. அதைப் பத்திக் கேட்கத்தான் பாட்டி அத்தையைக் கூப்பிட்டிருக்காங்க.. இதுக்கான விளக்கத்தை நான்தான் சொல்லனும்.. அதுதான் முறை..”

“எது முறைன்னு எனக்குத் தெரியும்.. நீ அடங்கி உட்கார்..”

“என் மனசு கேட்கலை பாஸ்..”

“உன் மனசு எத்தனையோ விஷயங்களைக் கன்சிடர் பண்ணலை.. இதை மட்டும் கன்சிடர் பண்ணுதா..?”

ரவிச்சந்திரன் எதைச் சொல்கிறான் என்று புரிந்து கொண்ட நந்தினி உதட்டைக் கடித்தாள்.. ‘ஜிவ்’ வென்று எழும் உணர்வின் அலைகள் அவளைப் பாடாய் படுத்தின.. மூச்சுத் திணறுவதைப் போன்ற ஓர் உணர்வு ஏற்பட்டது.. வீணாவும்

ரம்ய மாலினியும் அவளுடைய உணர்வை உணர்ந்து விடக் கூடாதே என்று தவித்துப் போனாள்..

நல்லவேளையாக வீணாவும், ரம்ய மாலினியும் நந்தினியின் தடுமாற்றத்தைக் கண்டு கொள்ளவில்லை.. அவர்கள் அஜந்தா மூட்டி விட்டிருக்கும் கலகத்தைப் பற்றிய நினைவோடு இருந்தார்கள்.. அதை எப்படி எதிர்கொள்வது என்பதைப் பற்றிய வியூகங்களில் மூழ்கியிருந்தார்கள்..

"லுக் நந்தினி.. இப்ப நீ அஜந்தாவை எதிர்த்து நின்றிருக்கிற பார்.. இதை நான் அப்ரிஷியேட் பண்றேன்.. கீப் இட் அப்.. தப்புச் செஞ்சிட்டோமேன்னு நீ ஃபீல் பண்ணினேன்னு வை.. அஜந்தா இன்னும் கொஞ்சம் ஆட்டம் போடுவா.. அவளைக் கண்ட்ரோல் பண்ண முடியாது.." என்றான் ரவிச்சந்திரன்..

வீணாவும் ரம்ய மாலினியும் அதை ஆமோதிப்பதைப் போலத் தலையசைத்தாலும் நந்தினிக்கு மனது கேட்கவில்லை..

"அஜந்தா என்ன எனக்கு எதிரியா பாஸ்..? நான் அவங்களை டீஸ் பண்ணனும்னு நினைக்கவே இல்லை.."

“பட்ஷே.. அவ நினைப்பா.. அதுதான் அவ குணம்.. நீ உன்னை ஸேவ் பண்ணிக்கனும்னா நிமிர்ந்து நிற்கப் பழகிக்கனும்..”

‘அதை நீ சொல்லித்தான் நான் செய்யனுமா.. என்ன..?’ என்று சிலுப்பிக் கொண்டாள் நந்தினி..

பெல்ட்டால் அடிப்பான் என்பதற்காக பணக்கார மாப்பிள்ளையை உதறித் தள்ளிவிட்டு ஓடி வந்திருப்பவள் அவள்.. நிமிர்வைப் பற்றி அவளுக்கா தெரியாது..?

“வாங்கம்மா..”

ரவிச்சந்திரன் வீணாவை அழைத்துக் கொண்டு போய் விட்டான்.. தன்னால்தானே என்ற குற்ற உணர்வை அடக்க முடியாமல் தலையைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து விட்டாள் நந்தினி.. எவ்வளவு முயன்றாலும் குற்ற உணர்வை அடக்க அவளால் முடியவில்லை..

“உங்க மேலத் தப்பில்ல நந்தினி..”

ரம்ய மாலினி கிளிப்பிள்ளை ஒப்பிப்பதைப் போலத் திரும்பத் திரும்ப ஒப்பித்து விட்டாள்.. நந்தினியின் செவிகளில்

அது ஏறவில்லை.. இருக்கும் இடம் தெரியாமல் இருக்க முடியவில்லையே என்று ஆதங்கப்பட்டுப் போனாள்..

“உங்களாலே முடியாததைப் பற்றியெல்லாம் நினைச்சு ஃபீல் பண்ணிக்காதீங்க நந்தினி..”

சிரிப்பை அடக்கிக் கொண்டு முகத்தை தீவிரமாக வைத்துக் கொள்ள பகீரதப் பிரயத்தனங்களை செய்தபடி சொன்னாள் ரம்ய மாலினி..

“எதைச் சொல்கிறீங்க..?” நந்தினி விழித்தாள்..

“இருக்கிற இடம் தெரியாம இருக்க உங்களாலே முடியுமா..? அதை இதை உருட்டலைன்னா நீங்க எப்படி நந்தினி ஆவிங்க..?”

கண்கள் மின்ன ரம்ய மாலினி கேட்டதும் நந்தினி சிரித்து விட்டாள்..

“ஹப்பா.. சிரிச்சுட்டிங்க..” நந்தினியின் விரல்களோடு விரல் கோர்த்து நெருங்கி அமர்ந்து கொண்டாள் ரம்ய மாலினி..

“பாட்டியின் அதிகாரம் அண்ணனிடம் செல்லாது.. நீங்க கவலைப் படாதீங்க.. அண்ணன் பார்த்துக்கும்..”

ரம்ய மாலினி ஆறுதல் சொன்னாலும் நந்தினி உம்மென்றுதான் இருந்தாள்.. இந்த அஜந்தாவினால் எப்படியெல்லாம் பிரச்னை வருகிறது..? எங்கேயோ போகிற மங்காத்தா.. என்கூடக் கொஞ்சம் ரம்மி ஆடு ஆத்தா என்கிற கதையாய் அல்லவா ஆகிவிட்டது..

ரவிச்சந்திரனும் வீணாவும் யாழினியின் அறைக்குள் நுழைந்தார்கள்.. அங்கே அவந்திகாவும், அஜந்தாவும் இருந்தார்கள்..

“நினைச்சேன்..” என்றான் ரவிச்சந்திரன்..

“என்னைத்தானே நினைச்சீங்க..?”

அஜந்தா குழைந்தாள். அருவெறுப்பாக அவளை ரவிச்சந்திரன் பார்த்த பார்வையில் யாழினிக்குத் தலையில் அடித்துக் கொள்ளலாம் போல இருந்தது.. ஏற்கனவே வீணாவை விசாரணைக்கு அழைத்தால் அவள் ரவிச்சந்திரனுடன் வந்து நின்றிருந்ததில் சங்கடம் கொண்டிருந்தாள்.. ரவிச்சந்திரனின் முன்னிலையில் வீணாவிடம் எப்படி கண்டித்துப் பேசுவது..? வீணா தனித்து வந்திருந்தால் நந்தினிக்கு அந்த அரண்மனையில் என்ன

வேலை என்று கேட்டு வெளியேற்றியிருக்கலாம்.. இப்போது அது முடியாது..

இந்த மனப்போராட்டத்தில் அவளிருக்க அஜந்தா ரவிச்சந்திரனிடம் வழிந்து வாங்கிக் கட்டிக் கொண்டால் அவளுக்கு சுவரில் முட்டிக் கொள்ளலாம் போல இருக்காதா..?

“எதுக்கு பாட்டி வரச் சொன்னீங்க..?” அதட்டலாக கேட்டான்..

“ஞான் நின்ன விளிக்கல ரவி.. வீணாவையல்லோ விளிச்சானு..?” அறிவுறுத்தினாள் யாழினி..

“அதைத்தான் எதுக்குன்னு கேட்டேன்..” அழுத்தம் திருத்தமாக யாழினிக்கு அறிவுறுத்தினான் ரவிச்சந்திரன்..

“அப்பச்சிக்கும் மோனன்ட பார்யாளுக்கும் இடையில ஆயிரம் விவகாரங்கள் இருக்குமல்லோ.. நாங்க சம்சாரிக்கிறது நினக்கு எந்துக்கு கொச்சுமோனே..?”

“எனக்கு அது தேவைதான் பாட்டி.. என்னன்னு சொல்லுங்க..”

“அதி பத்தி நிண்ட அம்மையிடம் ஞான் பறஞ் .. நீ போகனும் ரவி..”

“முடியாது..”

“ரவி..”

“இது என்னுடைய அரண்மனை பாட்டி.. நீங்களும், தாத்தாவும் என் பொறுப்பில் இருக்கீங்க.. ஸோ.. இங்கே எது நடந்தாலும் எனக்குத் தெரிந்தாகனும்.. சொல்லுங்கள்.. அம்மாவை எதுக்காக கூப்பிட்டிங்க..?”

“எந்துக்கு ரவி.. நிண்ட அம்மையிடம் எனிக்கு பந்தமில்லையோ.. ஞான் நிண்ட அம்மையின அன்வர்ஷிக்கக் கூடாதோ..?”

“அம்மாவை எதுக்காக விசாரிக்கறிங்க..? அதை முதலில் சொல்லுங்க பாட்டி..”

“வீணா எண்ட மருமகள்..”

“உங்க மருமகள் என்னோட அம்மா பாட்டி.. ரவிச்சந்திரனின் அம்மாவை அவனோட பாட்டியாகவே இருந்தாலும் கேள்வி கேட்க முடியாது.. கேள்வி கேட்கக் கூடாது..”

தன் சாம்ராஜ்யம் சரிந்து போனதை உணர்ந்தாள் யாழினி.. அவளால் வீணாவை கடிந்து கொள்ள முடியாது..

ஏனென்றால் வீணா ரவிச்சந்திரனைப் பெற்ற அன்னை.. யாழினி அவனுடைய பாட்டி.. ரவிவர்மனைப் பெற்ற வயிற்றில் அவந்திகாவையும் பெற்று விட்டதினால் அனைத்துச் சொத்துக்களையும் இழந்து நிற்பவள்.. ரவிச்சந்திரனின் பராமரிப்பில் வாழ்பவள்..

"ஞான் ஆரானு கொச்சு மோனே..?"

துயரத்துடன் கேட்டாள் யாழினி.. வீணா மனம் கசிந்தாள்.. அவளது மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய மாமியார் துயரம் கொள்ளுவதா..? அதை அவள் பார்த்துக் கொண்டிருப்பதா..?

"அத்தை.." என்று எதையோ சொல்லப் போனாள்..

"உஸ்ஸ்.." வாயில் ஆள்காட்டி விரலை வைத்து தாயை அடக்கினான் ரவிச்சந்திரன்..

"வாயைத் திறக்கக் கூடாது.. நான் பேசிக்கிட்டு இருக்கேனில்ல.."

"ஆனா ரவி.. உன் பாட்டி வருத்தப்படறாங்க.."

"என்னிடம்தானே வருத்தப் படறாங்க..? நான் பதில் சொல்லிக்கறேன்.. நீங்க ஊடே வரக் கூடாது.."

வீணா பேச முடியாமல் தவித்தாள்.. ரவிச்சந்திரன் அவளை அடக்கி விட்டு யாழினியின் பக்கம் திரும்பினான்.. தாழ்ந்த குரலில் தாயின் காதுகளில் ஓதிக் கொண்டிருந்த அவந்திகாவை வெறுப்புடன் சுட்டிக் காட்டி..

"நீங்க யார்ன்னுதானே கேட்டிங்க பாட்டி.. நீங்க இந்த அவந்திகா அத்தையோட அம்மா.." என்றான்..

"ரவி.." யாழினி விக்கித்துப் போனாள்..

"நினக்கு ஞான் ஒந்நுமேயில்லையோ..?"

"எனக்கு நீங்க பாட்டிதான்.. பட்ஷே.. எனக்கும் முதலில் அஜந்தா, அபராஜிதனுக்குப் பாட்டியா இருக்கீங்க.. அதுதான் உங்க பிராப்ளம்.. அப்பாவுக்கும் நீங்க அம்மாங்கிறதை பாசத்தில நினைக்காம அவரோட வருமானத்தைப் பிடுங்கி அத்தைக்குத் தள்ளறதுக்கு யூஸ் பண்ணிக்கிட்டிங்க.."

"ரவி..."

"இவங்களுக்குத்தான் மனச்சாட்சி இல்லை.. அதைக் கழட்டித் தூரக் கடாசிட்டாங்க.. நீங்களும் அப்படித்தான் ஆகிக்கிட்டு இருக்கீங்க பாட்டி.. இவங்க என்ன சொன்னாலும் கேட்டுக்குவீங்களா..? கண்டிச்சு வைக்க மாட்டிங்களா..?"

“வல்லதும் தெற்று இருந்தாத்தானே ரவி கண்டிக்க ஏலும்.. அவந்திகா தெற்று இல்லாதவளல்லோ..”

“அதுசரி.. குற்றத்தின் மொத்த உருவம் இவங்கதான்.. இவங்க குற்றமில்லாதவங்களாம்.. நான் கேட்கிறதுக்கு முதலில் பதில் சொல்லுங்க.. என்னுடைய பெர்சனல் செக்கரட்டரியை உங்க பேத்தி எதுக்காக மிரட்டினா..?”

“எந்தா..?”

யாழினி திகைத்தாள்.. நந்தினி எதற்காக அஜந்தாவிடம் மோதினாள் என்று கேட்பதற்காக அவள் வீணாவை வரச் சொன்னால்.. அஜந்தா எதற்காக நந்தினியிடம் மோதினாள் என்று கேட்டபடி ரவிச்சந்திரன் வந்து நிற்கிறான்..

கதை இப்படியா திரும்பி வைக்கும்..?

“இது என் அரண்மனை பாட்டி.. நந்தினி தமிழ் நாட்டில இருந்து தனியாய் வந்திருக்கிறா.. சின்னப் பெண்.. அவளை நம்ம குடும்பத்தோடு தங்க வைக்கிறதுதான் அவளுக்குப் பாதுகாப்புன்னு அரண்மனையிலே தங்க வைத்திருக்கிறேன்.. அது தெரிந்தும் உங்க பேத்தி நந்தினியிடம் மரியாதை குறைவாய் பேசியிருக்கிறா.. இருக்க இடமில்லாம அவ அரண்மனையில தங்கியிருக்கிறதா சொல்லியிருக்கிறா..

இருக்க இடமில்லாம இந்த அரண்மனையில் தங்கியிருக்கிறது நந்தினி மட்டும் தானா பாட்டி..?”

“ரவி..” வாயடைத்துப் போனாள் யாழினி..

எத்தனை முறைதான் இந்தக் கேள்வியைக் கேட்டுத் துடித்துப் போவது.. அவன்தான் வாய்ப்புக் கிடைத்தால் இந்தக் கேள்வியைக் கேட்டு வைக்கிறானே.. இந்த அவந்திகாவும் அஜந்தாவும் புத்தியோடு வாயை மூடி இருந்து தொலைத்தால்தான் என்ன..?

அத்தியாயம் 126

யாழினியின் குன்றலைத் தெள்ளத் தெளிவாக அவளது முகம் பிரதிபலித்ததில் சங்கடம் கொண்டாள் வீணா.. அவளுடைய மரியாதைக்குரிய மாமியாரைக் கம்பீரமாகப் பார்க்கத்தான் அவள் விரும்பினாள்.. பெற்ற மகளின் பொருட்டு யாழினி குன்றிப் போகும் தருணங்களில் எல்லாம் வீணாவின் மனதில் இரக்கம் ததும்பும்.. இதுபோல மாமியாருக்கு நேரக்கூடாது என்று மனதார விரும்புவாள்.. அதைப் புரிந்து கொள்ளாமல் அவளால்தான் எல்லாமும் என்பதைப் போல அவந்திகாவும், அவந்திகாவின் குடும்பத்தினரும் எதிரியைப் பார்ப்பதைப் போல வீணாவைப் பார்த்து வைப்பார்கள்.. அவர்கள் தான் அருள்மொழிவர்மனிடமும் யாழினியிடமும் மூட்டிக் கொடுப்பார்கள்.. அதை மறைத்து வீணாதான் ரவிச்சந்திரனிடம் மூட்டிக் கொடுத்துத் தாத்தா பாட்டியை எதிர்த்துப் பேச வைக்கிறான் என்பதைப் போல பேசி வைப்பார்கள்..

அன்றும் அதுபோல்தான் நிகழ்ந்தது... அஜந்தாவினால்தான் பிரச்னை வந்திருக்கிறது என்பதை மறந்து அஜந்தாவும், அவந்திகாவும் ஆத்திரப்பட்டார்கள்..

“நோக்கனும் அம்மே.. நிங்க கொச்சு மோனிண்ட செக்கரட்டரி நிங்க கொச்சுமோளை பெகுமானக் குறைவாப் பறஞ் .. அதி நிங்க கொச்சு மோனுக்கு வல்லிய திண்டு இல்லியாம்.. கேட்டோ.. ரவியிண்ட செக்கரட்டரிய நிங்க கொச்சுமோள் எந்தாண்டு பறஞ்ஞுதுதான் தெற்றாம்.. கேட்டோ.. ஞானும், நிங்க கொச்சு மோளும் ஈ கொட்டாரத்தில எரப்பாளிகளாம்.. ஜீவிதம் பண்ண ஸ்தலம் இல்லாதவர்களாம்.. நிங்க கொச்சு மோன் பறஞ் .. கேட்டோ..”

கேட்டோ, கேட்டோ என்று அவந்திகா கேட்ட கேள்விகளில் யாழினியின் உயிர் துடித்தது.. அவளுடைய மகளும், பேத்தியும் வயநாட்டு அரண்மனையில் எரப்பாளிகளா..? (பிச்சைக்காரர்களா..?)

“நீ சம்சாரிக்கிறது எவ்விதத்தில நியாயம் ரவி ..? ஆ பெண்குட்டி நின்னிடம் ஜோலி பார்க்க வந்து.. அவளும் அஜந்தாவும் ஒந்நுண்டு பறஞ் ...?”

“இல்லையே பாட்டி.. நந்தினியும் அஜந்தாவும் ஒன்றுன்னு நான் சொல்லவே இல்லையே.. சொல்லவும் மாட்டேன்.. நந்தினி பெரியவங்களிடம் மரியாதையாய்

இருப்பா.. யாரிடமும் வம்புக்குப் போக மாட்டா.. படிச்ச படிப்புக்கேத்த வேலையைப் பார்த்துக்கிட்டுத் தன் உழைப்பில வாழ்கிறா.. அவளும் அஜந்தாவும் ஒன்றா..? இவளைப் பற்றி நான் சொல்லித்தான் நீங்க தெரிஞ்சுக்கனுமா..? என்றைக்காவது இவ என் அம்மாவிடமும் மத்த பெரியவங்களிடமும் மரியாதையாய் பேசிப் பழகி நீங்க பார்த்திருக்கீங்களா..? சட்டம்தான் பேசுவா.. உட்கார்ந்து சாப்பிடுகிற குற்ற உணர்ச்சி மனசில இருக்குங்கறிங்க..? இல்லவே இல்லை.. எப்பப் பார்த்தாலும் வம்பு இழுக்கிறது.. இதுநாள் வரைக்கும் வீட்டில் இருந்தவங்க கிட்டதான் வம்பிழுத்தா.. இப்ப விருந்தாளிகளிடமும் வம்பிழுக்கிறா.. எனக்கு வருகிற கோபத்துக்கு..”

ரவிச்சந்திரன் பற்களை நறநறத்ததில் அஜந்தாவை அடித்து வைத்து விடுவானோ என்று பயந்து போனாள் யாழினி.. அவந்திகாவுக்கும் அதே பயம்தான் என்பது மகளை இழுத்துத் தன் பின்னால் மறைத்துக் கொண்டதிலிருந்து தெரிந்தது..

யாழினிக்குச் சுவரில் முட்டிக் கொள்ளலாம் போல இருந்தது... ரவிச்சந்திரனுக்குக் கோபம் வந்தால் கைநீட்டி

விடுவான் என்ற பயம் மனதில் இருக்கிறதுதானே.. இவ்வளவு பயம் இருக்கிறவர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும்..?

“கேட்டுக்கங்க பாட்டி.. இது என் அரண்மனை.. இங்கே என்னோட விருந்தாளிகள் நிம்மதியாத் தூங்க முடியலைன்னா நானும் இங்கே வந்து தங்கிப் போகிறதில எந்த அர்த்தமும் இல்லை.. நாளைக்கே எஸ்டேட் பங்களாவுக்கு நானும், என் அப்பாம்மா, தங்கையும் ஷிப்ட் ஆகிக்கறோம்.. எங்க விருந்தாளிகளை அங்கே தங்க வைத்துக்கலாமில்ல..? வம்பிழுக்க யாரும் இருக்க மாட்டாங்க.. இந்த அரண்மனையில தாத்தாவும், நீங்களும் உங்க மகளின் குடும்பத்தோட நிம்மதியா ஜீவிதம் பண்ணுங்க.. செலவைப் பற்றிக் கவலைப்படாதீங்க.. நான் பார்த்துக்கறேன்.. என் தாத்தா, பாட்டிக்கு ஒரு குறைவுமில்லாம பார்த்துக்கிறது என் கடமையல்லோ.. இனிமே சேர்ந்து இருக்கிறது சரி வராது..”

“ஷெமிக்கனும் ரவி..” யாழினி நடுங்கி விட்டாள்..

ரவிச்சந்திரன் இல்லாத அரண்மனை எப்படி அரண்மனையாகும்..? வயநாட்டில் அருள்மொழிவர்மனையும் யாழினியையும் யார் மதிப்பார்கள்..? ரவிச்சந்திரன் எங்கு இருக்கிறானோ அங்குதான் அருள்மொழிவர்மனின் பாரம்பர்ய

ராஜகுலப் பெருமை நிலைத்து நிற்கும்.. அவன் எஸ்டேட் பங்களாவுக்குப் போனால் அவனோடு அவருடைய குலப் பெருமையும் சேர்ந்தல்லவா நகர்ந்து விடும்..?

அவந்திகா மட்டுமா அவர்களின் பிள்ளை..? ரவிவர்மன் இருக்கிறாரே.. தாய் சொல்லைத் தட்டாத பிள்ளை..! தந்தை சொல்லே மந்திரம் என்று வாழும் பிள்ளை..! தங்கைக்கொரு கீதம் பாடும் பிள்ளை..! அவர் போல யாருண்டு..?

அருள்மொழிவர்மன் ஓர் ஆலமரம்.. அவரது நிழலில் ரவிவர்மனின் சுயம் மறைந்தது.. புகழ் மங்கியது.. அவர் அருள்மொழிவர்மனின் மகன் என்றே அடையாளம் காணப்பட்டார்.. தனித்து எதையும் செயலாற்ற முடியாமல் அருள்மொழிவர்மனின் கரம் அவரை இறுக்கிப் பிடித்திருந்தது.. அந்த அரண்மனைக்குத் தலைவராக அருள்மொழிவர்மனே இருந்தார்.. மகனின் தோளுக்குத் தலைமைப் பதவியை மாற்றிக் கொடுக்கவில்லை.. ரவிவர்மனும் அதைக் கேட்கவில்லை..

அதுதான் அவந்திகாவிற்குச் சாதகமானதாக இருந்தது.. குடும்பத்தின் அனைத்து அதிகாரங்களையும் தங்கள் கைகளில் வைத்திருக்கும் தாய், தந்தை..! பெற்றவர்களின் சொல்லை

மீறாத தமையன்..! அவந்திகா வயநாட்டு அரண்மனையின் வருமானங்களையும், சொத்துக்களையும் சூறையாடினாள்.. அதைக் கேள்வி கேட்கவும், தடுத்து நிறுத்தவும் ரவிச்சந்திரன் பிறந்து வருவான் என்று அவள் நினைத்தும் பார்த்ததில்லை. . அருள்மொழிவர்மன் மூலம் ரவிவர்மனைக் கட்டுப் படுத்துவதைப் போல ரவிச்சந்திரனைக் கட்டுப்படுத்தி விடலாம் என்று இறுமாப்புக் கொண்டிருந்தாள்.. ரவிச்சந்திரன் வளர, வளர அவளது இறுமாப்பு சுக்கு நூறாகத் தகர்ந்து பொடிப்பொடியாகி விட்டது..

ரவிச்சந்திரன் ஆணையிடுபவனாக இருந்தான்.. ஆணைகளுக்கு அடிபணிபவனாக இல்லை.. அருள்மொழிவர்மன் என்ற ஆலமரத்தின் கீழ் வளராமல்.. விலகிச் சென்று இமயமலையாக உயர்ந்து நின்றான்..

ரவிவர்மனின் மகன், அருள்மொழிவர்மனின் பேரன் என்று அடையாம் காணப்படாமல் தி கிரேட் ஃபேமஸ் ரவிச்சந்திரன்.. ஸ்டார் ஆஃப் தி பிஸினெஸ் வெர்ல்டு.. கேரளத்து ராஜகுமாரன்.. ஆணழகன்.. என்றெல்லாம் அடையாளம் காணப்பட்டான்.. அருள்மொழிவர்மனும் ரவிவர்மனும் ரவிச்சந்திரனின் தாத்தா, அப்பா என்று அடையாளம் காணப்பட்டார்கள்.. அருள்மொழிவர்மன்

திரும்பிப் பார்ப்பதற்குள் ரவிச்சந்திரன் வானை முட்டும் உயரத்திற்கு வளர்ந்து நின்றான்.. ரவிவர்மனால் பெற முடியாத சுய அடையாளத்தை அவருடைய மகன் பெற்றுக் காட்டினான்.. அவரால் முறியடிக்க முடியாத அருள்மொழிவர்மனின் ஆளுமையை அவர் மகன் முறியடித்துக் காட்டினான்.. அரண்மனையின் தலைமைப் பொறுப்பை அருள்மொழிவர்மனிடமிருந்து மிக எளிதாகக் கைப்பற்றினான்.. அவனுடைய அன்னையை அந்த அரண்மனையின் மகாராணியாக வாழ வைத்தான்..

அவந்திகா ஒரு சறுக்குமரம்..! அருள்மொழிவர்மனைச் சறுக்கி விட்ட சறுக்கு மரம்..! இதை நினைத்துப் பல சமயங்களில் யாழினி வேதனைப் பட்டிருக்கிறாள்.. மகனின் தயவில் வாழாமல் கணவனின் ஆதிக்கத்தில் கம்பீரமாக வாழ்ந்தவள் பேரனின் தயவில் வாழ நேர்ந்து விட்டதை நினைத்துத் துயரப் பட்டிருக்கிறாள்.. அத்துட ன் விட்டு வைக்காமல் அடுத்தடுத்து அவந்திகா வம்பு வழக்குகளை கொண்டு வந்தால் அவள் என்ன செய்வாள்..?

அருள்மொழிவர்மன் குலப் பெருமையை பெரிதாக நினைப்பவர்.. அஜந்தாவால் சிதிலமாகி விட்ட அவர்களின்

குடும்பப் பெருமையைத் தூக்கி நிறுத்தியிருக்கும் ரவிச்சந்திரன் சொல்வதுதான் அவருக்கு வேதம்..

ரவிச்சந்திரனின் பேச்சுக்கு எதிர்ப்பேச்சு பேச மாட்டார்.. ரவிச்சந்திரனை எதிர்த்து நிற்க மாட்டார்.. அதனால்தான் அஜந்தா கொண்டு வரும் வம்பு வழக்குகளை அவந்திகா அருள்மொழிவர்மனின் காதுகளுக்கு கொண்டு செல்ல மாட்டாள்.. யாழினியிடம் முறையிட்டு விடுவாள்.. அவை வீணாவைக் குறித்தவையென்றால் யாழினி மகளையும் பேத்தியையும் ஒரு பிடி பிடித்துத் திருப்பி அனுப்பி விடுவாள்.. ரம்ய மாலினியைக் குறித்தது என்றால் கொஞ்சம் காதில் போட்டுக் கொள்வாள்.. மகன் வழிப் பேத்தி, மகள் வழிப் பேத்தியை அத்தை மகள் என்று நினைத்துப் பெருந்தன்மையாகப் பேசிப் பழகாமல் மனதைப் புண்படுத்தலாமா என்ற கோபம் உண்டாகும்..

இது நந்தினியைப் பற்றிய புகார் என்றதும் யாழினிக்கே கோபம் வந்து விட்டது.. எங்கிருந்தோ வந்த பெண்ணொருத்தி வயநாட்டு அரண்மனையில் வாழும் யாழினியின் பேத்தியிடம் மரியாதை குறைவாய் பேசுவதா..?

யாழினிக்கு வந்த கோபத்தில் நந்தினியையே வரவழைத்துக் கண்டித்திருப்பாள்.. அவள் ரவிச்சந்திரனின் செக்கரட்டரி என்பதினால் வீணாவை அழைத்துக் கோபமாய் கண்டித்துப் பேச வேண்டும் என்று நினைத்தாள்.. வீணா மாமனார், மாமியாரிடம் மரியாதை கொண்டவள்.. பணிந்து நடப்பவள்.. யாழினி கோபப் பட்டால் நிச்சயமாக நந்தினியிடம் ஏனென்று கேட்பாள்..

அதை நினைத்து வீணாவை வரச் சொன்னால் அவளுடன் ரவிச்சந்திரனும் வந்து நிற்கிறான்.. அவனுடைய செக்கரட்டரியை அஜந்தா எப்படி மரியாதைக் குறைவாய் பேசலாம் என்று கொதிக்கிறான்.. அரண்மனையை விட்டு வெளியேறப் போபதாக அறிவிக்கிறான்..

'ஈ விஷயம் ஆ மனுஷன் அறிஞ்ஞா.. ஞான் தொலையும்..'

"மாப்புத்தரனும் கொச்சு மோனே.. ஈ கொட்டாரம் நிண்டக் கொட்டாரமல்லோ..." யாழினி கெஞ்ச ஆரம்பித்தாள்..

"என் அரண்மனைதான்.. வம்சாவழியாக தாத்தாவின் சொத்து பேரனுக்குச் சொந்தம் என்று வராமல் தாத்தாவிடமிருந்து விலை கொடுத்து என் பெயரில் வாங்கி

ரெஜிஸ்ட்ரர் பண்ணியிருக்கும் என்னோட அரண்மனைதான்.. அந்த நினைவு உங்களுக்கும் உங்க மகளின் குடும்பத்திற்கும் இருக்கிறதா..?”

அழுத்தம் திருத்தமாக ரவிச்சந்திரன் நினைவூட்டியதில் யாழினிக்கு துக்கமாக இருந்தது.. இதைப் போன்ற பேச்சுக்களைக் கேட்க நேரிடும் என்பதினால்தான் அவள் ரவிச்சந்திரனிடம் வாக்குவாதமே வைத்துக் கொள்ள மாட்டாள்.. அப்படி அவளை நிம்மதியாக இருப்பதற்கு அவந்திகாவும் அவள் குடும்பத்தினரும் விட்டு வைக்கிறார்களா..?

“எல்லாத் தாத்தாவும் பேரன்களுக்குச் சொத்தைக் கொடுப்பாங்க.. என் தாத்தா அவரோட மருமகனோட கடனைத் தூக்கிக் கொடுத்திருக்கார்.. ஐநூறு கோடி கடன்..! எங்கிருந்து அவர் அடைப்பார்.. குடும்பத்தோட என் அரண்மனையில டேரா போட்டிருக்கார்.. உங்க மருமகனுக்கும் அவர் குடும்பத்துக்கும் எவ்வளவு செலவாகுதுன்னு அவருக்குத்தான் தெரியுாது.. உங்களுக்குத் தெரியுமில்ல.. அதைப்பத்தின நினைவு யாருக்கும் இருக்கிறதாத் தெரியலை... இந்த அரண்மனையில இருக்கிறவங்களிடம் வம்பு வளர்க்க மட்டும் தெரியுது..”

“ஞான் பறஞ் கொச்சு மோனே.. இனி இவ்விதமான வழக்கு வந்திடாதல்லோ..”

“எனக்கு நம்பிக்கையில்லை..”

“ஒரப்பானு ஞான் நோக்கினு ரவி..”

“பார்க்கலாம்.. இனிமே நந்தினியைப் பத்தி எதைப் பேசறதா இருந்தாலும் என்னைத்தான் நீங்க கூப்பிடனும்.. அம்மாவைக் கூப்பிடக் கூடாது.. இப்ப எதுக்காக அம்மாவைக் கூப்பிட்டிங்க..? உங்க மகளும், பேத்தியும் எதைச் சொன்னாலும் கேட்டுக்கிட்டு அம்மாவைக் கூப்பிட்டுக் கண்டிப்பீங்களா..? அம்மாவுக்கு வயசாகிருச்சு பாட்டி.. மேரேஜ் பண்ணிக்கிற ஏஜில அவங்களுக்குப் பிள்ளைகள் இருக்கிறோம்.. அவங்க மாமியாராகிற ஸ்டேஜில இருக்கிறாங்க.. இன்னும் நீங்க உங்க மாமியார் அதிகாரத்தை அவங்களிடம் காட்டனும்னு நினைக்காதீங்க..”

“என்ன இது ரவி..? பாட்டியிடம் இப்படியா பேசுவது..? நான் மாமியாராய் ஆனாலும் பேரன், பேத்தி எடுத்து பாட்டியானாலும் என்றைக்குமே உன் பாட்டியோட மருமகள்தான்.. அவங்க என்னிடம் மாமியார் அதிகாரத்தைக் காட்டத்தான் செய்வாங்க.. நீ யார் இதைக் கேட்க..?”

வீணா மகனைக் கோபித்துக் கொண்டதில் யாழினியின் மன ரணத்துக்கு மயிலிறகினால் மருந்து தடவி விட்டதைப் போல ஆறுதல் உண்டானது.. மருமகளை பாசத்துடன் பார்த்தாள்..

“பார்த்துங்க.. இதுதான் உங்க மருமகள்.. உங்க மகளுக்கும் மாமனார், மாமியார் இருக்காங்க.. அவங்களிடம் உங்க மகளை இப்படிப் பேசச் சொல்லுங்க பார்க்கலாம்.. எங்கே..? ஹஸ்பெண்ட் வீட்டில குடும்பம் நடத்தினாத்தானே அதையெல்லாம் பார்க்க முடியும்..? இருக்கிறது அண்ணன் மகனோட அரண்மனையிலே.. இதில மூட்டிக் கொடுக்கறதில முதல் ஆளாய் நிற்கிறாங்க.. ம்ஹூம்.. இன்னைக்குச் சொல்றேன் பாட்டி.. இந்தக் குடும்பம் இரண்டாய் பிரிந்தால் அதுக்கு முழுக்க முழுக்க உங்க மகளும் அவங்களோட குடும்பமும்தான் காரணமாக இருப்பாங்க.. பார்த்து இருந்துக்கங்க..”

ரவிச்சந்திரன் புயல் போல போய் விட்டான்.. புயலடித்து ஓய்ந்த அமைதி அங்கே நிலவியது.. யாழினி பேயடித்தவளைப் போல இடிந்து போய் உட்கார்ந்து விட்டாள்.

அத்தியாயம் 127

நீச்சல் குளத்தில் மிதந்த செயற்கை அன்ன பொம்மைகள் இயற்கையாய் அன்னங்கள் மிதப்பதைப் போலவே இருந்ததை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள் நந்தினி..

ரவிச்சந்திரனின் அரண்மனைத் தோட்டம் வெகு அழகாக இருந்தது.. கேரளத்தின் இயற்கையழகைச் சிதைக்காமல் செடி, கொடிகளை அழகுற அமைத்து.. இடைப்பட்ட புல் வெளியைச் சீராக வெட்டி விட்டு ஆங்காங்கே மேடு பள்ளங்களுடன் அதியற்புதமாக இருந்தது அந்தத் தோட்டம்.. புதர்ச் செடிகளை பல வடிவங்களில் கத்தரியால் செதுக்கியிருந்ததைப் பார்க்கப் பார்க்க அவளுக்குத் தெவிட்டவில்லை.. ஆங்காங்கே நீருற்றுகள் அமைக்கப்பட்டிருந்தன... வயநாட்டில் நீருற்றுகளுக்கா பஞ்சம்..?

நந்தினியை மயக்கி இழுத்து வைத்திருந்தது தோட்டம்.. எப்பொழுது பொழுது விடியும் என்று காத்திருப்பவள் பொழுது விடிந்தவுடன் ஸ்வெட்டரின் மீது சால்வையைப் போர்த்திக் கொண்டுத் தோட்டத்திற்கு ஓடி வந்து விடுவாள்.. வெயிலில்

குளிர் காய்ந்தபடி கால் வலிப்பதைப் பொருட் படுத்தாமல் தோட்டத்தில் சுற்றிக் கொண்டிருப்பவளை வேலைக்குக்

கிளம்பும் உத்தேசம் இருக்கிறதா இல்லையா என்று அரட்டி கிளம்ப வைப்பான் ரவிச்சந்திரன்..

நண்பகலில் உணவுக்கு அரண்மனைக்கு வரும் போதும் சாப்பிட்டவுடன் தோட்டத்திற்கு வந்து விடுவாள்.. ரவிச்சந்திரன் பின்னாடியே வந்து சப்தம் போட்டு இழுத்துச் செல்வான்.. பிற்பகலில் வேலை முடிந்து அரண்மனைக்கு வந்து விட்டால் இருட்டும் வரை தோட்டத்திலேயே குடியிருப்பாள்..

“அப்படி இங்கே என்னதான் இருக்கு..?” ரவிச்சந்திரன் தோட்டத்தின் மீதும் பொறாமைப் படுவான்..

“எப்பவுமே கையில் இருக்கிறதோட மதிப்பு நமக்குத் தெரியாது பாஸ்..” என்பாள் நந்தினி.

“அதை நீ சொல்கிறயா..?” ஒரு தினுசான குரலில் வினவி அவளை சோதித்து வைப்பான்..

நந்தினியால் பேச முடியாது.. உதட்டைக் கடித்துக் கொள்வாள்.. தீட்சண்யம் மிக்க அவன் பார்வையை அவளால் எதிர் கொள்ள முடியாது.. தலையைக் குனிந்து கொள்வாள்..

அவனுக்கும் அவளுக்கும் இடையில் நடந்த உணர்ச்சிப் போராட்டத்தில் அவள் கரைந்து கொண்டிருந்தாள்.. மின்மினிப் பூச்சிகளின் கண் சிமிட்டல்களைப் போல நூதனமான இன்பம் நிறைந்த உணர்வுக் குவியலுக்குள் அவள் புதைந்து கொண்டிருந்தாள்.. முள்ளாக அவன் சாடினாலும் அவனை ஏன் அவளால் வெறுக்க முடியவில்லை ல என்ற நுட்பமான மனோதத்துவம் நிரம்பிய கேள்விக்கு அவளிடம் பதிலில்லை..

வயநாட்டின் இயற்கையழகு அவளை கட்டிப் போட்டது.. கேரளாவின் கடவுளின் தோட்டம் என்று கொண்டாடப்படும் வயநாட்டில் அவள் வாசம் செய்கிறாள் என்பதையே அவளால் நம்ப முடிவதில்லை.. பிறந்து வளர்ந்த தஞ்சை.. அருகிலிருக்கும் பூர்விக கிராமம்.. படிக்கப் போன சென்னை.. உத்ராவின் திருமணத்தைச் சாக்கிட்டுப் போன செஞ்சி.. இவைதான் அவள் பார்த்திருந்த ஊர்கள்.. கேரளாவிற்கு வந்து அவள் விரும்பும் இயற்கையழகை ரசித்து ரசித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறாள் என்பதில் மலைத்துப் போவாள்..

பச்சைக் கம்பளம் விரித்ததைப் போன்ற கேரளத்தின் பசுமை கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது.. மிதமான வெயில்.. முகத்தைத் தொட்டுப் போகும் குளிர்காற்று.. எப்போதும் கொட்டும் மழையென்று வயநாட்டின் அழகே

தனித்துவம் கொண்டதாக இருந்தது.. அடாது மழை பெய்தாலும் விடாது குடை பிடித்துத் தோட்டத்தில் உலா வந்து ரசிப்பாள்.. இரவுப் பொழுதுகளில் அறையின் ஜன்னலோரமாக சோபாவை இழுத்துப் போட்டுக் கண்ணாடிக் கதவுகளுக்கு அப்பால் விளக்குகளின் ஒளி வெள்ளத்தில் மழையில் குளித்துக் கொண்டிருக்கும் தோட்டத்தைப் பார்த்துக் கொண்டிருப்பாள்..

அறையின் ஹீட்டரும், போர்த்திக் கொண்டிருக்கும் கம்பளியும் கதகதப்பைக் கொடுக்கக் கொட்டிக் கொண்டிருக்கும் வயநாட்டின் மழையை இரவில் ரசிப்பது பெரும் சுகம்..

அன்று மழையில்லாமல் வெயிலுடன் இருந்த தோட்டம் அவளை வா,வா என்று அழைத்தது.. வெயிலில் குளிர் காய்ந்தபடி நீச்சல் குளத்தின் கரையிலிருந்த சாய்வான மர பெஞ்சில் சாய்ந்து கால்களை ஆட்டியபடி செயற்கை அன்னங்களை ரசித்துக் கொண்டிருந் தவளை ரசித்துப் பார்த்தான் ரவிச்சந்திரன்.. காலையில் எழுந்ததும் சோம்பல் முறித்தபடி அறையின் ஜன்னலைத் திறந்து தோட்டத்தைப் பார்த்தால்.. அங்கே நீச்சல் குளத்தின் பக்கத்தில் நந்தினி உட்கார்ந்திருக்கிறாள்.. கால்களை ஆட்டியபடி செயற்கை அன்னங்களிடம் உரையாடிக் கொண்டிருந்தவளின் குழந்தைத்தனம் அவனை ஈர்த்தது.. உடனே நந்தினியின்

பக்கத்தில் பறந்து போய் உட்கார்ந்து வம்பிழுக்க விரும்பினான்..

“சாய் கொண்டு வந்து..” ஓமனா வந்து நின்றாள்..

ஓமனா கொண்டு வந்திருந்த டீயை வாங்கிக் குடித்தபடி..

“நந்தினிக்கு டீ கொடுத்தியா..?” என்று வினவினான்.. நந்தினியின் பெயரைக் கேட்டதும் ஓமனாவின் முகம் மலர்ந்தது விட்டது.. அஜந்தாவின் பெயரைக் கேட்டால் இவள் முகம் எப்படி மாறும் என்று யோசித்துப் பார்த்தான்.. சிரிப்பு வந்தது..

“புலரியிலேயே கொடுத்திட்டன் சாரே..” என்றாள்..

“ஓ..” காலிக்கப்பைக் கொடுத்துவிட்டு நடந்தான்.. படிகளில் வேக வேகமாக இறங்கித் தோட்டத்துக்குப் போன போது நந்தினி யாருடனோ ஃபோனில் பேசிக் கொண்டிருந்தாள்.. அவளின் பின்புறமாகப் போய்க் கண்களைப் பொத்த வேண்டும் என்று சப்தம் எழுப்பாமல் சென்றவன்.. நந்தினியின் ஃபோனில் ஒலித்த ஆண்குரலைக் கேட்டதும் அப்படியே நின்று விட்டான்.. நந்தினி படு உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்தாள்..

“ஹைய்யோ.. இங்கே எவ்வ்வ்..வளவு அழகாய் இருக்கிறது தெரியுமா..? நீங்க வந்து பார்க்கனுமே.. அசந்து போயிருவீங்க..”

“நீங்க சொன்னாச் சரியாத்தான் இருக்கும்.. தினமும் நீங்க வர்ணிக்கிறதைக் கேட்கிறப்ப எனக்கும் அங்கே வரனும்னு ஆசையாகத்தான் இருக்கு..”

“அங்கேயிருந்துக்கிட்டே ஆசைப்பட்டா எப்படி..? இங்கே வந்து பார்த்தா இல்ல தெரியும்..”

“வர்றேன்.. வர்றேன்..”

“வர்றேன்.. வர்றேன்னா எப்போ வரப் போறிங்க..? நானும் தினமும் வர்லாம் வா.. வர்லாம் வான்னு கூவிக்கிட்டுத்தான் இருக்கேன்.. அங்கேதான் ஒரு ஆக்ஷனையும் காணோம்..”

“எவரி ஆக்ஷனுக்கு ஒரு ரியாக்ஷன் இருக்குமில்ல.. அதை நினைத்தாத்தான் டெர்ரரா இருக்கு..”

“எப்படி, எப்படி..? எங்க ரியாக்ஷனைக் கண்டு பயமாமா..? யாருகிட்டக் காது குத்தறிங்க..?”

“ஹா.. ஹா.. நீங்கள்ளாம் யாரு..? பயமா இருக்காதா..?”

“பயமா இருக்காமா..? இருக்கு உங்களுக்கு..”

அதற்கு மேல் காது கொடுத்துக் கேட்க முடியாமல் நந்தினியின் கையிலிருந்த ஃபோனைப் பறித்தான் ரவிச்சந்திரன்.. மறுமுனையில் ஆண்குரல் ஒலித்துக் கொண்டிருக்கும் போதே ஃபோனை கட் பண்ணி விட்டான்..

“என்ன காரியம் செய்கறிங்க.. அவர் என்னன்னு நினைத்துக்குவார்..?” நந்தினி பதறினாள்..

“அவரா..?” ரவிச்சந்திரன் மூர்க்கமானான்..

அவர்கள் நின்று கொண்டிருப்பது வயநாட்டு அரண்மனையின் தோட்டத்தில் என்பதையும் மறந்து நந்தினியின் தோள்களைப் பிடித்து உலுக்கினான்..

“எவன்டி அவன்..? ஃபோனிலேயே இந்தக் கொஞ்சல் கொஞ்சறியே.. நேரில் பார்த்தா எப்படியெல்லாம் கொஞ்சுவ..? வயநாட்டுக்கு வர்லாம் வா, வர்லாம் வான்னு கூவிக்கிட்டு இருக்கறியா..? அவ்வளவு ஆசையா அவன் மேலே..? இருக்கு அவனுக்குங்கற.. என்னத்தைடி வைத்திருக்க..?”

கோபம் வந்தால் அவன் நாகரிகத்தின் எல்லைகளை அனாசியமாகக் கடப்பான் என்பதை அறிந்திருந்தும் நந்தினியால் அவன் பேசுவதைத் தாங்க முடியவில்லை.. ஒரு நொடியாவது அவள் யாருடன் பேசப் போகிறாள் என்று நினைத்துப் பார்க்கிறானா என்றிருந்தது அவளுக்கு.. எதற்கெடுத்தாலும் சந்தேகம்.. அவள் யாருடன் பேசினாலும் சந்தேகம் என்றிருந்தால் எப்படி..? அவளை அவன் இப்படித்தான் கணித்து வைத்திருக்கிறானா..?

"வாய்க்கு வந்ததையெல்லாம் பேசாதீங்க பாஸ்.." அவள் குமுறினாள்..

"உன் வாயிலே வந்துச்சேடி.. ஆக்ஷன் பத்திப் பேசற.. அவன் ரியாக்ஷனை நினைத்துப் பயமா இருக்குங்கிறான்.. எப்படிடீ ரியாக்ட் பண்ணுவ..?"

"ப்ளீஸ்.. மைண்ட் யுவர் டங்.."

"மைண்ட் யுவர் பிஸினெஸ்ன்னு சொல்றியா..?"

"நான் அப்படிச் சொல்லலை.. பட்.. நீங்க பேசுகிற விதத்தைப் பார்த்தா அப்படிச் சொன்னாலும் தப்பில்லைன்னுதான் தோணுது.."

“என்னடி சொன்ன..?”

ரவிச்சந்திரன் அடிப்பான் என்பதை எதிர் பார்த்திருந்ததால் கண்களை இறுக்கி மூடி அவனது அடியை மௌனமாக ஏற்றுக் கொண்டாள் நந்தினி.. அவளுக்காக எவ்வளவோ செய்திருக்கிறான்... அடைக்கலம் கொடுத்திருக்கிறான்.. மற்றவர்களிடம் விட்டுக் கொடுக்காமல் தாய்பறவை சிறகுக்கடியில் காத்து நிற்பதைப் போலக் காத்து நின்றிருக்கிறான்.. இத்தனைக்கும் மேலாக அவன் சொன்ன காதலை ஏற்றுக் கொள்ள மறுத்தவளை வற்புறுத்தாமல் பொறுமை காக்கிறான்..

இத்தனை செய்தவனின் அடியை அவள் பொறுத்துக் கொண்டால்தான் என்ன..? அதனால் அவள் ஒன்றும் குறைந்து போய் விட மாட்டாள்..

அடிவாங்கிப் பழக்கமில்லை என்பதில் வலித்தது.. கண்களில் இருந்து கரகரவென கண்ணீர் வழிந்தது.. அதைப் பார்த்தும் ரவிச்சந்திரனின் ஆத்திரம் அடங்க வில்லை.. அவள் எப்படி இன்னொரு ஆணிடம் கொஞ்சிப் பேசலாம் என்ற கொதிப்பில் இருந்தான்..

“எதுக்காக அவனை வரச்சொல்லி இந்தக் கெஞ்சு கெஞ்சற..? என்ன பிளான் பண்ணியிருக்கிற..? அவனோடு ஓடிப் போக பிளான் பண்ணியிருக்கியா..?”

“ஷட் அப்..” நந்தினி அங்கிருந்து போக முயன்றாள்..

“ஏய்ய்..” அவள் கைபற்றி நிறுத்தி உறுமினான் ரவிச்சந்திரன்..

“நான் கேட்டுக்கிட்டே இருக்கேன்.. நீ போய்க்கிட்டு இருக்கிற..? என்னடி நினைத்துக்கிட்டு இருக்கிற..?”

நந்தினி பதில் சொல்லாமல் தன் கையை விடுவித்துக் கொள்ள முயன்றாள்.. அவன் பிடிதான் இரும்புப் பிடியாய் இருக்குமே.. கையை விடுவித்துக் கொள்ள முடியுமா ..?

“நான் ரவிச்சந்திரன்டி.. கொன்று புதைத்து விடுவேன்..”

“அதைச் செய்து விடுங்க..” நந்தினியின் உதடுகள் துடித்தன..

புல்தரையில் கிடந்த நந்தினியின் செல்ஃபோன் ஒலித்தது.. நந்தினியின் கையை விடாமல் குனிந்த ரவிச்சந்திரன் செல்ஃபோனை எடுத்துக் காதுக்குக் கொடுத்தான்..

“வாட் ஹேப்பன்ட் நந்தினி..? ஃபோனை எதுக்காக கட் பண்ணிணீங்க..” மறுமுனையில் ஆண்குரல் கேட்டது..

“ஹூ ஆர் யு..?” கர்ஜித்தான் ரவிச்சந்திரன்..

“ஐ ஆம் வினித்.. ஹூ ஆர் யு..? இது நந்தினியின் போனாச்சே.. அவங்க எங்கே..?”

“வினித்..?”

ரவிச்சந்திரன் நந்தினியின் கையை விட்டு விட்டான்.. உதட்டைக் கடித்தபடி நின்ற நந்தினியின் முகத்தைப் பார்த்தவனின் பார்வை மன்னிப்பை இறைஞ்சியது..

“யெஸ்.. வினித்தான் பேசறேன்..”

“ஐ ஆம் ரவிச்சந்திரன்.. ஹௌ ஆர் யு..?”

“ஃபைன் சார்..”

“உத்ரா எப்படியிருக்காங்க..? மேரேஜ் நல்லபடியா முடிஞ்சிருச்சுன்னு என் ஃபிரண்ட் சொன்னான்..”

“ஆமாம் சார்.. மறுவீட்டு விருந்து, குலதெய்வ கோவில் பொங்கல், சொந்த பந்த வீடுகளுக்கு விருந்துக்கு போய் வரதுன்னு எல்லா ஃபார்மாலிட்டிஸும் முடிஞ்சாச்சு.. ஹனி

மூனுக்கு வயநாட்டுக்கு வருகிற பிளானில் இருக்கிறோம்.. உத்ரா நந்தினியைப் பார்க்கனும்னு ஆசைப்படறா..”

“ஓ.. ஃபெண்டாஸ்டிக்.. யு ஆர் ஆல்வேஸ் வெல்கம் வினித்.. உங்க ஹனிமூன் எங்க வயநாட்டில்தான்.. எப்போ வர்றீங்கன்னு சொல்லுங்க.. கோழிக்கோடில் பிக் அப் பண்ணிக்கிறேன்..”

“தேங்க் யு சார்.. நெக்ஸ்ட் வீக் கிளம்பி வர்றோம்..”

“ஓகே.. சீ யு..”

ஃபோனைக் கட் பண்ணி விட்டு நிமிர்ந்த ரவிச்சந்திரன் அங்கே நந்தினி இல்லாததில் திகைத்தான்..

அத்தியாயம் 128

பரபரவெனத் தன் துணிமணிகளை டிராவல் பேக்கில் அடுக்கிக் கொண்டிருந்த நந்தினியின் மனம் வலித்தது.. கேட்கக் கூடாத வார்த்தைகளைக் கேட்க நேர்ந்து விட்டதில் மனம் துடித்தது..

‘என்ன நினைத்துக் கொண்டிருக்கிறான்..’ பொருமினாள்..

‘ஒன்று இவன் மட்டமாகப் பேசுவான்.. இல்லைன்னா இவனோட அத்தை மகள் நான் சோற்றுக்கில்லாம இந்த வயநாட்டு அரண்மனையில அண்டிப் பிழைக்க வந்திருக்கேன்னு செப்பிக்கிட்டு வருவா.. போதும் இந்தப் பிழைப்பு.. பேசாம தஞ்சாவூருக்கே திரும்பிப் போயிடலாம்.. யாரும் இருக்கும் இடத்தில் இருந்துவிட்டால் எல்லாம் சௌக்கியமேன்னு சும்மாவா பாடி வைச்சார் கவிஞர் கண்ணதாசன்..? நான் இருக்க வேண்டிய என் வீட்டிலே இருந்திருக்கனும்.. அதை விட்டுட்டு பெல்ட் மன்னனின் பெல்ட் அடிக்குப் பயந்து வீட்டை விட்டு ஓடி வந்ததுக்கு இதுவும் வேணும்.. இன்னமும் வேணும்..’

அவளது கை அடிபட்ட கன்னத்தைத் தடவிப் பார்த்தது.. ஐவிரல்களும் பதிந்திருந்த விரல் தடங்கள் கண்ணாடியில் கன்றிச் சிவந்து தெரிந்தன.. வலித்தது..

“இந்த அடிக்கே இந்த வலி வலிக்குதே.. இதிலே இதுவும் வேணும்.. இன்னமும் வேணும்ன்னு நீயாத் தலையைக் குடுக்கறியே நந்தினி.. இதுக்கும் மேலே ஒரு அடி அடிச்சாலும் நீ தாங்குவியா..” கண்ணாடியைப் பார்த்துக் கேட்டு விட்டு வேலையைத் தொடர்ந்தாள்..

‘எதற்கெடுத்தாலும் கை நீட்டுகிறான்.. என்னை மனுஷின்னு நினைத்தானா.. இல்லை சேரளம் எஸ்டேட்டின் லாயத்தில் கட்டியிருக்கும் குதிரைன்னு நினைத்தானா..? இவன் அடிக்குப் பெல்ட் அடியே தேவலாம்.. அடியே நந்தினி..! எங்கே போனாலும் அடி வாங்கிச் சாகனும்னு உன் தலையிலே எழுதி வைத்திருக்கேடி..’

நந்தினிக்குத் துயரமாக இருந்தது.. சிறுவயதிலிருந்து சீராட்டிப் பாராட்டி வளர்க்கப் பட்டவள்.. கடிந்து ஓர் வார்த்தை கேட்டதில்லை.. மேகநாதன் கண்டிப்பாக இருப்பதைப் போலப் பாவனைதான் செய்வார்.. கடிந்து பேச மாட்டார்.. அப்படி

வளர்ந்தவள் தெரியாத்தனமாக இந்த வயநாட்டு அரண்மனையில் வந்து மாட்டிக் கொண்டு சீரழிகிறாள்..

மூக்கை உறிஞ்சியபடி அடுத்த செட் துணியை சுவர் அலமாரியிலிருந்து எடுத்துத் திரும்பாமல் பேக்கில் திணிக்கப் போனால் அவளது கையிலிருந்து துணி உருவப்பட்டது..

"பேசாமப் போயிரு ஓமனா.. செமத்தியான மூட் அவுட்டில இருக்கேன்.. இப்போப் பார்த்து அம்மே.. மே.. மேன்னு கத்தினேன்னு வைய்யு.. குரல்வளையை நெறிச்சுருவேன்.."

பொரிந்து தள்ளியபடி திரும்பிப் பார்க்காமல் துணியை உருவப் போனாள்.. துணி வரவில்லை..

"இப்ப என்னத்துக்கு டிரஸ்ஸைப் பிடுங்கற..? ஞான் எண்ட ஊருக்குப் போயி.. மனசிலாயி.."

ஓமனாவிடமிருந்து பதில் வரவில்லை.. நந்தினிக்கு ஆயாசமாக இருந்தது.. ஓமனாவின் அன்புத் தொல்லைக்கு ஒரு அளவே இல்லையா..? நந்தினியால் வயநாட்டு அரண்மனையில் நிரந்தரமாக இருந்துவிட முடியுமா..?

"சொன்னாப் புரிஞ்சுக்க ஓமனா.. இங்கே நான் கெஸ்டாத்தான் வந்தேன்.. என்னைக்கிருந்தாலும் நான்

திரும்பிப் போகனும்ன்னு உனக்குத் தெரியும்தானே.. எதுக்காக அடம் பிடிக்கற..? டிரஸ்ஸைக் கொடுத்திரு தாயி..”

அதற்கும் ஓமனாவிடமிருந்து அசைவில்லாமல் போனதில் நந்தினி ஆத்திரத்துடன் திரும்பினாள்.. ஓமனாவை மாட்டு மாட்டு என்று மாட்ட நினைத்தவளுக்குப் பேச்சு வரவில்லை.. தொண்டையிலேயே வார்த்தைகள் சிக்கிக் கொண்டன..

அவளிடமிருந்து துணியைப் பறித்துக் கையில் வைத்திருந்த ரவிச்சந்திரன் டிராவல் பேக்கை அவன் பக்கமாக இழுத்து எட்டிப் பார்த்து விட்டு..

“மூட்டை கட்ட ஆரம்பிச்சுட்டியா..? எங்கே போகிறதா உத்தேசம்..?” என்று புருவங்களை உயர்த்தினான்..

அவளது விழிகளை நேருக்கு நேர் சந்தித்த அவன் விழிகளில் தன்னம்பிக்கை ததும்பிக் கொண்டிருந்தது.. உற்றுப் பார்த்த அவனது உல்லாசப் பார்வையும்.. இதழ்களில் நெளிந்த கள்ளச் சிரிப்பும் அவனது புருவம் உயர்த்துதலில் அவள் மயங்கிப் போய் விடுவாள் என்பதைக் கணித்து வைத்திருந்ததை அறிவித்தன..

‘இவனைப் பார்க்கக் கூடாது..’ பார்த்துத் தொலைத்தாள்...

‘மடச்சியைப் போல மயங்கக் கூடாது..’ மயங்கித் தொலைத்தாள்..

வெற்றிப் புன்னகையுடன் அவளையே பார்த்தபடி அருகில் வந்தவன் அவள் முகத்தைக் கைகளில் ஏந்தி..

“என்னை விட்டுப் போயிடுவியா..?” என்று குழைந்தான்..

அவன் விழிகள் என்னை விட்டு ஓடிப் போக முடியுமா..? உன்னால் முடியுமா என்று சவால் விட்டன.. அது முடியாது என்பதில் சோர்ந்து போனாள் நந்தினி.. இது அவள்தானா..?

“உத்ரா.. அவன் அடிப்பான் என்பதில் வலியை விட எனக்கான அவமானம் அதிகம்டி.. இதை ஏன் நீ புரிஞ்சுக்க மாட்டேங்கிற.. என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டவன் என்கிற ஒரே காரணத்துக்காக அவனிடம் நான் அடிவாங்கினா அது என் சுயமரியாதையில் விழுகிற அடியில்லையா..? அப்போ நான் நானா இருக்க மாட்டேண்டி.. என்மீது எனக்கே மரியாதை இருக்காது..” என்று உத்ராவிடம் செஞ்சியில் புலம்பி அழுதாளே.. அந்த நந்தினியாகத்தான் இப்போதும் இருக்கிறாளா..? அந்த ரோஷமும், சுயமரியாதையும் எங்கே போனது..?

“கோபம் வந்தாத் திட்டு.. கேட்டுக்கறேன்.. விட்டுட்டுப் போகனும்னு மட்டும் நினைக்காதே..” அவன் நெருங்கினான்..

‘பக்கத்தில் வர்றானே..’ நந்தினி கலவரத்துடன் பின் வாங்கினாள்..

அவனது புருவம் உயர்த்துதலில் வீழ்ந்து வைக்கிறவள் அவன் தொட்டால் பாகாய் குழைந்து விடும் அபாயம் இருக்கிறது..

‘அப்படியேதும் ஆகித் தொலைத்து விடக் கூடாது..’

அவளுக்குள் அபாய சங்கு ஊதியது.. நந்தினி களைத்துப் போன மனதுடன் சுவரில் சாய்ந்து கண் மூடி நின்றாள்.. அவளது தோள்களில் அவன் விரல்கள் படிந்தன.. அவளது முகம் அவனுடைய மூச்சுக்காற்றை உணர்ந்தது.. இமைகளில் அவனது இதழ்களின் ஸ்பரிசத்தை உணர்ந்தாள்..

‘முத்தம் கொடுக்கிறானே..’

அவளுக்குள் கிளர்ந்தெழுந்த உணர்ச்சிக் குவியல்களை அவளால் அடக்க முடியவில்லை.. நீலிமலையின் புல்வெளியில் அவன்மீது சரிந்திருந்த அந்த நொடிகளின் சுகம் மீள்வதை

உணர்ந்தாள்.. சிறு புள்ளியாக அவளுள் தோன்றிய மயக்கம் உடலெங்கும் வியாபிக்க கிறக்கத்துடன் உதட்டைக் கடித்தாள்.. கீழுதட்டில் பல் பதிந்ததில் அவன் விரல் அதைத் தடவிக் கொடுத்தது..

“ம்ப்ச்.. வேண்டாம்.. அலட்டிக்காதே..” மிருதுவாக அவளது நெற்றியில் முத்தமிட்டான்..

அவனைத் தள்ளிவிட வேண்டும் என்று அவன் மார்பில் அவள் கை பதிக்க.. அவளது அந்த உள்ளங்கையை பூப்போலப் பிடித்துத் தன் கைக்குள் அடக்கி அதற்கும் ஓர் முத்தம் கொடுத்தான்..

‘என்னை விட்டுத் தொலைடா..’

இதழ்களை அசைத்து உச்சரிக்க முடியாமல் அவளது இதழ்களை அவனது இதழ்கள் மென்மையாக ஆக்ரமித்து முரட்டுத்தனத்திற்கு இழுத்துச் சென்றன..

ஆவேசத் தழுவல்.. ஆழ்ந்த முத்தம்.. விடுபட முடியாத ஆழிப் பேரலை.. அடியாழத்தில் அவள் அமிழ ஆரம்பித்தாள்.. எதிர்ப்புக்கள் வலுவிழந்து போன நிலையில் அவன் மார்பில் முகம் புதைத்துத் தழுவிக் கொண்டாள்.. அவன் முதுகில் படர்ந்த அவளது கரங்கள் அணைக்கவும் முடியாமல்

விலக்கவும் தெரியாமல் அங்கும் இங்குமாக அலை பாய்ந்தன..

“நந்தினி..”

அவளது கழுத்தில் முகம் பதித்தவனின் வெப்ப மூச்சுக்காற்று அவளது காதோர மடலைச் சுட்டது..

“ஏண்டி என்னைப் படுத்தற..?”

வழக்கமான பழி போடல்.. வழக்கமான சுடு வார்த்தைகள்.. வழக்கமான அடி.. பின்.. வழக்கமான தழுவல்.. வழக்கமான கேள்வி..

‘இவனுக்கு இதுவே பிழைப்பாகப் போய் விட்டது..’

அறையில் காலிங்பெல் ஒலித்ததில் நந்தினி விதி ர்த்துப் போய் விலகினாள்.. பதட்டத்துடன் அறைக் கதவைப் பார்த்தாள்.. உள்புறமாகத் தாழிடப் பட்டிருந்தது..

‘நல்லவேளை.. யாரும் பார்க்கலை..’

நிம்மதியடைய முடியாமல் காலிங் பெல்லை அடிப்பது யார் என்ற பயம் எழுந்தது..

அது யாராக இருந்தாலும் தாழிடப் பட்ட அறைக்குள் அவளும் ரவிச்சந்திரனும் சேர்ந்து இருப்பதைப் பார்த்து

விட்டால் என்ன ஆவது..? அவளை என்னவென்று நினைப்பார்கள்..? எப்படி அவள் மற்றவர் முகத்தில் விழிப்பாள்..?

‘எல்லாம் இவனால் வந்தது..’

அழுகையும் ஆத்திரமுமாக அவனை முறைத்தாள்.. சற்றுமுன் அவளை ஆக்ரமித்திருந்த மயக்கம் இருக்கும் இடம் தெரியாமல் ஓடிப் போயிருந்தது..

பயமெல்லாம் அவளுக்குத்தான்.. அவனுக்கு எதுவுமேயில்லை அலட்டிக் கொள்ளாமல் கதவை திறக்கப் போனான்..

“என்ன காரியம் செய்கறீங்க..?” தாழ்ந்த குரலில் அவள் சீறினாள்..

“எதுக்கு இந்த ஆங்க்ரி..?” என்றான் அவன்..

“உங்க தலை..!” அவள் தலையில் அடித்துக் கொண்டாள்..

“என் தலையைச் சொல்லிட்டு நீ உன் தலையில அடித்துக்கற..” கரிசனத்துடன் அவள் தலையைத் தடவிக் கொடுக்க முனைந்தான் ரவிச்சந்திரன்..

“ரொம்பத்தான் அக்கறை..” ஆத்திரத்துடன் அவன் கையைத் தள்ளி விட்டாள் நந்தினி.

“வொய்..? நான் அக்கறைப்படக் கூடாதா..?”

“எதுக்கு இந்த அக்கறை..?”

“உன் தலை வலிக்குமே..”

“ஆஹாஹா..! அதைக் கன்னத்தைப் பெயர்த்தவர் சொல்லக் கூடாது.. அக்கறைப் படுகிறாராம் அக்கறை.. யாருக்கு வேண்டும் உங்க அக்கறை..?”

“உனக்கு வேண்டாமா..?”

“வேண்டவே வேண்டாம்..”

“என் அக்கறை ரொம்பக் காஸ்ட்லிம்மா.. தி ஃபேமஸ் சூப்பர் ஸ்டார் ரவிச்சந்திரனோட அக்கறை தனக்குக் கிடைத்து விடாதான்னு எத்தனை பெண்கள் ஏங்கிக்கிட்டு இருக்காங்க தெரியுமா..?”

“ஏன் தெரியாது..? அதான் கோழிக்கோடில ஒண்ணு.. இந்த அரண்மனையிலே இன்னொன்னுன்னு நான் பார்த்துக்கிட்டே இருக்கேனில்ல..”

“இரண்டைத்தானே பார்த்திருக்க.. இந்த உலகம் பூராவும் நிறைய இருக்காங்க.. ஒவ்வொருத்தரையாப் பார்த்தேன்னு வை.. அசந்து போயிருவ..”

“எனக்கெதுக்கு அந்த அசத்தல்..? உங்க அக்கறையைக் கேக்கறவங்கள நான் பார்க்கவும் வேணாம்.. அசரவும் வேணாம்.. பெருமையடிக்க நல்ல நேரம் பார்த்தீங்க போங்க..”

“போகத்தான் நீ விட மாட்டேங்கறியே..”

“உங்க மேல ஆசைப்பட்டு இருக்கச் சொல்லலை.. உங்களையும் என்னையும் பூட்டின ரூமுக்குள்ள வைத்து மத்தவங்க பார்த்துட்டா என்ன ஆகும்..?”

“நமக்கு மேரேஜ் ஆகும்..”

தீர்க்கமான பார்வையோடு அவன் சொன்னான்.. நந்தினியின் விழிகளில் மின்னல் வந்து போனது.. கடந்து போன மின்னலை அவன் கவனித்திருக்கக் கூடாது என்று மனதுக்குள் வேண்டிக் கொண்டாள்..

“அப்படியொரு கிரிட்டிக்கலான சிச்சுவேஷன் உண்டாச்சுன்னா நீ என்னை அவாய்ட் பண்ண

முடியாதுல்ல..? என்னிடமிருந்து தப்பிக்கவும் முடியாது.. மேரேஜ் பண்ணித்தான் ஆகணும்..”

அவன் விழிகள் ஒளிர்ந்ததில் அப்படியொரு இக்கட்டான நிலையை அவன் உருவாக்கி விடுவானோ என்று பயந்து போனாள் நந்தினி.. அவசரமாக அவனை இழுத்து அலமாரியின் கதவுகளுக்கு இடையில் நிற்க வைத்து..

“என்மேல் ஆணை.. நீங்க இந்த இடத்தை விட்டு நகரக் கூடாது..” என்று சொல்லி விட்டுக் கதவைத் திறக்க ஓடினாள்.. திறந்த கதவுகளுக்கு அப்பால் அஜந்தாவின் முகம் தெரிந்ததில் நந்தினிக்கு அப்பாடா என்றிருந்தது..

அத்தியாயம் 129

“நீ தானா..?”

அஜந்தாவைப் பார்த்ததில் நந்தினிக்கு அளவு கடந்த நிம்மதி உண்டானதில் ஆச்சரியப்பட்டுப் போனாள் அஜந்தா..

‘என்னைப் பார்த்து ரீலீஃப் ஆகிறா.. என்னவாம்..? ஃபிரண்ட் ரிக்வஸ்ட் கொடுத்து வளைத்துப் போட்டுக்கலாம்ன்னு பிளான் பண்றாளோ..’

அஜந்தா சந்தேகத்துடன் நந்தினியை ஏற இறங்க பார்த்தாள்.. அவளுக்கு என்ன தெரியும்..? அந்த அரண்மனையில் அவந்திகாவையும், அஜந்தாவையும் தவிர மற்ற பெண்கள் சுவாதீனமாக நந்தினியின் அறைக்குள் நுழைந்து விடுவார்கள்.. நந்தினியால் அதைத் தடுக்க முடியாது.. அப்படி நுழைபவர்கள் ரவிச்சந்திரனைப் பார்த்து விட்டால் கதை கந்தலாகி விடுமே..

அவந்திகாவும், அஜந்தாவும் அப்படி உள்ளே நுழைந்து விட மாட்டார்கள்.. என் பாதம் பட உன் அறைக்கு என்ன தகுதியிருக்கிறது என்ற துச்சப் பார்வையுடன் விரல் சொடுக்கி அவளை வெளியே அழைப்பார்கள்..

நந்தினி நிம்மதியுடன் வெளியே வந்து அறைக்கதவை இறுக்கி மூடினாள்.. அதை இகழ்ச்சியாகக் கவனித்த அஜந்தா..

“உன் ரூமில வைரமும் வைடூரியமும் கொட்டிக் கிடக்குது பாரு.. நான் வந்து அள்ளிக்கிட்டுப் போகப் போறேன்.. வேலை பார்க்க வந்தவளைப் போலவா நீ பிஹேவ் பண்ற..?” என்று எரிந்து விழுந்தாள்..

“நான் எப்படி பிஹேவ் பண்ணினா உனக்கென்ன..? நீயா எனக்கு வேலை கொடுத்திருக்கிற..?” நந்தினி நிதானமாகக் கேட்டாள்..

“அது என்ன.. வா, போன்னு பேசற..?”

“நீ மட்டும் வாங்க, போங்கன்னா பேசற..? எது கொடுக்கிறாயோ அதுதானே உனக்குத் திருப்பிக் கிடைக்கும்..?”

“ஏய்ய்..?”

“அடங்கறியா..? இப்ப எதுக்காக வந்திருக்கிற.. அதைச் சொல்லு முதலில்..”

“அதட்டலெல்லாம் பலமாய் இருக்கு..? எல்லாம் என் அத்தான் கொடுக்கிற இடம்.. வந்த புதிதில் வாங்க,

போங்கன்னு மரியாதையாய் பேசிய வாய் இன்றைக்கு என்னமாய் கிழியுது..!”

“உன் வாயை விட அதிகமாக் கிழியலை.. மரியாதை கொடுத்தா அதைக் காப்பாத்தி வைத்துக்கனும்.. என்னவோ கொடுத்து வைத்திருக்கிற மாதிரி ஆணவத்தில ஆடினா இப்படித்தான்..”

“எப்படித்தான்..?”

“போ, வா தான்.. இன்னும் போடி, வாடின்னு மாறலைன்னு சந்தோஷப் பட்டுக்க..”

“அவ்வளவு தூரத்துக்கு வந்துட்டியா..?”

“நான் வரலை.. நீதான் என் ரூம் வாசலுக்கு வந்திருக்கிற.. என்ன கழுதைக்கு வந்திருக்கிறன்னுதான் புரியலை..”

“என் அத்தானோடு என்னடி கொஞ்சிக் குழாவல் வேண்டிக் கிடக்கு..?”

‘இவ எப்போப் பார்த்தா..?’

நந்தினிக்குத் ‘திக்’ கென்று ஆகி விட்டது.. அறைக் கதவு பூட்டித்தானே இருந்தது..? பூட்டிய அறைக்குள் அவளும்

ரவிச்சந்திரனும் தழுவிக் கொண்டதை இவள் பார்த்திருக்க முடியாதே.. இவளுக்கென்ன லேசர் பார்வையா இருக்கு..?

இப்போது அஜந்தாவை நந்தினி சந்தேகமாக பார்த்து வைத்தாள்..

“என்ன.. இப்படி முட்டைக் கண்ணை முழிச்சுக்கிட்டுப் பார்க்கிற..?”

“இல்லை.. சேரவள நாட்டுப் பெண்குட்டி.. செந்தமிழில் மாட்டாடுதேன்னு பிரமிச்சுப் போய் பார்க்கிறேன்..”

“கிண்டல்..?”

“உன்னிடம் கிண்டல் பண்ணிட்டாலும்.. ம்ஹூம் .. ஜோக்கடிக்க நல்ல நேரம் பார்த்த போ.. எனக்கு இருக்கு ஆயிரம் வேலை..”

“என்ன வேலை..? என் அத்தானுக்கு சொக்குப் பொடி போடற வேலையா..?”

“இது கூட நல்லாயிருக்கே.. நாளைக்கே ஸ்டார்ட் பண்ணிட்டாப் போச்சு..”

“ஹேய்.. எவரிடம் நொனா பறஞ் ..?”

“ஆரம்பிச்சுட்டியா..? ஏன் இந்த கொலைவெறி..? நல்லாத்தானே போய்க்கிட்டு இருந்தது..? செந்தமிழில பேசினவ திடிர்ன்னு எதுக்கு மலையாளத்துக்கு தாவற..?”

“அது என் இஷ்டம்..”

“கேட்கிறதுக்கு எனக்கு கஷ்டம்.. ஒழுங்காத் தமிழில் பேசு..”

“யார்கிட்டப் பொய் சொல்ற..?”

“ஓ.. இதையா நீ பறஞ் ..? பாருடா.. உன்கிட்ட யாராவது பொய் சொல்வாங்களா..? யாரு நீ..? பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்தவளாச்சே.. பொய்கிட்டேயே பொய் சொல்லக் கூடாதுன்னு எனக்கும் தெரியும் அஜந்தா.. மனசிலாயி..”

“யு.. யு.. யு..”

வார்த்தைகள் வராமல் தவித்தாள் அஜந்தா.. ஆத்திர மிகுதியில் வார்த்தைகள் அவள் தொண்டையில் சிக்கிக் கொண்டன..

“நான் நான்தான்.. நீயும் நீதான்.. அதுக்கு இப்ப என்னாங்கிற..?”

ஒதுங்கிப் போகிறவளைத் துரத்தித் துரத்தி வம்பிழுத்து அதை யாழினிப் பாட்டியின் காதுகள் வரை கொண்டு போய் வம்பை அணைய விடாமல் ஊதிப் பெரிதாக்கும் அஜந்தாவை நந்தினி வெறுத்தாள்.. யாழினி நந்தினியிடம் சரியாகப் பேசுவதில்லை.. தன்னிலை விளக்கம் கொடுக்க நந்தினி முயன்றபோது..

“எந்துக்கு..? நீ ரவியிண்ட செக்கரட்டரி.. ஈ கொட்டாரம் அவனின்ட கொட்டாரம்.. எனிக்கு நீ விளக்கமளிக்க தேவையில்லா.. கேட்டோ..” என்று சொல்லி விட்டாள்..

அந்தக் கொதிப்பை மனதில் பதுக்கி வைத்திருந்த நந்தினியிடம் கதவைத்தட்டித் தானாகக் சிக்கிக் கொண்டாள் அஜந்தா.. அவள் என்றுமில்லாத திருநாளாக தோட்டத்துக்குப் பக்கம் போனாள்.. அங்கே ரவிச்சந்திரன் நந்தினியின் தோள்களைப் பற்றிக் குனிந்ததைப் பார்த்து விட்டாள்.. உடனடியாக அவர்களைக் கையும் களவுமாகப் பிடித்துக் கொடுத்து விட வேண்டும் என்று அவந்திகாவைத் தேடிப் போய் அழைத்தால் அவள் அறை ஜன்னல் வழியாக தோட்டத்தை எட்டிப் பார்த்து விட்டு அங்கே யாருமில்லையே என்று புருவங்களை நெறித்தாள்.. இப்போதுதானே பார்த்தேன் என்று அஜந்தாவும் பார்த்தாள்.. அவந்திகா

சொன்னதைப் போல அங்கே யாரும் இல்லை.. அஜந்தாவுக்கு பிரமையென்று அவந்திகா சொல்லி விட்டாள்.. மனதுக்குள் யாழினியிடம் இன்னொரு பிராதி (புகார்) யைக் கொண்டு சென்று வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டியதில்லையென்று அவந்திகா சந்தோஷப்படுகிறாளோ என்று அஜந்தா சம்சயப் பட்டாள்..

'இப்போத்தானே பார்த்தேன்..'

அதை நந்தினியிடம் கேட்டுவிட வேண்டுமென்று அவளைத் தேடிப் போய் அறைக்கதவைத் தட்டிச் சண்டைக்குப் போனால்.. வாடி, வா.. இதற்காகத்தான் இத்தனை நாள் காத்திருந்தேன்.. நீயாக வலிய வந்து சிக்கிக் கொண்டாயா என்ற வெப்பராளத்துடன் (கொதிப்புடன்) நந்தினி அவளை வாங்கு, வாங்கு என வாங்கிக் கொண்டிருந்தாள்.. இவளெல்லாம் எனைப் பேசுவதா என்ற வெப்பராளத்தில் அஜந்தாவுக்குப் பேச்சுத் தொண்டையில் சிக்கிக் கொள்ளத் திக்கித் திணறினாள்..

"எண்ட அத்தானோட நினக்கு என்னடி ஜோலி..?"

“உனக்கு மண்டையில மூளையே இல்லையா..? களிமண்தான் இருக்கா..? உன் அத்தானிடம்தான் எனக்கு ஜோலி (வேலை) மறந்துட்டியா..?”

“ஏய்ய்.. ஞான் ஆ பணியைக் கேக்கலையல்லோ ..”

“நீ இ பணியைக் கேட்டாலும் ஊ பணியைக் கேட்டாலும் என் பதில் இதுதான்.. நான் அவரிடம்தான் வேலை பார்க்க வந்திருக்கிறேன்.. ஸோ.. அவரிடம்தான் எனக்கு வேலை..”

“எந்து ஜோலி..? தோட்டத்திலே இறுக்கி அணைச்சு உம்மா கொடுக்கிற ஜோலியோ..?”

‘ஓ.. இவ தோட்டத்தில அவன் என் தோளைத் தொட்டதைப் பார்த்துட்டு வந்து வம்பிழுக்கிறா..’

அறைக்குள் ரவிச்சந்திரன் இருப்பதை அறியாமல் வந்திருக்கிறாள் என்பதில் நந்தினிக்குள் நிம்மதி வந்தது..

“மத்தவங்க கொஞ்சுகிறதை ஒளிஞ்சிருந்து பார்த்திருக்கயே.. உனக்கு வெட்கமே இல்லையா..?” வேண்டுமென்றே கடுப்பேற்றினாள்..

“நாணத்தப் பத்தி நீ பறஞ் ..?”

“ஞான்தான் பறஞ் .. நீயெல்லாம் அத பறயாண்டாம்.. கேட்டோ..”

“நந்தினி..”

“எதுக்கு இப்போ சவுண்டு விடற..?”

“ஞான் தாத்தா, பாட்டி யிடம் போயி..”

“போ...”

நந்தினி வலதுகையை நீட்டி வழியைக் காண்பித்தாள்..

“நினக்கு எந்து தைரியமானு..? பாட்டியிண்ட ஞான் பிராதி தந்தா எந்தா நடக்கும்ன்னு அறிஞ் ..?”

“அறியும், அறியும்.. பாட்டி அன்வர்ஷிக்கனும்னு (விசாரிக்கனும்னு) ஆள் அனுப்புவாங்க.. உன் ஆசை அத்தான் போய் நிற்பார்.. அதுக்கு மேலே என்ன நடக்கும்ன்னு ஞான் செப்பித்தான் நீ அறியனுமோ..?”

“உன்னை..” அஜந்தா பல்லைக் கடித்தாள்..

“என்னை..? ம்ம்ம்..?” நந்தினி தூண்டினாள்..

“இரு.. இரு.. ஈ அஜந்தா யார்ன்னு வெகு விரைவில் உனக்குக் காட்டறேன்..”

“அட..! இந்த அரண்மனையில் நீ யார்ன்னு உனக்கேத் தெரியாதா..? இது தெரியாம என்கூட சண்டைக்கு வந்துக்கிட்டு இருக்கிற.. போம்மா.. போய் ஜோலிக் கழுதை ஏதாச்சும் இருந்தா பாரு.. போ.. போ..”

நந்தினி ‘ஜெயம்’ திரைப்படத்தின் கதாநாயகியைப் போலத் தலை கவிழ்ந்து கை நீட்டிப் போகச் சொன்னதில் கொந்தளிப்புக் கொண்ட அஜந்தா அதை அவந்திகாவிடம் கொட்ட ஓடோடிப் போனாள்..

“ஒருவழியாய் போய் தொலைச்சா.. மகராசி.. சண்டை போட நல்ல நேரம் பார்த்தா..”

அலுப்புடன் கதவை விரிய திறந்து வைத்து விட்டு உள்ளே சென்றாள் நந்தினி.. இனி யார் வந்தாலும் அவளுக்கு கவலையில்லை.. பூட்டிய அறைக்குள் அவளும் ரவிச்சந்திரனும் பேசிக் கொண்டிருந்தால்தான் அது தவறாக தெரியும்.. திறந்திருக்கும் அறைக்குள் ரவிச்சந்திரன் இருந்தால் எந்தவிதமான வில்லங்கமும் வராது.. நந்தினியின் அறைக்கு அவன் வருவதும் அவளுடன் உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பதும் சகஜமான ஒன்றுதான்..

“ஊஃப்..”

கன்னங்களைக் குவித்து தலையை ஆட்டி வாய் விட்டுச் சொன்னபடி ரவிச்சந்திரனைப் பார்த்த நந்தினி திகைத்தாள்.. அவள் எந்த இடத்தில் அவனை நிற்க வைத்து விட்டுப் போனாளோ.. அந்த இடத்தில் அசையாமல் சுவர் அலமாரியின் மறைவில் நின்று கொண்டிருந்தான் ரவிச்சந்திரன்.. அவன் அப்படி மறைந்து நிற்பவன் அல்ல..

“இங்கேயேவா நிற்கறிங்க..?” வியப்புடன் கேட்டாள் நந்தினி..

“இங்கேதானே என்னை நிற்கச் சொன்ன..?” என்றான் அவன்..

“நான் சொன்னதுக்காகவா ஒளிஞ்சு நிற்கறிங்க..? காட்..!” கன்னத்தில் கையை வைத்து விழிகளை விரித்தாள்..

“நீ சும்மா சொல்லியிருந்தா போடின்னு சொல்லிட்டு உன் பின்னாடியே வந்திருப்பேன்.. உன் மேல் பிராமிஸ் பண்ணிச் சொல்லிட்டயே.. எப்படி மீறுவேன் நந்தினி..?” ஆழ்ந்த குரலில் கேட்டான் ரவிச்சந்திரன்..

நந்தினி அசைவற்று நின்று விட்டாள்.. எதிரே நிற்பவன் எவராலும் அடக்க முடியாத புயல் போன்றவன்.. கரை போட

முடியாத காட்டாறு.. அருள்மொழிவர்மனையே தன் கண்ணசைவில் கட்டி வைத்திருப்பவன்..

அவளது கண்ணசைவிற்குக் கட்டுப்பட்டு நின்றிருக்கிறான்.. பயம் என்பதையே அறியாதவன் அவள்மீது ஆணை வைத்து 'ஒளிந்து நில்' என்று சொல்லி விட்டாள் என்பதற்காக ஒளிந்து நிற்கிறான்..

"பாஸ்.." தழுதழுப்புடன் அவனை அழைத்தவள் அவன் மார்பில் சாய்ந்து விட்டாள்..

அவன் மீதான கோபத்தை அவள் மறந்து விட்டதில் அவன் முகத்தில் மென்மை படர்ந்தது.. அவனை அவள் மன்னித்து விட்டதில் பிரியம் கொண்டான்.. அவனுடைய தவறுகளைப் பொருட்படுத்தாமல் மன்னிப்பை அள்ளித் தரும் அந்த ரோஷக்காரியின் மீதான பிரேமம் அவனுக்கு அதிகரித்தது..

"பார்த்தியா.. நீ கிழிச்ச கோட்டை நான் தாண்டலை.. இப்பவாவது என்னைக் காதலிக்கிறேன்னு சொல்ல மாட்டியா..?" அவள் காதோரமாக இதழ் பதித்துக் கேட்டான்..

அவனை விட்டு விலகிய நந்தினியின் கண்களில் கலக்கம் இருந்தது.. மறுப்பாக தலையை அசைத்தாள்..

“எனக்கு ஏதாவது ஒண்ணுன்னா ஓடி வந்து உங்க கைக்குள்ள புகுந்துக்கனும்னு தோணுது பாஸ்.. உங்க பக்கத்திலே இருக்கும் போது பயமில்லாம பாதுகாப்பா ஃபீல் பண்றேன்.. தனியா இருந்தா பயமா இருக்கு.. ஏதேதோ தோணுது..”

மிரண்டு விழித்தவளின் கண்களில் காதல் இல்லாததில் அவன் பெருமூச்சு விட்டான்..

அத்தியாயம் 130

‘மலரே..! ஓ.. மலரே..!

நீ என் மலரல்ல.. நான் உன் வண்டல்ல..

உன் மானம் காவல் கொண்டேன்..

என்று காதல் கொண்டேன்..?’

இப்படியா ரவிச்சந்திரன் பாடினான்..? இல்லையே..

‘ஒரு பொய்யாவது சொல் கண்ணே..

உன் காதல் நான்தானென்று..

அந்தப் சொல்லில் உயிர் வாழ்வேன்..’

இப்படித்தானே பாடினான்..? இருந்தும் ஏன் நந்தினி பிடி கொடுத்துப் பேச மறுக்கிறாள்..? காதலனாக நிற்பவனை காவலனாக்குகிறாளே.. அவளுக்கு மனது என்ற ஒன்று இல்லவே இல்லையா..? இருந்தும் அது கல்லாய் இருக்கிறதா..?

“உன் மனசென்ன கல்லாடி..?” அவன் பொருமினான்.. நந்தினி பதில் சொல்லாமல் அவன் கையைப் பிடித்து

மறைவிடத்திலிருந்து இழுத்து சோபாவில் உட்கார வைத்தாள்.. அவளையே அவன் உறுத்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.. நந்தினி குற்றம்சாட்டும் அவனது பார்வையை நேருக்கு நேராக சந்திக்க முடியாமல் தவித்தாள்..

“எனக்கு உன் பதில் வேணும்..” பிடிவாதமாக கேட்டான் அவன்.

“எதைப் பத்தி பாஸ்.. என் மனசு கல்லா இல்லை இரும்பாங்கிறதைப் பத்தியா..?” அமைதியாக கேட்டாள் நந்தினி..

“ஆர் யு ப்ளேயிங் வித் மி..?” ரவிச்சந்திரன் உறுமினான்..

“தி கிரேட் ரவிச்சந்திரனுடன் பிளே பண்ண முடியுமா பாஸ்.. என் மனசு கல்லில்லை பாஸ்.. அதனாலதான் நீங்க காதல் சொல்கிறதில பயந்து போகுது..”

“வாட்..? பயமா..? ஏண்டி..?”

“நான் யார், நீங்க யார் பாஸ்..? என்மேல உங்களுக்கு எப்படிக் காதல் வரும்..? நான் அழகின்னு பொய் சொல்லிராதீங்க.. எனக்கு என்னைப் பத்தித் தெரியும்..”

பேரழகிலும் பேரழகியானவள் இதைச் சொன்னதில் அவனுக்கு சிரிப்பதா அழுவதா என்று தெரியவில்லை..

“முட்டாளிலும் முட்டாள்.. வடி கட்டின முட்டாள் நீதாண்டி..” பல்லைக் கடித்தான் அவன்..

“கரெக்ட்.. அதைத்தான் நானும் சொல்ல வந்தேன்.. நீங்க பாயிண்டைப் பிடிச்சுட்டிங்க.. யாரு நீங்க..!” மகிழ்ந்து போனாள் நந்தினி..

“உன்னைப் பார்க்கிற வரைக்கும் நானாத்தாண்டி இருந்தேன்..”

ரவிச்சந்திரனின் குமுறல் நந்தினியின் மரமண்டையில் ஏறவேயில்லை.. அவள் வெகு இலகுவாக தலையைச் சரித்து அவனைப் பார்த்துக் கண் சிமிட்டினாள்.. ரவிச்சந்திரன் பேச்சிழந்தான்..

நந்தினியிடம் கண்சிமிட்டும் பழக்கம் உண்டு.. அவளிடமிருந்து அது உத்ராவுக்கும் தொற்றியிருந்தது.. உற்சாகம் வந்தால் சட்டென கண்சிமிட்டி விடுவாள் நந்தினி..

வயநாட்டுக்கு வந்த பின்பு குறைந்தும், மறைந்தும் இருந்த அந்தப் பழக்கம் சடுதியில் வந்து போனதில்

ரவிச்சந்திரன் அவனாக இல்லை.. அவளைக் கடித்துத் தின்பதைப் போல பார்த்து வைத்தான்..

அவனது உணர்வுகளைப் புரிந்து கொள்ளாமல் தன் போக்கில் விளக்கம் சொன்னாள் நந்தினி..

“உங்க அழகுக்கு எப்படி நான் மேட்ச் ஆக மாட்டேனோ.. அதைப்போல அறிவிலும் மேட்ச் ஆக மாட்டேன் பாஸ்.. நீங்க சொல்வதைப் போல நான் தத்திதான்.. தி கிரேட் ரவிச்சந்திரனுக்கு செக்கரட்டரியா இருக் கிறதுக்கே நான் அன்-பிட்.. இதில பெர்சனல் மேனேஜர்ங்கிறது பேராசை.. பெர்சனல் மேனேஜர் போஸ்டுக்கே அப்படின்னா உங்க காதலியா ஆகனும்னா.. ஹப்பா.. நினைச்சுக்கூடப் பார்க்க முடியலை.. நீங்க எங்கே..! நான் எங்கே..? மலைக்குப் பக்கத்தில் மடுவை நிறுத்தி வைச்சா மேட்ச் ஆகாது பாஸ்.. உங்களைப் பார்க்கிறப்ப எல்லாம் எனக்கு தமிழ்ச் சினிமாப் பாட்டு ஒண்ணுதான் நினைவுக்கு வரும்..”

நந்தினி ஏற்ற இறக்கத்துடன் பேசிய விதத்தில் காதல் மயமான சினிமாப் பாடல் ஒன்றைப் பாடப் போகிறாள் என்றுதான் நினைத்தான் ரவிச்சந்திரன்.. வீணாவுக்கு தமிழ் சினிமாப் பாடல்களில் பழைய பாடல்கள் என்றால் மிகவும்

பிடிக்கும்.. ரசித்துக் கேட்பாள்.. அம்மா பிள்ளையான ரவிச்சந்திரன் எப்போதும் அவள் முந்தானையைப் பிடித்துக் கொண்டே சுற்றிக் கொண்டிருப்பான்.. அவள் கேட்கும் பாடல்களை அவனும் கேட்பான்.. ஏறக்குறைய அனைத்துப் பழைய தமிழ் சினிமாப் பாடல்களும் அவனுக்குத் தெரியும்.. இதைக் குறித்து ஒரு பிஸினெஸ் மேகஸினில் உலகம் சுற்றும் இளைய தலைமுறை பிஸினெஸ் ஸ்டார் பழைய தமிழ் சினிமாப் பாடல்களை விரும்பிக் கேட்பவர் என்று எழுதியிருந்தது..

அழகான பழையத் தமிழ் சினிமாப் பாடல் ஒன்றைக் கேட்கத் தயாராகி காதைத் தீட்டிக் காத்திருந்த ான் ரவிச்சந்திரன்.. எந்தப் பாடலைப் பாடுவாள் என்ற எதிர்பார்ப்புடன் பட்டியல் ஒன்றைத் தயாரித்தது அவன் மனம்..

‘உன்னை நான் சந்தித்தேன் - நீ

ஆயிரத்தில் ஒருவன்..’

இப்படிப் பாடுவாளோ..? இல்லை...

‘உன்னைக் காணாத கண்ணும் கண்ணல்ல..

உன்னை எண்ணாத நெஞ்சும் நெஞ்சல்ல..

நீ சொல்லாத சொல்லும் சொல்லல்ல..

நீ இல்லாமல் நானும் நானல்ல..'

இப்படிப் பாடுவாளோ..

விழிகள் மின்ன மனதில் ஓடிய பாடல் வரிகளோடு அவன் காத்திருக்க அவளும் பாடினாள்..

"ஆகாயம் பூமி ரெண்டும் ஒன்றா..?

நீ அந்த வானம்..!

நான் இந்த பூமி..!

ஒன்றென்று யார் சொல்லுவார்..?"

"வாயை மூடுடி.."

அவன் எம்பிக் கட்டிலில் இருந்த தலையணையை உருவி அவள்மீது எரிந்தான்.. பயந்து போய் வாயை மூடித் தப்பித்தாள் அவள்..

"கொன்றுடுவேன்.." ஒற்றை விரலை உயர்த்தி எச்சரித்தவனின் விழிகளில் இருந்த கொலைவெறியில் வாயின் மீது ஒற்றை விரலை வைத்துக் 'கப்சிப்' என உட்கார்ந்து வீட்டாள் நந்தினி..

“ஏண்டி.. உனக்குச் சுட்டுப் போட்டாலும் ரொமான்ஸ் வராதா..?” அவன் நெற்றிக் கண்ணைத் திறக்க இரு இமைகளையும் திறந்து உயர்த்தி அவன் முகத்தை ஏக்கத்துடன் பார்த்தாள் நந்தினி..

‘ஏன் வராது..?’ அவள் மனம் துயரம் கொண்டது..

அவன் புருவம் உயர்த்தும் வசீகரத்தில் ஒவ்வொரு முறையும் தொலைந்து போகிறாளே.. அது ரொமான்ஸ் இல்லையா..? ஜீப்பை ஓட்டிக் கொண்டிருப்பவனின் முடிக் கட்டுக்கடங்காமல் எதிர் காற்றில் அலைபாய்ந்து முன் நெற்றியில் படிந்து கொள்கின்றபோது அவன் முடிகோத அவள் மனம் துடிக்குமே.. அது ரொமான்ஸ் இல்லையா..? கடித்துத் தின்பதைப் போல அவன் பார்க்கும் பார்வையில் அவளது இதயம் படபடக்குமே.. அது ரொமான்ஸ் இல்லையா..? அவன் முத்தமிடும் போது மின்சாரம் பாய்வதைப் போன்ற உணர்வுப் பேரலையில் மூழ்கித் தவிக்கிறாளே.. அது ரொமான்ஸ் இல்லையா..?

என்ன ஒன்று.. இவற்றையெல்லாம் அவனிடம் சொல்லி அவள் மனதில் அவன் மீதான ரொமான்ஸ் இருக்கிறது என்பதை ஒப்புக் கொள்ள அவளால் முடியாது.. அதற்காக

அவளை உணர்ச்சிகள் அற்ற ஜடம் என்று அவன் சொல்லி விடுவானா..?

“கொஞ்சமாவது மனுஷனோட ஃபீலிங்ஸை புரிஞ்சுக்கறியாடி.. ஜடம்..! ஜடம்..! உன்னைப் போய் லவ் பண்ணினேன் பாரு.. என்னைச் சொல்லனும்..”

அவன் தலையில் அடித்துக் கொண்டு எழுந்து போய் விட்டான்.. கண்ணாடியில் தன் உருவத்தைப் பார்த்து..

“உன்னைக் காதலிச்ச பாவத்துக்கு அந்த மனுஷனைத் தலையாலே தண்ணி குடிக்க வைச்சு விரட்டி விட்டுட்டேயேடி நந்தினி.. இப்ப உனக்குத் திருப்தியா..?” என்று கேட்டு ஒற்றை விரலை உயர்த்தி..

“கொன்றுடுவேன்..” என்று எச்சரித்தாள் நந்தினி..

“அம்மை ஊன் கழிக்க விளிச்சு..” என்று ஓமனா வந்து நின்ற போதுதான் தான் இன்னும் குளித்து எஸ்டேட்டிற்குப் போகத் தயாராகவில்லை என்ற நினைவு வந்தது நந்தினிக்கு..

“அச்சச்சோ..” என்று கைகளை உதறினாள்..

“எந்தா அம்மே..” என்றாள் ஓமனா..

“ஞான் இன்னும் குளிக்கலையல்லோ..” நந்தினி குளியலறைக்குள் ஓடிக் கதவைத் தாழிட்டுக் கொண்டாள்..

அவளது ஓட்டத்தை ரசித்த ஓமனாக்குட்டி..

“அம்மைக்கு அனைத்தும் விளையாட்டல்லோ..” என்று முகவாயில் கை வைத்தபடி நந்தினி கிளம்பி வரத் தாமதமாகும் என்கிற செய்தியைச் சொல்லப் படியிறங்கினாள்.. டைனிங் ஹாலில் காத்திருந்த வீணா ஓமணாவின் பின்னால் நந்தினி வருகிறாளா என்று எட்டிப் பார்த்தாள்..

“நந்தினி மேடம் தயாராயிட்டு அம்மே.. இப்போ வரும்..” என்றாள் ஓமனா..

“எப்போ வரும்..? உச்சிப் பொழுதிலோ..?” கிண்டலாகக் கேட்டாள் அஜந்தா..

ரவிச்சந்திரன் விழியுயர்த்திப் பார்த்த ஓர் மௌனப் பார்வையில் இறுகிப் போனவளாக வாய்க்குள் மொணமொண என அவனைத் திட்டித் தீர்த்தபடி பலகார வகைகளை மொக்கத் தொடங்கினாள்..

“உச்சிப் பொழுதில் அல்ல அஜந்தா.. புலரிப் பொழுதிலேயே வந்தாச்சு..” என்றபடி அங்கே பிரசன்னமான நந்தினியைப் பார்த்து ‘ஆ’ வென வாய் பிறந்தாள் ஓமனா..

“நந்தினி மேடம் இப்பத்தான் நீராடப் போயி..?”

“நீராடாமலே வந்துட்டாளோ என்னவோ..” வாய் திறந்தாள் அஜந்தா.. அன்றுதான் பூத்த புதுமலரைப் போல இருந்த நந்தினி அஜந்தாவின் கருத்துரையால் பாதிக்கப் படாதவளாக..

“நீ அப்படித்தான் வந்திருக்கயா அஜந்தா..?” என்று கேட்டு வைத்தாள்..

அஜந்தாவுக்கு கோபம் பொங்கியது.. என்ன திமிர் என்று யாழினியைப் பார்த்தாள்.. நீ வாயை வைத்துக்கிட்டு சும்மா இருக்கனும் என்ற கடுப்புடன் அவளை முறைத்தாள் யாழினி.. முகத்தைக் கடுகடுவென வைத்துக் கொண்ட அஜந்தாவைப் பார்க்க யாழினிக்குச் சங்கடமாக இருந்தது.. அவள் முன்னால் அவளுடைய பேத்தி மட்டம் தட்டப் படுகிறாள்.. அதை ஏனென்று கேட்க அவளுக்கு வாய் வரவில்லை.. அது ஏன்..?

நந்தினியை வெறுப்புடன் பார்த்தாள்.. இந்தப் பெண் வந்து பின்பு ரவிச்சந்திரன் அதிகமாக அஜந்தாவை கடிந்து கொள்கிறான் என்று யாழினிக்குத் தோன்றியது..

‘இவள் ஏன் இங்கே வந்து தொலைத்தாள்..?’

வீணாவிடமும் ரம்ய மாலினியிடமும் கதை பேசியபடி சாப்பிட்டுக் கொண்டிருந்த நந்தினி யதேச்சையாக யாழினியின் பக்கம் பார்த்து விட்டு அவளுடைய வெறித்த பார்வையில் திகைத்தாள்..

‘பாட்டி ஏன் இப்படிப் பார்க்கிறாங்க..?’

சங்கடத்துடன் அவள் புன்னகைத்த புன்னகையை கண்டு கொள்ளாமல் அருள்மொழிவர்மனிடம் எதையோ கேட்பதைப் போல முகம் திருப்பிக் கொண்டாள் யாழினி.. நந்தினிக்கு முகத்தில் அடித்ததைப் போல இருந்தது..

“என்ன யோசனை நந்தினி..?”

நந்தினியின் முழங்கையைத் தட்டினாள் வீணா.. கவனம் கலைந்தவளாக வீணாவைப் பார்த்தாள் நந்தினி..

“இன்னொரு தோசை வைக்கவான்னு கேட்டுக் கிட்டே இருக்கேன்.. நீ பதில் பேசாம இருக்க.. என்னம்மா ஆச்சு..?” கனிவுடன் கேட்டாள்..

“அதானே.. எதைக் கண்டுக்கலைன்னாலும் டிஃபனை அப்படிக் கண்டுக்குவியே.. நீயா பதில் பேசாம இருக்கிறது..?” ஏளனமாக சொன்னாள் அஜந்தா..

நந்தினியின் பார்வை உயர்ந்து யாழினியின் மீது படிந்தது.. இப்போது நான் என்ன செய்யட்டும் என்று கேட்ட அவள் பார்வையில் கோபம் கொண்டாள் யாழினி..

“எவரிடம் பகடி பறயறதிண்டு ஓர் வரைமுறை இல்லையோ... நினக்குச் சமமான மனுஷியிடம் சம்சாரிக்கனுமல்லோ.. இல்லையெண்டா.. சம்சாரிக் காண்டாம்.. கேட்டோ..” அஜந்தாவிடம் சீறினாள்..

‘என்ன மாதிரியான கண்டிப்பு இது..’ நந்தினிக்கு அங்கிருந்து எழுந்து போய்விட வேண்டும் போல இருந்தது.. டைனிங் ஹாலில் அமைதி நிலவியது.. வீணாவின் முகம் இறுகியிருந்தது.. நந்தினியின் கன்றிய முகம் கண்டு மனம் நொந்தாள்.. முதன் முறையாக மாமியாரின் பேச்சுக்கு அவள்

முகம் அதிருப்தியை பிரதிபலித்ததில் கோபாவேசம் கொண்டாள் யாழினி..

'அனைத்தும் ஈ பெண்குட்டியால..' நந்தினியின் மீது அவள் மனம் வன்மம் கொண்டது..

"அஜந்தாவுக்குச் சமமான மனுஷி வேண்டும்ன்னா அவ அவளோட அப்பா வீட்டுக்குத்தான் போயாகனும் பாட்டி.. அங்கேதான் இவளைப் போல சார்ட்மெண்ட் பீபுள் இருப்பாங்க.. இது என்னோட அரண்மனை பாட்டி.. என்னைச் சேர்ந்தவங்களுக்கு பரந்த மனப்பான்மைதான் இருக்கு.. குறுகின மனது இல்லை.."

ரவிச்சந்திரன் இலகுவாகச் சொன்னதில் யாழினியின் மனது காயப்பட்டது.. அது என்ன.. நந்தினியை மறைமுகமாக ஒர்வார்த்தை சொன்னவுடன் அஜந்தாவை வீட்டை விட்டு வெளியேற்ற வேண்டும் என்கிறான்.. அதுவும் நந்தினியின் முன்னிலையில் அஜந்தாவை குறைவாகப் பேசுகிறான்.. எப்படி அவன் அப்படிப் பேசலாம்..?

அத்தியாயம் 131

“ஓர்மை கொள்ளனும் ரவி.. அஜந்தா நிண்ட பெந்தல்லோ.. வேற்று மனுஷி முன்னாடி நிண்ட பெந்துவக் குறைச்சுச் சம்சாரிச்சு.. இது நன்னாயிண்டல்லோ..” யாழினி தன் கண்டனத்தை வெளிப்படுத்தினாள்..

அருள்மொழிவர்மன் முகச் சுளிப்புடன் மனைவியை விழிகளால் அதட்டினார்.. யாழினியின் பேச்சு அவருக்குப் பிடிக்கவில்லை.. ரவிவர்மனின் மௌனப்பார்வை உணர்த்திய எதிர்ப்பை அவர் விரும்பவில்லை.. மகனின் மனம் கோணும்படி யாழினி பேசியதில்லையே.. இன்று மட்டும் ஏன் இப்படி நடந்து கொள்கிறாள்..?

அருள்மொழிவர்மனின் அதட்டலைப் பார்த்தும் பார்க்காததைப் போலப் புறக்கணித்தாள் யாழினி.. அவள் மனதில் ரவிச்சந்திரனின் மீது அதிருப்தி தோன்றியிருந்தது.. அதிகப்படியாக அவன் அஜந்தாவைப் பேசுகிறான் என்று அவள் நினைத்தாள்..

“யாரை வேற்று மனுஷின்னு சொல்கிறீங்க பாட்டி..?” அழுத்தமாக கேட்டான் ரவிச்சந்திரன்..

யாழினியின் போக்கை அவன் கவனித்துக் கொண்டுதான் இருந்தான்.. அஜந்தாவிற்கு ஆதரவான அவள் நடவடிக்கையை துளிர்க்கும் போதே கிள்ளி எறிந்துவிட வேண்டும் என்று அவன் நினைத்தான்.. இல்லையென்றால் அது விஷச் செடியாக வேரூன்றி விருட்சமாக வளர்ந்து நின்று விடும்.. அப்போது அதை வெட்டி வீழ்த்துவது யாழினிக்குத்தான் துன்பத்தை ஏற்படுத்தும்.. அதற்கு இது மேல் அல்லவா..?

“எவரையெண்டு எண்ட கொச்சு மோன் அறிஞ் ..”

“இல்லை பாட்டி.. எனக்குத் தெரியலை..”

“நினக்குத் தெரியாதெண்டு பறயாண்டாம் ரவி.. எண்ட வாயாலே அதிப் பறஞ்ஞனுமெண்டு விஜாரம் கொண்டோ..?”

“உங்க வாயால் அதைக் கேட்க ஆசைன்னே வைத்துக்கங்களேன்..”

“ஈ கொட்டாரத்தில உள்ள வேற்று மனுஷி நிண்ட செக்கரட்டரிதானு.. வேற ஆரானு..?”

“ஓ.. நந்தினியைச் சொல்கிறிங்களா..?”

“ஈ பெண்குட்டியத்தான் பறஞ் ண்டு நீ அறிஞ் ..?”

“நந்தினி வேற்று மனுஷியில்லை பாட்டி.. என் கெஸ்ட்.. அஜந்தாதான் வேற்று மனுஷி.. ”

“வேண்டா ரவி.. இதி மாதிரி பறயாண்டாம்..”

“சாரி பாட்டி.. நான் சொல்லத்தான் செய்வேன்..”

“நிண்ட செக்கரட்டரிய விட நிண்ட அம்மாச்சி மோள் குறைவாயிண்டாளோ..?”

“இதில் உயர்வு குறைவுங்கிறதே இல்லை பாட்டி.. எனக்கு யார் முக்கியம், முக்கியமில்லைங்கிறது மட்டும் தான் வரும்.. அந்த வகையில் எனக்கு என் செக்கரட்டரிதான் முக்கியம்.. அவளாலே எனக்கு எந்தத் தொந்தரவும் இல்லை.. அவ உண்டு.. அவ வேலையுண்டுன்னு இருக்கிறா.. யாருடனும் வம்புக்குப் போகிறதில்லை.. யார் மனதையும் புண்படுத்தறதில்லை.. உண்ட வீட்டுக்கு ரெண்டகம் நினைக்கிறதில்லை..”

“ரவி..”

“ஏன் உங்களுக்கு மனது குத்துது பாட்டி..? உங்க பேத்தி உண்ட வீட்டுக்கு ரெண்டகம் நினைக்கிறவள் என்கிறதினாலதானே..?”

யாழினிக்கு அவமானமாக இருந்தது.. நந்தினியை வைத்துக் கொண்டு ரவிச்சந்திரன் இப்படிப் பேசியிருக்கக் கூடாதுதென்று அவள் நினைத்தாள்.. இதனால்தான் நந்தினி அஜந்தாவை மட்டம் தட்டிப் பேசுகிறாள்.. அதற்கு ரவிச்சந்திரனே வழி செய்து கொடுக்கிறானே..

“அஜந்தா நிண்ட பெந்து ரவி..”

“சொந்தம் என்கிறதுக்காக எந்த அளவுக்கு பொறுத்துப் போகிறது..? வாழ்நாள் முழுவதும் பொறுத்துப் போகனும்னா.. ஐ ஆம் ஸாரி பாட்டி.. என்னால் அது முடியாது..”

“ஞானும் எண்ட கணவரும் திரவியமின்றி நின் தயவில் ஜீவிக்கிறதினாலதான எங்களோட மோள் குடும்பத்த நீ குறைவாக மதிச்சு..?”

“ஓ..”

நிஷ்டூரமாகப் பேசிய யாழினியை புதிதாகப் பார்ப்பதைப் போல பார்த்தபடி ‘ஓ’ போட்டான் ரவிச்சந்திரன்.. அவந்திகாவின் முகத்திலும் அவள் குடும்பத்தினரின் முகத்திலும் ஒளி வந்திருந்தது... உரிமைப் போராட்டத்திற்கு யாழினி குரல் கொடுத்து விட்டாள் என்று அவர்கள் அகம் மகிழ்ந்து போனார்கள்..

மத்தாப்பூச் சுட்டுச் சுட்டுப் போடட்டுமா என்று மத்தாப்பூ கொழுத்தி வெடி வைத்து இந்த உரிமைக் குரலைக் கொண்டாட வேண்டும் போல இருந்தது அஜந்தாவுக்கு..

யோகானந்தன் உலகம் சுற்ற விரும்பினார்.. வெனிஸ் நகரத்தின் நதியில் படகில் மிதந்தபடி இந்த சந்தோஷத்தைக் கொண்டாட வேண்டும்.. அதற்குப் பணம் வேண்டும்.. அதை அவருக்கு யார் கொடுப்பார்கள்..? ரவிச்சந்திரன் அவருடைய கடன்களுக்கும் அவனுக்கும் யாதொரு சம்பந்தமும் இருக்காது என்று பேப்பரில் அறிவிப்புக் கொடுத்த பின்னால் ஒருவன் கூட ஒற்றை ரூபாயைக் கூடக் கடன் கொடுப்பதில்லையே.. பணத்திற்கு அவர் எங்கே போவார்..?

அபராஜிதன் டிஸ்கொதே போக வேண்டும் என்று ஆசை கொண்டான்.. அவனுடைய தாய் வழிப் பாட்டி ரவிச்சந்திரனுக்கு எதிராக உரிமைக் குரல் கொடுத்து விட்டாள்.. இனி ரவிச்சந்திரனின் அனைத்துச் சொத்துக்களையும் பிடுங்கி அபராஜிதனுக்கு தாரை வார்த்துக் கொடுத்து விடுவாள்.. அந்த தினம் வெகு தொலைவில் இல்லை என்று அபராஜிதனுக்குத் தோன்றியது.. அதைக் கொண்டாட அவனுக்கு ஒரு பெண் போதாது.. ஐந்தாறு பெண்களுடன் அவன் டிஸ்கோ ஆட வேண்டும்..

அவந்திகாவிற்கு அப்போதே அந்த அரண்மனைக்கு உரிமைக்காரியாய் ஆகி விட்டதைப் போல இருந்தது.. வீணாவை இளக்காரமாக பார்த்தாள்.. பார், என் தாய் பேச ஆரம்பித்து விட்டாள்.. இனி சகலமும் எங்கள் கையில் என்று அவள் பார்வை அறிவித்தது.. அரண்மனையின் வேலையாள்களைக் கூட்டி அந்த அறிவிப்பை வெளியிட வேண்டும் என்று அவள் மனது ஆசை கொண்டது..

ஆளுக்கொரு ஆசையுடன் அவர்கள் இருக்க..

“என் தயவில் நீங்களும் தாத்தாவும் இருக்க வேண்டியதில்லை பாட்டி..” என்று நிதானமாகச் சொன்னான் ரவிச்சந்திரன்..

அருள்மொழிவர்மனின் முகம் கருப்பதை ஓரக் கண்ணால் கண்டும் காணாததைப் போலத் தொடர்ந்தான்..

“உங்களுக்குன்னு தனிபங்களாவைக் கொடுக்கிறேன்.. ரப்பர் பேக்டரியையும் எழுதி வைக்கிறேன்.. நீங்க உங்க மகளின் குடும்பத்தோட அந்த பங்களாவுக்கு ஷிஃப்ட் ஆகிக்கலாம்.. நானும் என் குடும்பமும் நிம்மதியா இருப்போம்..”

யாழினியின் முகம் வெளிறியது.. நானும் என் குடும்பமும் என்று ரவிச்சந்திரன் சொல்லி விட்டான்.. அந்தக் குடும்பத்தில் அவளுக்கும் அருள்மொழிவர்மனுக்கும் இடமில்லை.. நுணல் தன் வாயில் கெட்டதைப் போலத் தன் வாயால் தன் தலையில் மண்ணை அள்ளிப் போட்டுக் கொண்டதைப் போல உணர்ந்தாள்..

“கொச்சு மோனே..” அவள் குரல் நடுங்கியது..

“ப்ளீஸ்.. என்னை உங்க பேரன்னு சொல்லிக்க வேண்டாம்.. ஐ டோன்ட் லைக் இட்.. என்ன சொன்னீங்க..? நீங்களும் உங்க கணவரும் சொத்தில்லாம என் தயவில இருக்கிறதாலே உங்க மகளையும் அவங்க குடும்பத்தையும் நான் குறைவாக நினைக்கிறேனா..? குட்.. உங்க வாயிலிருந்தே உங்க மனதில் இருக்கிறது வெளியில் வந்து விட்டது.. உங்களுக்கு உங்க மகள்தான் முக்கியம்.. அவங்க குடும்பம்தான் முக்கியம்.. என்னையும் என் குடும்பத்தையும் அவங்க எந்த அளவுக்கு அஃபெக்ட் பண்ணினாலும் நீங்க அவங்களுக்குத்தான் சப்போர்ட் பண்ணுவீங்க.. அப்புறம் எதுக்கு என்னிடம் பேரன் உறவுமுறையைக் கொண்டாடறிங்க..?”

“ஷெமிக்கனும் ரவி..”

“எத்தனை முறை மன்னிக்கிறது..? எனக்கு அலுத்துப் போச்சு.. நீங்க கிளம்புங்க..”

“எங்கே..?”

“உங்களுக்குன்னு நான் கொடுக்கப் போகிற பங்களாவுக்கு.. பணத்தைப் பற்றிய கவலை வேண்டாம்.. என் அப்பாவைப் பெற்றவங்க நீங்க.. உங்களுக்காக இல்லைன்னாலும் என் அப்பாவுக்காக உங்க செலவுகளை நான் பார்த்துக்குவேன்.. உங்க மருமகன் செலவை நீங்க பார்த்துக்கங்க.. இனிமே நாம ஒண்ணா இருக்கிறது சரி வராது..”

யாழினி பயந்து போனாள்.. பேத்திக்காக அவள் பேசப் போய் தனித்து நிற்பதைப் போல ஆகிவிட்டதே.. ரவிச்சந்திரன் ஓர் வார்த்தை சொல்லி விட்டால் ஆத எதிர்வார்த்தை இல்லாமல் அங்கீகரிக்கப்பட்டு விடுமே..

“கேட்டோ..” கணவனிடம் முறையிட்டாள்.

“ஞான் கேட்டு வல்லதும் ஆகப் போவதில்லையல்லோ.. எண்ட கொச்சு மோனோட பிணக்கம் கொண்டு.. பிராதி

கொடுத்து வழக்கு இழுத்தாயல்லோ.. நாமத் தனியா ஜீவிதம் பண்ணப் போயாகனுமல்லோ.. தயாராயிட்டு.. நினக்கும் நிண்ட கொச்சு மோளுக்கும் அதாண்ட ஆக்ரஹாம்..?"

"அம்மையைத் திட்டாண்டாம் அச்சா.."

"வேற எவரைத் திட்ட..? நின்னையோ..?"

"அச்சா.."

"நிண்ட மோளிண்ட சுபாவத்தால இதி போன்ற ஓர் திவசம் வருமிண்டு ஞான் விஜாரம் கொண்டு அவந்திகா.. அத்திவசம் இத்தினி விரைவா வருமிண்டு நினக்கலயல்லோ.."

யாரோ எதையோ பேசிக் கொள்ளுங்கள்.. எனக்கொன்றுமில்லை என்பதைப் போல ரவிச்சந்திரன் எழுந்து விட்டான்.. நடக்கும் குடும்பச் சண்டையில் தொண்டயில் ஒரு விள்ளல் கூட இறங்காமல் துயரத்தோடு உட்கார்ந்திருந்த நந்தினியிடம்..

"எஸ்டேட்டுக்கு கிளம்பனும்ங்கிற நினைவு இருக்கா.. இல்லையா..?" என்று ஓர் அதட்டல் போட்டான்..

அவசரமாக எழுந்த நந்தினி வீணாவிடமும் ரம்ய மாலினியிடமும் தலையை அசைத்து விடை பெற்றபடி கை கழுவ ஓடினாள்..

“எல்லாப் பிணக்கும் ஈ பெண் குட்டியாலதான்..” யாழினி எரிச்சலுடன் சொன்னாள்..

“எதை வைத்து அப்படிச் சொல்கிறீங்க அத்தை..?”

வீணாவின் கேள்வியில் உறைந்து போனாள் யாழினீ.. மாமியாரின் வார்த்தைக்கு மறுவார்த்தை பேசியிராத வீணா எதிர்த்து கேள்வி கேட்டு விட்டாள்.. இது நல்லதற்கல்ல என்று எச்சரித்தது அவள் மனது..

ரவிச்சந்திரனும், நந்தினியும் இல்லாத டைனிங் ஹாலில் யோகானந்தன் பலகார வகைகளை காலி செய்து கொண்டிருந்தார்.. அவருக்குச் சற்றும் சளைக்காத அபராஜிதன் தன் பங்குக்கு வெட்டோ வெட்டென டிஃபனை வெட்டினான்.. சாப்பிட வந்தவர்களை சண்டைக் காரர்களாக்கி எதிரும் புதிருமாக விரட்டி விட்டு எதுவுமே நடக்காததைப் போல உணவில் கவனமாக இருந்தாள் அஜந்தா.. அவந்திகாவும் சும்மா இருக்கவில்லை.. நெய் தோசையையும் நேத்திரம்

சிப்சையும் நொறுக்கியபடி தான் அருள்மொழிவர்மனிடம் நியாயம் கேட்டுக் கொண்டிருந்தாள்..

வீணாவுக்கு வெறுப்பாக இருந்தது.. ரவிச்சந்திரன் மட்டும் இரும்பு மனிதனாக நிமிர்ந்து நின்றிருக்கவில்லையென்றால் அந்தக் குடும்பத்தின் கௌவரம் கேள்விக் குறியாகியிருக்கும்.. அதைப் பற்றிய எண்ணம் கொஞ்சம் கூட இல்லாமல் யாழினி இந்தப் பேச்சுப் பேசலாமா..? பாடுபடுபவன் ஓர் வாய் உணவை உருப்படியாய் சாப்பிடவில்லை.. அவனுடன் சண்டையிட்டு ஓட்டி விட்டு ஒண்ட வந்த குடும்பம் உணக்கையாக ருசி ருசியாக உண்டு கொண்டிருக்கிறது.. இத்தனையும் யாராலே..? மகள், மகள் என்று அவந்திகாவிற்காக மகனின் குடும்பத்தைப் பாடாய் படுத்தும் அருள்மொழிவர்மன், யாழினியாலே.. இதில் யாழினி எல்லாச் சண்டையும் நந்தினியால்தான் வந்தது என்று ஒன்றும் அறியாத சின்னப் பெண்ணின் மீது பழி போடுகிறாள்..

“ஆரானு பறயறது..? எண்ட மோனின் பார்யாளோ..”

“நான்தான் அத்தை.. ஏன்.. நான் பேசக் கூடாதா..?”

“இத்தினி திவசமா ஞான் பறஞ்ஞா நீ வல்லதும் பறஞ்ஞதில்லையல்லோ.. அதினால ஞான் சம்சயம் கொண்டு..”

“பேசியிருக்கனும் அத்தை.. இத்தனை நாளாய் பேசாமல் இருந்ததுதான் தப்பாகிருச்சு.. எதை வைத்து அந்தச் சின்னப் பெண்ணாலதான் இத்தனை சண்டையும்ன்னு சொல்கிறீங்க..? அவ என்ன பண்ணினா..? நம்மிடம் வேலை பார்க்க வந்தா சுய மரியாதை இல்லாமல் இருக்கனும்னு சட்டம் எதுவும் இருக்கா அத்தை..? அவளைப் பேசினதுக்குத்தானே பதில் பேசினா..? அதைக் குற்றம்ன்னு நீங்களே சொல்கிறதை என்னால் நம்ப முடியலை.. நீங்க நியாயம் தெரிந்தவங்கன்னு தானே இத்தனை நாளாய் நினைத்திருந்தேன்..?”

இதுபோல நீளமாக வீணா பேசக்கூடும் என்பதை அந்தக் குடும்பத்தினர் அன்றுதான் அறிந்தார்கள்..

அத்தியாயம் 132

சாது மிரண்டால் காடு கொள்ளாது.. வீணா மிரண்டால் வயநாடு கொள்ளாது.. அமைதியின் சிகரமான வீணா வெடிப்பது நன்மைக்கான அறிகுறியல்ல என்று நொந்து போனார் அருள்மொழிவர்மன்.. மாமனார், மாமியாருக்கு மரியாதை கொடுக்கும் மருமகள் கிடைப்பது வரம்.. அவள் மாமியாராகப் போகும் வயது வந்தும் அந்த மரியாதையைக் கை விடாமலிருப்பது அதைவிட பெரிய வரம்..

அப்பேற்பட்டக் கொடுப்பினையைக் காப்பாற்றிக் கொள்ளும் புத்தி யாழினிக்கு இல்லாமல் போய் விட்டது தான் துயரத்திலும் பெரும் துயரம்..

வீணா தனக்கு ஏற்படும் இடர்களைப் பொறுத்துக் கொள்ளக் கூடியவள்.. தன் பிள்ளைகளுக்கு ஒன்று என்றால் பொறுத்துக் கொள்ள மாட்டாள்.. கடவுளின் அனுகிரகத்தில் அவள் பெற்ற மகன் சிங்கமாக சிலிர்த்து நின்று தன்னையும் காப்பாற்றித் தன் குடும்பத்தையும் காப்பாற்றும் தீரம் மிக்கவனாக வளர்ந்து வீட்டான்.. ரவிச்சந்திரனின் தங்கை என்பதினால் ரம்ய மாலினி இரும்புக் கோட்டையில்

பாதுகாக்கப் பட்டாள்... வீணாவும் பிள்ளைகளைப் பற்றிய கவலையில்லாமல் நிம்மதியாக இருந்தாள்.. அந்த நிம்மதியைக் குலைத்த அபராஜிதனை ரவிச்சந்திரன் வயநாட்டை விட்டே வெளியேற்றினான்.. இருந்தாலும் வீணா தன் நிழலை விட்டு அகல விடாமல் ரம்ய மாலினியைப் பொத்திப் பாதுகாக்க ஆரம்பித்தாள்..

சொந்த அரண்மனையிலேயே சுதந்திரம் இல்லாமல் தங்கை இருக்க நேர்ந்ததில் ரவிச்சந்திரனின் மனதுக்குள் அத்தையின் குடும்பத்தின் மீது ஆழ்ந்த வெறுப்பு உண்டு.. அதை உணர்ந்திருந்த அருள்மொழிவர்மன் அது இடம் மாறி அவர்மீதும் யாழினி மீதும் படிந்து விடக் கூடாது என்பதில் வெகு கவனமாக இருப்பார்.. அந்தக் கவனம் யாழினியிடம் இல்லாமல் போய் விட்டது.. மகள் மீதான பாசத்தில் அவள் ரவிச்சந்திரனின் வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டது போதாது என்று நந்தினியைக் குறைகூறி வீணாவின் மனத் தாங்கலையும் சம்பாதித்து விட்டாள்..

“இந்த அரண்மனையிலே அஜந்தா மட்டும்தான் இளம்வயதுப் பெண்ணா இருக்கிறாளா அத்தை..? ரம்யா இல்லையா..? ரம்யா நந்தினியின் மனது கஷ்டப்படறதைப் போலப் பேசினதில்லையே..”

பேச்சைக் குறை என்று அருள்மொழிவர்மன் சமிக்ஞை செய்தும் வீணாவின் பேச்சில் வெகுண்டாள் யாழினி..

“நினக்கு பெந்து அஜந்தாவா.. இல்ல.. ஆ நந்தினியா..?”

“சொந்தம் என்கிறதுக்காக தப்பைத் தப்புன்னு சொல்லாம இருக்க முடியுமா அத்தை.. அஜந்தா நந்தினியிடம் மட்டும் வம்பிழுக்கலை.. ரம்யாவிடமும் வம்பிழுக்கிறா.. அது உங்களுக்கும் தெரியும்.. இருந்தும் நீங்க அஜந்தாவைக் கண்டிச்சதில்லை.. ஏன் அத்தை..? ரம்யாவும் உங்க பேத்திதானே..? நந்தினியை மட்டம் தட்டின அஜந்தாவை நந்தினி பதிலுக்கு மட்டம் தட்டினதுக்கு எல்லாம் அவளாலேன்னு பழி போடறிங்களே.. இத்தனை நாளா அஜந்தா ரம்யாவைப் பேசற பேச்சுக்குப் பதில் பேசாம ரம்யா ஒதுங்கிப் போனாளே.. அதை ஏன்னு நீங்க அஜந்தாவை ஓர் வார்த்தை கேட்டிருப்பீங்களா..? உங்க மகளோட மகள் உயர்த்தி.. உங்க மகனோட மகள்ன்னா குறைவு.. அப்படித்தானே.. இதை இதுவரைக்கும் நான் ரவியின் காதுகளில் போட்டதில்லை.. நம்மால் குடும்பத்தில் சண்டை வர வேண்டாம்ன்னு நினைச்சேன்.. அது தப்புன்னு இப்பத்தான் புரியுது..”

“ஓ.. நிண்ட மோன் பலவான்.. எங்கள ரட்சிப்பவன்.. அவனிடம் எங்களப் பத்திக் கோள் மூட்டயில்லண்டு பறஞ்ஞோ..?”

“கோள் மூட்டறது என் பழக்கமில்லை.. அது உங்க மகளின் பழக்கம்.. மகள் வழிப் பேத்தியோட பழக்கம்..”

“கேட்டோ.. இத்தினி திவசமா இங்ஙன சம்சாரிக் கத்தான் ஈ மனுஷி காத்திருந்தாளல்லோ.. எண்ட மோளையும், கொச்சு மோளையும் பழிக்கான்டாம்.. கேட்டோ..”

யாழினி அருள்மொழிவர்மனிடம் கொதித்தாள்.. அவர் பாவம் என்ன செய்வார்..? பெண்களின் பேச்சு வார்த்தையில் அவர் ஊடே புக முடியுமா..?

“எந்தா இது மோனே..”

இடித்த புளிபோல இருந்த ரவிவர்மனை அதட்டினார்.. மகனின் மௌனம் அவருக்குப் புதிதாகவும் புதிராகவும் இருந்தது.. பெற்றவர்களுக்கு ஒன்று என்றால் ரவிவர்மன் தாங்க மாட்டார்.. தாய், தந்தைக்கு அடங்கிய மகன்..

அவரா மனைவியைப் பேசவிட்டு வாய் மூடி அமர்ந்திருக்கிறார்..?

“நான் என்ன செய்யட்டும் அப்பா..? வீணா கேட்கிறது நியாயமான கேள்வி.. நீங்களும் அம்மாவும் அவந்திகாவைக் கொண்டாடினீங்க.. தலையில் தூக்கி வைத்து ஆடினீங்க. . நானும் அது போல் ஆடனும்னு சொன்னீங்க.. செய்தேன்..

என்னையும் அவந்திகாவையும் ஒன்று போல நீங்க நினைத்திருந்தா சேட்டன் பத்தி நினைக்கனும்னு அவந்திகாவுக்கு சொல்லி வளர்த்திருப்பீங்க.. நீங்க அப்படிச் செய்யலையே.. அவந்திகாவையும் அவ குடும்பத்தைப் பத்தியும் அவளோட சந்தோஷத்தைப் பத்தியும் நினைக்கனும்னு எனக்கு மட்டும் சொல்லி வளர்த்தீங்க..”

“மோனே..”

இன்று விடிந்த விடியல் சரியானதாக இல்லை என்று நொந்து போய் விட்டார் அருள்மொழிவர்மன்..

வீணா என்னும் சாது மிரள்கிறது.. ரவிவர்மன் எனும் யோகி தத்துவ மழையைப் பொழிகிறது.. இது எதில் போய் முடியப் போகிறது..?

“உங்களுக்கு உங்க மகள் முக்கியம்ன்னா எனக்கு என் மகள் முக்கியம்ப்பா.. உங்க மகளோட மகனால என் மகளுக்கு தொந்தரவு வருதுன்னுதானே ரவி அபராஜிதனை

மும்பைக்கு அனுப்பி வைத்தான்..? அவன் வயநாட்டுக்கு வந்து நின்றிருக்கிறானே.. அதை ஏன்னு நீங்களும் அம்மாவும் கேட்டிங்களாப்பா..?”

இப்படியொரு கேள்வியை எதிர்கொள்ள நேரிடும் என்று நினைத்தும் பார்த்திராத அருள்மொழிவர்மன் நிலைகுலைந்து போனார்.. ரவிவர்மனின் மனதில் இப்படியொரு புயல் மையம் கொண்டிருக்கக் கூடும் என்று ஏன் அவர் நினைக்காமல் போனார்..?

அவந்திகா விழித்துக் கொண்டாள்.. இந்தப் பேச்சை வளர விடுவது விபரீதத்தில் முடியும் அபாயம் இருப்பதை அவளது புத்தி அறிவுறுத்தியது..

“எண்ட மோன ஷெமிக்கனும் சேட்டா.. நீங்களும் உங்க பிள்ளைகளிண்ட அச்சனல்லோ.. அம்மை, அச்சனைப் பார்க்கனும்.. அணியத்தியைப் பார்க்கணுமெண்டு ரவிக்குத் தோணுமல்லோ.. அதி போலதானே அபராஜிதனுக்கும் தோணும் சேட்டா.. அம்மை, அச்சனையும் அணியத்தியையும் காண வேண்டுமெண்டு எண்ட மோன் வயநாட்டுக்கு வந்து.. சேட்டன் அதில வல்லிய குத்தம் காணாண்டாம்.. எனிக்காக

அபராஜிதன ஷெமிக்கனும் சேட்டா..” ரவிவர்மனிடம் கெஞ்சினாள்..

அஜந்தாவுக்கும் யோகானந்தனுக்கும் அது பிடிக்கவில்லை..

“எண்ட சேட்டன் வயநாட்டுக்கு வந்து போகிறதை எவர் தடுக்க முடியும் அம்மே.. அவன் என்ன கைதியோ..?” அஜந்தா பொங்கினாள்..

‘பாவி மோள்.. எல்லாம் இவளாலே வந்து.. அதி அறியாம எண்ட அம்மை ஆ நந்தினிய பறஞ் ..’ பல்லைக் கடித்தாள் அவந்திகா..

அஜந்தா தலையிடாமல் இருந்திருந்தால் ரவிவர்மன் அத்துடன் விட்டிருப்பாரோ என்னவோ.. அவள் ஊடே பேசவும் அவரும் பேச வேண்டியதைப் பேசி விட்டார்..

“நிண்ட சேட்டன் வயநாட்டுக்கு வந்து போகட்டும் அஜந்தா.. ஈ அரண்மனைக்கு வரக் கூடாது.. ஏனென்டா இதி என் மகனோட அரண்மனை.. கேட்டோ.. அப்படி அவனுக்கு அம்மை அச்சன் மேலே பாசம் பொங்கி வழிந்தா மும்பைக்கு உங்களையும் அழைத்துக்கட்டும்.. அங்கேதான் வீடு இருக்கே.. அதை உங்க பெயருக்கு எழுதித் தரச் சொல்றேன்..

உங்க அப்பா அந்த வீட்டை விற்று ஊரைச் சுற்றாமல் பார்த்துக்க வேண்டியது உங்க தலைவிதி.. எங்களுக்கென்ன வந்தது..? குடும்பத்தோட எப்போக் கிளம்பறிங்க..?"

அவந்திகா கையைப் பிசைய.. ஹைய்யா.. நமக்கு விற்றுத் திங்க ஓர் சொத்துக் கிடைக்கப் போகிறது என்று உற்சாகமானார் யோகானந்தன்..

"ஈ திவசமே கிளம்பலாமல்லோ.. அஜந்தா, அவந்திகா, அபராஜிதா.. ரெடியாயினு.. நாம மும்பைக்குப் போயி.."

'அப்படியே நம்ம பிழைப்பும் போயி..' அவந்திகாவுக்கு பற்றிக் கொண்டு வந்தது..

வயநாட்டு அரண்மனையில் இருக்கும் வரைதான் அவளுக்கும் அவள் குடும்பத்தினர்க்கும் வாழ்வென்பதை அவந்திகா நன்கு அறிவாள்.. அபராஜிதனுடன் அவர்கள் கிளம்பி விட்டால் அப்படியே அவர்களை ரவிச்சந்திரனின் குடும்பத்திலிருந்து துண்டித்து விடுவான் அவன்.. அவர்கள் தனிமைப் படுத்தப் படுவார்கள்.. ரவிவர்மன் சொன்னதைப் போல அவர்களுக்கு என்று மும்பையில் கொடுக்கப் படும் பங்களாவை யோகானந்தன் விற்று ஊர் சுற்றுவதற்கு முன்னால் அபராஜிதன் அதைச் செய்து விடுவான்.. இப்போதே

எத்தனை கோடி கடன் வைத்திருக்கிறானோ.. தந்தைக்கு மகன் சளைத்தவனில்லை..

“ஞான் நிண்ட அணியத்தி சேட்டா..” அவந்திகா கண்ணீர் விட்டதில் ரவிவர்மனின் வேகம் கொஞ்சம் குறைந்தது..

“நினக்காக ஓர் அளவுதான் பொறுத்துப் போக முடியும் அவந்திகா.. அபராஜிதனை மும்பைக்கு அனுப்பி வைக்கிற வழியைப் பார்.. அப்புறம் நந்தினி எங்க குடும்பத்தின் விருந்தாளி.. அவளிடம் உன் மகள் வம்புக்குப் போகக் கூடாது..”

“எந்தா மோனே.. நிண்ட அணியத்தியின் மோள விட நிண்ட மோனிடம் ஜோலி பார்க்க வந்த ஆ பெண் குட்டி வல்லியளல்லோ..? அதி எந்தா.. நிண்ட குடும்பம்ன்னு பிரிச்சி பறஞ் ..?” யாழினி ஆத்திரப்பட்டாள்..

“யாரை விடவும் யாரும் பெரிதுன்னு இங்கே சொல்லலை அம்மே.. ரவிக்குன்னு ஒரு பெயர் இருக்கு.. மதிப்பு, மரியாதை இருக்கு.. ஈ அரண்மனை அவனிண்ட அரண்மனைன்னு சொல்லப்படறதிலதான் பெகுமானம் இருக்கு.. ரவி ஈ கேரளாவில ஒரு பிஸினெஸ் ஸ்டார்.. அவனிடம் வேலை பார்க்க வந்த பெண்ணை நம்ம அரண்மனையிலே தங்க

வைத்தால் நாம் எப்படி அந்தப் பெண்ணைப் பார்த்துக்கனும்..? அதை விட்டுட்டு அந்தப் பெண்ணின் மனம் நோகப் பேசினால் அவன் சும்மாயிருப்பானா..? எனக்கு ரவி முக்கியம் அம்மே.. ஒரு விருந்தாளிக்கான மதிப்பு மரியாதையை குடுக்க முடியாம அவந்திகாவின் குடும்பம் இடைஞ்சலா இருந்தா என் குடும்பம்ன்னு நான் பிரிந்து போகிறதைத் தவிர வேறு வழியில்லை.. எனக்குக் கல்யாண வயதிலே மகனும், மகளும் இருக்காங்க.. அவங்களுக்கு கல்யாணம் நிச்சயமாகும்.. சம்பந்திகள் வீட்டில இருந்து விருந்தாளிகள் வந்து போவாங்க.. ஒரு சின்னப் பெண்ணுக்கு இந்த அரண்மனையில இத்தனை தொல்லைகள் வரும் போது சம்பந்திகள் வீட்டில இருந்து வருகிற விருந்தாளிகளுக்கு என்னென்ன கஷ்டங்கள் வருமோ..? நான் எல்லாத்தையும் யோசிக்க வேண்டியிருக்கு அம்மே..”

மகன் யோசிக்க ஆரம்பித்து விட்டதில் யாழினிக்குள் எதுவோ தொலைந்து போனதைப் போல இருந்தது.. என்றைக்கும் எதிரே நின்று பேசியிராத மருமகள் எதிர்த்துப் பேசுகிறாள்.. அம்மே, அச்சா என்று சுற்றி வந்த மகன் என் குடும்பம் என்று பிரித்துப் பேசுகிறார்.. இவை அனைத்தும் யாரால் நிகழ்ந்தது..?

அஜந்தாவால் என்பதை ஒப்புக் கொள்ள அவளது பாட்டி மனம் மறுத்தது..

‘ஆ நந்தினியாலதான்..’ என்று வன்மம் வைத்தது.. வீணாவின் சீற்றத்தில் பீதியடைந்திருந்த அவந்திகா தன் குடும்பத்தினருடன் தலை மறைவாகி விட்டாள்.. மகனும் மருமகளும் பேரனுடன் சேர்ந்து கொண்டு தனிக் குடும்பமாக பிரிந்து போக நினைக்கிறார்களே என்ற சஞ்சலத்தில் அருள்மொழிவர்மன் நிம்மதியிழந்து அமைதியைத் தேடித் தோட்டத்துப் பக்கம் போனார்.. மகளுக்கு எதிராக பெரிய சதி நடக்கிறது என்று பல்லைக் கடித்தபடி யாழினி தன் அறைக்குப் போனாள்..

இவை எதையும் அறியாத நந்தினி சோகமாக முகத்தை வைத்துக் கொண்டு ரவிச்சந்திரனுடன் ஜீப்பில் போய் கொண்டிருந்தாள்..

அத்தியாயம் 133

LDலர்ச்செடிகள் சூழ்ந்திருந்த ரெஸ்ட்டாரெண்டி ன் முன்னால் ஜீப் நின்றது.. விரக்தியாக எங்கோ வெறித்துக் கொண்டிருந்த நந்தினி ரெஸ்ட்டாரெண்டைப் பார்த்ததும் திகைத்தாள்..

“இங்கே எதுக்கு பாஸ் வந்திருக்கோம்..?”

“ம்ம்ம்.. விளையாட.. இறங்குவியா..”

நந்தினி குதித்து இறங்கினாள்.. மலர்ச்சியில்லாத அவள் முகத்தைக் கண்டவனுக்கு அஜந்தாவைத் த்வம்சம் பண்ணி விட வேண்டும் போல வெறி வெறியாக வந்தது..

“வா..” உள்ளே போனான்..

தனித்தனி கேபின்களாக தடுக்கப் பட்டிருந்த சோபாக்களில் எதிரும் புதிருமாக அவர்கள் உட்கார்ந்தார்கள்.. மெனுகார்டை புரட்டி பேரரிடம் ஆர்டரைச் சொல்லி விட்டு நந்தினியைப் பார்த்தான்.. சோர்ந்திருந்தாள்..

“ஐ ஆம் சாரி..” வருத்தத்துடன் சொன்னான்.. நந்தினி வியப்புடன் அவனைப் பார்த்தாள்..

“எதுக்கு சாரி கேட்கறிங்க..?”

“பாட்டி பேசினதை மனதில் வைத்துக்காதே. .”

“நான் மனசில் வைத்துக்கிட்டு என்ன ஆகப் போகுது..?”

நந்தினி பெருமூச்சுடன் விரல்களைக் கோர்த்துப் பிரித்த வண்ணம் இருந்தாள்..

“ஏய்ய்..”

ரவிச்சந்திரன் மேஜையின் குறுக்கே கை நீட்டி அவளுடைய விரல்களைப் பற்றி அழுத்தினான்.. நந்தினி உதட்டைக் கடித்துக் கொண்டாள்.. அவளது கண்கள் கலங்கியிருந்ததில் ரவிச்சந்திரனுக்கு மனம் வலித்தது..

“என்னைப் பாரு..”

நந்தினி அவனைப் பார்க்கவில்லை..

“என்னைப் பார்க்க மாட்டியா..? ஏண்டி..? என் முகத்தைப் பார்க்கப் பிடிக்கலையா..?”

“வாடி, போடின்னு சொல்ல வேண்டாம்..”

“சரி.. சொல்லலை..”

“இதைப் போல நிறையத் தரம் சொல்லியாச்சு..”

“எதைப் போல..? வாடி போடின்னா..?”

“அதை விடுங்க பாஸ்..”

“எதை..?”

“வாடி, போடியை..”

“ஓகே.. விட்டாச்சு..”

ரவிச்சந்திரன் அவளது கைவிரல்களை நீவிக் கொடுத்தான்.. சிலிர்த்தவளின் பிஞ்சு விரல்களில் முத்தமிட்டான்.. அவள் கையை இழுத்துக் கொள்ள முயன்றாள்.. அவன் விடவில்லை..

“விடுங்க பாஸ்..”

“எல்லாத்தையும் விடச் சொன்னா எப்படி..? வாடி, போடின்னு பேசுகிறதை விடச் சொன்னே.. ஓகேன்னு விட்டாச்சு.. இப்பக் கையையும் விடச் சொன்னா எப்படி..? நான் உன்னைக் கை விடறதா இல்லை..”

‘இவன் இப்படியேதான் பேசி வைப்பான்..’ ஏக்கத்துடன் அவன் முகத்தைப் பார்த்தாள் நந்தினி..

அவன் அழகாக இருந்து தொலைத்தான்.. அடர்த்தியான சிகையும் சிவந்த நிறமுமாக அவள் மனதை மயக்கினான்...

அவள் சரியாக சாப்பிடவில்லை என்பதற்காக ஹோட்டலுக்கு அழைத்து வந்து சாப்பிட வைக்கும் அவனது கரிசனம் அவளை நெகிழ வைத்தது..

“சாப்பிடு..”

அவள் பக்கமாக தட்டுக்களை நகர்த்தி வைத்தான்.. மனமில்லாமல்தான் சாப்பிட ஆரம்பித்தாள்... ஒரு விள்ளல் உள்ளே போன பின்புதான் வயிற்றின் அகோரப் பகி அவருக்கு உறைத்தது.. படு வேகமாக சாப்பிட ஆரம்பித்தாள்.. கனிவுடன் பார்த்துக் கொண்டிருந்தவனிடம்..

“தேங்க்ஸ்..” என்றாள்..

“உன் தேங்க்ஸை நான் கேட்டேனா..?” என்றான் அவன்..

ஓரளவு பசி அடங்கியதும் அவள் மெலிதாக சிரித்தாள்..

“ஹப்பா.. சிரிச்சுட்ட..” சந்தோஷமாக சொன்னான் அவன்..

ஹோட்டலை விட்டு வெளியே வந்த போது மனதில் இருந்த பாரம் குறைந்து லேசாக இருந்தது.. ஜீப்பில் போன போது..

“சிட்டுக் குருவிக்கென்ன கட்டுப்பாடு..?

தென்றலே உனக்கெது சொந்த வீடு..?”

என்று பாட ஆரம்பித்து விட்டாள்..

‘இதுதான் இவள்..’ அவன் மனம் மிருதுவானது..

‘கோபத்தையும் மனத்தாங்கலையும் வெகு விரைவில் மறந்து விடும் குழந்தை குணம் கொண்டவள்.. இவளிடம் போய் பாட்டி வெறுப்புக் கொள்கிறாங்களே.. அஜந்தா என்ன சொன்னாலும் கேட்டுக் கொள்வதா..’ அவன் முகம் கோபத்தில் சிவந்தது..

“ஏன் பாஸ்.. இங்கே ஸ்டார் ஹோட்டல் இருக்கா..?” திடீரெனக் கேட்டாள் நந்தினி..

“எதுக்குக் கேட்கிற..?” ரவிச்சந்திரனின் கண்கள் இடுங்கின..

“உடனே வில்லன் வேசம் கட்ட வேண்டாம் பாஸ்.. உத்ராவும் வினித்தும் வரப் போகிறாங்களே.. அவங்க தங்கறதுக்கு ரூம் ரிசர்வ பண்ணனுமே.. அதுக்காக கேட்டேன்.. ஹப்பா.. ஆக்ஷன் ஹீரோ போல சட்டுன்னு கண் சிவந்திருது..” சிலிர்த்தாள் நந்தினி..

“நீ ரொம்ப பயந்தவதான்..”

“இல்லையா பின்னே..?”

“இந்தக் கதையை வேறு யாரிடமாவது போய் சொல்லு..”

“மோகனிடம் சொல்லவா..? அவன்தான் நான் எப்போ வருவேன்னு கையில ரோஜாப் பூவோட காத்திருப்பான்.. மலரேன்னு பாட்டுப் பாடுவான்.. மலர் டீச்சர்ன்னு கொண்டாடுவான்..”

“இப்படியே பள்ளத்தாக்கில உருட்டி விட்டேன்னு வை.. ஒரு எழும்பு கூட மிஞ்சாது..”

“ஹைய்யோ.. டெர்ரர் பாஸ் நீங்க..”

“தெரியுதில்ல.. வாயை மூடிக்கிட்டு வா.. ஐ லவ் யு சொல்கிறவனுக்குப் பதில் சொல்ல மாட்டாளாம்.. மலர் டீச்சர்ன்னு உருகுகிற இரண்டும் கெட்டானிடம் கதை சொல்லப் போவாளாம்.. என்ன..? மறுபடியும் அடி வாங்கனும்னு ஆசையாய் இருக்கா..?”

“இப்படிக்கூட ஆசைப் படுவாங்களா பாஸ்..?”

“நீ படுவ.. யாரு நீ..?”

“நந்தினி..”

அவள் கண்களைச் சிமிட்டிச் சிரித்ததை ரசித்தான்.. மலை முகடுகளில் பனிப்புகை சூழ்ந்து மிதந்ததை அவள் ரசித்தாள்.. கேரளத்தின் பசுமை அவள் மனதை தாலாட்டியது..

“உத்ராவுக்கு இந்த ஊரை ரொம்பப் பிடிக்கும் பாஸ்..”

“உனக்குப் பிடிக்கலையா..?”

“எனக்கும்தான் பிடிக்கும்.. உத்ரா தங்கறதுக்கு நல்ல ஹோட்டல் வேணுமே பாஸ்..”

“அவங்க எதுக்கு ஹோட்டலில் தங்கனும்..?”

“இதென்ன பாஸ் வம்பாப் போச்சு..? வயநாட்டுக்கு வருகிறவங்க செடி, கொடிகள் மத்தியிலேயா படுத்து உறங்க முடியும்..? குளிரில விறைச்சுப் போயிர மாட்டாங்களா..?”

“அறிவுதான் போ.. நம்ம ஊருக்கு நம்ம கெஸ்டா வருகிறவங்க எதுக்காக ஹோட்டலில் தங்கனும்..? நம்ம அரண்மனையிலே எத்தனை ரூம்ஸ் இருக்குன்னு உனக்குத் தெரியுமா..?”

“உங்க ஊர், உங்க அரண்மனைன்னு சொல்லுங்க பாஸ்.. கெஸ்ட் என்னோட கெஸ்ட்.. பொத்தாம் பொதுவா..

எல்லாத்தையும் நம்மன்னு ஒட்டுக்கு ஜாயின் அடிக்கறிங்களே..”

ரவிச்சந்திரன் முறைத்தான்.. பக்கவாட்டில் இருந்த கிடுகிடு பள்ளத்தாக்கைப் பார்த்த நந்தினி திருவாயை மூடிக் கொண்டாள்.. எதற்கும் இருக்கட்டுமென்று ஜன்னலோரத்திலிருந்து நகர்ந்து அவனை ஒட்டி உட்கார்ந்து கொண்டாள்..

“வெறும் வாய்தான்..” அவனிடம் சிரிப்பு மீண்டது..

“இதைத்தானே நான் திரும்பத் திரும்பச் சொல்றேன்..?” நீங்கதான் நம்பாம என்னை ஜான்ஸிராணி மாதிரி போகஸ் பண்றீங்க..

“அப்போ நீ ஜான்ஸி ராணியில்லையா..?”

“இல்லே சாரே..”

“அட்லீஸ்ட் அவங்க வீட்டுக்கு பக்கத்து வீடாகவாவது இருந்திருக்கிறயா..?”

“இல்லையே பாஸ்..”

“என்னத்தை போ.. நீ சுத்த வேஸ்ட் நந்தினி..”

“இதைத்தான் தினமும் நந்து சொல்வான்..”

தம்பியின் நினைவில் ஆழ்ந்தாள் நந்தினி.. தூரத்தில் எஸ்டேட் தெரிந்தது.. அங்கே காத்திருக்கும் மோகனின் நினைவில் முகம் கடுத்த ரவிச்சந்திரன்..

“உன் தம்பியின் நினைவில் மோகனிடம் குளோசாப் பழகாதே.. அவன் உன்னை அக்கான்னு நினைக்கலை..” என்று எச்சரித்தான்..

“ம்ம்ம்..”

“மனசில்லாம சொல்கிறதைப் போல இருக்கு..?”

“இது வேறயா..? எதில குற்றம் கண்டு பிடிக்கிறதுன்னு காத்திருப்பிங்களா பாஸ்..?”

“உத்ராவும் வினித்தும் நம்ம அரண்மனையிலே தங்கிக்கட்டும்..”

நந்தினி பதில் பேசவில்லை..

“என்ன ஆச்சு..? மௌனியாகிட்ட..?” விசாரித்தான் ரவிச்சந்திரன்..

“அவங்க ஹனிமூன் கப்புள் பாஸ்..”

“என் பொறாமையைக் கிளப்பறியா..?”

“ம்ப்ச்.. நான் சொல்ல வந்ததே வேற..”

“சொல்லு.. சொல்லு..”

“அவங்க சந்தோஷமா இருக்கனும் பாஸ்.. அது உங்க அரண்மனையிலே கிடைக்காது.. என் கதை வேறு.. எனக்கு போக இடமில்லை.. உத்ரா அப்படியில்லை.. அவளும் வினித்தும் தங்க ஏதாச்சும் கெஸ்ட் ஹவுஸ் மாதிரி ஏற்பாடு பண்ணிக் குடுங்க.. ப்ளீஸ்..”

நந்தினியின் தழதழத்த குரலில் ஜீப்பை நிறுத்தி விட்டான் ரவிச்சந்திரன்.. உறுத்துப் பார்த்த அவன் பார்வையைத் தாங்கிக் கொள்ள முடியாமல் உதட்டைக் கடித்தாள் நந்தினி..

“தி கிரேட் ரவிச்சந்திரனால அவனோட அரண்மனையில கெஸ்ட்டை ரிசீவ் பண்ணி சந்தோஷமா தங்க வைக்க முடியாதுன்னு நீ சொல்லிஃபிகேட் கொடுத்திருக்கிற.. குட்..”

“பாஸ்.. நான் அப்படிச் சொல்லலை..”

“அப்படித்தான் சொன்ன..”

“ப்ளீஸ்.. டிரை டு அண்டர்ஸ்டாண்ட் மி..”

“நீ என்னைப் புரிஞ்சுக்க டிரை பண்ணு.. தட்ஸ் பெட்டர்..”

"நான் சொல்ல வந்தது என்னன்னா.."

"உத்ராவும் வினித்தும் வயநாட்டு அரண்மனைக்குத் தான் வருவாங்க... தங்குவாங்க... ஹனிமூன் கொண்டாடுவாங்க... அவங்க சந்தோஷத்துக்கு நான் கேரண்டி.. என் மீது நம்பிக்கை இருக்கா.. இல்லையா..?"

நந்தினியின் கண்களுக்குள் உற்றுப் பார்த்தபடி கேட்டான் அவன்.. அவள் மனம் அசைந்தது..

"உங்களை நம்பாம வேற யாரை நம்புவேன் பாஸ்..?"

ரவிச்சந்திரனின் புன்னகை விரிந்தது.. அவளது பதில் பூகம்பமாய் வெளிப்பட்டுக் கொண்டிருந்த அவனது கோபத்தை கட்டுப் படுத்தி விட்டது.. இதமான அமைதி மனமெங்கும் நிறைய அவன் இரு கைகளையும் விரித்தான்.. மறுப்பேதும் இல்லாமல் அவன் கைகளுக்குள் தஞ்சம் புகுந்தாள் நந்தினி..

அவளின் அடைக்கலத்தில் அவன் மனம் கனிந்தது.. அவளை அணைத்து உச்சந்தலையில் முத்தம் பதித்தான்.. ஆண்மையின் கர்வம் மனமெங்கும் பரவ..

'உச்சிதனை முகர்ந்தால் - கர்வம்

ஓங்கி வளருதடி கண்ணம்மா..'

என்று அவன் மனம் குதூகலித்தது.. வயநாட்டின் குளிர் காற்று அவர்கள் முகம் தொட்டுப் போக.. வானிலிருந்து சடசடவென மழை பொழிந்து அவர்கள் இருவரையும் நனைத்தது..

குளிர் மழை..! கொதிக்கும் ரவிச்சந்திரனின் மனதையும்.. தவிக்கும் நந்தினியின் மனதையும் குளிர்வித்த மழை..! ஒன்றுபட்ட மனதுடன் ஒன்றுபட விரும்பிய ரவிச்சந்திரனையும்.. அவனது உயரத்தையும் ஆளுமையையும் கண்டு மனதில் தாழ்வுணர்வு கொண்டு மருண்டு விலகும் நந்தினியையும் இணைந்து மகிழ்ந்த மழை..!

“ஆடை முழுதும் நனைய..

நனைய மழையடிக்குதடி..”

ஜீப்பின் சிடி பாடியது.. நந்தினியின் முகம் நனைத்து வழிந்த மழைத் துளிகளில் முகம் நனைந்த ரவிச்சந்திரன் கிளர்ந்தான்..

“எப்போதடி என் காதலை நீ ஏற்றுக் கொள்வ..?”

- ஐந்தாம் பாகத்தில் தொடரும்...

லட்சுமி பாலாஜி பதிப்பகம்